செல்வரத்தினம் சந்திரசேகரம்

# பொருளாதார அபிவிருத்தி:

## சிங்கப்பூரும் இலங்கையும் அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கு

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி:

## சிங்கப்பூரும் இலங்கையும்
## அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கு

**கலாநிதி செ.சந்திரசேகரம்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சேமமடு

சேமமடு பதிப்பகம்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | பொருளாதார அபிவிருத்தி |
| நூலாசிரியர் | : | கலாநிதி.செ.சந்திரசேகரம் |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்பாண்டு | : | 2013 |
| எழுத்து | : | 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : | xv+200 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 500.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.<br>தொ.பே: 0777 345 666. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை,<br>யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11.<br>தொ.பே:011-2472362, 2331475<br>மின்னஞ்சல் : *Chemamadu@yahoo.com* |
| **ISBN - NO** | : | **978 - 955 - 685 - 022 - 2** |

| | | |
|---|---|---|
| Title | : | **PORULAATHARA ABIVIRUTHTHY** |
| Author | : | Dr.S.Santhirasekaram |
| Publisher | : | STP.Pathmaseelan |
| Edition | : | 2013 |
| Price | : | Rs.500.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai<br>UG.50, People's Park,<br>Colombo -11.<br>T.P : 011-2472362, 2331475 |
| Printed by | : | Chemamadu Pathippakam,<br>Colombo -11.<br>T.P 0777 345 666.<br>E-mail : *Chemamadu@yahoo.com*<br>Web: www.chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN -2013-05-01-123 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

பொருளியல் துறையில்

சக விரிவுரையாராக கடமையாற்றி

ஓய்வு பெறுகின்ற

எனது மதிப்புக்கும் அன்புக்குமுரிய

பேராசிரியர்

வி.நித்தியானந்தன்

மற்றும் உயர்திரு ந.பேரின்பநாதன்

ஆசிரியர்களுக்கு

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்வரத்தினம் சந்திரசேகரம் அவர்களினால் எழுதப்பட்ட "பொருளாதார அபிவிருத்தி: சிங்கப்பூரும் இலங்கையும் அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கு" எனும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கலாநிதி சந்திரசேகரம் எமது பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி 1999 இல் உதவி விரிவுரையாளராக இணைந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுமாணிப் பட்டம் பெற்றவர் பின்னர் 2004 இல் மக்கள் சீனக்குடியரசிற்கு புலமைப்பரிசில் பெற்று சென்று அங்குள்ள புகழ்பெற்ற குவாசோங் விஞ்ஞான தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (HUST) 2008 இல் "இலங்கையில் பொருளதார வளர்ச்சிக்கும் பணவீக்கத்திற்குமான சமூக அரசியல் காரணிகள்" என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டம் பெற்றவர். அவரது இந்த ஆய்வுக்கட்டுரை ஜேர்மனியில் உள்ள புகழ்பெற்ற *LAMBERT* கல்வி வெளியீட்டு சமூகத்தினால் நூல் வடிவம் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கலாநிதி சந்திரசேகரத்தின் அரசியல் பொருளியல் துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் பல உலகின் புகழ்பெற்ற ஆய்வுச்சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளது. அத்துடன் பல்வேறு நாடுகளின் சர்வதேச ஆய்வரங்குகளில் அவர் பல ஆய்வுக்கட்டுரைகளை வாசித்துள்ளார் இலங்கையில் தேசிய, பிராந்திய கருத்தரங்குகளிலும் பல ஆய்வுக் கட்டுரைகளை செய்துள்ளார். இதுவரை பொருளாதார அபிவிருத்தி: சீனா-இந்தியா ஓர் ஒப்பீட்டு ஆய்வு உட்பட்ட ஆறிற்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைத்துவப் பார்வையில் வெளியிட்டுள்ளார். இவ்வாறான புலமைத்துவ வெளியீடுகள் மூலம் வளர்ந்து வரும் துடிப்புள்ள ஆய்வாளர் என்ற முத்திரையைப் பெற்றுள்ளார்.

இத்தகைய புலமைத்துவ வெளியீடுகளில் ஒன்றாக தற்போது உங்கள் கைகளில் தவழும் "பொருளதார அபிவிருத்தி: சிங்கப்பூரும் இலங்கையும் அரசியற் பொருளதார ஒப்பியல் நோக்கு" என்ற நூல் அமைந்துள்ளது. இந்த நூல் சிங்கபூரையும் இலங்கையையும் மையப்படுத்தி பொருளாதார அபிவிருத்தி, அரசியல் அபிவிருத்தி தொடர்பாக புலமைத்துவ அடிப்படையிலான ஒப்பியல் ஆய்வாக வெளிவந்துள்ளது. ஏழு அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் கொள்கை வகுப்பாளர்களுக்கு பல பிரதான விடயங்களைத் துணிவுடன் எடுத்துக் கூறுகின்றது. 1962 இல் இலங்கையின் தலாவருமானத்தில் US$ 300 ஐ அதிகமாக கொண்டிருந்த சிங்கபூர் 2012 இல் US$ 40350 ஐ அதிகமாக 134 மடங்கு அதிகமாகப் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளது. இவற்றுக்கான காரணங்கள் யாவை என்று புலமைசார் அடிப்படையில் ஆய்வு செய்கின்றது. ஒரு மென்மையான எதேச்சதிகார ஆட்சி ஊடாக சிங்கப்பூர் எழுச்சி கண்டமை பற்றியும், பெயரளவில் ஜனநாயகத்தைக் கொண்டிருந்த இலங்கை சமூக நலன் பேணுதல் நடவடிக்கை மூலம் பிரித்தானிய ஆட்சியில் திரட்டப்பட்டிருந்த மூலதன திரட்சியை எவ்வாறு வீணாக்கியது என்றும் எடுத்துக்காட்டுகிறது. குதிரை (வளர்ச்சி) வண்டியை (சமூக செலவீடு) இழுக்க வேண்டுமே ஒழிய வண்டி குதிரையை இழுக்க முடியாது என்ற உதாரணங்களோடு இவற்றை ஆசிரியர் விளக்குகின்றார்.

இலங்கையும் சிங்கபூரும் பன்மைச் சமூகத்தைக் கொண்டிருந்த போதும் சிங்கபூர் லீ-குவான் - யூவின் அரசியல் பொருளதார தலைமைத்துவத்தின் மூலம் எவ்வாறு ஒரு வகைச் சர்வதிகார ஆட்சியை மேற்கொண்டு பொருளதார அரசியல் வளர்ச்சியை அடைந்தது பற்றி ஆசிரியர் சிலாகித்துப் பேசுகின்றார். ஆனால் இலங்கையின் அரசியல் தலைவர்களோ கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் பாழாக்கி சமூக நலன் பேணும் பொருளதாரக் கொள்கையை பின்பற்றித் தங்கள் அரசியல் பலத்தைத் தக்கவைப்பதில் கருத்தூன்றினார்களே தவிர, நாட்டின் ஒட்டு மொத்த நன்மை பற்றி சிந்தியாது செயற்பட்டார்கள் என்றும், அரச வருமனத்தைத் தம் சுயநல நோக்கத்திற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தினார்கள் எனவும் அத்தகைய நடவடிக்கைகள் நாட்டை அரசியல் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியை நோக்கிக்கொண்டு செல்வதாகவும் குறிப்பிடுகின்றார். இந்தோனேசியாவில் சுஹாட்டோ அரசின் வீழ்ச்சியைப் போல இலங்கை அரசின் செயற்படுகளும் அமைந்துவிடுமோ என்று ஆசிரியர் எண்ணுகின்றார்.

சிங்கபூரில் லீ-குவான் யூவின் தலைமைத்துவம் எவ்வாறு அந்நாட்டைப் பொருளாதார அரசியல் அபிவிருத்தி செய்ததோ அதை ஒத்த தலைமைத்துவம் ஒன்று இலங்கைக்குத் தேவை என்றும் அத்தகைய தலைமைத்துவத்தினால் இலங்கை பொருளாதார அரசியல் உறுதிப்பாட்டை அடையும் என்பது ஆசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கின்றது. முதலில் பொருளாதார அபிவிருத்தி அதன் பின்னரே சமூகநல அபிவிருத்தி என்பது ஆசிரியரால் வற்புறுத்தப்படுகின்றது. லீ-குவான்-யூவின் தலைமைத்துவத்தின் கீழ் சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் இங்கு ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமூக நடவடிக்கைகள் பொருளாதார அபிவிருத்தியைத் தடை செய்யவும், பின்னடைவைச் செய்யும் வகையிலும் ஓரினச் சார்புத் தன்மை அடிப்படையிலும், இனங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்க்கும் வகையில் அந்நிய சமூகத்துக்கு நாட்டின் இறைமையை விற்கும் வகையிலும் அமைந்திருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரச ஆதரவுக் குடியேற்றத்திட்டங்கள் இன முரண்பாட்டை மேலும் மோசமடையச் செய்யும் பண்பு கொண்டதாக அமைந்திருக்கின்றன என்பது ஆசிரியரின் கருத்தாகும். அரசின் வருமானம் அரசியல்வாதிகளின் வாக்கு வங்கிகளைத் தக்கவைக்கும் வகையில் சுயநலநோக்கிற்காகத் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் பாதுகாப்புச் செலவுகளில் அதிகரிப்பு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அதள பாதாளத்திற்கு கொண்டு சென்றுவிடும் என்பதும் அவரது அபிப்பிராயமாகும். இது சமூக நலன்புரிச் செலவிலிருந்து பாதுகாப்புச் செலவு நோக்கி அமைகின்றது.

ஒரு நாட்டின் சமூக, மற்றும் அரசியல் காரணிகள் அந்நாட்டின் அபிவிருத்தியில் கணிசமான பங்கினைக் கொண்டுள்ளன. சிங்கப்பூர் எவ்வாறு இந்தப் பொருளாதாரமில்லாத சமூக, அரசியல் காரணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி சார்பாகப் பயன்படுத்தி வெற்றி கண்டது என்பதை அறிவதன் மூலமாக இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களுக்கு சில உண்மைகளைத் தெளிவுபடுத்த இந்த ஆய்வு முனைகின்றது.

மக்கள் சீனக் குடியரசில் கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவனாக இருந்தபோது பெற்றுக்கொண்ட அனுபவங்களும், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் லீ-குவான்-யூ பொதுக் கொள்கை நிறுவனத்தில் குறுங்கால பயிற்சியை மேற்கொண்ட போதும் பெற்ற அனுபவங்களும், பொருளாதார அபிவிருத்தியை பொறுத்து இந்த அரசுகள் மீது ஆசிரியர் கொண்டுள்ள உயர்ந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றது. அதேசமயம் இந்தியாவின் பலவீனமான நிலைமையும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கலாநிதி சந்திரசேகரம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மென்மையான எதேச்சதிகார ஆட்சியை ஏற்படுத்தி, சமூக, நல சேவைகளை நிறுத்தி பொருளாதார அபிவிருத்தியை முதன்மைப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு சமூக அபிவிருத்தியியல் அரசாக *(Social Developmental State)* மாற்ற வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவராகக் காணப்படுகின்றார். இது அந்த நாட்டு மக்களின் தூரநேக்குடனான பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என நம்புகின்றார்.

சிங்கப்பூருக்கு லீ-குவான் யூவினால் வழங்கப்பட்ட அரசியல், பொருளாதாரத் தலைமைத்துவம் ஒரு அத்தியாயத்தில் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது. பிளேட்டோ குறிப்பிடுவது போல அரசியல் தலைவர் *a Philosopher king* ஆக இருக்கு வேண்டுமென்பது குறிப்பிட்டு சொல்லப்படுகின்றது. தலைவன் தன்னலம் கருதாது நாட்டு மக்கள் அனைவரினதும் பொதுநலனை முதன்மைப்படுத்திச் செயற்படும் தன்மையை இது குறிக்கின்றது. மேற்குலகின் அனுபவங்களை அப்படியே பிரதிபண்ணாது நமது நாட்டு நிலைமைக்கு ஏற்ப அவற்றை மாற்றி எமது தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் சிங்கப்பூர் உதாரணங்கள் மூலம் விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலிருந்து பிரித்தானியாவிற்கு மேற்படிப்புக்குச் சென்ற புத்திஜீவிகள் பிரித்தானியா அனுபவத்தை இலங்கையில் ஏற்படுத்த முனைந்ததன் விளைவே சமூக நல நடவடிக்கைகள் என்று எடுத்துக் காட்டுகின்றார். குடியேற்ற நாடுகளில் இருந்து பிரித்தானியா பெற்றுக் கொண்ட மூலதனம், அந்த நாட்டுக்குத் தொழிற்கட்சி ஆட்சியில் சமூக நல நடவடிக்கைகளுக்கு கைகொடுத்தது. ஆனால் இலங்கைக்கு அவ்வாறு பெரியளவில் மூலதனத் திரட்சி இருக்கவில்லை என்றும் இலங்கையில் பெருந்தோட்ட வருமானம் மூலமாகக் கிடைத்த மூலதனத் திரட்சி பொருளாதார வளர்ச்சியை நோக்காக கொண்ட அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டுமேயொழிய சமூக நலனோம்பும் திட்டங்களுக்கு பயன்படுத்தி இருக்கக்கூடாது என்பதும் ஆசிரியரின் கருத்தாக அமைகின்றது.

இரு நாடுகளின் பொருளாதார, அரசியல் அபிவிருத்தி பற்றி ஆழமாக ஆராய்ந்த ஆசிரியர் சில முக்கியமான ஆலோசனைகளை தீர்வுகளை நாட்டின் ஒட்டுமொத்த நன்மை கருதி முன்வைக்கின்றார். ஆட்சித் தலைமைகளுக்கு சாமரம் வீசும் ஆலோசகர்கள், அறிவு ஜீவிகள் இவற்றை ஏற்படுதுவதென்பது சாத்தியமாகாது. உண்மையை அவர்கள் எடுத்துரைத்தால் அவர்கள் அனுபவிக்கும் அரசியல் இலாபங்களை இழக்க நேரிடும்.

ஆசிரியரால் முன்வைக்கப்படும் தீர்வுகள்,

1. ஒரு கட்சி ஆட்சி முறை குறைந்த 25 வருடங்களாவது இருத்தல் வேண்டும்.

2. ஒரு கட்சி தலைமை தாங்கும் அரசியல் முறையிலிருந்து குடும்ப அரசியல் முற்றாக ஒழிக்கப்படுதல் வேண்டும்.

3. பொதுவான மொழிக் கொள்கை ஆங்கில மொழியை அரசகரும மொழியாக மாற்றல் வேண்டும்.

4. சுயாதீனமான பொலிஸ், நீதி பொதுச் சேவை, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுக்களை அமைத்து அவற்றை முழுமூச்சுடன் தொழிற்படச் செய்து நல்லாட்சியை ஏற்படுத்தல்.

5. அரசியலில் இருந்து மதத்தை முற்றாக நீக்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அரசை சமூக நல சேவை அரசாக அல்லாமல் அபிவிருத்தி அரசாக உருவாக்குதல்.

7. அனைத்துச் சமூகங்களும் சம உரிமையுடன் வழங்கக்கூடிய நல்லாட்சியை உருவாக்குதல்

இவை அனைத்தும் லீ குவான் யூவின் தலைமைத்துவம் காரணமாகச் சிங்கப்பூரில் ஏற்படுத்தப்பட்ட உன்னத மாற்றங்களாகும். ஆனால் இலங்கையில் இவற்றை நடைமுறைப்படுத்தும் சூழல் ஏற்படுமா? அத்தகைய தலைமைத்துவத்தைக் கொடுக்கும் வல்லமை கொண்ட தூரநோக்குடைய தலைவர் வருவாரா? எல்லாவற்றிற்கும் தென்னாசிய புவிசார் அரசியலில் ஏற்படும் அரசியல் பொருளாதார மாற்றங்கள் தான் பதிலைக் கூறும்.

சிங்கள, பௌத்த பேரினவாதத்தில் மூழ்கியிருக்கும் பெரும்பாலான சிங்கள அரசியல் தலைவர்களுக்கு கலாநிதி சந்திரசேகரம் முன்வைக்கும் தீர்வுகள் கசப்பானவையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நல்லாட்சி, ஊழல் அற்ற அரசு குடும்ப ஆட்சி ஒழிப்பு, சட்ட ஆட்சி, சுயாதீனமான இயங்குதிறன் கொண்ட ஆணைக்குழுக்கள், அரச கரும மொழி மாற்றம், மதத்தை அரசியலில் இருந்து பிரித்து வைத்தல் என்பன எல்லாம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சகல இன, மத, மொழி, பண்பாடுடைய மக்களை சமத்துவமான முறைமையில் ஒன்றிணைந்து வாழ வைக்கும் என்பதில் உண்மையில் நாட்டை நேசிக்கும் புலமையாளர்களிடம் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் இவை எல்லாம் நடைமுறை அரசியலில் சாத்தியமானவையா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

கலாநிதி சந்திரசேகரம் அவர்கள் இது போன்ற பல நூல்களை வெளியிட்டு தனது புலமைத்துவத்தை வெளிக் கொணர வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

திருநெல்வேலி.
*21.07.2013.*

**பேராசிரியர்.ச.சத்தியசீலன்,** M.A.Ph.D

*பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம்,*
*வரலாற்று பேராசிரியர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மேலைத்தேசத்தின் ஜனநாயகமாக்கத்தின் வழிவந்த இலங்கையின் பல்லின கட்சி முறையிலான தாராள ஜனநாயகத்தின் வழி இலங்கையை பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வது கஷ்டமானது என்பதை புலமைசார் அடிப்படையில் நான் உணர்கிறேன். இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என்ற சட்ட அங்கீகாரம், திவிநெகும என பல்வேறுபட்ட அரசியல் சீர்திருத்தங்கள் இலங்கையின் முழுமையான எதேட்சை அதிகார ஆட்சிக்கான சீர்திருத்தங்களாக அமைகின்றன. எனவே அதி மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரப்போக்கை ஓர் கிழக்கு ஆசியாவின் அதிகார ஆட்சியுடன் குறிப்பாக சிங்கப்பூரின் ஆட்சியுடன் ஒப்பிடும்போது சிறந்த ஒரு அணுகுமுறையாகக் கொள்ளப்படலாம். இருப்பினும் இவ்அணுகுமுறையின் அடிப்படையிலான பொருளாதார வெற்றிக்கு இலங்கையில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

இவ்வெளியீடானது இலங்கையையும் சிங்கப்பூரையும் அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்ய முற்படுகின்றது. சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியானது ஓர் மென்மையான சர்வாதிகார ஆட்சி ஊடாக எவ்வாறு எழுச்சி கண்டது என்பதையும், இவ்வாறான அரசியல் பின்னணி ஓர் பொருளாதார எழுச்சிக்கு ஏன் அவசியம் என்பதையும் எடுத்து ஆராய்கின்றது. அபிவிருத்தி சார்ந்த ஒவ்வொரு விடயத்திலும் இலங்கையை தொடர்பு படுத்துவதன் ஊடாக இலங்கையில் உள்ள தடைகளை அல்லது சவால்களை கொள்கை வகுப்பாளர்களுக்கு எடுத்து விளக்க முனைகின்றது. சமூக மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகின்றது. சமூக மற்றும் அரசியல் காரணிகள் இரு நாடுகளின் அபிவிருத்தியில் கணிசமான பங்கினைக் கொண்டிருக்கின்றன. சிங்கப்பூர் எப்படி இந்த பொருளாதாரமல்லாத சமூக அரசியல் காரணிகளை அபிவிருத்திக்கு சார்பாக வெற்றி கொண்டது என்பதனை கற்பதன் ஊடாக இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களுக்கு சில கொள்கைத் தெரிவு உண்மைகளை தெளிவுபடுத்த இந்த ஆய்வு முற்படுகின்றது.

சிங்கப்பூருடன் ஒப்பிடும்போது இலங்கையின் ஜனநாயக பெயரை தாங்கிய எதேட்சை அதிகார ஆட்சி பல மாற்றங்களை உள்வாங்க வேண்டி இருக்கின்றது. முதலாவது, தலைமை தாங்கும் ஒருகட்சி ஏனைய கட்சிகளிடம் இருந்து பதவிக்காக கட்சி தாவிய அரசியல் வாதிகளுக்கு அப்பால் ஏனைய அரசியல் தலைவர்களையும் உள்ளீர்க்க வேண்டும். இந்த வகையில் UNP, JVP, TNA போன்ற கட்சிகளை ஒன்று சேர்த்து ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் பொதுவான ஓர் அரசியல் கட்சி உருவாக்கப்பட வேண்டும். நிரந்தர அமைதிக்கு இது அவசியமாகும். இரண்டாவது, ஒரு கட்சி தலைமை தாங்கும் அரசியல் பொறிமுறையில் இருந்து குடும்ப அரசியலை முற்றாக அகற்ற வேண்டும். எனவே ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது கொண்டிருக்கும் முக்கிய பொறுப்புக்கள் நாட்டின் அனைத்து பிரதேச தலைவர்களிடமும் இன, மத, மொழி வேறுபாடு இன்றி சென்றடைய வேண்டும். இலங்கையின் தற்போதைய போக்கு இந்தோனேசியாவில் சுகார்டோவின் காலத்துக்கு இட்டுச் செல்லக்கூடாதென்பது பலரது எதிர்பார்ப்பு ஆகும். மூன்றாவது, ஓர் பொதுவான மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்தல் ஆகும். ஆங்கில்க் கல்வியை அரசாங்கத்தின் அலுவலக மொழியாக ஏற்றுக்கொள்வதன் மூலம் இலங்கையின் அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றலாம். நான்காவது, சுயாதீனமான பொலிஸ், நீதி, ஊழல் ஒழிப்பு போன்றவற்றின் ஆணைக்குழுக்களை அமைத்து அவற்றை முழு மூச்சுடன் தொழிற்படச் செய்து நல்லாட்சியை ஏற்படுத்துதல். ஐந்தாவது, அரசியலில் இருந்து மதத்தை முற்றாக நீக்குதல், ஆறாவது, அரசை சமூக சேவை அரசாக இல்லாமல் அபிவிருத்தி அரசாக உருவாக்குதல். ஏழாவது, நாட்டின் ஒட்டு மொத்தமான எல்லா சமூகங்களும் சம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையுடன் வாழக்கூடிய நல்லாட்சியை உருவாக்குதல் என்பன பிரதான சிபார்சுகள் ஆகும்.

இவ்ஆய்வு நூலினை வெளியிட உதவிய பலருக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். முதலாவதாக சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்தில் குறுங்கால கற்கைநெறிக்கான புலமைப் பரிசிலைத் தந்து உதவிய லீ குவான் யுவின் பொதுக் கொள்கை நிறுவனத்துக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்வெளியீடு வெளியிடுவதற்கு உதவிய எனது மனைவி, மற்றும் எங்கள் குடும்ப நண்பரும் சேமமடு பதிப்பக இயக்குனருமான திரு.சதபூ.பத்மசீலன் அவர்களுக்கும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**கலாநிதி செ.சந்திரசேகரம்**

முதுநிலை விரிவுரையாளர்

பொருளியல் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*07/12/2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சமகாலத்தில் அறிவுப் பொருளாதாரம், அறிவுச் சமூகம், அறிவுப் பண்பாடு முதலான எண்ணக்கருக்கள் மேலெழுச்சி பெற்று வருகின்றன. இந்த வகையில் "அபிவிருத்தி" என்பதனை நாம் பன்முக நோக்கில் புரிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தென்னாசிய சமூகங்களின் விருத்தியை ஒப்பியல் ரீதியில் புரிந்து கொள்வதற்கான அறிவும் பயிற்சியும் அவசியமாகின்றது.

இவ்வாறான நிலையில்தான் கலாநிதி செ.சந்திரசேகரம் எழுதிய "பொருளாதார அபிவிருத்தி : சிங்கப்பூரும் இலங்கையும் அரசியற் பொருளாதார ஒப்பியல் நோக்கு" எனும் நூலை வெளியிடுகின்றோம். இந்நூல் சமகாலச் சூழலில் முக்கியத்துவமிக்கதாகின்றது. இந்நூலில் பேசப்படும் விடயங்கள் சிங்கப்பூர், இலங்கை முதலான நாடுகளை பொருத்தப்பாடுகளுடன் நோக்குவதற்கான சிந்தனை பின்புலங்களை வழங்குகின்றது.

இந்நூலாசிரியர் ஏற்கெனவே சீனாவையும் இலங்கையையும் ஒப்பிட்டும் நூலொன்றை வழங்கியுள்ளார். ஒப்பியல் ரீதியிலான அணுகுமுறையில் அரசியற் பொருளாதார கற்கையின் ஆழத்திற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகின்றார். இந்நூலை நாம் வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை நமக்குத் தந்தமைக்காக அவருக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம். இந்த நூலாக்கப் பணியில் எம்முடன் பணியாற்றிய அத்தனைப் பேருக்கும் நமது நன்றிகள்.

*113, சேமமடு*
*வவுனியா*

**பதிப்பாளர்**
சதபூ.பத்மசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அரசியல் சுதந்திரமும் பொருளாதார அபிவிருத்தியும் | 01 |
| 2. | பொருளாதார அபிவிருத்தியில் சிங்கப்பூரும் இலங்கையும்: இலங்கை பற்றிய லீ குவான் யுவின் குறிப்புக்கள் | 49 |
| 3. | இன ஒற்றுமைக்கு சிங்கப்பூரிடம் இலங்கை கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் | 67 |
| 4. | சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியும் அவற்றின் மூலங்களும் | 89 |
| 5. | நல்லாட்சியும் பொருளாதார அபிவிருத்தியும் | 109 |
| 6. | சிங்கப்பூரின் அரசியல் தலைமைத்துவமும் பொருளாதார அபிவிருத்தியும் : லீ குவான் யூ பற்றிய ஒரு பார்வை. | 125 |
| 7. | சமூக நலன்புரிக் கொள்கைகளும் அபிவிருத்தியும் | 150 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –01

# அரசியல் சுதந்திரமும் பொருளாதார அபிவிருத்தியும்

## 1. அறிமுகம் :-

சமூக விஞ்ஞானத்தில் சமூகவியல், அரசியல் மற்றும் பொருளியல் ஆகிய மூன்று அறிவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களைவிட தங்களிடையே உள்ளார்ந்த தொடர்புகளை மிகையாகக் கொண்டுள்ளன.[1,2] சுதந்திரம் பற்றி குறிப்பிடுகையில் சமூக விடுதலை, அரசியல் விடுதலை இறுதியாக பொருளாதார விடுதலை என்ற வாதம் சமூகவியலாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. சமூக ரீதியாக விடுதலை அடைந்ததன் பின்னர்தான் அரசியல் சுதந்திரம் பற்றி மனிதன் சிந்தித்தான் என்றும் இறுதியாக இவ்விரண்டு சுதந்திரங்களும் கிடைத்ததன் பின்னர் பொருளாதார சுதந்திரத்தின் ஊடாக வாழ்க்கைத்தர உயர்வையும் அபிவிருத்தியையும் அடைந்துகொள்ள முடியும் என்ற வாதம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. மூன்று வகையான சுதந்திரமும் மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றே கூறலாம். ஆனால் எந்த சுதந்திரம் முதலில் வழங்கப்பட

---

[1] Increasing national production, rising level of living, and promoting widespread employment opportunities are all as much function of the local history, expectations, values, incentives, attitudes and beliefs, and institutional and power structure of both the domestic and global society.......Looking back over years, it is now clear that, in their preoccupation with growth and its stages and with the provision of capital and skills, development theorists have paid sufficient attention to institutional and structural problems and to the power of historical, cultural, and religious forces in the development process" by Indonesian intellectual Soedjatmoko, former rector of the united nations university in Tokyo. Carried by Michael P. Todaro (2006), pp.17-8

[2] The living standard in a society is direct result of the dynamic interdependent of economic, political and social forces"[Ludovic Comeau.Jr 2003]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதிலேயே பொருளாதார அபிவிருத்தியின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படுகின்றது.

மத்திய அரசாங்கத்தை மக்களின் ஜனநாயக வாக்குச் சுதந்திரத்தின் வழி அடிக்கடி மாற்றுகின்ற தாராள ஜனநாயக சுதந்திரத்தின் வழியிலான பொறிமுறை ஊடாக நாம் பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியும் என்ற வாதம் ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்ட நாடுகளின் அனுபவத்தில், குறிப்பாக சிங்கப்பூரின் அனுபவத்தில் சற்று முரண்படுவதாக காணப்படுகின்றது. ஆசியாவில் மேலைத்தேச குறிப்பாக பிரித்தானியாவின் குடியேற்றத்துக்கு உட்பட்டிருந்த இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் தாராள ஜனநாயகத்தை பிரித்தானியாவிடம் கண்மூடித்தனமாக உள்வாங்கியதன் விளைவுதான் அவைகளின் இன்றைய குறைந்த பொருளாதார அபிவிருத்திக்கு காரணமாகியுள்ளது என வாதிட முடிகின்றது. இக்கருத்து குறைவிருத்தி நிலை என்பது ஒரு வரலாற்றுக் காலனித்துவ பொறிமுறையின் விளைவு என்ற வாதத்தை சற்று வேறுபட்ட பார்வையில் வலுவூட்டுவதாக அமைகின்றது. அபிவிருத்திக்கு ஜனநாயகச் சுதந்திரம் நேர்க்கணியமாக பங்காற்றுகின்றது என்ற வாதம் ஆசியாவின் பொருளாதார வேங்கைகளான சிங்கப்பூர், தென்கொரியா, தைவான் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளின் அனுபவத்திலும் அண்மையில் சீனாவின் பொருளாதார எழுச்சியிலும் சற்று முரண்பாடு உடையதாக காணப்படுகின்றது.[3] இப்பின்னணியில் இலங்கையில் விலை கொடுக்காமல் வழங்கப்பட்ட சுதந்திரத்தின் வழியான ஜனநாயகமயமாக்கல்தான் இலங்கையின் குறைவிருத்தி நிலைக்கு காரணம் என வாதிட முடிகிறது. இலங்கை 1958 இல் பண்டா-செல்வா உடன்படிக்கையின் ஜனநாயக எதிர்ப்பு பின்னணியில் குறைந்த ஜனநாயகமுடைய ஒரு கட்சி ஆட்சிமுறைக்கு சென்றிருந்தால்

---

[3]Even though success of NICs has been achieved by market friendly policies, geographical location, international political back ground of cold war, their common Confucian heritage which gives them a labor force hard working and other cultural values, any one can not reject the argument of sociopolitical stability which these countries had during their rapid economic development era by suppressing democracy until they became as a strong wealth of nation, Santhirasegaram.S(2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் குட்டி சிங்கப்பூராகி இருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

அபிவிருத்தி என்பது தனித்து பொருளாதாரக் காரணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துக்கு அப்பால் வருமான மீள்பகிர்வு, வறுமையை ஒழித்தல், ஒழுக்கம், ஜனநாயகமயமாக்கல், ஒப்புரவான வளப்பகிர்வு, சூழல் பாதுகாப்பு எனப் பல்வேறுபட்ட பல்பரிமாண விடயங்களை தன்னகத்தே கொண்டிருந்தபோதும், அபிவிருத்தியின் மையம் நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தையும் அதன்பாற்பட்ட தலா வருமானத்தையும் அதிகரித்தல் ஆகும். நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தின் அதிகரிப்பு என்பது தற்காலத்தில் பொருளாதார வளர்ச்சி வீதத்தால் அளவீடு செய்யப்படுகின்றது. எனவே நாட்டின் அபிவிருத்தியானது பல்வேறுபட்ட விடயங்களில் முன்னேற்றத்தை வேண்டி நின்ற போதும் அவற்றுள் பொருளாதார வளர்ச்சி பிரதான பங்கை வகிக்கின்றது. இப்பொருளாதார வளர்ச்சியின் தளத்திலேயே வருமானப் பகிர்வும் சமூக அபிவிருத்தியும் ஊற்றெடுக்கின்றது. பொருளாதார வளர்ச்சி இல்லாத அபிவிருத்தியானது வேரில்லாத மரம் போன்றது. அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான வளங்களை ஒரு நாடு பிறநாடுகளில் இருந்து பெற்றுக்கொண்டாலும், உள்நாட்டில் அவ்வளங்கள் தொடர்ச்சியாக கிடைக்கின்றபோது மட்டுமே அபிவிருத்தியானது தொடர்ந்து நிலைத்து நிற்க முடியும். இந்த வகையில் அபிவிருத்திக்கும் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சி அவசியமானதாக காணப்படுகின்றது.

பொருளாதார சுதந்திரத்தை தாமதப்படுத்தி சமூக மற்றும் அரசியல் விடுதலை ஊடாக ஆட்சி மீது நாட்டு மக்கள் எல்லோரும் பங்குகொள்ள முடியும் என்றும் இப்பங்குபற்றல் ஜனநாயகச் சுதந்திரம் மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யும் என்ற கருத்து மேலைத்தேசம் சார்ந்த அபிவிருத்தி புலமையாளர்களிடையே வேரூன்றி இருக்கின்றது. உண்மையில் ஜனநாயகம் என்பது நடைமுறையில் வர்க்கநலன் பேணும் முதலாளித்துவ அரசுகள் ஏழை மக்களையும் மத்தியதர வர்க்கத்தையும் ஏமாற்றுவதற்கான ஓர் கருவியாகவே இன்றைய குறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டு ரீதியாக ஜனநாயகம் ஊடான பிரதிநிதிகளின் தெரிவுகள் மீது இருக்கின்ற குறைபாடுகளுக்கு அப்பால் வெற்றியீட்டிய அரசாங்கமானது வெற்றிக்குப் பங்காற்றிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளதா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாட்டின் தலைமையை தெரிவு செய்வதற்கான அரசியல் உரிமையை பெற்றுக்கொண்ட மக்கள் ஆட்சியில் தாங்களும் ஒரு பங்காளிகள் என்று பெருமிதம் அடைகின்றார்கள். மக்கள் குறுங்காலத்தில் சமூகநல செலவீடுகளில் இருந்து கிடைக்கும் கவர்ச்சிகரமான நன்மைகளுக்காக நீண்டகால நலன்களை அரசியல் தலைவர்களிடம் ஈடுவைத்து அவர்களின் தயவின்மீது எப்போதும் தங்கியிருக்கும் கூட்டங்களாக மக்கள் மாற்றப்படுகின்றனர். இலங்கையில் 1948 இல் இருந்து அதிகாரத்தில் இருந்த முதலாளித்துவ அரசாங்கங்களும் அவற்றின் தலைமைத்துவமும் ஜனநாயக அரசியலில் தங்களின் அதிகாரத்தை தக்கவைப்பதற்கு நாட்டின் சமூக நலச் செலவீடுகளையும் இனவாதத்தையும் கருவிகளாகப் பயன்படுத்தி இனங்களுக்குள்ளும் இனங்களுக்கு இடையேயும் முரண்பாடுகளை உருவாக்கி அமைதியை சீர்குலைத்து நாட்டின் நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை தங்கள் சுயநல அரசியலுக்காக பலிக்கடா ஆக்கியுள்ளார்கள்.

சிங்கப்பூர் இலங்கையின் இந்த வரலாற்றுப் பின்புலத்தை கொண்டு இருந்தபோதும் 1965இல் சுதந்திரம் அடைந்த பின்னர் லீ குவான் யு (Lee Kuan Yew- yP) தாராள ஜனநாயக சுதந்திரத்தை கட்டுப்படுத்தி ஒரு மென்மையான சர்வாதிகாரத்தின் ஊடாக நாட்டின் எல்லா மக்களினது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றினார்.

இந்த அத்தியாயமானது சிங்கப்பூரை தொடர்புபடுத்தி இலங்கையில் பெரும்பான்மை இனத்தை மையப்படுத்திய ஜனநாயக சுதந்திரத்தின் விஸ்தரிப்பானது எவ்வாறு குறைவிருத்தி நிலையை அடைய உதவின என்பதை எடுத்து விளக்க முற்படுகின்றது. 1960 களில் இலங்கைப் பொருளாதாரத்தின் பல குறிகாட்டிகள் ஆசியாவில் ஏனைய பொருளாதாரங்களைவிட சிறப்பாக இருந்துள்ளது. 1950 மற்றும் 1960 களின் ஆரம்பத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஆசியாவில் ஜப்பானை நீக்கி ஏனைய வேகமாக கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமாகிய நாடுகளுக்கும் இடையே அபிவிருத்திக் குறிகாட்டிகளில் பெரிய வேறுபாடு எதனையும் காண முடியாது. சில நாடுகள் (தைவான், தென் கொரியா) பொருளாதார முன்னேற்றத்தில் இலங்கைக்கு பின்னாலேயே இருந்துள்ளன. ஆனால் இன்று அவ்வாறான பொருளாதாரங்களைவிட இலங்கை பல மடங்கு பின்னால் நிற்கின்றது.

அட்டவணை1:ஆசியாவில் இலங்கைப் பொருளாதாரத்தின் தலா வருமானம் (*US$*)

| நாடுகள் | 1962 | 1970 | 1980 | 1990 | 2000 | 2005 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 150 | 180 | 280 | 470 | 810 | 1170 | 2580 |
| ஹொங்கொங் | 530 | 940 | 5740 | 12500 | 26980 | 27690 | 36010 |
| சிங்கப்பூர் | 450 | 950 | 4840 | 11860 | 23030 | 26620 | 42930 |
| தென்கொரியா | 110 | 270 | 1810 | 6000 | 9800 | 15880 | 20870 |
| தாய்லாந்து | 120 | 210 | 730 | 1540 | 1990 | 2720 | 4440 |
| தென்ஆசியா | 76.5 | 116.4 | 264.4 | 379.6 | 444.2 | 692.6 | - |
| கிழக்குஆசியா | 72.01 | 121.8 | 293.6 | 424.7 | 907.1 | 1627.9 | - |
| இந்தியா | 80 | 110 | 270 | 390 | 450 | 730 | 1410 |
| சீனா | - | - | - | 530 | 930 | 1740 | 4040 |

*Source: World Development Indicator, World Bank's online data base,( atlas method)*

1962இல் இலங்கையின் தலாவருமானம் தென்கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் தலா வருமானத்தைவிட உயர்வாக இருந்தது. 2011இல் இலங்கையின் தலா வருமானம் இந் நாடுகளின் தலா வருமானத்தை விட பல மடங்குகள் குறைவாக இருக்கிறது. உதாரணமாக தென்கொரியாவின் தலா வருமானம் 2005இல் இலங்கையின் தலா வருமானத்தைவிட 12 மடங்குகள் அதிகமாகும். 1962 இல் சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான தலா வருமான இடைவெளி US$ 300 ஆகும். ஆனால் இவ்இடைவெளி 2012 இல் 40350 ஆக ஏறத்தாழ 134 மடங்கு அதிகரித்துள்ளது.

இலங்கையில் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது நீர்வளம், நிலவளம், கடல்வளம், மனிதவளம் என அபிவிருத்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமான அனைத்து இயற்கை வளங்களும் சிறப்பாக கிடைக்கப் பெற்றபோதும் இலங்கை அபிவிருத்தியில் இந்நாடுகளுடன் ஒப்பிடும்போது தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. இலங்கைக்கு அன்னிய உதவியிலும் (கடன்கள்+நன்கொடைகள்) தடங்கல் இன்றி நிதிவளங்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்தையும் கொண்டிருந்தும் இலங்கையின் தலா வருமானம் ஏன் அதிகரிக்கவில்லை என்பது ஓர் வினாவாகும்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் இன்னொரு அம்சம் யாதெனில் இலங்கை மெதுவான தலா வருமான அதிகரிப்பையும் ஆண்டுக்கு சராசரி 4.56 வீத (1960 - 2005) பொருளாதார வளர்ச்சி வீதத்தையும் கொண்டிருந்தாலும், சமூக அபிவிருத்தியில் ஜப்பானை அண்மித்துவிட்டது என்ற கருத்தாகும். கல்வியறிவு வீதம், எதிர்பார்க்கும் ஆயுட்காலம் மற்றும் சிசுமரண வீதம் போன்றவற்றின் அடிப்படையில் கணிக்கப்படும் பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் 94 (2004) ஆக 100 ஐ கொண்ட ஜப்பானை அண்மித்துவிட்டது என்பது மறுப்பதற்கு இல்லை என்றே கூறலாம்.

ஆனால் அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருக்ககூடிய வளங்களை புராணக் கதைகளை அச்சிட்டு இலவசமாக பாடப் புத்தகத்தையும் இலவசக் கல்வியையும் வழங்குவதன் ஊடாக அதிகரித்த எழுத்தறிவு வீதம் மற்றும் அதிகரிக்கப்பட்ட பட்டதாரிகளின் குறிப்பாக கலைப்பட்டதாரிகளின் அளவும் இலங்கையின் உற்பத்திப் பெருக்கத்துக்கு பயன்படக்கூடிய விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வியைவிட மரபு ரீதியாக பேணப்பட்டு வந்த வரலாற்று முறையில் அமைந்த பாடப்புத்தக அணுகுமுறையான கல்வியையே அதிகளவில் வழங்கியுள்ளது. இது தேசிய அபிவிருத்தி மீது கொண்டிருக்கின்ற தாக்கம் என ஆராயுமிடத்து இரண்டு பிரதான விடயங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவது, இலங்கையின் இலவசக் கல்வியானது நாட்டின் பொருளாதார உற்பத்தி மூலங்களைப் பெருக்கக்கூடிய தொழில்நுட்பம் சார்ந்த கல்வியை வழங்கத் தவறிவிட்டது. அரசியல்வாதிகள் கல்விக்கான மூலதனச் செலவைப் பெருக்குவதைவிட நுகர்வுச் செலவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பதன் ஊடாக பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் தொழிற்கூடங்களாக பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மாற்றப்பட்டன. கல்வியின் அளவு அதிகரித்தபோதும் தரம் அதிகரிக்கவில்லை எனலாம். இரண்டாவது, இலவசக் கல்விக்கான வள ஒதுக்கீட்டில் நடுநிலைமைத் தன்மை கடைப்பிடிக்கப்படவில்லை. இது இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் அதிகரிக்க ஓர் காரணமாகியது. இதேபோன்றே அரசாங்கத்தின் உணவு மானிய, சுகாதார, மருத்துவ சமூக நலச் செலவீடுகள் சிசுமரண வீதத்தைக் குறைத்து ஆயுள்காலத்தை அதிகரித்தது. ஆயுள்கால அதிகரிப்புக் கூட பொருளாதார உற்பத்தி மூலங்களுக்கு வழங்கிய பங்களிப்பைவிட மக்கள் நலன்கள் பேணப்பட்டமையால் அரசியல்வாதிகளின் வாக்கு வங்கி பலமடைந்தது. எனவே அரசாங்கம் வழங்கிக் கொண்டிருக்கும் சமூக நலச் செலவீடுகளைத் தொடர்ந்து வழங்குவதற்குத் தேவையான கைத்தொழில் மற்றும் விவசாயத்துறை மூலமான வருமான மூலங்களை புறக்கணித்து இச்செலவீனங்களினால் தோன்றிய சமூக அபிவிருத்தியானது நாட்டின் தேசிய வருமான அதிகரிப்புக்கு குறிப்பிடக்கூடிய பங்களிப்பை வழங்கவில்லை என்றே கூறலாம். இன, மத, மொழி அடிப்படையில் அறிவூட்டப்பட்ட பெரும்பான்மை புத்திஜீவிகள்கூட ஜனநாயக அரசியலில் இருந்து அரசியல் யாப்பு ரீதியாக சிறுபான்மையினர் ஓரம் கட்டப்பட்டதன் விளைவுதான் இன்றைய பொருளாதாரப் பின்னடைவு என்பதை ஏற்றுக் கொண்டாலும் அதை எழுத்தில் கொண்டுவர தயங்குகின்றார்கள்.[4]

இந்நோக்கில் இலங்கையில் ஜனநாயகம் சமூகநலச் செலவீடுகள் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றுக்கு இடையிலான தொடர்பை ஆராய்ந்து ஜனநாயகமயமாக்கல் நாட்டின் அபிவிருத்திமீது ஏற்படுத்திய தாக்கத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது. முதலாவது பகுதி ஓர் அறிமுகமாகவும் இரண்டாம் பகுதி கோட்பாட்டு பின்னணியையும்

---

[4] Through the issue has not been raised in any paper in the publication, it could be hypothesized that many institutional, cultural, political and other peculiarities of the country, not captured in the policy critique of mainstream economic discourse were behind Sri Lanka's failure to economically keep up with those other countries which, four decade ago, were at either parallel or inferior conditions….."W.D Lakshman (1997), p.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது பகுதி இவ்எண்ணக்கருக்கள் தொடர்பாக மேலைத்தேசம், ஆசியாவின் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற நாடுகள் மற்றும் இலங்கையின் அனுபவத்தை வெவ்வேறு தலைப்புக்களில் எடுத்துக் கூறுவதுடன் ஐந்தாவது பகுதி முடிவுரையாகவும் அமைகின்றது.

## 2. கோட்பாட்டு பின்னணி

ஜனநாயகம், சமூக நலச்சேவைகள் மற்றும் அபிவிருத்தி ஆகிய மூன்று எண்ணக்கருக்களும் உள்ளார்ந்த தொடர்புகளைக் கொண்டுள்ளன. ஜனநாயகம் *(Democracy)* என்பது ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு *(Voting Right)*, அரசியல் பன்முகத்தன்மையும் போட்டித்தன்மையும், *(political pluralism and competition)* சிவில் உரிமைகள் *(Civil rights)*, மனித உரிமைகள் *(Human rights)*, மத்திய மற்றும் மாநில ஆட்சியை அமைப்பதற்கு ஒழுங்கான பொதுத் தேர்தல்கள் *(Regular general elections)* போன்ற பிரதான பண்புகளைக் கொண்டுள்ளது. சமூக நலச் சேவைகள் *(Social welfare services)* இலவசக் கல்வி, இலவச மருத்துவம், சுகாதாரம், இலவச உணவு, இலவச சீருடை, நுகர்வுக்கான மானியங்கள் (கோதுமை மற்றும் அரிசி), இலவச நிலம், இலவச வீடு போன்றவற்றை உள்ளடக்கி இருக்கிறது. அபிவிருத்தி *(Development)* என்பது பொருளாதார அபிவிருத்தி (தலா வருமானம்/ பொருளாதார வளர்ச்சி வீதம்) சமூக அபிவிருத்தி (சிசு மரண வீதம், ஆயுள் காலம், எழுத்தறிவு வீதம், ஆண் பெண் சமத்துவம், மனித உரிமைகளை பாதுகாத்தல் ஜனநாயகம் மற்றும் தேர்தல்கள்) ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

இம்மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. முதல் இரண்டும் அபிவிருத்தியின் ஒரு பகுதியாகிய சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும். சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டும் அபிவிருத்தியின் இரண்டு இலக்குகள் ஆகும். அபிவிருத்திக்குள் ஜனநாயகம், சமூக நலச்சேவைகள் ஆகிய இரண்டும் இருக்கின்றது. அபிவிருத்தியானது பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது. ஆனால் இந்த இரண்டில் எது முக்கியமானது? எதனை அபிவிருத்தியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைப்படுத்த வேண்டும் என்பதிலேயே அபிவிருத்தியின் வெற்றி தங்கியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி (பொருளாதார வளர்ச்சி) சமூக அபிவிருத்தியை (கல்வி, சுகாதாரம், மருத்துவம், வருமானப் பங்கீடு மற்றும் வறுமையை ஒழித்தல்) ஏற்படுத்துமா? அல்லது சமூக அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துமா? அல்லது இரண்டும் ஒன்றாக முன்னெடுக்கப்பட வேண்டுமா? குதிரைக்குப் பின்னால் வண்டியா? அல்லது குதிரைக்கு முன்னால் வண்டியா? பொருளாதார வளர்ச்சிக்குப் பின்னால் சமூக அபிவிருத்தி செல்ல வேண்டுமா? அல்லது பொருளாதார வளர்ச்சிக்கு முன்னால் சமூக அபிவிருத்தி செல்ல வேண்டுமா? குதிரை வண்டியை இழுக்க வேண்டுமா? அல்லது வண்டி குதிரையை இழுக்க வேண்டுமா? பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு சமூக அபிவிருத்தி அடையப்பட வேண்டுமா? அல்லது சமூக அபிவிருத்தியைக் கொண்டு பொருளாதார வளர்ச்சியை அடையலாமா? பொருளாதார வளர்ச்சிதான் (GDP or தலாவருமான அதிகரிப்பு) முதலில் அடையப்பட வேண்டும்.[5]

பொசிந்து செல்லல் கோட்பாட்டின்படி *(Trickle Down Theory)* உயர்நிலத்தில் தண்ணீர் (GDP) தாராளமாக இருந்தால்தான் அது தாழ்நிலத்துக்கு பொசிந்து செல்லும். வளர்ச்சி இல்லாமலே வருமான பங்கீட்டுக்கோ அல்லது சமூக அபிவிருத்திக்கோ செல்லக்கூடாது. உதாரணமாக சீனா ஒரு சோஸலிச நாடாக இருந்தும், கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் பாரிய வருமான சமமின்மை இருக்கிறது. மலேசியாவில் சிறுபான்மை சீன இன மக்களின் வருமானம் ஒப்பீட்டு ரீதியில் பெருபான்மை மலே மக்களை விட உயர்வானதாகும்.

ஒரு இனம் அல்லது பிரதேசம் எந்த நாட்டின் பொருளாதார வரலாற்றிலும் முன்னணி வகித்ததுடன் அவை வருமானம் மற்றும் வாழ்க்கைதரத்திலும் ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது உயர்வாக இருந்துள்ளன. வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அபிவிருத்தியின்

---

[5] "Development is many-sided; it is not just the growth rates of income. True social needs, such as public health, protection of the environment, and the elimination or relief of extreme poverty, cannot be provided unless governments have the resources that only growth can generate……." Jagdish N. Bhagwati (2002).p.156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப கட்டத்தில் ஒன்றாக அடைய முடியாது. அவ்வாறு அடைய முற்பட்டால் அந்நாடு இறுதியில் இரண்டையும் இழக்கும். தண்ணீரே இல்லாமல் பொசிந்து செல்லல் பற்றி சிந்திக்க முடியாது. பொருளாதார வளர்ச்சி இன்றி அபிவிருத்தி பற்றி சிந்திக்க முடியாது. நாடுகளின் செல்வம் என்ற நூலில் (இன்று செல்வத்தின் அளவீடு தலா வருமானம் அல்லது பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும்) அடம்சிமித் வளர்ச்சிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கின்றார். கெயின்ஸ் அரசாங்க தலையீட்டை வற்புறுத்துகின்றாரே தவிர அவர் அத்தலையீட்டை சமூக அபிவிருத்திக்கோ அல்லது வருமான மீள்பங்கீட்டுக்கோ பயன்படுத்த அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கெயின்ஸ் ஒரு சோஸலிசவாதி அல்ல மாறாக முதலாளித்துவத்தில் இருக்கின்ற குறைபாட்டை எடுத்துக்கூறி முதலாளித்துவத்தை வளப்படுத்தியுள்ளார் *(Snowdon and Van, 2005)*. பருநிலை பொருளாதார குறிக்கோள்களிலும் பொருளாதார வளர்ச்சிதான் தலையானது. ஏனையவை பின்னர்தான். அபிவிருத்திக் கோட்பாட்டிலும் பொருளாதார வளர்ச்சிக்குப் பின்னர்தான் மற்றவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏன் பொருளாதார வளர்ச்சியைவிட சமூக அபிவிருத்தியை அல்லது சமூக நலனைச் சார்ந்த வளர்ச்சியை பல்லின கட்சியைக் கொண்ட ஜனநாயக அரசுகள் முதன்மைப்படுத்துகின்றன? சுயநல அரசியலுக்காகவும் வாக்கு வங்கியை தக்கவைப்பதற்காகவும் பொருளாதார வளர்ச்சியைவிட சமூக அபிவிருத்தி முதன்மைப்படுத்தப் படுகின்றது. பழமரம் இல்லாமலே கனியை ருசிக்கிறார்கள். கடன் மற்றும் அன்னிய உதவிகள் பெற்று இறக்குமதி மூலம் இவ்அபிவிருத்தி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பாரிய விவசாயப் பண்ணைகள், பாரிய கைத்தொழிற்சாலைகள், பாரிய பாலங்கள், தரமான விரைவான வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், துறைமுகங்கள், விமானத்தளங்கள், அணைக்கட்டுக்கள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றை அமைத்து சுறுசுறுப்பான நீண்டகாலத்தை நோக்காக கொண்ட வளர்ச்சியை அடைவதைவிட, இலவசக்கல்வி, உணவு மானியம், காணிப்பகிர்வு, சிற்றுடைமை தொழில்களுக்கான ஊக்குவிப்புகள் மற்றும் நுண்ணியல் நிதி வசதிகள் *(Micro Finance)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றின் மூலம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவது அரசியல்வாதிக்கு இலாபகரமானது.

மக்களை பாரம்பரிய விழுமியங்களை கொண்டிருக்கும் சீவனோபாய விவசாயத்துறை சார்ந்த கிராமியத்துறையில் மட்டுப்படுத்தி வைத்திருப்பதன் ஊடாக வாக்கு வங்கியை பலமாக்குகின்றது.[6] நிதி வழங்குகின்ற நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் இவ்வாறான சிறிய தொழில் முயற்சிகள் அவர்களுடைய நாட்டின் தொழில்களுக்கு போட்டியை உருவாக்கி ஆபத்தைக் கொடுக்காது. உள்நாட்டு ரீதியாக ஆட்சியாளர்கள் ஜனநாயக ரீதியாக இச்சேவைகளை வழங்கி மக்களை பாதுகாக்கின்ற பாதுகாவலன் எனக் காட்டுவதன் மூலம் என்றுமே தங்களில் தங்கியிருக்கின்ற உற்பத்தித்திறன் அற்ற ஏழ்மை மக்களை உருவாக்கியுள்ளனர். மறுபுறத்தில் சர்வதேச ரீதியாக வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு இவ்வாறான சிறிய திட்டங்களுக்கு நிதி வழங்குவதன் ஊடாக தங்களுக்கான வர்த்தக சூழலை உருவாக்கி வர்த்தக நலன்களை பெற்றுக்கொண்டு, ஏழை நாடுகளின் அபிவிருத்திமீது அக்கறை உள்ளவர்கள் எனக் காட்டுவதன் மூலம் என்றுமே தங்களில் தங்கியிருக்கின்ற கைத்தொழில்மயமற்ற நாடுகளை உருவாக்குகின்றன. உள்நாட்டு மற்றும் சர்வதேச இரு முதலாளித்துவங்களும் தங்களின் நலன்களைப் ஜனநாயகம் ஊடாக அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி அடைகின்றன. உயர்தரமான ஜனநாயக நாடுகளில் இது ஒரு முக்கிய பிரச்சினை அல்ல. ஆனால் தரம் குன்றிய ஜனநாயக நாடுகளில் இது பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்றது.[7] எந்த ஒரு நாடு இந்த உண்மை நிலையைப் புரிந்து சிறந்த தூரநோக்கு உள்ள தலைமைத்துவத்தின் கீழ் அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தில் ஜனநாயகத்தை கட்டுப்படுத்துகின்றதோ (குறைந்தது 20

---

[6] In many under develop area, the population on the land is so great that large numbers could be withdrawn from agriculture without any falling in agricultural output and with very littlie change of capital techniques. If this labor employed in public works, capital would be created without any fall in other output, or in total consumption , Gerald M Meier (1999) p.345 p354

[7] So, what might be called the quality of democracy matters greatly. A defective oligarchic democracy may well distort economic choices in the inefficient direction, imperiling prosperity. But then it may also affect what might be called the quality of development. Jagdish N. Bhagwati (2002) P.156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்காவது மத்திய அரசை மாற்றாத ஆட்சி) அது இந்த ஜனநாயக நச்சு வட்டத்தை உடைத்துக் கொண்டு அபிவிருத்தியில் மிக வேகமாக முன்னேறுகின்றது.

EG = f(PCA, HCA,…….N)

EG - பொருளாதார வளர்ச்சியும், PCA - பௌதீக மூலதன திரட்சியும், HCA - மனித மூலதன திரட்சியும், N - நல்லாட்சி, வரலாறு, இன ஒற்றுமை, மொழியின் தன்மை, அரசியல் உறுதிப்பாடு, ஜனநாயகம், சாதி, மதம், கலாச்சாரம், மனப்பாங்கு போன்ற பொருளாதாரமற்ற காரணிகளையும் குறிக்கின்றது. தொழில்நுட்பம் PCA மற்றும் HCA க்குள் இணைக்கப்பட்டுள்ளது.

மூலதனம்தான் அபிவிருத்தியின் மையம் ஆகும். வளர்ச்சிக் கோட்பாடுகளான *Big Push Theory, Rostow's Take off period, Domer's growth model, Solow's* வளர்ச்சி மாதிரி, *Romer's* வளர்ச்சி மாதிரி எல்லாமே மூலதனத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன. மூலதனம் இருந்தால் ஊழியத்தை வளப்படுத்தலாம், தொழில்நுட்பத்தைக்கூட மூலதனம் இருந்தால் பெற்றுக்கொள்ளலாம். சிங்கப்பூரில் *Lee Kuan Yew* இன் அரசாங்கத்தில் இருந்த நிதி அமைச்சர் மூலதனம்தான் அபிவிருத்தியின் மையம் என்கிறார்.[8] லீவிஸ் *(Lewis)* தனது இரு துறை வளர்ச்சி மாதிரியில் கூட மூலதனத்தின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது.[9] மூலதனவாக்கம் முதலீடு மூலம் கிடைக்கின்றது. முதலீடு சேமிப்பால் ஏற்படுகின்றது. தனியார் மற்றும் அரச சேமிப்பை எப்படி அதிகரிக்கலாம்? தனியார் மற்றும் அரசாங்கமானது உள்நாட்டில் நுகர்வைக் குறைப்பதன் ஊடாக சேமிப்பை அதிகரிக்கலாம்.

ஜனநாயக ஆட்சி உள்ள வளர்ந்து வரும் நாட்டில் அரசாங்கத்தின் பாரிய செலவு மீண்டெழும் சமூகநலன் சார்ந்த நுகர்வுச் செலவினங்களாக உள்ளன. ஒரு சிறிய கட்டடத்துக்குள்ளே ஒரு பல்கலைக்கழகத்தையே நடாத்துகின்றார்கள். பல்கலைக்கழகங்களில்

---

[8] Goh Keng Swee states that source of capital as central issue in development economics". Michael D.Barr (2000), p.19

[9] Lewis contended that the central fact of economic development is rapid capital accumulation( including knowledge and skill with capital)., Gerald M Meier (1999) p.346



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதே தவிர தரமோ அல்லது உள்கட்டுமான வசதிகளோ மாணவர்களின் அதிகரிப்பு வீதத்தைவிட குறைவாக இருக்கின்றது. வளர்ச்சிக்கான அடித்தளம் இல்லாமல் வளர்ச்சிக்கு நேரடியாகப் பங்களிப்பு செய்யாத சமூக அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது. இங்கு வளர்ச்சி என்பது அபிவிருத்திக்குத் தேவையான பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கின்றது. அவ்வளர்ச்சி இருந்தால்தான் நாம் சமூக அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்கலாம். வளர்ச்சிக்கு மூலதனத் திரட்சி அவசியமானதாகும். மூலதனத் திரட்சிக்கு முதலீட்டுச் செலவு அவசியமானதாகும். முதலீட்டுச் செலவுக்கு சேமிப்பு அதிகரிக்க வேண்டும். சேமிப்பு அதிகரிப்பதற்கு தனியார் மற்றும் அரசின் நுகர்வுச் செலவு குறைக்கப்பட வேண்டும். இந்த நுகர்வுச் செலவை தாராள மயப்படுத்தப்பட்ட ஜனநாயக ஆட்சி முறையின் மூலம் குறைக்க முடியாது. ஆசியாவில் ஜனநாயக அரசுகள் உள்ள நாடுகளில் முதலீட்டுச் செலவு குறைவாகவும் ஜனநாயகம் குறைந்த நாடுகளில் முதலீட்டுச் செலவு அதிகமாகவும் இருக்கின்றது.

குறைந்த ஜனநாயக ஆட்சி (மென்மையான சர்வதிகார ஆட்சி-*soft dictatorship regime,* எதேட்சை அதிகார ஆட்சி-*Authoritarian regime,* ஒரு கட்சி ஆட்சி, இராணுவ ஆட்சி) தூரநோக்கு கொண்ட சிறந்த தலைமையின் கீழ் மூலதனவாக்கம், அமைதி, நல்லாட்சி, வெளிநாட்டு நேரடி முதலீடு *(FDI),* பொருளாதாரக் கொள்கையின் நீடித்ததன்மை போன்றவற்றின் ஊடாக பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாக பங்களிப்புச் செய்கிறது. மூலதன திரட்சிக்கு பயன்படுகின்ற சேமிப்பானது பல கட்சி அரசியலில் சமூக நலச் செலவீடுகளுக்கு பயன்படுத்துகின்றபோது மக்கள் வினைத்திறமை இல்லாத ஊழியமாக மாற்றப்படுகின்றார்கள். நாடு மூலதனத் திரட்சியில் அதி உந்துதல் *(Big push)* அல்லது நுகர்வுச் செலவைக் குறைத்து மூலதனச் செலவை அதிகரிக்கின்ற விடுபடு நிலையை *(Take off )* அடையாது. அதிகரித்த சமூக நலச் செலவீடுகள் மக்களை வினைத்திறனற்றவராக்குகின்றது.[10]

---

[10]"From late 60s, I have visited Hong Kong almost every year, to study and to understand why Hong Kong people work with so much more drive and vigorous than the people in Singapore and to learn something from them….through the Hong Kong watching, I concluded that state welfare and subsidies blunted the individual's drive to succeed…I resolved to reverse course on the welfare policies which my party had inherited or copied from the British labor party's policies. by Lee Kuan yew in Micheal (2000) p.113



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் கடந்தகால அனுபவங்கள் ஊடாக (*Past Experiences*) உலகில் பல நாடுகளில் குறைந்த ஜனநாயக ஆட்சிமுறை பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பங்காற்றியுள்ளது என்பதை பின்வரும் தலைப்புக்களில் நோக்கலாம்.

### 1. ஜனநாயகமும் மூலதன திரட்சியும்

பொருளாதாரத்தின் உச்சநிலையில் இருக்கும் இன்றைய மேலைத்தேச நாடுகள் அவைகளின் ஆரம்ப காலத்தில் தாராள ஜனநாயகம் மற்றும் மனிதனின் உரிமைகள் அனைத்தையும் தியாகம் செய்துதான் இன்றைய பொருளாதார சுபீட்சத்தை அடைந்தன.[11] இன்றைய வளர்ந்த நாடுகள் அவைகளின் அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தில் மூலதனத் திரட்சியை பெற்ற வரலாறு இன்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து வேறுபடுகின்றது. குடியேற்ற நாட்டில் சுரண்டப்பட்ட செல்வம் தாய்நாடுகளின் மூலதனவாக்கத்தை அதிகரித்தது. முதலாளித்துவ வர்க்க நலன்சார்ந்த அரசுகள் தங்கள் நாட்டுக்குள்ளேயே தொழிற்சங்கங்களை கட்டுப்படுத்தியுள்ளன, பெண்கள், சிறுவர்கள் காலவரையறையின்றி தொழிற்சாலைகளில் சுரண்டப்பட்டனர். குடியேற்றவாசிகள் அடிமை போன்று நடாத்தப் பட்டனர். நவகாலனித்துவம் ஊடாக இன்றும் இச்சுரண்டல் நடைபெறுகின்றது. வளர்ந்த பின்னர் தாராள ஜனநாயகத்துக்கு வந்தனர். சமூக நலச் செலவீடுகளைச் செய்கின்றன. ஜனநாயகம் பற்றி அதிகம் கருத்து வெளியிடுகின்ற USAஇல் இன்றுகூட எல்லா கட்சிகளும் ஆட்சிக்கு வர முடியாது.[12] மிக அண்மைக் காலத்தில்தான் குடியேற்ற வாசிகளான கறுப்பு இன சிறுபான்மையினருக்கு அமெரிக்காவில் சமவுரிமை கிடைத்தது. உலகத்தில் பல குடியேற்றங்களைக் கொண்டிருந்த பிரித்தானியாவே இன்று பொருளாதாரத்தில் கீழ் நிலைக்கு சென்றமைக்குக் காரணம் தாராள ஜனநாயகத்தால் தூண்டப்பட்ட

---

[11] Thus, it is not surprising that Foucault, the seminal French philosopher, correlated the rise of European capitalism not to the spread of political liberty, but rather to the rise of the controlling, authoritarian aspects of European culture. Taking this notion a step further, one can surmise that the brutish aspects of China's political and social design were essential for the country's remarkable economic growth. Shlapntokh. D.( 2002), p. 246

[12] Gold Smith. A, points out that even some established liberal democracies, such as Unites States, are not "fully democratic" as the world learned during the 2000 presidential election, with the exposure of many polling irregularities and defeat of candidate who won the largest number of popular votes nationwide, GoldSmith. A,Business, (2002) p-99.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலச் செலவாக இருக்கும்போது, வளர்ந்து வரும் நாம் எப்படி இதைத் தொடர முடியும். பிரிட்டனின் வீழ்ச்சிக்குக்கூட தொழிற்கட்சி அரசாங்கத் தால் தூண்டப்பட்ட சமூகநலச் செலவீடுகள் காரணமாகின.[13]

பின்வரும் விளக்கப்படம் *1.1* இலங்கை மற்றும் இந்தியா போன்ற குறைவிருத்தி நாடுகளில் குடியேற்ற ஆட்சியாளர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட தாராள ஜனநாயகம் எவ்வாறு அரசியல் பொருளாதார பொதுச் செலவு நச்சு வட்டத்தை உருவாக்குகின்றது என்பதை விபரிக்கிறது.

**விளக்கப்படம்1.1: அரசியல் பொருளாதார பொதுச் செலவு நச்சு வட்டம்**




[13] Lee said in an interview " They were going to creating a just society for the British workers- the beginning of a welfare state, cheap council houses, free medicine and dental treatment, free spectacles, generous unemployment benefits. Of course, for students from colonies, like Singapore and Malaysia, it was great attraction as alternative for communism. We did not see until the 1970s that that was beginning of big problems contributing to the inevitable decline of British economy………… movement we go into the office in Singapore in 1959, we reversed the policies. We stopped free medicine … .we knew that free medicine was wasteful …..We leaned quickly that it was not workable, that was one of the causes of Britain's decline" W.G. Huff (1995), p.110.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகள் (*NICs*) மற்றும் மலேசியா, சீனா போன்றன இன்றைய உலக ஒழுங்கில் பிறநாடுகளில் வளங்களைச் சுரண்டி மூலதனத் திரட்சியை உருவாக்கி தங்கள் நாடுகளை வளப்படுத்த முடியாது உள்ளது. இதனால் தங்கள் நாட்டு மக்களின் தாராள ஜனநாயக மரபுகளை கட்டுப்படுத்துவதன் ஊடாக அரசியல் பொருளாதார பொதுச் செலவு நச்சுவட்டத்தை உடைத்துக் கொண்டு நுகர்வைக் குறைத்து மூலதனத் திரட்சியை உருவாக்கி வளர்ச்சியைப் பெற்று அபிவிருத்தியை எய்தினர், எய்திக்கொண்டு இருக்கின்றனர். இதை விளக்கப்படம் 1.2 விளக்குகின்றது.

இவ்அபிவிருத்தி அணுகுமுறையானது இன்றுள்ள ஜனநாயக மரபுக்கு முரணானதாக இருக்கலாம். ஆனால் மூலதனத் திரட்சி ஏற்பட்டு மூலதன இருப்பு அதிகரிக்கும் வரையாவது இதைத் தொடர வேண்டி இருக்கின்றது. ஆசியாவில் வேகமான பொருளாதார அபிவிருத்தியை அடைந்த நாடுகள் ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்தி சமூக நலச் செலவீடுகளைக் குறைத்து மக்களை உற்பத்தித்திறன் உள்ள ஊழிய வர்க்கமாக மாற்றி, மூலதனத் திரட்சியை உருவாக்கி, அமைதியை எய்தி, நல்லாட்சியை உருவாக்கி வேகமான நீண்டகால வளர்ச்சியைப் பெற்று சமூக அபிவிருத்தியை அடைந்தன. இவ்அணுகுமுறையின் வெற்றிக்கு அரசியல் தலைமைத்துவத்தின் பங்கும் குறிப்பிடக்கூடிய பங்கை ஆற்றியது. ஆசியாவில் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் ஏன் இலங்கை 1978 பின்னர் குறைந்த ஜனநாயகத்தைக் கொண்டிருந்தும் உயர்ந்த அபிவிருத்தியை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கப்படம் 1.2: அரசியல் பொருளாதார பொதுச் செலவு நச்சு வட்ட உடைப்பு**




இலங்கை போன்று சிங்கப்பூர் பிரித்தானியக் காலனித்துவத்தில் இருந்து விடுபட்டபோது நாட்டின் தலைவர்களும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் தாராள ஜனநாயகத்தையும் சமூகநல அரசையும் உருவாக்கினார்கள். மலேசியாவிடம் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னர் தாராள ஜனநாயகத்தையும் சமூகநல அரசையும் அகற்றினார்கள். கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற உயர் ஆளும் வர்க்கத்தினர் பல ஆண்டுகள் உலகிலே குடியேற்றங்களை கொண்டிருந்து தாய்நாட்டின் செல்வத்தை அதிகரித்த பின்னர் ஆட்சிக்கு வந்த தொழிற்கட்சி பிரித்தானியாவில் கடைப்பிடித்த தாராள




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்தில் கட்டியெழுப்பப்படும் சமூக நல அரசை உருவாக்குவதை தவிர்த்தார்கள். உயர் கல்வியால் கிடைக்கின்ற அனுபவத்தை கல்வி கற்ற நாட்டில் இருந்து கண்மூடித்தனமாக பிரதியீடு செய்து தமது தாய்நாட்டில் கடைப்பிடிக்காமல் அவற்றை புத்திசாலித்தனமாக பின்பற்றி உள்ளனர் *(Wise copy VS Blind copy from Western)*. இந்த வகையில் லீ *(Lee Kuan Yew)* சிறந்த நடைமுறைவாதியாக மிளிர்வடைந்துள்ளார்.[14] சிங்கப்பூரில் மேலைத் தேசத்தை திருப்திப் படுத்துவதற்காக பல கட்சிகள் இருந்தாலும் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வராதபடி ஒரு கட்சி (PAP) ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்தினார். நுகர்வுச் செலவு குறைந்தது. முதலீட்டுச் செலவு அதிகரித்தது. குறுகிய காலத்தில் நாட்டின் தேசிய வருமானமும் மக்களின் வாழ்க்கைத்தரமும் அதிகரித்தது.

**வரைபடம் 1.3: சிங்கப்பூரில் மூலதனத்தின் அதிஉந்துதல் (Big push)**

*சிங்கப்பூரில் மொத்த நுகர்வு மற்றும் மூலதன செலவு (மொ.உ.உ வீதம்)*




[14] "Lee Kuan Yew was undoubtedly genuine in his belief in Fabian socialism in his university days. But there has been little detailed attention paid later development (socialism) eventual abandonment of his socialist idea or his attitude to the welfare state.... Lee never intended to build a a wefare state in Singapore" see Lee Kuan Yew 's Fabian base by Micheal (2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965 க்கு முன்னர் சிங்கப்பூரில் பல கட்சிகளைக் கொண்ட சமூகநல அரசு ஆட்சியில் இருந்தது. 1965 இல் சிங்கப்பூரின் சுதந்திரத்தைத் தொடர்ந்து முழு அதிகார ஆட்சியை ஏற்ற லீ தொடர்ந்து 1991 வரை அதிகாரத்தில் இருந்துள்ளார். 1964 இல் நுகர்வுச் செலவு 176 வீதமாகவும் முதலீட்டுச் செலவு 24 வீதமாகவும் காணப்பட்டது (இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் 152 வீதம்). 1965 இல் இருந்து 1984 வரை சிங்கப்பூரின் நுகர்வுச் செலவானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்ல, முதலீட்டுச் செலவானது அதிகரித்துச் சென்றுள்ளதை வரைபடம் 1.3 காட்டுகின்றது. 1984 இல் நுகர்வுச் செலவு 53 வீதமாக குறைவடைந்து முதலீட்டுச் செலவு 48.6 வீதமாக அதிகரித்துள்ளது. நுகர்வுச் செலவுக்கும் முதலீட்டுக்கும் இடையிலான இடைவெளி 4.4 வீதத்துக்கு குறைக்கப்பட்டுள்ளது.

1965 இல் US$ 540 ஆக இருந்த தலாவருமானம் 1984 இல் US$ 6770 ஆக 12 மடங்குக்கு மேலாக அதிகரித்தது. இவ்வாறாக மூலதன இருப்புக்கான தளம் இடப்பட்ட பின்னர் நுகர்வுச் செலவு அதிகரித்தாலும் தலாவருமானம் குறையமாட்டாது. 1984 க்கும் 2004 க்கும் இடையில் சிங்கப்பூரின் தலாவருமானம் ஏறத்தாழ 4 மடங்கால் அதிகரித்துள்ளது. இம்மாற்றம் மக்களின் வாக்குக்காக செலவு செய்யப்படும் சமூக நலச் செலவால் அன்றி ஒரு மென்மையான சர்வாதிகார ஆட்சியால் உருவான மூலதன செலவு அதிகரிப்பால் உருவானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 1.1: ஆசியாவில் ஜனநாயகம், நுகர்வு செலவு, மூலதன செலவு மற்றும் தலாவருமானம்.**

| நாடுகள் | அதி உந்துதலின் ஆரம்பத்தில் நுகர்வுசெலவு முதலீட்டுசெலவு இடைவெளி(GDP) இன் வீதம்) | அதி உந்துதலின் முடிவில் நுகர்வு செலவு முதலீட்டு செலவு இடைவெளி(GDP) இன் வீதம்) | தலா வருமான மாற்றம் மடங்குகளில் (வருடங்கள்) | ஜனநாயக அளவு |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர்(1965-84) | 69.2 | 4.5 | 12.5 (19) | 02 |
| தெ.கொரியா(1972-87) | 61.5 | 30.1 | 9.7 (15) | 0 |
| சீனா (1962-05) | 74.1 | 8.1 | 24.8(42) | 0 |
| மலேசியா (1970-96) | 59.1 | 14.3 | 9.8 (26) | 5 |
| இந்தியா (1962-05) | 70.1 | 36.3 | 9.13(42) | 8.5 |
| இலங்கை (1965-05) | 70.3 | 59.1 | 7.31 (40) | 6.6 |
| *Source:Computed from World Development Indicator, World Bank's online data base* | | | | |

நுகர்வுச் செலவுக்கும் மூலதனச் செலவுக்கும் இடையிலான இடைவெளி குறுகிய காலத்தில் குறைக்கப்பட்டபோது தலா வருமானமானது வேகமாக அதிகரித்துச் சென்றுள்ளதை அட்டவணை 1.1 காட்டுகின்றது. ஜனநாயகம் உயர்வாக உள்ள நாடுகளில் நுகர்வுச் செலவுக்கும் மூலதனச் செலவுக்கும் இடையிலான இடைவெளி அதிகமாகவும் ஜனநாயகம் குறைவாக உள்ள நாடுகளில் இவ்இடைவெளி குறைவாகவும் காணப்படுகின்றது. சிங்கப்பூரிலும் சீனாவிலும் ஒருகட்சி ஆட்சி முறையிலும், தென்கொரியாவில் இராணுவ ஆட்சி முறையிலும், மலேசியா (1970 பின்னர்) பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி முறையிலும் நுகர்வுச் செலவைக் குறைத்து மூலதனச் செலவை அதிகரிக்க முடிந்தது. இந்நாடுகளில் இலங்கைதான் மிக நீண்ட காலத்தில் குறைந்த தலாவருமான அதிகரிப்பைப் பெற்றது. இந்தியா 2001 க்கு பின்னர்தான் இவ்இடைவெளியைக் குறைத்துள்ளது. 2001 இல் இவ்இடைவெளி 52 வீதம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியா 4 ஆண்டுகளில் 16 வீதத்தால் இடைவெளியைக் குறைத்துள்ளது. இவ்அணுகுமுறையால் தலாவருமானம் ஏறத்தாழ 300 டொலரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளது. 2003 க்கு பின்னர் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 8 வீதத்துக்கு மேலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாற்றம் ஒரு தாராள ஜனநாயக காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலேயே ஏற்பட்டுள்ளது. இதே கொள்கையை இந்தியா தொடர்ந்து கடைப்பிடிக்குமானால் இந்தியாவின் பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சியடையும். ஆனால் இந்தியாவில் இக்காலத்தில் இருந்த அரசியல் உறுதிப்பாடு தொடர்ந்து இருப்பதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதால் இவ்வேகமான பொருளாதார அபிவிருத்தி எதிர்காலத்தில் ஆட்சி மாற்றம், பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள், பிராந்திய உறுதியின்மைகள் போன்ற காரணங்களால் குறைவடையலாம்.


*அட்டவணை 1.2: ஆசியாவில் ஜனநாயகமும் மூலதன திரட்சியும்.*

| நாடுகள் | மொத்த மூலதனவாக்கம் (GDP இன் வீதமாக) சராசரி (1961-2005) | ஜனநாயகச் சுட்டெண் சராசரி (1961-2005) |
|---|---|---|
| சிங்கப்பூர் | 33.52 | 2.6 |
| சீனா | 32.67 | 0 |
| இந்தியா | 20.29 | 8.5 |
| மலேசியா | 25.29 | 5.68 |
| தெ. கொரியா | 28.86 | 3.77 |
| தாய்லாந்து | 27.9 | 3.91 |
| பிலிப்பைன்ஸ் | 22.26 | 4.66 |
| இலங்கை | 21.51 | 6.62 |
| பங்களாதேஸ் | 15.27 | 3.0 |
| நேபாளம் | 17.62 | 1.93 |
| பாகிஸ்தான் | 17.79 | 3.43 |

வரைபடம் 1.4: ஜனநாயகமும் மூலதனத்தின் அதி உந்துதலும் (Big push)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசியாவில் ஜனநாயகத்திற்கும் மூலதனவாக்கத்திற்கும் இடையிலான இணைவுக் குணகம் 1960-2005 காலப்பகுதியில் -0.89 ஆகும். பங்களாதேஸ், நேபாளம் மற்றும் பாகிஸ்தானில் ஜனநாயகம் குறைந்து இருந்தும் மூலதனவாக்கம் அதிகரிக்கவில்லை. இந்நாடுகளில் ஜனநாயகமோ அல்லது குறைந்த ஜனநாயகமோ ஒரே சீரானதாக இருக்கவில்லை. இவை *out layers* ஆகும்.


**இலங்கையில் ஜனநாயகமும் மூலதனவாக்கமும்**

இலங்கை 1961-1978 இடைப்பட்ட காலத்தில் சராசரி 7.47 ஜனநாயக சுட்டெண்ணைக் கொண்டிருந்தது. இது 1978-2005இல் 6 ஆக வீழ்ச்சியடைந்தது. இந்த இரண்டு காலப்பகுதியிலும் நாட்டின் பொருளாதார மூலதன இருப்பு அதிகரிக்கவில்லை. நுகர்வுச் செலவு வீழ்ச்சியடையவில்லை. 1961-1977இல் சராசரி 15.9 வீதமாக (மொ.உ.உ) இருந்த மூலதனச் செலவு 1978-2008இல் 25.2 வீதமாகத்தான் அதிகரித்தது. ஆனால் இந்த மூலதனச் செலவின் பெரும்பகுதி 1983 க்குப் பின்னர் பொருளாதார மூலதனச் செலவாக அன்றி இராணுவ மூலதனச் செலவாக இருக்கின்றது. 1978க்கு பின்னர் மகாவலி அபிவிருத்தி திட்டம் மற்றும் வீடமைப்புக்காக செலவழிக்கப்பட்ட செலவுகூட சிங்கப்பூரின் வீடமைப்பு திட்டம் மற்றும் தைவானில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நீர்ப்பாசனத் திட்டம் போன்றவற்றுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடும்போது நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை கவனத்தில் எடுக்காது குறுங்கால வாக்குவங்கியை நோக்காகக் கொண்டிருக்கின்றது.

**வரைபடம் 1.5: இலங்கையில் மூலதனத்தின் அதி உந்துதல் *(Big push)***




நுகர்வு மற்றும் மூலதனச் செலவு ஆகிய இரண்டுக்கும் இடையிலான இடைவெளி 1978 இல் இருந்து ஏறத்தாழ 60 வீதமாக இருக்கிறது. ஆனால் இது சிங்கப்பூரில் 5 (1984), சீனாவில் 8 (2005) ஆகவும் கொரியாவில் 34 (1990) ஆகவும், மலேசியாவில் 16 (1996) ஆகவும் உள்ளது. NICs நாடுகளில் அதி உந்துதலின் *(Big push)* உச்சத்தில் இந்த இடைவெளி பூச்சியமாக இருக்க வேண்டும் என கொள்கை வகுப்பாளர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இந்தியாவிலும் இவ்இடைவெளி 50-60 வீதமாக காணப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார மாதிரி 1978 இன் பின்னர் NICs ஐ ஒத்திருந்தபோதும், இது நுகர்வுச் செலவைக் குறைக்க முடியாமல் இருப்பதற்கு பின்வருவன காரணங்கள் ஆகும்.

i) ஆட்சி முறையில் உள்ள வேறுபாடு: பல ஆய்வாளர்கள் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி *(Partial Authoritarian*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Regime)* என அழைத்தாலும் பெரும்பான்மை மக்களுக்கு பூரணமான ஜனநாயக ஆட்சி ஆகும். இலங்கையில் எதேட்சை அதிகார ஆட்சி முறையின் பிரயோகம் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இருந்தது. எல்லா மக்களுக்கும் பொதுவானதாக இருக்கவில்லை.

ii) பொது நுகர்வுச் செலவைக் ( நலச் சேவைகளை) குறைக்கின்ற அரசாங்கம் பதவியை இழக்க வேண்டி இருந்தது. மக்கள் இலவச சேவைக்கு முழுமையாக இசைவாக்கப்பட்டமையால் இதைக் குறைக்க முடியாமல் இருக்கிறது.

iii) பாதுகாப்புச் செலவின் ஒரு பகுதி (இராணுவ வீரர்களுக்கான சம்பளம்) பொது நுகர்வுச் செலவாகும். இதைக் குறைத்தாலும் இராணுவத்தை வடக்கு கிழக்கில் இருந்து மீளப்பெற வேண்டி இருக்கும். இந்நடவடிக்கையும் அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றும். அரச ஊழியர்களுக்கான சம்பளத்தில் 52 வீதம் பாதுகாப்பு படைகளுக்கான சம்பளமாக இருக்கிறது.[15]

**வரைபடம் *1.6:* இலங்கையில் பாதுகாப்புச் செலவும் மூலதனவாக்கமும்**




[15] Rajesh Venugopal (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மூலதனச் செலவில் ஒரு பகுதி பாதுகாப்புக்கான மூலதனச் செலவாக இருப்பதால் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கும் போது மூலதனச் செலவும் அதிகரிக்கின்றது. இருப்பினும் 1983க்கு பின்னர் மொத்த பாதுகாப்புச் செலவினத்தின் அதிகரிப்பானது மொத்த மூலதன செலவைக் குறைத்துள்ளது. இலங்கை நுகர்வுச் செலவை 1978 பின்னர் குறைக்க முடியவில்லை. மூலதனச் செலவை சிறியளவில் அதிகரித்துள்ளது. ஆனால் இது அதிகளவில் பொருளாதார உள்கட்டு மானத்துக்கான செலவாக இன்றி பாகாப்புக்கான மூலதனச் செலவாக இருக்கின்றது. கொள்கை வகுப்பாளர்கள் பாதுகாப்புச் செலவை ஓர் பொரு ளாதார உள்கட்டுமான செலவாகவும், நடைபெற்ற போரை பயங்கர வாதத்துக்கு எதிரான போர் எனவும் குறிப்பிடுகிறார்கள். 1983 இல் இருந்து இச்செலவினத்தின் அதிகரிப்பு நாட்டின் அமைதியைக் கொண்டு வருவதன் மூலம் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் என்கின்றனர்.

ஆனால் இன்று வரை செலவு அதிகரித்து செல்கின்றது. அமைதி யின்மையும் அதிகரிக்கிறது. அபிவிருத்தி மந்த நிலையில் இருக்கிறது. இந்த பொதுச் சமூக செவினங்கள் ஜனநாயக அரசியலில் சமூக அரசியல் ரீதியில் இன முரண்பாட்டை தூண்டியுள்ளன. இலங்கையின் பெரும் பான்மை மக்களை சார்ந்த ஜனநாயகத்தின் வழிதூண்டப்பட்ட நுகர்வுச் செலவில் பிரதான பங்கினைக் கொண்டுள்ள சமூக நலச் செலவீடுகள், குடியான் விவசாயத்தின் மீதான செலவீடுகள் மற்றும் பாதுகாப்பு செலவினம் இலங்கைப் பொருளாதாரத்தின் மீது பிரதானமாக இரண்டு வகையான தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

1. இலங்கையில் அதிகரித்துச் சென்ற நுகர்வுச் செலவானது பொரு ளாதார அபிவிருத்தியில் வெற்றிபெற்ற நாடுகளின் அனுபவம் எடுத்துக்காட்டியது போன்று மூலதனச் செலவை அதிகரித்து சமூக அபிவிருத்திக்கு அடித்தளமாக இருக்கின்ற துரிதமான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்தத் தவறியமை.

2. இலங்கையில் அதிகரித்துச் சென்ற சமூக நலச் செலவீடுகள், குடியான் விவசாயத்தின் மீதான செலவீடுகள் (உலர் வலய குடியேற்றத் திட்டங்கள்) மற்றும் பாதுகாப்புச் செலவினம் போன்றன இன ஒற்றுமைக்கு பதிலாக இன முரண்பாட்டை உருவாக்கி பாரிய யுத்தத்துக்கு இட்டுச் சென்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஜனநாயகமும் சமூக அரசியல் உறுதிப்பாடும் (அமைதி)

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அமைதி முக்கியமான தாகும். ஆசியாவில் இராணுவச் செலவினத்தை அமைதியின்மைக்கான ஓர் குறிகாட்டியாகக் கொள்வோமானால், ஜனநாயக நாடுகளிலேயே இராணுவச் செலவினம் அதிகமாகக் காணப்படுகின்றது. மாறாக ஜனநாயகச் சுட்டெண் குறைந்த நாடுகளில் இராணுவச் செலவினம் குறைவாகக் காணப்படுகின்றது. ஆசியாவில் 1989 -1999 காலப்பகுதியில் தாராள ஜனநாயகத்தைக் கடைப்பிடித்த நாடுகளில் இன, மத, மொழி, பிரதேச முரண்பாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இது பாதுகாப்புக்கான செலவை அதிகரித்துள்ளது. இது அமைதியின் மைக்கான ஓர் குறிகாட்டியாகும்.

**அட்டவணை 1.3: ஆசியாவில் ஜனநாயகம், அமைதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI)**


| நாடுகள் | ஜனநாயகச் சுட்டெண் சராசரி *(1961-1999)* | இராணுவச் செலவினம்GDP இன் வீதமாக சராசரி*(1989-1999)* | FDI மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதம் சராசரி *(1970-2005)* |
|---|---|---|---|
| சிங்கப்பூர் | 2 | 4.7 | 11.7 |
| சீனா | 0 | 2.1 | 23.36 |
| இந்தியா | 8.3 | 2.9 | 0.40 |
| மலேசியா | 5.7 | 2.54 | 4.1 |
| கொரியா | 5.0 | 2.85 | 12.63 |
| தாய்லாந்து | 3.6 | 2.2 | 1.91 |
| பிலிப்பின்ஸ் | 4.4 | 1.3 | 1.3 |
| இலங்கை | 6.64 | 3.4 | 1.01 |
| பங்களாதேஸ் | 2.21 | 1.3 | 0.22 |
| நேபாளம் | 2.3 | 0.99 | 0.12 |
| பாகிஸ்தான் | 4.4 | 6.1 | 0.72 |

மூலம்: உலகவங்கியின் புள்ளிவிபர தளம் மற்றும் Polity iii இருந்து கணிக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடம் 1.7: ஆசியாவில் ஜனநாயகமும் அமைதியும்




ஆசியாவின் (கிழக்கு மற்றும் தென் ஆசியா) 10 நாடுகளை மாதிரியாகக் கொண்டு 1989 - 1999 காலப்பகுதியில் ஜனநாயகத்துக்கும் இராணுவச் செலவுக்கும் இடையில் ஓர் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது. சிங்கப்பூர் (அபிவிருத்தி அடைந்த நாடு) தேசிய பாதுகாப்புக்காக இராணுவச் செலவை அதிகரிக்கின்றது. சீனா ( UNO இல் பாதுகாப்பு சபையில் அங்கத்துவம்) உலக வல்லரசை நோக்காகக் கொண்டும் இராணுவச் செலவை அதிகரிக்கிறது. இவை இரண்டையும் நீக்கியபோது ஜனநாயகத்துக்கும் இராணுவச் செலவினத்துக்கும் இடையிலான இணைவுக்குணகம் - 82 சதவீதமாகக் காணப்படுகின்றது.

## இலங்கையில் ஜனநாயகமும் சமூக உறுதிப்பாடும்

இலங்கையில் 1978க்கு முன்னர் விஸ்தரிக்கப்பட்ட தாராள ஜனநாயகம் ஏறத்தாழ 25 வீத தமிழ் பேசும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை அவர்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான வளப்பங்கீட்டில் சமத்துவத்தையும் நீதிதன்மையையும் ஏற்படுத்தத் தவறிவிட்டது. சமூக முரண்பாடுகள் அதிகரிக்கப்பட்டன. ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மை மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் ஓரம் கட்டப்பட்டுள்ளனர். இன்றைய இனமுரண்பாட்டுக்கான அடிப்படை மூலங்கள் 1978க்கு முன்னர் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி (UNP) மற்றும் இலங்கையின் சுதந்திரக் கட்சி (SLFP) ஆகிய இரு கட்சிகளினாலும் மாறி மாறி விதையிடப்பட்டன. ஜனநாயகம் என்ற போர்வையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டர்களும், ஆயுதம் தாங்கிய அரசியல்வாதிகளின் கைக்கூலிகளும் சிறுபான்மை மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக வன்முறைகளைப் பரப்பினர்.

இலங்கையில் ஜனநாயகம் என்பது மேலைத்தேசவாதமான அமைதியைக் கொண்டுவரும் என்பதற்குப் பதிலாக சமூக அரசியல் உறுதியின்மையை அதிகரித்து இனமுரண்பாட்டை வளர்த்தது. உலர்வலயக் குடியேற்றத் திட்டங்கள் பெரும்பான்மை அபிவிருத்திப் புலமையாளர்களால் விவசாய அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் வருமான மீள்பங்கீட்டுக்கான அபிவிருத்தித் தந்திரோபாயங்கள் என வியாக்கியானம் செய்யப்பட்டாலும், இக்குடியேற்றத்திட்டங்களின் தந்தை என அழைக்கப்படுகின்ற டீ.எஸ்.சேனநாயக்கா இத்திட்டங்களின் நோக்கம் சிங்களமயமாக்கம் என்பதை நேரடியாகவே குறிப்பிட்டு இருக்கின்றார்.[16] எனவே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் உண்மையான பொருளாதார இலக்குகளை விட குறுங்கால நலனைக் கொண்ட அரசியல் இலக்குகளை நோக்கமாகக்கொண்டு வகுக்கப்பட்டமையினால் அவை சமூக முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

இலங்கையில் 1978இல் நடைமுறைக்கு வந்த குறைந்த ஜனநாயக ஆட்சியின் மூலமும் அமைதியும் சமூக உறுதிப்பாடும் ஏற்படவில்லை எனலாம். மாறாக இனமுரண்பாடு இனயுத்தமாக பரிணமித்தது. குண்டர்கள் ஆயுதம் தாங்கிய அரசியல்வாதிகளின் கைக்கூலிகளுடன் இலங்கையின் ஆயுதப் படைகளும் இணைந்து இனமுரண்பாட்டை இனயுத்தத்துக்கு இட்டுச் சென்றனர். பல ஆசிய நாடுகளில் குறைந்த ஜனநாயகம் அமைதியை உருவாக்கியிருக்க, இலங்கையில் அவ்வாறான குறைந்த ஜனநாயகம் அமைதியின்மையை அதிகரித்தமைக்குப் பிரதான காரணம் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமையும் ஐந்தில் நான்கு பெரும்பான்மையினையும் கொண்டு UNP அரசாங்கம் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதை விடுத்து, இலங்கையில் அவர்களின்

[16] A visionary zeal in peasant colonization of the dry zone-as a return to the heartland of the ancient irrigation civilization of the Sinhalese" *(பேராசிரியர் ச. சத்தியசீலன், பக்கம் 10)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களை பாதுகாக்காமை ஆகும். சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்றன பல்லின சமூகங்களுடன் குறைந்த ஜனநாயக ஆட்சியில் சமூக அரசியல் உறுதிப்பாட்டை அடைய, இலங்கை அவ்வாறான பண்புள்ள ஆட்சியில் ஆயுத போராட்டத்துக்குச் சென்று பொருளாதார அபிவிருத்தியில் தோல்வியடைந்துவிட்டது. சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் நீண்ட குறைந்த ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மை மக்களின் மொழி அடையாளத்தை தாங்கி நிற்கும் நூலகங்கள் எரிக்கப்பட்டமைக்கு எதுவித சான்றுகளும் காணமுடியாது. சிறுபான்மையினரின் மொழி உரிமை சிங்கப்பூரில் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது.[17]

1989 இல் இலங்கையின் தென்பகுதியில் உருவான அமைதியின்மை யானது குறைந்த ஜனநாயக ஆட்சியை பயன்படுத்தி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அவ்வாறான ஒரு இராணுவ அணுகுமுறையைப் பயன்படுத்தி இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு பல தலைவர்கள் முயற்சித்துள்ளனர். இருப்பினும் அவர்களால் இலங்கையில் அமைதியைக் கொண்டுவர முடியாமைக்கு பிரதான காரணம் இப்பிரச்சினை தனித்து தீவிரவாதமோ அல்லது பயங்கரவாதமோ அன்றி அரசியல் பிரச்சினையுடன் வித்திட்டு வேரூன்றி இருக்கின்றமை ஆகும். பொருளாதாரத்தில் மிகவும் பலவீனப்பட்டிருக்கும் இலங்கை ஆசியாவிலேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகளவான இராணுவச் செலவினத்தைக் கொண்டிருக் கின்றமை இலங்கையின் அமைதியின்மையின் அளவினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்கான கொள்கைத் தெரிவாக சிறுபான்மையினர் தமது பிரதேச அபிவிருத்தியை மத்திய அரசில் தங்கியிருக்காமல் தாங்களாகவே தீர்மானிக்கக்கூடிய கடந்த காலத்தை விட மேலான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றினை உருவாக்கி அதை நூறு வீதம் அமுல்படுத்தும்போது பெரும்பான்மையினரிடம் இருந்துவரும் தடைகளை உடைப்பதற்கு குறைந்த ஜனநாயக


---

[17] இலங்கையில் 1950 களில் பிற்பகுதியில் தோன்றிய மொழிப்பிரச்சினை போன்று சிங்கப்பூரில் சீனாவை பின்னணியாகக் கொண்ட சீனக் கடும் போக்காளர்கள் சீனமொழியை அரச கரும மொழியாக அமுல்படுத்த வேண்டும் என வேண்டி நின்றனர். குறிப்பாக Tan Lark Sye என்பவர் இரண்டாம் உலகப் போரில் பிரபலியமான ஒரு இராணுவ ஜெனரல் ஆவார். இவர் சிங்கப்பூரில் சீன மொழியில் கல்வி நிறுவனங்கள் இயங்க வேண்டும் என்றும் சீனமொழிக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்பட வேண்டும் எனவும் 1961 இல் வாதாடியுள்ளார். "Increasing taxes, laying traps. Turing out pools and wasting public funds"... If we do not take steps to preserve our culture now, in 40 or 50 years **perhaps we shall no longer call our self Chinese" (Eastern Economic Review, 1980, p.161)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையைப் பயன்படுத்துவதாகும். இவ்வாறு பிரிவினைக்கு வித்திடும் என ஐயப்படுகின்ற அரசியல் தீர்வுத்திட்டத்துக்கு எதிராக இன, மொழி பிரதேச வேறுபாடு இன்றி சிறுபான்மையினர் ஒற்றை ஆட்சிக்குள் ஆளும் கட்சிகளுடன் சேர்ந்து தங்களுடைய பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தலாம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது.




வரைபடம்1.8: இலங்கையில் வறுமையின் போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராய்பவர்கள் சிறுபான்மையினர் சார்பாக முன்வைக்கும் ஒரு குற்றச்சாட்டு யாதெனில் சிறுபான்மையினர் ஆளும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக அரசாங்கத்தில் அங்கம் வகித்து தமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்க வில்லை என்பதாகும். சிறுபான்மையினர் பிரிவினைவாதக் கோரிக்கைகளை கைவிட்டு அவர்கள் பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தால் அவர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்து இருக்கும் என்பதாகும். ஆனால் இலங்கையின் வரலாற்றில் மலையக தமிழ் கட்சிகள் என்றுமே ஆளும் பெரும்பான்மை கட்சிகளுடன் அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலந்தான் அதிகம். அவ்வாறு இருந்தும் அவர்களின் பொருளாதார அபிவிருத்தி தாழ்மட்டத்திலேயே உள்ளது.

இலங்கையில் 2007 இல் வடக்கு - கிழக்கு நீங்கலாக இலங்கை புள்ளிவிபர திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வறுமை தொடர்பான புள்ளிவிபரங்களில் இந்திய தமிழ் மக்கள் செறிவாக உள்ள மாவட்டங்களிலேயே வறுமை அதிகமாக உள்ளமையை வரைபடம் 1.8 காட்டுகின்றது. சிறுபான்மையின்ரின் பங்குபற்றல் ஜனநாயகம் ஏனைய பொருளாதார முன்னேற்றங்களைவிட மிக முக்கியமான அபிவிருத்திக் குறிக்கோளான வறுமையையே ஒழிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. மாறாக வறுமை அதிகரித்துள்ளது. வறுமையே ஒழிக்கப்படவில்லையாயின் ஏனைய அபிவிருத்தியின் நிலை எவ்வாறு இருக்கும் என்பது தெளிவாகின்றது.

### 3. ஜனநாயகமும் வெளிநாட்டு நேரடி முதலீடும்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டு மூலதனம் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை நல்கி வருகிறது. இது பின்வரும் வழிகளில் கிடைக்கிறது.

1. வெளிநாட்டு நேரடி முதலீடு(FDI)
2. வெளிநாட்டு பட்டியலிடப்பட்ட முதலீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெளிநாட்டு நன்கொடைகள்

4. வெளிநாட்டு உதவிகள் (கடன்கள்)

இவ்வெளிநாட்டு மூலதனமானது ஓர் நல்லாட்சியும் அமைதியும் இருக்கின்ற நாடுகளுக்கே கிடைக்கின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளுக்கு ஓர் பாதுகாப்பான ஆயுளை நீண்டகாலத்துக்கு எதிர்பார்க்கின்றனர். முதலீட்டுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஜனநாயக ஆட்சியைவிட சர்வாதிகார ஆட்சி அல்லது குறைந்த ஜனநாயகத்தைக் கொண்ட ஆட்சியில் அதிகமாகக் கிடைக்கின்றது. இம்முதலீடுகளின் பலாபலன் களும், வருவாய்களும் நீண்டகாலத்தில் பெறப்படுவதால் இவ்வகை யான முதலீடுகளுக்கு நீண்டகாலத்துக்கு அரசியல் உறுதிப்பாடு தங்கள் நாட்டில் இருக்க வேண்டும் என்பதனை எந்த நாடு மெய்ப்பித்துக் காட்டுகின்றதோ அந்த நாடு அதிகளவான மூலதனத்தைக் கவர்கின்றது.

இன்று உலகிலேயே சீனா அதிக வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்வதற்கு ஓர் பிரதான காரணமாக சீன ஆட்சியாளர்கள் தமது நாடு எதிர்காலத்தில் அரசியல் உறுதிப்பாட்டைத் தொடர்ந்து பேணிவரும் என்பதை கடந்த 50 வருட ஆட்சியில் வெளிப்படுத்தி வருகின்றமை ஆகும். ஆசியாவில் ஜனநாயகத்துக்கும் FDI க்கும் இடையிலான இணைவுக் குணகம் -0.54 ஆகும் (அட்டவணை 3 ஐ பார்க்க). ஜனநாயகத்தை அதிகமாகக் கொண்ட நாடுகள் வெளிநாட்டு முதலீட்டைக் குறைவாகக் கொண்டிருக்கின்றன. மாறாக குறைந்த ஜனநாயகத்தைக் கொண்ட நாடுகள் அதிகளவான வெளிநாட்டு முதலீட்டைப் பெறுகின்றன.


## இலங்கையில் ஜனநாயகமும் வெளிநாட்டு நேரடி முதலீடும்

இலங்கையில் 1978 க்கு பின்னர் குறைந்த ஜனநாயக ஆட்சியில் அதிகளவாகப் பெற்ற வெளிநாட்டு மூலதனத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடு ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாக காணப்படுகின்றது. இலங்கையின் GDP குறைவாக இருப்பதால் GDP இன் வீதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு இந்தியாவுடன் ஒப்பிடும்போது உயர்வாக இருந்தாலும் மொத்தத்தில் FDI குறைவானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரைபடம் 1.9: ஆசியாவில் இலங்கையின் வெளிநாட்டு முதலீட்டின் நிலை**




வெளிநாட்டு மூலதனத்தில் இலங்கை பெற்ற அன்னிய உதவி ஆசியாவிலேயே மிக உயர்வாக உள்ளது. 1962-2005 இடையில் ஆண்டுக்கு இலங்கை பெற்றுக்கொண்ட தலா வெளிநாட்டு உதவி சராசரி US$ 30.4 ஆக உள்ளது. இது மலேசியாவில் $ 7.62, தாய்லாந்து $ 8.36, சிங்கப்பூர் $5.5, சீனா 1.48, இந்தியாவில் 2.0 ஆகவும் காணப்படுகின்றது.

ஆசியாவில் தலா வெளிநாட்டு உதவியை அதிகமாகப் பெற்ற நாடாகவும், அதிக வெளிநாட்டுப் படுகடனை (1981 - 2005 காலப் பகுதியில் GDP இன் வீதமாக சராசரி 61.2) பெற்ற நாடாகவும் இலங்கைதான் இருக்கின்றது. ஒரு நாடு வெளிநாட்டு மூலதனத்தில் FDI ஐ (அநேகமாக வெளிநாட்டு தனியார்) விட கடன்களிலும் நன்கொடைகளிலும் (அநேகமாக வெளிநாட்டு அரசாங்கம்) அதிகம் சார்ந்து இருப்பது அந்நாடு தனது இறைமையை வெளிநாடுகளில் இழந்து விட்டதை குறித்து நிற்கின்றது. இலங்கையின் அன்னிய மூலதனத்தின் போக்கு இந்நாடு எவ்வளவுக்கு வெளிநாடுகள் மீது தனது இறைமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து நிற்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. உள்நாட்டில் புராதன காலம்தொட்டு வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை அடக்கி சிங்கள பௌத்த இனவாதத்தை நிலைநிறுத்துவதற்காக இவ்அழகான தீவை நிதி அடிப்படையில் வெளிநாடுகளில் ஈடுவைக்கின்ற நிலையை இவ்வெளிநாட்டு மூலதனத்தின் பரம்பல் குறித்து நிற்கின்றது. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடம் இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளுக்கு மத்தியிலும் அதிக வெளிநாட்டு உதவியைப் பெற காரணமாக அமைந்துள்ளது.

21ம் நூற்றாண்டில் மாற்றமடைந்து வரும் உலக பொருளாதார அரசியல் சூழல் மேலைத் தேசத்துடன் இந்தியாவையும் இணைத்து இலங்கைக்கு அன்னிய உதவியை அதிகரிக்க வாய்ப்பை அதிகரித்துள்ளது. தொகுத்து நோக்குமிடத்து இலங்கை ஆசியாவில் பொருளாதார வெற்றி பெற்ற நாடுகள் போன்று குறைந்த ஜனநாயகத்தின் வழியான அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெறாமல், சிறுபான்மையினரை ஓரம்கட்டிய பெரும்பான்மையினருக்கு வழங்கப்பட்ட ஜனநாயகத்தின் பயனாக அதிக வெளிநாட்டு உதவியைப் பெற்று தனது இறைமையை வெளிநாடுகள் மீது இழந்து நிற்கின்றது. இது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை கடுமையாகப் பாதிக்கின்றது.

### 1. ஜனநாயகமும் பொருளாதாரக் கொள்கையின் நீடித்ததன்மையும்

கல்வி கற்ற புத்திஜீவிகளால்கூட விளங்கிக்கொள்ள முடியாத பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி அவற்றின் இலக்குகளை அடைவதற்கு ஓர் நீடித்த ஆட்சிமுறைமை அவசியமானதாகும். ஜனநாயக ஆட்சிமுறையில் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் இடம்பெறுவதால் அரசாங்கம் மாற்றமடைகின்றது. அரசியல் கட்சிகள் ஆட்சியை கைப்பற்றவதற்காக மக்களைக் குழப்புகின்றனர். இதன் காரணமாக மக்கள் வாக்குரிமை ஊடாக ஆட்சியை மாற்று கிறார்கள். மாற்றமடைகின்ற அரசாங்கம் தமக்கு வாக்களித்த மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக கொள்கைகளில் மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறது. எந்தத் துறையிலும் ஓர் சீரான கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வது அரிதாகக் காணப்படுகின்றது. துறைகளின் தலைவர்கள் உயர் அதிகாரிகள் அனைவரும் தங்கள் கட்சி சார்ந்தவர்களாக மாற்றப்படுகிறார்கள். புதிதாக நியமிக்கப்படுபவர்கள் அடுத்த ஆட்சிமாற்றத்தின்போது மீண்டும் மாற்றப்படுகிறார்கள். தேசிய ரீதியில் கொள்கைகள் மாற்றப்படுவதோடு கொள்கைகளை அமுல் படுத்துபவர்களும் மாற்றப்படுவது நாட்டின் தேசிய அபிவிருத்தியைப் பாதிக்கின்றது. நீடித்த ஆட்சியும் அடிப்படையில் மாற்றமடையாத கொள்கைகளும் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகும்.

கிழக்கு ஆசிய நாடுகளில் அனேகமானவை பொருளாதார அபிவிருத்தியில் மிக வேகமாக முன்னேறியமைக்கு இந்நாடுகளில் காணப்பட்ட நீடித்த ஆட்சியும் மாற்றமடையாத கொள்கைகளும் ஓர் காரணமாக அமைந்தன. இவ்வாறான நீடித்த ஆட்சி மத்திய அரசை மாற்றம் அடையச் செய்யாத வரையறுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி முறையினாலேயே ஏற்பட்டதாகும்.

## இலங்கையில் ஜனநாயகமும் பொருளாதாரக் கொள்கையின் நீடித்த தன்மையும்

இலங்கையில் 1978 க்கு முன்னர் அடிக்கடி மாற்றப்பட்ட ஆட்சி யானது பொருளாதாரக் கொள்கையில் நீடித்த தன்மையை கடுமையாகப் பாதித்தது. UNP அரசாங்கத்தால் 1965 இல் நடைமுறைக்கு வந்த தாராள பொருளாதாரக் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டிருக்குமானால் இலங்கையின் இனப்பிரச்சினை பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட அபிவிருத்தியினால் குறைந்திருக்கும் என்பது அபயரத்தினாவின் (2004) வாதம் ஆகும். ஆட்சி மாற்றத்துக்கும் இக்கொள்கை மாற்றத்துக்குமான பிரதான காரணம் இலங்கை கடைப்பிடித்த தாராள ஜனநாயகம் ஆகும். இருப்பினும் 1978 முதல் 1994 வரை UNP அரசாங்கத்தின் நீண்ட ஆட்சியும் பின்னர் 1994 இல் இருந்து இன்று வரை SLFP யை தலைமையாக கொண்ட அரசின் மாற்ற மடையாத பொருளாதாரக் கொள்கையும் இலங்கைப் பொருளா தாரத்தை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லவில்லை. மாறாக அபிவிருத்தியில் தோல்வியடைந்துள்ளது. பல ஆசிய நாடுகளில் நீடித்த ஆட்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரக் கொள்கையின் நீடித்த தன்மையும் பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாக பங்காற்ற இலங்கை அவ்வாறான ஒரு நீண்ட ஆட்சியை அனுபவித்தும் பொருளாதார அபிவிருத்தியில் தோல்வியடைந்தமைக்கு பிரதான காரணம் இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் இன, மொழி மற்றும் மத அடிப்படையில் கொள்கைகளை முன்னெடுத்தமையாகும். 1978 க்கு பின்னர்தான் இலங்கையில் சிறுபான்மை மக்கள் அரசின் பொருளாதார அபிவிருத்தியில் இருந்து அதிகமாக ஓரம் கட்டப்பட்டுள்ளனர் (வறுமை தொடர்பான அரசின் புள்ளிவிபரங்களில் இருந்து இது தெளிவாக தெரிகின்றது). 1983க்கு பின்னர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தீவிரமடைந்த யுத்தம் இப்பொருளாதார அபிவிருத்திப் பின்னடைவுக்கு காரணமாகக் கூறப்பட்டாலும் சிறுபான்மையினர் செறிவாக வாழும் மலையக மாவட்டத்தில் ஏற்பட்ட அபிவிருத்திப் பின்னடைவுக்கு இன மதக் காரணிகளை விட வேறுகாரணிகளை அடையாளம் காணமுடியாமல் உள்ளது.

## 5. ஜனநாயகமும் நல்லாட்சியும்

நல்லாட்சி *(Good Govermance)* என்பது இன்று பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானதாகும். நல்லாட்சியில் ஜனநாயகமாக்கல் ஒரு அம்சமாக இருந்தாலும் தாராளமயப்படுத்தப்பட்ட ஜனநாயக சுதந்திரத்தின் ஊடாக மக்களை நல்வழிப்படுத்துவது கடினமானதாகும். குற்றங்களுக்கு விதிக்கப்படுகின்ற தண்டணைகளும் தண்டணைகளை அமுல்படுத்தும்போது கடைப்பிடிக்கப்படுகின்ற முறைகளும் நல்லாட்சியை ஏற்படுத்துகின்றது. ஜனநாயக சுதந்திரம் உயர்வாக உள்ள வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் குற்றம் செய்து விட்டு மனித உரிமைகளை முன்னிலைப்படுத்தி தப்பித்துக் கொள்கின்றனர்.

சிங்கப்பூர் ஜனநாயக சுதந்திரத்தில் குறைந்த நிலையில் உள்ள ஓர் நாடாகும். ஆனால் நல்லாட்சியில் முன்னணி வகிக்கும் நாடாக இருக்கின்றது. நல்ல பணிக்குழுக்கள் ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் இல்லாத ஓர் சமூகத்தை துாரநோக்கு கொண்ட சிறந்த தலைமைத்துவத்தை கொண்ட மெருதுவான சர்வதிகார ஆட்சிமுறை ஒன்றினாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க முடியும். இந்தியா ஜனநாயக சுதந்திரத்தை உயர்வாகக் கொண்ட நாடாகும். ஆனால் இங்கு நல்லாட்சி என்பது குறைவாகவே காணப்படுகின்றது. ஜனநாயகச் சுட்டெண் பூச்சியமாக உள்ள சீனாவில் ஓர் இளம் பெண் இரவில் எந்த வேளையிலும் துணையின்றி வீதியில் செல்ல பாதுகாப்பு காணப்படுகின்றது. ஆனால் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஜனநாயகம் உயர்வாக இருந்தும், இந்நாடுகளின் தலைநகரங்களில் கூட இரவில் மட்டுமல்ல சில வீதிகளில் பகலில் கூட ஓர் இளம்பெண் பாதுகாப்பாக துணையின்றி பயணிக்க முடியாது. சட்டங்களும் விதிகளும் எழுத்திலும் அறிக்கைகளிலும் மட்டுமே இருக்கின்றன. இவை நடைமுறையில் தொழிற்படுவதில்லை. இப்பண்பு காரணமாக ஜனநாயக நாடுகளில் நல்லாட்சி தடைப்படுகிறது.

கிழக்கு ஆசியாவில் பொருளாதார வெற்றிக்குப் பின்னால் இந்நாடுகளில் காணப்பட்ட நல்லாட்சி பங்களிப்புச் செய்துள்ளது. இந்நல்லாட்சி குறைந்த ஜனநாயக முறையினால் தோன்றியதாகும். மக்களை நல்வழிப்படுத்துவது, நல்ல அரசியல் தலைவர்களை கொண்ட நாட்டையும் நல்லாட்சியையும் உருவாக்குவது ஜனநாயகத்தின் ஊடாக அடையப்பட முடியாது. மூன்றாம் வகுப்பு மக்கள் மூன்றாம் வகுப்பு ஆட்சியாளரை ஜனநாயகத்தின் வழி தெரிவு செய்கிறார்கள். ஒழுக்கமற்ற ஆட்சியாளன் தனது கட்சி ஆதரவாளர்களான ஒழுக்கமற்ற பணிக் குழுக்களை உருவாக்கி நாட்டை சீரழிக்கின்றான். பிளேற்றோ குறிப்பிட்டது போன்று ஆட்சியாளன் ஒழுக்கமுடையவானாகவும் ஓர் தத்துவவியலாளராகவும் இருக்க வேண்டுமே ஒழிய மக்களின் அறிவற்ற விருப்பு வெறுப்புகளுக்கு செவிசாய்ப்பவனாக இருக்கக்கூடாது.

உதாரணமாக இந்தியாவில் தமிழ்நாட்டு அரசியலை நோக்குவோமாயின், இந்தியாவிலே கல்வி அறிவில் எட்டாம் நிலையுடைய இம்மாநில மக்கள் ஓர் முறை தமிழ்நாட்டிலேயே அதிகளவு ஊழல்களையும் மோசடிகளையும் செய்த, நீதிமன்றத்தால் பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட செல்வி ஜெயலலிதா ஜெயராமை மீண்டும் தமிழ்நாட்டு அரசின் தலைவராக தெரிவு செய்துள்ளனர். மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகத்தின் வழியான ஆட்சி என்ற பெயரில் நாட்டின் நல்லாட்சியும் அபிவிருத்தியும் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுங்கடிக்கப்படுகின்றது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் இருக்க முடியாது. கலைஞர் கருணாநிதியையும் செல்வி ஜெயலலிதா வையும் அவர்கள் சார்ந்த கட்சிகளையும் விட தமிழ்நாட்டில் வேறு தலைவர்களும் கட்சிகளும் இல்லையா? என எண்ணத் தோன்றுகின்றது. இப்படிப்பட்ட பக்குவப்படாத மக்களை பயன்படுத்தி மூன்றாம் வகுப்பு அரசியல்வாதி அரசியலுக்கு வருவதை தடுப்பதற்காக தென்கிழக்கு ஆசிய நாடுகள் அபிவிருத்தியின் ஆரம்பநிலையில் ஜனநாயகத்தை கட்டுப்படுத்தி ஒரு கட்சி ஆட்சிமுறையில் நல்லாட்சியை உருவாக்கினார்கள்.

நல்லாட்சியை ஜனநாயகத்தின் மூலம் எய்த முடியாது என்பதற்கு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளும், மென்மையான சர்வதிகார ஆட்சி முறை மூலம் அடையலாம் என்பதற்கு சிங்கப்பூரும் சிறந்த எடுத்துக் காட்டாகும். இக்கருத்தையே சீனாவின் யதார்த்த தலைவரும்[18], சிங்கப்பூரின் சிற்பியும் கூறியுள்ளனர்.[19]ஜனநாயக நாடுகளில் அரச நிர்வாகம் மிக வேகம் குறைந்ததாக காணப்படுகின்றது.

---

[18] *"Principle of political structure of China is that preceding from China's realities instead of coping political system from the west and practicing multi - party election system. When we judge whether the political system, political structure, and policies of a state are right or not, we have to keep three criteria in mind.... The first is whether the political situation of that country is stable or not. Second is whether it can strength national unity and improve people's living standards, the third is weather the productive forces can be developed in a sustainable way. Some countries carried out the political structural reform alone without developing the productive forces and reforming the economic structure ended on great social upheavals... after decisive progress has been made in the reform on the economic system, pushing forward the political structural reforms became more necessary and urgent. Therefore, the political structural reforms should be accelerated in good timing, so that it can go with the economic structural reform, thus ensuring long -term stability throughout country."*.... Deng Xiaoping, carried by Lin Zhaomu, pp.469-70

[19] *"All people of all countries needed a good government. A country first has economic development then democracy may follow. With a few of exception, democracy has not brought good government to new developing countries. Democracy has not led development because the government did establish the stability and discipline necessary for development" Lee Kuan Yew, carried by Mya Maung [1996]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.4: நல்லாட்சிக்கான குறிகாட்டிகள்

| நாடுகள் | சொத்தை பதிவு செய்வதற்கு எடுக்கும் நாட்கள் (2006) | வியாபாரம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நாட்கள் (2006) | தீர்வை செலுத்தி பொருட்களை வெளியே எடுப்பதற்கான சராசரிநாட்கள் (2006) | ஊழல் ஒழிப்புக்கான சுட்டெண் (2004) நிலை |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 09 | 06 | 1.3 | 9.3(2) |
| சீனா | | 48 | 3.95 | 3.4(11) |
| இந்தியா | 62 | 71(05) | 13.5 | 2.8(13) |
| மலேசியா | 144 | 30 | | 5(7) |
| கொரியா | 11 | 22 | 5.9 | 4.5(8) |
| தாய்லாந்து | 02 | 33 | 1.34 | 3.6(9) |
| பிலிப்பைன்ஸ் | 33 | 48 | 5.3 | 2.6(16) |
| இலங்கை | 63 | 50 | 3.1 | 3.4(10) |
| பங்களாதேஸ் | 42.5 | 38 | 8.2 | 1.5(21) |
| நேபாளம் | 5 | 31 | | 2.8(13) |
| பாகிஸ்தான் | 50 | 24 | 8.8 | 2.1(18) |

மூலம்: உலகவங்கியின் புள்ளிவிபர தளம். மற்றும் *Transparency International (CPI)*

## இலங்கையில் ஜனநாயகமும் நல்லாட்சியும்

இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையான நல்லாட்சியை 1978 முன்னரும் பின்னரும் அடையத் தவறிவிட்டது. 1957, 1958, 1961, 1983 ஆண்டுகளில் அப்பாவிச் சிறுபான்மையினர் மீது நடாத்தப்பட்ட வன்முறைகளுக்கான நீதி இன்றுவரை கிடைக்கவில்லை. நீதித்துறை அரசியல்மயப்படுத்தப்பட்டு இனரீதியான நீதியின் பேதப்படுத்தலைக் கொண்டிருக்கின்றது. 6.6 புள்ளிகளை ஜனநாயகச் சுட்டெண்ணாக கொண்ட இலங்கையில் குமார்ரூபசிங்க குறிப்பிடுவது போன்று 20 வருடங்களுக்கு முன்பு 1987இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ் அரச கருமமொழி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. கொழும்பு மாவட்டத்தில் ஏறத்தாழ 60 சதவீதமான தமிழ்பேசும் மக்கள் வசிக்கிறார்கள். ஆனால் குறைந்தது ஒரு பொலிஸ்நிலையத்தில்கூட தமிழில் முறைப்பாடு செய்ய முடியாது. இலங்கையின் பாதுகாப்புச் செலவில் ஒரு வீதத்தை மொழி அமுலாக்கத்துக்குச் செலவு செய்தால் சிறுபான்மை மக்களின் மொழிப்பிரச்சினை குறைக்கப்படலாம் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.[20]

ஆனால், வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறையீட்டுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு அசுர வேகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எப்படி இலங்கை நல்லாட்சி மூலம் குட்டி சிங்கப்பூராக முடியும்? இலங்கையில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தமிழ் பெண் அல்ல ஓர் சிங்கள பெண் கற்பழிக்கப்பட்டதற்கான செய்திப் பதிவும் இருக்கின்றது. இலங்கையின் இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் கடன் வழங்கி பல மில்லியன் ரூபாவில் அறவிட முடியாத கடன்களால் வங்கி வினைத்திறமையை இழந்து அரச நிதியில் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. இலங்கை மின்சாரசபை மற்றும் புகையிரதத் திணைக்களம் என்பனவும் அரசியல் தலையீடு காரணமாக நட்டத்தில் இயங்குகின்றன. ஊழல், மோசடி, அதிகார துஸ்பிரயோகம் போன்ற நல்லாட்சியின் ஏனைய குறிகாட்டிகளிலும் இலங்கை கீழ்நிலையிலேயே இருக்கின்றது. இலங்கையில் தாராள ஜனநாயகமோ அல்லது குறைந்த ஜனநாயக ஆட்சியோ நல்லாட்சியைக் கொண்டுவராமைக்கு பிரதான காரணம் இலங்கையின் அதிகார பணிக்குழுக்கள் இனவாதத்தில் ஊறி இருக்கின்றமையும் மலிந்த விலையில் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரத்தால் பௌத்த சிங்கள இனவாதத்துக்கு அப்பால் மக்கள் தேசியமயப்படுத்தப்படாமையும் ஆகும்.

---

[20] Kumar Rupesinghe (2008)The impact of language right violations in Sri Lanka- 1956-2007, Available at http://www.kumarrupesinghe.org/Pages/Full-Article.aspx?ArticleID=157



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஜனநாயகமும் சீர்திருத்தங்களும்

கிழக்கு ஆசியப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் மிக வேகமாக முன்னேறிய நாடுகளின் வெற்றிக்கு அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சந்தைச் சீர்திருத்தங்கள் ஓர் காரணமாக அமைந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது. சீர்திருத்தங்கள் என்பது அரசியல் சீர்திருத்தத்தை முதலில் வேண்டி நிற்கவில்லை. ஜனநாயகமாக்கலோ அல்லது அடிப்படை மனித உரிமைகளைப் பேணும் சட்டங்களில் சீர்திருத்தங்களோ முதலில் இடம்பெறவில்லை. மாறாக அரசியல் சீர்திருத்தங்களைத் தாமதப்படுத்தி அல்லது அவ்வாறான சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமல் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய துரநோக்குள்ள அரசியல் தலைவர்கள் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டனர்.

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அரசியல் சீர்திருத்தம் அவசியமானது என்ற ஓர் விவாதத்தில் இருந்து நீங்கி ஓர் இறுக்கமான ஜனநாயக கட்டுப்பாட்டை பேணிக்கொண்டுதான் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்க முடியும் என்பதில் NICs நாடுகள் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருந்தன. ஜனநாயக தேர்தல் மூலம் மத்திய அரசை மாற்றமடையச் செய்கின்ற ஓர் நாட்டில் சந்தைச் சீர்திருத்தங்களைச் செய்ய முடியாது. தாராள ஜனநாயக நாட்டில் சந்தை சீர்திருத்தங்களுக்கு எதிராக பல அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்து, மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றும் போது மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை கைவிடவேண்டிய ஓர் சூழ்நிலைக்குள் அரசுகள் தள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே சீர்திருத்தங்களுக்குத் தேவையான தேன்நிலவுக் கருது கோளுக்கு *(Honey Moon Hypothesis)* ஜனநாயக பல கட்சி ஆட்சிமுறை தடையாக அமைகிறது. ஜனநாயக நாட்டில் அரசு தேன் நிலவை அனுபவிக்க முடியாது. தேன்நிலவுக் காலம் பல தென் ஆசிய நாடுகளில் சில ஆண்டுகளுள் முடிவடைந்துவிட்டது. ஆனால் சிங்கப்பூர், மலேசியா, சீனா போன்ற நாடுகளில் பொருளாதார சீர்திருத்தங்களுக் கான தேன்நிலவுக் காலம் மிக நீண்டதாக காணப்பட்டமையும் இந்நாடுகள் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றமடைய ஓர் காரணமாக அமைந்தது. நிதானமான சீர்திருத்தங்கள் *(Gradual reforms)* படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறுதல் *(Steps by steps)* நிதானமான நகர்வு *(Crossing river with feeling Stones under the water- சீனா)* போன்ற அம்சங்களை இந்நாடுகளின் சந்தைச் சீர்திருத்தங்களின்போது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்நாடுகளில் பல அவைகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் நிதியீட்டம் செய்வதற்காக கடனைப் பெறும் போதும் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவில்லை. மாறாக தங்களின் சுயமதிப்பீட்டின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத் திக்குச் சீர்திருத்தங்கள் அவசியப்பட்டதால் இவை தாங்களாகவே அவற்றை முன்னெடுத்துச் சென்றன. சீர்திருத்தங்களில் எந்த நிர்ப்பந் தங்களும் நிபந்தனைகளும் இருக்கவில்லை. மாறாகப் பல தென்ஆசிய நாடுகள் ஜனநாயக ஆட்சியால் நுகர்வுச்செலவு அதிகரித்து வற்றிப் போன திறைசேரியை நிரப்புவதற்காகவும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு சிகிச்சை பெறுவதற்காக உலக நாடுகளையும் நிறுவனங்க ளையும் அணுகியபோது அவை சீர்திருத்தங்களைச் செய்ய நிர்ப்பந்திக் கப்பட்டன. 1990இல் இந்தியாவில் சந்தைசார் சீர்திருத்தங்கள், 1978 இல் இலங்கையில் சந்தை சீர்திருத்தங்கள் யாவும் ஓர் பொருளாதார சந்தை சீர்திருத்தங்கள் ஆகும். இவை ஓர் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் ஏற்பட்டவையாகும். கிழக்கு ஆசிய நாடுகளிலும் இந்தப் பண்பு சிறிதளவு காணப்பட்ட போதிலும் அவற்றின் பரிமாணம் வேறுபட்டதாகும்.

## இலங்கையில் ஜனநாயகமும் சீர்திருத்தங்களும்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் அவசியமானவையாகும். 1978க்கு முன்னர் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாமைக்கு தாராள ஜனநாயகமும் ஒரு காரணமாக இருந்தது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. 1978க்கு பின்னரான பகுதியான எதேட் சையான அதிகார ஆட்சிமுறை சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான அரசியல் அதிகாரத்தை நீண்டகாலத்துக்கு கொடுத்திருந்தது. இலங்கைக்கு சீர்திருத்தங்களுக்கான தேன்நிலவுக் காலம் ஜயவர்த்தனாவின் ஆட்சியில் 10 வருடங்களுக்கு மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்துள்ளது. இவ்அதிகார ஆட்சியில் பொருளாதார சீர்திருத்தங்களில் இலங்கை குறிப்பிடக்கூடிய மாற்றங்களைப் பெற்றது. ஆனால் அச்சீர்திருத்தங்களில் இருந்து பெற்ற பொருளாதார அபிவிருத்தி என்பது சிறுபான்மையினருக்கு சார்பான அரசியல் சீர்திருத்தங்கள் இல்லாமையால் நழுவிச் சென்றுள்ளது.

1978இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தம் சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைவதற்குப் பதிலாக ஏற்கனவே சிறுபான்மையினர் தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசியல் ரீதியாக கொண்டிருந்த சிறிய அதிகாரத்தையும் இல்லாமல் செய்துள்ளது. 1887இல் சிறுபான்மையினருக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் ஏற்கனவே பொருளாதார அபிவிருத்தியில் இருந்த இன ரீதியான பேதப்படுத்தல்களை தடுத்து நிறுத்துவதற்கான அரசியல் பொறிமுறையைக் கொண்டிருக்கவில்லை என்பதற்கு அப்பால் சில இனப்பிரச்சினைக்கு முன்னேற்றகரமானவை என ஏற்றுக் கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் சட்டமாகியும் நடைமுறைமுறைப் படுத்தப்படவில்லை என்பது இலங்கையின் தலைமைத்துவம் பொருளாதார அபிவிருத்தி என்பதைவிட இனம், மொழி அடிப்படையிலேயே ஊறி உறங்குகின்றது என்பதை புலப்படுத்துகின்றது.

எனவே இலங்கையின் நல்லாட்சி தாராள ஜனநாயக ஆட்சி மற்றும் குறைந்த ஜனநாயக ஆட்சி ஆகிய இரண்டிலும் இல்லாமல் சென்றமைக்கு காரணம் ஆட்சியாளர்களின் தேசிய ஒருமைப்பாடு இல்லாத ஓரினத்தைச் சார்ந்த உளப்பாங்கு ஆகும்.

## 4. தொகுப்புரை

இலங்கை 1948 - 1978 வரையான காலத்தில் தாராள ஜனநாயக முறையிலான ஆட்சியையும், 1978 பின்னர் வரையறுக்கப்பட்ட ஜனநாயகத்தைக் கொண்ட (நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை) நீண்டகால ஆட்சியையும் கொண்டிருந்தது. 83.4 வீத பெரும்பான்மையில் (1977-1989) ஆட்சியில் அமர்ந்த ஐக்கிய தேசிய கட்சியின் (1977-1994) திறந்த பொருளாதார கொள்கையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை தென் ஆசியாவிவில் குட்டி சிங்கப்பூராக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இலங்கை மேலைத்தேச நாடுகளால் வலியுறுத்தப்படுகின்ற தாராள ஜனநாயக ஆட்சிமுறை அல்லது ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேறிய நாடுகள் கடைப்பிடித்த வரையறுக்கப் பட்ட ஜனநாயக ஆட்சிமுறை ஆகிய இரண்டிலும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் தோல்வியடைந்துவிட்டது. இலங்கையின் இப்பொருளாதார பின்னடைவுக்கு பிரதான காரணமாக இலங்கை குறைந்த ஜனநாயகம், பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி இறுதியாக தாராள ஜனநாயகம் என்ற ஒழுங்கில் கொள்கைகளை முன்னெடுத்து செல்வதற்குப் பதிலாக முதலில் தாராள ஜனநாயகம், சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி இறுதியாக குறைந்த ஜனநாயகம் என்ற ஒழுங்கில் சிறுபான்மை மக்களை ஜனநாயக மற்றும் அபிவிருத்தி நீரோட்டத்தில் இருந்து ஓரம் கட்டிக்கொண்டு முன்னெடுத்துச் சென்றமை ஆகும்.

தாராள ஜனநாயகத்தின் வழி இலங்கை பொருளாதார அபிவிருத்தி யில் தோல்வி கண்டமைக்குப் பிரதான காரணம் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரமும் அதன் வழி விஸ்தரிக்கப்பட்ட ஜனநாயகத்தின் நன்மைகளும் சிறுபான்மை மக்களை அறவே சென்றடையவில்லை என்பதற்கு அப்பால் இலங்கைக்கு கிடைத்த சுதந்திரமானது சிறுபான்மை மக்களின் சுதந்திர வேட்கையின் எழுச்சியை விளங்கிக் கொண்டு அதற்கு முளையிலேயோ அல்லது கனியிலேயோ பரிகாரம் தேடக்கூடிய தூரநோக்குள்ள அரசியல் தலைமைகளை பெரும்பான்மை மக்கள் மத்தியில் உருவாக்க தவறியமையாகும். வேறு ஒரு வார்த்தையில் கூறுவதாயின் சுதந்திரத்துக்காக போராடி பல தியாகங்களை செய்து சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தினால்தான் சுதந்திரத்துக்காகப் போராடும் இன்னொரு சமூகத்தின் கோரிக்கைகளை விளங்கிக்கொண்டு பரிகாரம் செய்ய முடியும். இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் அவ்வாறான சிறந்த அரசியல் தலைமைகளை இரு சமூகங்களிலும் உருவாக்கத் தவறிவிட்டது. பெரும்பான்மைத் தலைவர்களை பொறுத்தவரை இலங்கை பல்லின சமூகங்களுக்குரியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றல்லாமல் இலங்கை பௌத்த சிங்களவர்க்குரிய நாடு என்ற அடிப்படையில் கொள்கைகளை வகுத்து முன்னெடுத்துச் செல்ல, சிறுபான்மை அரசியல் தலைவர்கள் மேடைப்பேச்சுக்களிலும் அறிக்கைகளிலும் வீரப் பேச்சுக்களை பேசிவிட்டு வாக்குகளுக்கு மட்டும் வடகிழக்குக்கு சென்றுவிட்டு கொழும்பில் சுகபோக வாழ்க்கையில் இருந்தவாறு பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாத கோரிக்கைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தனர்.

சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் என தெரிவுசெய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் அரசினால் கிடைக்கும் அற்ப சலுகைகளையும் தம்மைச் சுற்றியுள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வழங்கிவிட்டு அதிகளவான சிறுபான்மையினரை நடு ஆற்றில்விட்டு விட்டு கொழும்பில் இருந்து சுக போக வாழ்க்கையை அனுபவித்தமை ஆகும்.

ஒரு நாட்டின் மக்களும் தலைவர்களும் நாட்டை தேசிய அடிப்படையில் நேசித்து கொள்கைகளை வகுத்து பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச்செல்வதற்கு, அந்நாட்டின் சுதந்திரம் ஒரு மைல் கல்லாக அமைய வேண்டும். அவ்வாறான விலைமதிக்க முடியாத சுதந்திரந்தான் ஊழல் மோசடி இல்லாத எல்லா மக்களையும் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடு இன்றி வழிநடத்துகின்ற மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளுகின்ற நல்ல அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்கும். இந்த நோக்கில், இலங்கையின் சுதந்திரம் பொருளாதார அபிவிருத்திக்கு தளமாக இருப்பதில் எவ்வழிகளிலும் பங்காற்றவில்லை எனலாம். நாம் சுதந்திரம் என்ற ஓர் பதாகையை தாங்கி பல மில்லியன் ரூபா செலவு செய்து பெப்ரவரி 4ஐ கொண்டாடினாலும் சிறுபான்மையினருக்கு மட்டும் அல்ல, பெரும்பான்மை மக்கள் பலருக்கும் இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. மதம், மொழி, இனம், சாதி, பிரதேசம் என்ற சமூக பிரச்சினைகளில் இருந்து மீட்சி பெற்று பொருளாதார அபிவிருத்தி நோக்கிச் செல்லாமல் இருபத்தோராம் நூற்றாண்டிலும் ஐரோப்பாவில் மத்திய காலத்தில் இருந்ததை போன்று நாமும் அந்த இருண்ட யுகத்திலேயே சிக்கித் தவிக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்ற நாட்டுவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையினால் இலங்கையில் ஏற்பட்ட ஒரேயொரு விளைவு யாதெனில் முன்பு பிரித்தானியரின் கைகளில் இருந்த ஆட்சிப் பொறுப்பு இப்போது எந்தவகையிலும் பக்குவப்படாத மேலைத்தேச மயப்படுத்தப்பட்ட இலங்கை உயர் வர்க்கத்தினரை அடைந்திருந்தமையேயாகும். இம்முதலாளித்துவ உயர்வர்க்கம் அரசியலில் தாம் நிலைத்து இருப்பதற்கு ஆரம்பத்தில் சிற்றுடைமை உலர் வலய குடியேற்றத்திட்டம், கல்வி, சுகாதாரம், பின்னர் பாதுகாப்பு சேவை போன்ற சமூக நலச் செலவீடுகளை மேற்கொண்டு தனது அதிகாரத்தை தக்க வைத்திருந் தமை ஆகும். இது வர்க்க ரீதியாக எதுவித திருப்பத்தினையும், குறிப்பாக பொருளாதார முகாமையைப் பொறுத்தவரை குறித்து நிற்கவில்லை. பொருளாதாரமானது பழைய ஒழுங்கு முறையிலேயே தொடர்ந்திருக்கத் தலைப்பட்டது. அடிப்படை நிலையில் மாறுபாடுகளெதுவும் நிகழாத இச்சுதந்திரத்தின் தன்மையானது இலங்கை சுதந்திரத்தின் பின்னர் பெற்றுக்கொண்ட பொருளாதார அபிவிருத்தியின் தன்மையைப் பாரதூரமாகப் பாதிக்கக் கூடியதொன்றாயிருந்தது.

S.W.R.D பண்டாரநாயக்க இலங்கைக்கு கொடுத்த சுதந்திரம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> *"சுதந்திரமானது வரையறுக்கப்பட்ட தத்துவத்தின்பாற்பட்ட கொள்கைகளுக்கும் திட்டங்களுக்குமான போராட்டத்தின் பின் வரவில்லை. ஆனால் அது சாதாரண நிகழ்வுகளின் போக்கிலேயே வந்திருந்தது." சுதந்திரமின்றி நடைமுறைப்படுத்த முடியாத தத்துவங்கள் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை ஈடுபடுத்தி அவற்றிற்காக சுதந்திரத்துக்கு போராடுவது என்பது இருக்கவில்லை. "அது ஒரு இரவுக்குள் கிடைத்தது. ஒரு நாள் நாம் கண் விழித்த போது 'நீவீர் இப்போது ஒரு டொமினியன்' என எமக்கு கூறப்பட்டது."*

வி.நித்தியானந்தன், *1989,ப.41*

பல வருடங்கள் போராடி பலவற்றை இழந்து விலைகொடுத்து வாங்கிய பொருள்தான் பெறுமதியானதாக இருக்கும். சிங்களத் தலைவர்கள் மட்டுந்தான் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இன்றைய பொருளாதார தோல்விக்கும் காரணம் அல்ல. சுதந்திரம் பெற்ற அதே 1948 இல் நியாயமற்ற கோரிக்கையை வைத்தது யார்? ஏறத்தாழ 25 வீதமான தமிழ்பேசும் மக்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவமாக 50க்கு 50 கேட்டது நியாயமானதா? மறுபுறத்தில் தமிழ்மக்கள் பெரும்பான்மையினராக இருந்து ஆட்சி அதிகாரத்தையும் வைத்துக் கொண்டிருந்தார்கள் என எடுகோள் கொள்வோமாயின் சிங்கள மக்கள் 50க்கு 50 கோரிக்கையை முன்வைத்திருந்தால் அதற்கு தமிழர்களின் பதில் நடவடிக்கைகள் மற்றும் அரச கொள்கைகள் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.[21] இக்கோரிக்கையை முன்வைத்த தலைவர் எல்லா இன மக்களையும் ஒன்றிணைக்ககூடிய தேசத்தை நேசிக்கின்ற அரசியல் தூரநோக்கம் கொண்டவரா?[22] இலங்கையின் சுதந்திரம் சுயநல நோக்கம் கொண்ட மூன்றாம் நிலைத் தலைவர்களையே உருவாக்கியுள்ளது.

இலங்கையின் எதிர்கால பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு உயர்வான ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்கும் பெரும்பான்மை மக்களிடம் இருந்து அறவே ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்காத சிறுபான்மை மக்களுக்கு ஜனநாயகத்தை மறுபங்கீடு செய்ய வேண்டி உள்ளது. அவ்வாறான ஜனநாயக மறுபங்கீடானது கடந்த காலத்தில் நிகழ்ந்த பொருளாதார பேதப்படுத்தல்களை தடுத்து நிறுத்தி சிறுபான்மை மக்கள் தங்கள் பிரதேச பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு பெரும்பான்மை மக்களில் தங்கியிருக்காத ஒரு அரசியல் பொறிமுறையாக இருக்க வேண்டும். அவ்வாறான ஒரு அரசியலமைப்பை உருவாக்கி அமுல்படுத்தும்போது கடந்த காலத்தைப் போன்று பொரும்பான்மை மக்களிடம் இருந்து எதிர்ப்புக்கள் உருவாகுவது ஜனநாயக ஆட்சியில் தவிர்க்க முடியாது.

நாட்டை பொருளாதார அபிவிருத்தி நோக்கி திசை திருப்ப வேண்டுமாயின் அவ்வாறாக எதிர்க்கும் ஜனநாயக குரல்களை இரும்புக்

---

[21] இலங்கையில் யார் முதலில் குடிவந்தவர்கள் என்ற வாதத்தை நீக்கி இரண்டு இனமும் இலங்கையில் புராதன காலம் தொட்டு வாழ்ந்து வந்தனர். இரு இனத்துக்கும் அவர்களின் குடிசார் வீதத்துக்கு ஏற்ப ஆட்சியில் பங்கு கொள்வதற்க்கு உரிமை இருக்கின்றது.

[22] இக் கோரிக்கைக்கு முன்னர் இலங்கைத் தழிழ் தலைவர்களை சிங்கள மக்கள் மட்டும் அல்ல அவர்களின் தலைவர்களும் அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டியில் ஏற்றி துறைமுகத்தில் இருந்து அவர்களுடைய வாசல்தலத்துக்கு தாங்களாகவே இழுத்து சென்று இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம்கொண்டு அடக்கி ஆசியாவில் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற நாடுகளைப் போன்று ஒரு கட்சி ஆட்சியோ அல்லது ஒரு கட்சி எப்போதும் தலைமை தாங்குகின்ற ஆட்சியோ இலங்கைக்கு அவசியமாக இருக்கின்றது. இவ்வாறான ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு கட்சி ஆட்சி தனிமனித ஆட்சியாக அல்லாமல், குடும்ப அரசியலாக அல்லாமல், தேசத்தின் அனைத்து பிரதேச அறிவுசார் சமூகத்தின் பிரதிநிதிகளை அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புக்களில் அமரச்செய்யும் கூட்டு ஆட்சியாக அமைய வேண்டும். அவ்வாறான ஒரு ஆட்சியை இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறை மூலம் இரத்தம் சிந்தாமல் மாற்றலாம். தூரதிர்ஸ்டவசமாக இலங்கையின் அண்மைக்கால அரசியல் இராணுவ அசைவுகள் அரசியல் பிரச்சினைக்கு இராணுவ அணுகுமுறை மூலம் தீர்வு காணலாம் என்பதை குறித்து நிற்கின்றது. இவ் அணுகுமுறையானது அரசாங்கம் கடந்த 60 ஆண்டுகள் கடைப்பிடித்த கொள்கையை இராணுவத்தை பயன்படுத்தி அடையப் பெறுவதை குறித்து நிற்கின்றது. இலங்கை பொருளாதார அபிவிருத்தியை விட இனம், மொழி, மதம் என இருண்ட யுகத்தில் மூழ்கின்றது.

எனவே இன்றைய இலங்கையின் பகுதியான எதேட்சை அதிகார ஆட்சியானது இன, மத, மொழி பேதம் இன்றி எல்லா மக்களுக்குமான முழுமையான எதேட்சை அதிகார ஆட்சியாக மாற்றமடைந்திருந்தால் இலங்கையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஊடாக அமைதியையும் மற்றும் பொருளாதாரக்கொள்கைத் தந்திரோபாயமான நுகர்வு செலவைக் குறைத்து மூலதனச் செலவை அதிகரிக்கவும் முடிந்திருக்கும். அவ்வாறான ஒரு முழுமையான எதேட்சை அதிகார ஆட்சியை உருவாக்ககூடிய பகுதியான எதேட்சை அதிகார ஆட்சியை இலங்கை கொண்டு இருந்தாலும் அதிகாரத்தை கைப்பற்றி பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான இனம், மொழி, மத, பிரதேச வேறுபாடுகளைக் கடந்த நிலையில் உள்ள ஒரு தலைமைத்தும் உருவாககூடிய அரசியல் சூழல் இலங்கையில் இல்லை என்றே கூறலாம். இலங்கையில் ஒரு கட்சி ஆட்சியானது 60 ஆண்டுளாக தீவிட்டு எரியும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மட்டுமன்றி இலங்கையில் கடந்த காலத்தில் இருந்த சமூகநல அரசை அபிவிருத்தி அரசாக மாற்றி பொருளாதார வளர்ச்சியைத் தளமாகக் கொண்ட அபிவிருத்தியை அடையவும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –02

# பொருளாதார அபிவிருத்தியில் சிங்கப்பூரும் இலங்கையும்

### இலங்கைப் பற்றிய லீ குவான் யுவின் குறிப்புக்கள்

பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக சிங்கப்பூரையும் இலங்கையையும் தொடர்புபடுத்தி ஒப்பிட்டு வேறுபடுத்தி நோக்க முடியும். இலங்கையில் உள்ள இனக்குழுமங்களின் விகிதாசாரமும் சிங்கப்பூருடன் ஏறத்தாழ ஒத்து இருக்கின்றது. இலங்கையில் 75 வீதமான பெரும்பான்மை மக்களாக சிங்களவர் இருக்கின்றனர். சிங்கப்பூரில் 74 வீதமான பெரும்பான்மை இனத்தவர்களாக சீனர்கள் இருக்கின்றனர். இலங்கையில் சிறுபான்மை இனமாக தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் காணப்படுகின்றனர். இது சிங்கப்பூரில் மலே மற்றும் தமிழர்களாக காணப்படுகின்றனர். மலே மக்கள் மலேசியாவை தளமாகக் கொண்டவர்களாகவும் தமிழர்கள் இந்தியாவைத் தாயகமாகவும் கொண்டுள்ளனர். இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் தாய்மொழியாகக் காணப்படுவது போன்று சிங்கப்பூரில் சீனமொழி, தமிழ்மொழி மற்றும் மலே போன்றன தாய்மொழியாகக் காணப்படுகின்றன.

இலங்கை நீண்டகாலம் ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்தது போன்று சிங்கப்பூரும் நீண்டகாலம் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்து மேலைத்தேசக் கலாசாரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டு இருந்துள்ளது. இரு நாடுகளில் உள்ள அரசியல் உயர்குழாம் ஆங்கிலேய மோகத்தின் கீழ் இருந்து ஆங்கிலேய பொருளாதார மற்றும் சமூக மாற்றத்திற்கு உட்பட்டிருந்தது.

இரண்டு நாடுகளுக்கு இடையில் பொருளாதார அபிவிருத்தியை ஒப்பீடு செய்வதற்கு பல ஒற்றுமைகள் இருப்பினும் பல வேறுபாடுகளையும் சுட்டிக்காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கையின் வரலாறு நீண்டகால குடியியல் மரபுரிமையைக் கொண்டிருக்கின்றது. சிங்கப்பூரின் வரலாறு மிக குறுகியதாகும்.

2. சிங்கப்பூர் ஓர் நகர அரசுக்குரிய பண்புகளைக் கொண்டிருக்கின்றது சிறிய சனத்தொகை,கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் அதிகம் தங்கியிருக்கின்றது. இலங்கை ஒப்பீட்டு ரீதியில் பெரிய பரப்பளவைக் கொண்ட நாடாகவும், விவசாயமும், அதில் தங்கியிருக்கும் மக்கள் அதிகமாகவும் காணப்படுகின்றது.

சிங்கப்பூருக்கு சீனாவின் பின்னணி இருப்பது போன்று இலங்கைக்கு இந்தியாவின் பின்னணி இருக்கின்றது. 1950களில் இலங்கையின் பொருளாதாரம் சிங்கப்பூரின் பொருளாதாரத்தைவிட பல்வேறு குறிகாட்டிகளில் உயர்நிலையில் இருந்துள்ளது. இலங்கை மிகப்பெரிய ஓர் பெருந்தோட்டத்துறையையும், அதில் இருந்து சிறந்த வெளிநாட்டுச் செலாவணியையும் ஈட்டிக்கொண்டிருந்தது. இந்தக் கொடை சிங்கப்பூருக்குப் பூச்சியமாகும். இலங்கையின் உள்கட்டுமான வசதிகள் 1950, 60களில் சிங்கப்பூரை விட சிறந்தாகக் காணப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம் ஏனைய மனிதவள மேம்பாட்டுக் குறிகாட்டிகளிலும் சிங்கப்பூரைவிட இலங்கை உயர்நிலையில் இருந்தது. இவ்விடயத்தை லீ குவான் யூ பின்வருமாறு விபரிக்கின்றார்.

*"இலங்கைக்கான எனது முதலாவது பயணம் இலண்டனுக்கு செல்கின்ற வழியில் 1956 ஏப்ரல் மாதத்தில் இருந்தது. காலிமுகத்திடல் உல்லாசப்பயணிகள் விடுதியில் தங்கியிருந்தேன். கொழும்பு நகரத்தை வலம் வந்த போது யுத்தத்தால் பாதிக்கப்படாத பல பொதுக் கட்டிடங்களால் பிரமையடைந்தேன்"[23] என்றார்.*

இலங்கையின் உச்சமான பொருளாதார நிலையை சிதைத்து முரண்பாடுகளையும் யுத்தத்தையும் ஏற்படுத்திய அரசியல் தலைவர்களில் S.R.W பண்டாரநாயக்காவை எவரும் எளிதல் மறக்க முடியாது. லீ *(LEE Kuan Yew)* இலங்கைக்கு முதல் முதல் பயணம்

---

[23] "My first visit to Sri Lanka was in April 1956 on my way to London. I Stayed at Galle face Hotel, ………I Walked around the city of Colombo impressed by the public buildings, many with stone facing undamaged by war. Because Mountbatten had based his Southeast Asia Command in Kandy. Ceylon had more resource and better infrastructure than Singapore" Lee Kuan Yew (2011) p.413



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து ஓரிரண்டு ஆண்டுக்குள் இலங்கையில் சிங்கள மொழிச் சட்டமும், பௌத்தமதச் சட்டமும் நடைமுறைக்கு வந்தது. இலங்கை யில் தனிச்சிங்கள சட்டத்தையும் தேசிய மதமாக பௌத்த சமயத்தையும் பிரகடனப்படுத்திய பண்டாரநாயக்கா பிறப்பில் ஓர் கிறிஸ்தவர் ஆவார். இவருடைய முழுப்பெயர் *West Ridgeway Dias Bandaranaike* ஆகும். அடிப்படையில் ஆங்கில மொழியையும் கிறிஸ்தவ மதத்தையும் பின்பற்றிய பண்டார நாயக்கா தாராள ஜனநாயகத்தில் வாக்குகளை பெறுவதற்காக இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தியவர் ஆவார். இது பற்றி லீ குறிப்பிடும் போது

*" இவர் பௌத்த மதத்துக்கு மாற்றப்பட்டு சிங்கள மொழிக்கு வீரனானார்"*[24]

பல இனம், மதம், மொழி சார்ந்த மக்கள் வாழ்கின்ற ஓர் நாட்டில் தாராள ஜனநாயகத்தை செயற்படுத்துகின்றபோது ஓர் நாடு எவ்வாறு இன, மத, மற்றும் மொழி வேறுபாட்டுக்கு ஊடாக முரண்பாடுகளை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை சீர்குலைக்கும் என்பதற்கு இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் லீ குவான் யுவுக்கு ஓர் பாடத்தை கற்பித்துக் கொடுத்துள்ளது. இன ஒற்றுமைக்கான கொள்கைகளை இலங்கையின் அனுபவத்தில் இருந்து லீ சிங்கப்பூருக்கு வடிவமைத்துள்ளார்.

இலங்கையின் சுதந்திரத்தின் போது இருந்த தரமான மனித வள மேம்பாட்டுக்கான கல்வியைப் பற்றிக் குறிப்பிடும் போது

*"இது கொழும்பிலும் கண்டியிலும் ஆங்கிலத்தில் கல்வி கற்பிக்கப்படும் தரமான இரண்டு பல்கலைக்கழகங்களைக் கொண்ட கல்வியைக் கொண்டிருந்தது" என்கிறார்.*[25]

---

[24] "He had decided on nativism and converted to Buddhism, and had become a champion of the Singhalese language. Lee Kuan Yew (2011) P.413

[25] "It had a relatively good standard of education with two universities of high quality in Colombo and Kandy teaching in English"……… when Ceylon gained independence in 1948, It was the Classic model of gradual evolution of independence" Lee Kuan Yew (2011) P.414



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இலங்கை சுதந்திரமடைந்தபோது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி சிங்கப்பூரை மட்டும் அல்ல பல குறைவிருத்தி நாடுகளை கவர்ந்து உயர்நிலையில் இருந்தது, இலங்கையானது மலேசியா, தாய்வான், தென்கொரியா போன்ற நாடுகளைவிட அபிவிருத்தியில் உயர் ஸ்தானத்தில் இருந்தது.

இருப்பினும் சுதந்திரம் அடைந்து 30, 40 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தியானது கீழ் நிலைக்குச் சென்றதை பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

*"இது கடந்த காலங்களில் சிறப்பாக தொழிற்படவில்லை. ஒரு உன்னதமான வளம் நிறைந்த நாடு அழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதை அவதானித்தேன். ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு என்பது அடிப்படைப் பிரச்சினையையே தீர்க்கவில்லை. அலுவலக மொழி என்பது ஆங்கில மொழியில் இருந்து சிங்களமொழிக்கு மாற்றப்பட்டதால் 8 மில்லியன் சிங்களவர்கள் எப்போதும் ஆட்சியமைப்பதால் 2 மில்லியன் யாழ்ப்பாணத் தமிழர்கள தீமையடைந்தார்கள்"*[26]

இலங்கையின் பெரும்பான்மை மக்களுக்குள்ள தாராள ஜனநாயக அரசியல்தான் இலங்கையை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றது என்பதை குறிப்பிட்ட லீ இலங்கைத் தலைவர்கள் இதை 1966இல் ஒப்புக்கொண்டிருந்ததையும் எடுத்துக்காட்டுகின்றார். லீ 1956க்கு பின்னர் டட்லி சேனநாயக்கா பிரதம மந்திரியாக இருந்தபோது 1966 இல் பிரதம மந்திரிகளின் மகாநாட்டுக்காக இலங்கைக்கு பயணம் செய்துள்ளார். அப்போது டட்லி சேனநாயக்கா ஜனநாயகத்தில் இருந்த தவிர்க்க முடியாத நிகழ்வுகளை ஒப்புக்கொண்டு இருக்கிறார்.[27]

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசியல் சுதந்திரத்திற்குப் பின்னர் சமூகங்களை பிளவுபடுத்தி இன ஒற்றுமையை ஜனநாயத்தின் வழி சீரழித்தமை மட்டுமன்றி ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான வருமானம் பெற்றுக்கொடுத்த பெருந்தோட்ட

26"Alas It did not work out during my over the years, I watched a promising county go to waste. One - man - one - vote did not solve a basic Problem. The Majority of some 8 million Sinhalese could always outvote due 2 million Jaffna Tamils who had been disadvantaged by the switch From English to Singhalese as the official Language" Lee Kuan Yew (2011), P.414.

27 "... I was inevitable with democracy and elections" Dudly Senanayake, Lee Kuan Yew (2011), P - 414



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம் மற்றும் ஏனைய அரச முயற்சிகளை அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவாளர்களை நிரப்பி வினைத்திறனற்ற நிலைக்கு இட்டுச் சென்றதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

இலங்கையில் 1957 இல் சமஸ்டி ஆட்சி அமுல்படுத்துவதற்கு ஓர் ஜனநாயக வழியில் பயணிக்காமல் மென்மையான சர்வாதிகாரத்தின்படி ஓர் அரசியல் தலைவர் இலங்கையை இட்டுச் சென்று இருந்தால், இலங்கை ஓர் குறிப்பிடக்கூடிய அரசியல் பொருளாதார அபிவிருத்தியை அரசியலில் அடைந்திருக்கும். தாராள ஜனநாயகம் சிறுபான்மை மக்களை ஓரம் கட்டியதன் விளைவாக பல இனமுரண்பாடுகளை இலங்கையில் நீடிக்கச் செய்து இருக்கின்றது. நீண்ட காலத்தில் இந்த துர்ப்பாக்கிய நிலைமை மோசமடைந்து நாடு அழிவுப் பாதைக்கு சென்றது. எனவே இலங்கை பிரித்தானிய அரசியல் கொள்கைகளை நேரடியாக இங்கு கண்மூடித்தனமாக அமுல்படுத்தியதன் விளைவுதான் இலங்கையின் அரசியல் தோல்விக்குக் காரணமாக நாம் எடுத்துக்காட்ட முடியும். பிரித்தானியாவில் பலகாலம் பல போராட்டங்களின் பின்னர் கிடைத்த சர்வசன வாக்குரிமையானது இலங்கையில் மிகவும் ஆரம்ப அரசியல் நிலையில் 1931இல் கிடைத்தமைதான் இலங்கையின் பொருளாதாரத்தை உண்மையான நிலைத்து நிற்ககூடிய துரித வளர்ச்சியை தளமாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தியில் இருந்து நீங்கி வாக்கு வங்கியை நோக்கிய பங்கீட்டை முதன்மைப்படுத்திய பொது நிதியை சுயநல அரசியலுக்குப் பயன்படுத்தும் பொறிமுறைக்கு *(Pork Barrel Politics)* சென்று சமூக நலவாதத்தை முதன்மைப்படுத்தி இருந்தது.[28]

பொருளாதார அபிவிருத்தி ஒன்றுக்கு பங்கீடும் சமூக நலச் சேவைகளும் அத்தியா்வசியமான ஒன்றாக இருந்தபோதும் அவை அபிவிருத்தியின் இறுதிக் கட்டத்திலேயே அடையப்பட வேண்டும். அபிவிருத்தியில் பொருளாதார வளர்ச்சியைத்தான் ஒரு நாடு முதன்மைப்படுத்த வேண்டும். சமூக அபிவிருத்தி என்பது இரண்டாம் நிலையில் இருக்க வேண்டும். வேறு ஓர் வார்த்தையில் கூறுவதானால்

---

[28]The term pork barrel politics to spending usually refers which is intended to benefit constituents of a politician in return for their political support, either in the form of campaign contributions or votes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியில் பொருளாதார வளர்ச்சியை (GDP Growth) குதிரை என்றும் சமூக அபிவிருத்தியை (கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, ஏனைய நலச்செவைகள்) வண்டி என்றும் குறிப்பிடலாம். அபிவிருத்தியில் வெற்றி பெற்ற பல நாடுகளின் அனுபவத்தில் வளர்ச்சிக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. குதிரைதான் வண்டியை இழுக்கும். வண்டி ஒருபோதும் குதிரையை இழுப்பதில்லை. வண்டிக்கு முன்னால்தான் குதிரை செல்லும். குதிரைக்கு முன்னால் வண்டி அல்ல. பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுதான் சமூக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். சமூக அபிவிருத்தி வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு ஓர் உறுதியான கோட்பாட்டு பின்னணியை காணமுடியாது.

இலங்கையின் அபிவிருத்தி செல்நெறியானது குதிரை வண்டியை இழுப்பதற்கு மாறாக வண்டி குதிரையை இழுப்பது போன்றது. இதன் விளைவு இலங்கை மந்தமான ஒரு பொருளாதார அபிவிருத்தியை அடைய முற்பட்டமை ஆகும். பொருளாதார வளர்ச்சியில்லாத சமூக அபிவிருத்தியானது வேரில்லாத மரம் போன்றது. நிலைத்து நிற்காது. இக்கருத்தை இலங்கையின் பெரும்பான்மை புலமையாளர்கள் ஏற்பதில்லை. அவர்கள் இலங்கை உயர்ந்த வளர்ச்சியை அடையாது பங்கீட்டுக்கு சென்றதை பங்கீட்டுடன் இணைந்த அபிவிருத்தி எனக் குறிப்பிடுகின்றனர். இது ஒரு புதுவகையான அபிவிருத்தி ஆகும்.

இலங்கையின் சமூக நல அபிவிருத்தியின் விளைவு பற்றி ரொபின்சன் அம்மையாளர் 1960 களில் தெளிவாக எடுத்துக் காட்டி உள்ளார். இலங்கை சமூக நலச் செலவீடுகளில் அதிகம் செலவு செய்வதற்கான செலவை ஈடுசெய்வதற்கு உறுதியான உற்பத்தி அடித்தளத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்றும் இது இலங்கைப் பொருளாதாரத்தை நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் என்றும் குறிப்பிட்டு இருக்கின்றார்.

"இலங்கை மரத்தை (பொருளாதார வளர்ச்சியை) வளர்ப்பதற்கு முன்னர் அதன் பழத்தை ( சமூக அபிவிருத்தியை) ருசி பார்த்துவிட்டது" என்கிறார்.

ரொபின்சனின் கருத்தை நோக்குகின்றபோது இலங்கையின் சமூக நலச் செலவீடுகளில் வழியான அபிவிருத்தியின் பெறுபேற்றை எடைபோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இச்சமூக நல செலவீடுகளின் வழி இலங்கையின் பௌதீக வாழ்க்கைப் பண்பு சுட்டெண் ஜப்பானை அண்மித்து விட்டது. இலங்கை இதை அடைவதற்கு ஜப்பானைப் போன்று பொருளாதார வளர்ச்சியை பெறவில்லை என்பதற்கு அப்பால் இந்த மனித வளமேம்பாட்டின் தரத்தை ஜப்பானுடன் ஒப்பிட முடியும். இலங்கையில் ஒரு தொழிலாளியின் உற்பத்தித்திறன் ஜப்பானின் ஒரு தொழிலாளியின் உற்பத்தி திறனுக்கு அண்மித்து விட்டதா? என்பது கேள்விக்குறிதான். எனவே சமூக நல அபிவிருத்திக்கான பொருளாதார வெளியீட்டை இலங்கை அடித்தளமாக பெறவில்லை என்பதற்கு அப்பால், இலங்கையின் சமூகநல செலவீட்டின் அடிப்படையிலான மனிதவள மேம்பாட்டின் தரம் அரசியல்வாதிகளின் சுயநல அரசியலுக்காக பலிகடா ஆக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.

இலங்கையின் ஜனநாயகம் வழிசார்ந்த பொருளாதார அபிவிருத்தி யானது இலங்கையின் அரசதொழில் முயற்சிகளை நட்டத்தில் பல ஆண்டுகளாக இயங்கச் செய்துள்ளது. அரசியல்வாதிகள் ஒவ்வொரு அரசியல் தேர்தல் வெற்றியிலும் பதவிக்கு வந்த பின்னர் அரச தொழில் முயற்சிகளை தங்களின் ஆதரவாளர்களுக்கு தொழில் வழங்கும் ஓர் மடமாக மாற்றினார்கள். அரசியல் மயப்படுதப்பட்ட பொதுத்துறை முதலீடுகள் மூலம் வருடா வருடம் இலங்கைக்கு பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இவ்நட்டத்தின் மத்தியிலும் அவற்றைப் புனரமைத்து மீள கட்டியெழுப்புவதற்கு இலங்கையின் ஜனநாயக அரசியல் இடம் கொடுக்கவில்லை. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தருகின்ற போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு, வீடமைப்பு, உயர்கல்வி என்பன இலங்கையில் அரசுக்கு கடன்சுமையை ஏற்படுத்தும் ஓர் பாரிய தொழில் முயற்சிகளாக மாற்றமடைந்துள்ளது.

லீ தனது இலங்கை பயணத்தில் இதை நேரடியாகக் கண்டுள்ளார். இலங்கையின் புகையிரத போக்குவரத்துக்கான மூலதனம் பிரித்தானிய ரால் இடப்பட்டது. அரசதொழில் முயற்சியை அரசின் பிரதான வருமான மூலமாக மாற்றுவதற்கு பதிலாக அரசுக்கு கடன் சுமையை ஏற்படுத்தும் தொழில் முயற்சியாக அரசியல்வாதிகள் மாற்றியுள்ளனர். லீ கொழும்பில் இருந்து நுவரெலியாவில் புகையிரதத்தில் பயணித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்போது புகையிரத சேவையின் தரம் மோசமாக இருந்ததை எடுத்துக் காட்டியுள்ளார்.[29]

புகையிரதத்தை விட்டு விரைவாக உல்லாச விடுதிக்குச் சென்றார். விடுதியானது முன்னாள் பிரித்தானிய ஆளுநரின் மலைநாட்டு வாசல்தலமாகும். இது முன்னர் நன்றாக ரோஜா மலர்கள் நிறைந்ததாக பராமரிக்கப்பட்டிருந்தது. ஆங்கில மாளிகையாக *(English woodland)* குறிப்பிடக் கூடியளவுக்கு அழகாக இருந்தது. தற்போது இது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு மிக கீழ் நிலையில் இருந்தது. இவ்வாறு ஆங்கிலேயர் எங்கள் நாட்டின் வளங்களை சுரண்டிச் சென்றாலும் அவர்கள் உருவாக்கிய எத்தனையோ தொழில் முயற்சிகளை அரசியல் வாதிகள் இலங்கையில் நாசப்படுத்தியுள்ளனர். இலங்கையில் கோட்டைப் புகையிரத நிலையம் சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் நீங்கியும் ஆங்கிலேயரால் இடப்பட்ட கூரை மற்றும் தரை மேடைகளைக் கொண்டமைந்து காணப்படுகின்றது. நுவரெலியாவில் இரவைக் கழித்து லீ அங்கு வேலை செய்த சிங்கள ஊழியர் ஊடாக நாட்டின் துர்ப்பாக்கிய நிலையை எடுத்துக் காட்டியுள்ளார்.[30]

கண்டியில் பல்கலைக்கழகத்தில் தன்னை கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தின் வெளியீடு என அவர் அணிந்திருந்த கழுத்துப்பட்டி மூலம் அடையாளப்படுத்திக் கொண்டிருந்த துணைவேந்தரைப் பார்த்து லீ

*“வேறுபட்ட மூன்று மொழிகளில் (சிங்களம்- சிங்களவர், தமிழ் - தமிழர், ஆங்கிலம் - ப்பேகர்) வெளியேறுகின்ற என்ஜினியர்கள் ஓர் பாலத்தை எப்படி கூட்டிணைந்து கட்டி முடிப்பார்கள்”*[31]

எனக் கேட்டார். அதற்கு உபவேந்தர் “இது மந்திரிகளைக் கேட்க வேண்டிய ஓர் அரசியல் வினா” என்றார்.

---

29"I was a most intrusive lesson on what had happed after in dependence. The food on the train in a special carriage was poisonous. The crab badly contaminated and stank" Lee Kuan Yew (2011), P.415

30"At dinner, a wise and sad – looking elderly Singhalese explained that what was happened was inevitable with popular elections. the Sinhalese wanted to be the dominant race, They wanted to take over form the British as managers in the tea and Coconut plantations and from the Tamils who were the senior civil servants" Lee Kuan Yew (2011), P. 415

31 மேலது ப 415



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத்துறையும் நன்றாக முகாமை செய்யப்படாமல் அழிவை நோக்கிச் சென்றதை 1966 இல் லீ அவதானித்து இருக்கின்றார். பிறர் உருவாக்கிக் கொடுத்ததை நன்றாகப் பராமரித்து வருமானத்தை பெறாத இலங்கை, உற்பத்தியைப் பெருக்கக்கூடிய புதிய முதலீடுகளை எப்படி செய்ய முடியும். இலங்கையில் இன்று பெருந்தோட்டத்துறை மீள் நடுகை இல்லாமல் மற்றும் நன்றாகப் பராமரிக்கப்படாமல் மிகவும் குறைந்த அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகின்றது.[32]

இலங்கை இவ்வாறு அரசியல்வாதிகளால் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி என்ற போர்வையில் சின்னாபின்னமாகிக் கொண்டிருந்த போது சிறீமா பண்டாரநாயக்க இலங்கையின் பெயர் சிலோன் என இருப்பதுதான் அதிர்ஸ்டமில்லை எனக் கூறி இலங்கையை சிறிலங்கா என மாற்றினார். நிலமை முன்னர் இருந்ததை விட மோசமாகச் சென்றது.

இலங்கையின் அடுத்த அரசியல் தலைமைத்துவமான, இலங்கை யின் சிங்கள மொழி மற்றும் பௌத்த மதம் மீது சுயநல அரசியலுக்காக அன்பு செலுத்திய J.R.ஜெயவர்த்தனா கூட ஓர் கிறீஸ்தவனாகவே பிறந்துள்ளார்.[33] இவர்தான் இலங்கையின் இனமுரண்பாட்டை இன யுத்தமாக மாற்றிய அரசியல் தலைவர் ஆவார். இவருடைய பொருளாதார அபிவிருத்தி முகாமை பற்றி லீ குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக ஜெயவர்த்தனாவின் இனமுரண்பாடு மற்றும் யுத்த விடயங்களுக்கு அப்பால், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி முகாமைத்துவத்தில் கூட இத்தலைவரை ஓர் சிறந்த தலைவராகக் கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஓர் பொருளாதாரம் மூடப்பட்ட பொருளாதாரமாக இருந்து திறந்த பொருளாதாரமாக மாறுதல் என்பது பல படிநிலைகளைக் கொண்ட தாகும். இலங்கை 1978 இல் தாராளமயமாக்கத்தை உள்வாங்குவதற்கான

---

[32] “Without strict discipline, The tea puckers were picking not only young shoots, but also full – grown leaves which would not brew good tea. There coconut plantation… also suffered. It was said The old Sinhalese, The price people had to pay to learn how to run the country” Lee Kuan Yew (2011), P.415

[33] Junius Richard Jayawardene



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவத்தைக் கொண்டிருந்ததா? என்பது ஓர் கேள்விக்குறியாகும். இலங்கையின் பொருளாதாரம் J.R ஜெயவர்த்தனா கொண்டு வந்த திறந்த பொருளாதார விடயங்களை உள்வாங்கக்கூடிய பக்குவத்தை அடைவதற்கு முன்னர் திறந்து விடப்பட்டமை ஓர் சாபக் கேடாக அமைகின்றது. அதுவும் கடுமையான கட்டுப்பாடுகளுக்குப் பின்னர் இலங்கைப் பொருளாதாரத்தை தீடீர் என அறுவைச் சிகிச்சை மாதிரியான தாராளமயமாக்கல் ஓர் சிறந்த பொருளாதார அணுகுமுறையல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பல குழந்தை பருவ கைத்தொழில்கள் போட்டியை எதிர்கொள்ள முடியாமல் அழிவடைந்தன.

இலங்கை ஓர் விவசாய நாடு ஆகும். பிரித்தானியர் விட்டுச் சென்ற பெருந்தோட்டத்தை நன்றாகப் பராமரித்து அதன் வழி கிடைத்த அன்னியச் செலவாணியை கைத்தொழில்துறை மற்றும் ஏனைய உள்கட்டுமானங்களிலும் முதலீடு செய்யப்படாது, இலங்கை தீடீரென ஓர் திறந்த பொருளாதார பொறிமுறைக்கு மாறுதல் என்பது 75 சத வீதமான விவசாயத்துறையில் தங்கியிருந்த மக்களை ஏமாற்றுவதாகும். இலங்கையில் உள்நாட்டு விவசாயம் மூலமாகவும் கூட வெளிநாட்டு உணவு இறக்குமதிகளை கட்டுப்படுத்தலாம். அதாவது நெல், மரக்கறி, பழவகைகள், ஏனைய தானியங்களை உற்பத்தி செய்து அதன்வழி ஓர் விவசாயப் புரட்சிக்கு பின்னர் கைத்தொழில் புரட்சிஂய உலகில் பல நாடுகள் அடைந்தது போன்று இலங்கையும் அடைந்து இருக்கலாம். இப்படியான ஓர் அணுகுமுறையை விடுத்து J.R.ஜெயவர்த்தனா கைத்தொழில் மயமாக்கத்துக்குச் சென்றமை பொருளாதார அபிவிருத்தியில் ஓர் கேலிக் கூத்தாகும். விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று உலர் வலயக் குடியேற்றத் திட்டங்களுக்கு வாரி இறைத்து சிங்கள குடியேற்றங்கள் மூலம் இனமுரண்பாட்டுக்கு வித்திட்டு விவசாயத்துறையை என்றுமே அரசியல்வாதிகளில் தங்கியிருக்கும் ஒரு ஏழ்மையான துறையாக வைத்துக் கொண்டு திறந்த பொருளாதாரத்திலான கைத்தொழில்துறை அபிவிருத்திக்குச் சென்றது இரண்டு துறைகளையும் சீரழிக்கின்ற நடவடிக்கை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.R.ஜெயவர்த்தனா அரசியலில் மட்டும் அல்ல, பொருளாதாரத்தி லும் பலவீனமான ஓர் தலைவர் என்பதை லீ குறிப்பிட்டு இருக்கிறார். J.R ஜெயவர்த்தனா ஓர் விமானச் சேவையை உருவாக்க விரும்பினார். புதிய விமானச் சேவை என்பது ஓர் அரசியல் தலைமையின் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் ஓர் குறிகாட்டியாக பலரால் பார்க்கப் பட்டது. அந்த காலத்தில் சிங்கப்பூர் விமானச்சேவை இலங்கையைச் சேர்ந்த ஓர் சிறந்த கப்டினை விமான ஓட்டியாக வைத்திருந்தது. J.R.ஜெயவர்த்தனா லீ ஐப் பார்த்து அந்த கப்டினை தனது சேவைக்கு விட்டுத் தந்து விமானச் சேவை தொடங்குவதற்கு உதவி செய்யும்படி கேட்டிருந்தார். இந்த கப்டின் பின்னர் J.R.ஜெயவர்த்தனா தொடங்கிய விமானச் சேவையின் *(AirLanka)* தலைவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. ஓர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் தலைவர் ஓர் விமான ஓட்டியைக் கொண்டு விமானச் சேவையை தொடங்க முற்பட்டமை இவருடைய பொருளாதார அபிவிருத்தியின் பலவீனத்தை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையில் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி திறமையாளர்களை உள்வாங்கி நாட்டை விவசாயம், கைத்தொழில் என முன்னேற்றுவதை விடுத்து, ஓர் விமானசேவையை தொடங்குவது என்பது இலங்கை அப்போது இருந்த நிலையில் தேவையா? என்ற வினா எழுகின்றது. ஓர் அபிவிருத்தி குறித்த நாட்டுக்கு குறித்த காலப்பகுதியில் குறித்த பொருளாதார நிலையில் தேவையா? என்பதை கவனத்தில் கொள்ளாது எதோ மற்றவர்கள் செய்கிறார்கள் நாங்களும் என்ன விலை கொடுத்தாவது அதை நமது நாட்டிலும் இணைக்க வேண்டும் என வேண்டுவது ஓர் சிறந்த தலைமைத்துவத்தின் பண்பு அல்ல. இத்தலைமைகள் நாட்டுக்கு அபிவிருத்தி செய்வதை விடுத்து தமக்கும் தம்மைச் சுற்றி உள்ள கூட்டத்தினருக்கும் ஏதாவது வாய்ப்புக்களை அபிவிருத்தி என்ற போர்வையில் கொடுக்கும் நோக்கத்துக்காகவே பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் அரசியல்வாதிகளை சார்ந்தோர்களை வாழ வைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்நோக்கத்துக்காகவே பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நாட்டின் வளங்களை வீண்விரயம் செய்கின்றனர். லீ ஜெயவர்த்தனாவுக்கு இதில் உள்ள பிரச்சினைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறினார்.[34] இவர்கள் எப்படி அரசியலில் நிலைத்து இருக்கலாம் என்ற அரசியல் கலை தெரிந்த தலைவரே ஒழிய, மாறாக எப்படி நாட்டை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம் என்பதை தெரியாதவர்கள்.[35]

சிங்கப்பூரின் குறிப்பாக லீயின் புத்திமதிகளுக்கு மத்தியிலும் J.R ஜெயவர்த்தனா ஏயர்லங்க நிறுவனத்தை ஆரம்பித்தார். சிங்கப்பூர் 80 சிங்கப்பூர் ஏயர் லன் நிறுவனத்தின் ஊழியர்களை 2 வருடத்துக்கு கொடுத்தும், உலகலாவிய ரீதியில் சிங்கப்பூரின் விற்பனை பிரதிநிதிகளை ஈடுபடுத்தியும் புதிய ஊழியர்களுக்குப் பயிற்சி கொடுத்தும், உயர்மட்ட முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக இவ்விமான சேவை நட்டத்துக்கு சென்றது.

*"எங்களுடைய அறிவுரைகளுக்கு எதிராக விமான ஓட்டியை தலைவராக நியமித்து அவர் இரண்டு பழைய விமானங்களை கொள்வளவு செய்து நட்டத்தில் இயங்கியது".* லீ (2011) ப. 417

இறுதியாக சிங்கப்பூர் தனது பங்கினை விலக்கிக்கொண்டது. அதற்குப் பின்னர் இவ்விமான சேவை நட்டத்தில் இயங்கி பின்னர் சிறிலங்கன் விமான சேவையாக எமிரேற்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

இதேபோன்று சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டத்தை மாதிரியாகக் கொண்டு இலங்கையும் 1982இல் வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கியது. சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியபோது இலங்கையின் வீடமைப்புத் திட்டம்

---

[34] "Would I release him of course, but how could an air line pilot run an airline? It wanted Singapore airline to help we did. I advised him that an Airline Should not be his priority because it required to many talented and good administrators to he needed there for irrigation, agriculture, housing, industrial promotion and development, and so many other projects An Airline was a glom our project, not of great value for developing Sri Lanka. But he insisted. We helped" Lee Kuan Yew (2011), P.416

[35] Just as Chiang and other military and Kuomintang officials in Taiwan recognized "that economic matters required skilled specialists" in South Korea an economically-aware and technically trained elite was pivotal. By contrast, almost everywhere else in post-colonial Asia, leaders "seldom had technical or specialized training of any sort. They were generalists, skilled primarily in the art of politics. The new leaders rarely sought counsel from trained economists, scientists, and technicians". For example, in Indonesia, Sukarno's "immense oratorical talent and his great charisma...were not complemented by the ability to recognise and use good economic advice" The acceptance of "high quality economic policy advice" now said to be a feature of Indonesian development did not become characteristic until the post-1966 New Order. Economic realism among Singapore's leadership from the start opened the way to successful economic planning. Huff. W.G. (1995). P.1433



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசத் திட்டமாக மாறி அருமையான அரச நிதியை அரசியல்வாதி களுக்கு தாரைவார்க்கும் வீட்டுத் திட்டமாக மாறியுள்ளது. சிங்கப்பூரில் அரசாங்கத்தால் வழங்கப்படும் வீடு ஓர் தூய தனியார் பண்டமாகும். இலங்கையில் இது இலவசப் பண்டமாகும். சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டத்தில் அரசியல் தலையீடு அல்லது அரசியல் இன பேதப்படுதல் மிகக் குறைவாகும். இலங்கையின் வீடமைப்புத் திட்டத்தில் இவைகள் உச்ச நிலையில் இருந்துள்ளன. சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் சட்டம், ஒழுங்கு, சூழல் விதிகளை மிகவும் நேர்த்தியாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இலங்கையில் அவ்வாறான விதிகள் எழுத்தில் மட்டும் இருக்கின்றன. ஆமர் வீதியில் ஓர் தொடர்மாடி மனையையும் சிங்கப்பூரில் ஓர் தொடர்மாடி மனையையும் ஒப்பிடுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டினை அறிந்துகொள்ள முடியும்.

இலங்கையில் J.R. ஜெயவர்த்தனா சிங்கப்பூரின் நிலப்பரப்பை விட சற்று சிறிய நிலப்பரப்பில் ஓர் பெரிய சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்கினார். இறுதியாக இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தை விட சிங்கப்பூரின் சுதந்திர வலயங்கள் பன்மடங்கு பொருளாதார நன்மைகளை மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கின்றன.

சிங்கப்பூரின் சுதந்திர வர்த்தக வலயங்கள் அதீத வெற்றியைப் பெற்றமைக்கு அவர்களுக்கு கிடைத்த வெளிநாட்டு முதலீடுகளின் அதிகரிப்பு காரணம் ஆகும். சிங்கப்பூர் அரசு ஓர் அரசியல் கட்சி என்றுமே தலைமை தாங்கக்கூடிய வகையில் அரசியல் பொறிமுறையை ஓர் மென்மையான சர்வதிகாரத்தின் மூலம் ஏற்படுத்தியது. நல்லாட்சி, இன ஒற்றுமை, ஊழல் இன்மை போன்ற பல விடயங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை சிங்கப்பூரை நோக்கி இழுத்தது. இலங்கையில் இவ்வாறான ஓர் சூழலை J.R.ஜெயவர்த்தனா ஏற்படுத்துவதற்கு மாறாக அரசியல் மற்றும் சமூக ஸ்திரமற்ற தன்மையை மென்மேலும் அதிகரிக்கச் செய்தார். இது J.R.ஜெயவர்த்தனாவின் தலைமைத்துவ பண்பில் இருந்த இன ரீதியான காழ்ப்புணர்வு ஆகும். 1958இல் பண்டா - செல்வா உடன்படிக்கைக்கு எதிராக கண்டிக்கும் கொழும்புக்கும் இடையில் பாதயாத்திரை சென்று இனவாத அரசியலை வளர்த்த அரசியல் தலைமைத்துவத்தால் எவ்வாறு ஓர் இன ரீதியான ஒற்றுமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தி வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்க முடியும். மாறாக இத்தலைமைத்துவம் நாட்டின் இன பேதப்படுத்தலை தூண்டுவதன் ஊடாகவே நாட்டின் ஆட்சியதிகாரத்தை தொடர்ந்தது. 1983 இல் இடம்பெற்ற கறுப்பு யூலைக் கலவரம், யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பு போன்ற பல விடயங்கள் J.R.ஜெயவர்த்தனாவின் தலைமைத்துவத்தின் தரத்தினைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

விடுதலைப் புலிகளின் எழுச்சியும் அதன் அடிப்படையிலான ஆயுதப் போராட்டமும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிவப்பு சமிஞ்சையை கொடுத்தன. இதன் காரணமாக வெளிநாட்டு முதலீட்டு வலயங்களில் முதலீடுகள் எதிர்பார்த்த அளவை விட குறைந்தன. புதிய கைத்தொழில்மயமாக்க கொள்கையானது இலங்கையில் புதிய வேலைவாய்புக்களை உருவாக்கத் தவறிவிட்டது. மறுபுறத்தில் தாராள மயமாக்கம் உள்நாட்டு விவசாயத்துறையை மோசமாகப் பாதித்தது. கிராமிய மக்களின் சீவனோபாய வருமானம் வீழ்ச்சியடைந்து வேலையின்மை அதிகரித்து வறுமையும் அதிகரிக்கத் தொடங்கியது. இது தென்பகுதியில் ஜனதா விமுத்தி பிரமுன (JVP) மூலமான இன்னொரு ஆயுதப் போராட்டத்தையும் தூண்டியது. எனவே இலங்கை யில் J.R ஜெயவர்த்தனா உருவாக்கிய சுதந்திர வர்த்தக வலயங்கள் எதிர்பார்த்த இலக்கை அடையத் தவறிவிட்டன மட்டுமல்ல அதன் பக்க விளைவுகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மீது எதிர்க்கனியமான ஓர் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. இலங்கையின் அழிவுக்கு காரணமாய் இருந்த யுத்தத்தையும் புலிகளின் பயங்கரவாதத்தையும் உருவாக்கிய பெருமையில் J.R ஜெயவர்த்தனாவுக்கு அதிக பங்கு உண்டு. உலர் வலயக் குடியேற்றத் திட்டங்கள் இதில் குறிப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்தன.[36]

இலங்கையில் J.R.ஜெயவர்த்தனாவின் பொருளாதார அபிவிருத்திக்கான தந்திரோபாயங்கள் இன யுத்தத்தை தவிர்த்து, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து கொடுத்தும் மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டு வலயங்களை

---

[36] "The greatest mistake Jeyawarrdena made was over the distribution of reclined land in the dry zone ….unfortunately he gone reclaimed land to the Sinhalese not to the Tamils who had his tropically been the farmers of this dry zone. Dispossessed and squeezed They launched the Tamil tigers. Jeyewardena's private secretary a Jaffna Tamil loyal to him told me this was a crucial mistake"P.417



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மற்றும் கிழக்கில் நிறுவி அபிவிருத்தியில் இனவேறுபாட்டை காட்டாமல் முன்னெடுத்துச் சென்று இருந்தால் இலங்கை குட்டி சிங்கப்பூராக மாற்றமடையா விட்டாலும் அந்த இலக்குக்கான புறச் சூழலும் பின்னனியும் கிடைத்திருக்கும். தூரதிஸ்டவசமாக J.R ஜெயவர்த்தனாவின் அரசியல் பின்னனி இவ்வாறான அணுகுமுறைக்கு இடம் கொடுக்காமல் அவரை ஏனைய தலைவர்கள் முன்னெடுத்ததற்கு மேலாக இன ஒடுக்குமுறைக்கான கொள்கைகளை கடைப்பிடிக்க தூண்டியுள்ளது. அதன் விளைவு இலங்கை அபிவிருத்தியில் பல ஆண்டுகள் பின்னோக்கி நிற்கின்றது. இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் தலைமையான பிறேமதாசாவை லீ பல தடவைகள் சந்தித்து இருக்கின்றார். இலங்கையின் இனமுரண்பாடு மற்றும் இனப்பிரச்சினை (யுத்தம் அல்ல) ஆயுதப்படைகளால் ஒருபோதும் தீர்க்கப்பட முடியாது என்றும் ஓர் அரசியல் தீர்வுக்கு அணுகுமுறையை தேடும்படி பல முறை லீயால் எடுத்துக் கூறப்பட்டது.[37]

சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்காவும் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளைக் கையாண்டார். இதுவும் இறுதியில் வெற்றி பெறவில்லை மேலும் இலங்கை சுபீட்சம் இல்லாத நம்பிக்கைகள் அற்ற நாடாகச் செல்கின்றது.[38]

இலங்கையில் எந்தத் தலைவரும் அழிக்க முடியாத தமிழ் புலிகளை இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2009 இல் அழித்தார் எனக் கூறப்படுகின்றது. இவர் இலங்கையின் யுத்தத்திற்கு முடிவு கொண்டு வந்த பெருமைக்குரியவர் எனவும் தெரிவிக்கப்படு கின்றது. ஆனால் இவர் இலங்கையின் இன முரண்பாட்டுக்கு முடிவு காணவில்லை. இலங்கையை 1983க்கு இருந்த நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளார். ஆனால் இலங்கையின் இனமுரண்பாடு 1950 களில் உருவாகிவிட்டது. இலங்கையின் சமூக நலச் செலவீடுகள்

---

37 "I met him Ranasinghe premadasa on several occasions in Singapore after he become president and tried to convince him that this that this conflict could not be solved by force of arms a political considered fair by the Jaffna Tamil and rest of world" Lee Kuan Yew (2011), P.417

38 "It is sad that the wonder whose ancient name serendip has given the English language The word "Serendipity" Lee Kuan Yew (2011), P.418



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன முரண்பாட்டை உருவாக்கியது போன்று தற்போது பாதுகாப்புச் செலவினம் இன முரண்பாட்டை வலுவடையச் செய்கிறது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் நீங்கியும் இன முரண்பாட்டுக்கான அடிப்படை காரணிகளுக்கு இன்னும் பரிகாரம் தேடப்படவில்லை. உலகில் சுவிஸ்லாந்து, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் சமஸ்டி ஆட்சிமுறையில் ஒரே நாடாக பல ஆண்டுகள் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் இன முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வுகளைக் கண்டு நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இன முரண்பாட்டிற்கான காரணிகள் மென்மேலும் தூண்டப்படுகின்றன. உதாரணமாக உலர்வலயக் குடியேற்றங்கள் இன முரண்பாட்டுக்கு ஓர் பிரதான காரணமாகப் பலரால் இனங்காணப்பட்டது. இக்குடியேற்றங்கள் தற்போது இராணுவத்துக்கான வீடுகள் என்ற திட்டத்தில் வன்னியில் இடம்பெறுகின்றன. சிங்கள மக்களும் வடக்கு மற்றும் கிழக்கில் சில பகுதிகளில் குடியேற்றப்படுகின்றனர். வடக்கு- கிழக்கில் நிலை கொண்டுள்ள இராணுவமும் பொலிசாரும் பல சந்தர்ப்பங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் என்ற நியதியில் இருந்து விலகி சிங்கள இராணுவம் பொலிஸ் என்ற நிலையில் செயற்படுகின்றனர். உதாரணமாக தம்புள்ளையில் முஸ்லீம் பள்ளிவாசல் மற்றும் அம்பாந்தோட்டை கிறிஸ்தவ தேவாலயம் மீது 2012 இல் பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய பெரும்பான்மை சிங்கள மக்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இறந்த மக்களின் நினைவுக்காக சுடர் ஏற்றிய மாணவர்கள் கைது செய்து சிறையிலிட்டு புனர்வாழ்வு கொடுப்பதற்காக வெலிகந்த முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்கு பிரிப்பு சட்டத்துக்கு முரணானது எனக் கூறி ஓர் மாதத்துக்குள் சட்ட தீர்ப்பு மூலம் பிரித்து அமுலாக்கப்படுகிறது. அரச தமிழ்மொழி அமுலாக்கம் சட்டமாகியும் 20 வருடங்கள் கழிந்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வாறு பல சம்பவங்கள் யுத்தத்துக்கு பின்னரும் இன முரண்பாட்டை மென்மேலும் தூண்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதியில் யுத்தம் முடிவடைந்த் பின்னர் பல புதிய பௌத்த கோயில்களை இலங்கை இராணுவம் உருவாக்குகின்றது. எனவே இனம், மொழி, சமயம் போன்றவற்றின் அடிப்படையில் அரசாங்கத்தின் ஆதரவுடன் அரச படைகளின் உதவி யுடன் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படு கின்றன. பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு அறுதிப் பெரும்பான்மை ஆதரவு இருந்தும் அரசியல் அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப் படவில்லை. இவை யாவும் தற்போதைய தலைவர்களும் பழைய தலைவர்கள் பின்பற்றிய கொள்கைகளை சற்று மேலாக இராணுவ மேலாதிக்கத்துடன் செய்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் 2012 இல் தலா ஒருவருக்கு ஓர் நாள் ஒன்றுக்கான பாதுகாப்புச் செலவு ரூபா 30.12 ஆகும். இது 2013 இல் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபா 40.32 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 30 ஆண்டு யுத்தம் இலங்கையின் அரசியல் தலைவர் களுக்கு எந்தவித அனுபவத்தையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்பதை இப்புள்ளி விபரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையில் யுத்தம் முடிவடைந்த நிலையிலும் ஓர் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு பாதுகாப்புச் செலவு ஒரு கிலோ அரிசியின் விலையின் 70 வீதத்திற்கு சமமாகும். இந்நிலையில் இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாறும் என தலைவர்கள் குறிப்பிடுன்றனர். இங்கு கேள்வி யாதெனில் என்ன விடயத்தில் அதிசயம் என்பதாகும். ஆசியாவின் அதிசயம் பற்றி குறிப்பிடும் தலைவர்கள் இலங்கையை 1978 இல் குட்டி சிங்கப்பூராக மாற்றும் இலக்கு தோல்வியடைந்தமைக்கான காரணங்களை இனங்கண்டு அவற்றை களைவார்களானால் ஆசியாவின் அதிசயம் என்ற இலக்கு மிக இலகுவாக அடையப்படும் என்பது யாதார்த்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலா வெளிநாட்டு உதவி




வரவு செலவுத் திட்ட மிகை அல்லது குறை நிலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –03

# இன ஒற்றுமைக்கு சிங்கப்பூரிடம் இலங்கை கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

இலங்கையில் இனப்பேதப்படுத்தல் அபிவிருத்தியில் இடம் பெற்றுள்ளது என்பதை புள்ளிவிபர ரீதியாக நிரூபிக்க முடியும். இனப் பேதப்படுத்தல்கள் இடம்பெற்றதை அரசியல் தலைவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் தற்போது இன ஒற்றுமைக்கு அல்லது இனரீதியான ஒற்றுமையான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் பல மில்லியன்களை செலவு செய்கின்றது. அரசாங்கத்தின் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் *Ethnic Cohesion ,Social Harmony, Social Colloberation* என பல்வேறு பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் இன ஒருமையாக்கலை நோக்கமாகக் கொண்டன. *Colloberation* என்ற பதமானது சேர்ந்தமையும் தன்மையும் ஆற்றலும் அல்லது ஒத்திசைவுத் திறன், கூடி வாழும் கலைத்திறன் எனப் பொருள்படுகின்றது. இனத்தை குறிப்பாக சிறுபான்மை மக்களிடையே ஒத்திசைவு திறன்களை வளர்ப்பதற்காக உயர்கல்வி மட்டத்தில் பல்கலைக்கழகங்களில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இலங்கையில் உள்ள பிரச்சினை யாதெனில் இனங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைகின்ற ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பதல்ல மாறாக அரசியல் தலைமைத்துவமும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் பல்லின மக்களின் ஒத்திசைவு நிலைகளை அரச கொள்கையின் ஊடாக தடுப்பதாகும். கீழ் மட்டத்தில் இன ஒத்திசைவுக்கான பல உறவுகள் காணப்படுகின்றன.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் சேர். பொன் அருணாச்சலத்தை டீ. எஸ் சேனநாயக்கா உட்பட்ட பல அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் குதிரை வண்டியில் அமர வைத்து துறைமுகத்தில் இருந்து அவரின் வாசஸ்தலத்துக்கு இழுத்து வரும் அளவுக்கு இன ஒத்திசைவாற்றல் இருந்துள்ளது. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் தலைவர்களின் பின்புலம் இல்லாமல் இனக்கலவரத்தில் ஈடுபடவில்லை. எனவே இலங்கையின் அரசியல் தலைமைகளே இந்நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்றுள்ளனர். இன ஒத்திசைவுத்திறன் கீழ்மட்டத்தில் இல்லாமல் மேல்மட்டத்தில் புகுத்தப்பட வேண்டும். அரசியல் தலைவர்கள், கொள்கைவகுப்பாளர்கள், மற்றும் உயர் பதவி வகிப்பவர்களுக்கு இன ஒத்திசைவுத்திறன் இல்லாமல் இவர்கள் தமது சுயநலத்துக்காக முரண்பாட்டுக் கொள்கைகளை மக்களிடையே விதைத்துள்ளனர். இன ஒற்றுமைக்காக இலங்கை சிங்கப்பூரில் இருந்து பின்வரும் விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

### 1. மொழிப் பிரச்சினை

இலங்கையில் இனங்களுக்கிடையில் இன ஒத்திசைவுத்திறன் வளர்வதற்கு ஆங்கிலக் கல்வியையும் ஆங்கிலத்தை அரச கரும மொழியாகவும் கொண்டு வருவதன் மூலம் இனங்களுக்கு இடையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். மூன்று மொழிகளில் கல்வி கற்ற பொறியியலாளர்கள் ஓர் பாலத்தை கட்டுவதைக் காட்டிலும் ஒரே மொழியில் படித்த மூன்று இளைஞர்கள் மிக இலகுவாக நேர்த்தியாக உறுதியாக ஒரு பாலத்தைக் கட்ட முடியும். இலங்கையில் இருந்தது போன்று சிங்கப்பூரில் சீன பின்னணியைக் கொண்ட அரசியல்வாதிகள் சீன மொழியை அரச கருமமொழியாக வழியுறுத்தி இருந்தனர். இலங்கையின் **1956** இல் இம்மொழிப் பிரச்சினை அனுபவத்திலிருந்து லீ சிங்கப்பூரில் ஆங்கிலக் கல்வியையும் ஆங்கிலத்தை அரச கரும மொழியாகவும் தேர்ந்து எடுத்துள்ளார்.[39] இக்கொள்கை பின்வரும் நன்மைகளைக் கொண்டுவரும்.

---

[39] "We realized English had to be the language of the work placeand the common language. As an international trading community, we would not make a living if we used Malay, Chinese, or Tamil. With English no race would have anvatages" P.146, Lee Kuan Yew (2011)……..Working language has prevented conflicts arising between our different race and given us a competitive advantage because it is a international language of business and diplomacy, of science and technology. Without it, we would not have many of the world's multinationals and over 200 of the world's top banks in Singapore. P.156, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இனங்களுக்கு இடையில் உறவுப் பாலத்தை கட்டி இன கூட்டுறவுத் திறனை வளர்க்கும் பிரதான ஆயுதமாக தொழிற்படும். இந்தியாவில் பல மொழி பேசுகின்ற மக்களை ஆங்கில மொழி இணைக்கின்றது.

2. இலங்கையின் ஊழியப்படையை சர்வதேச தரத்துக்கு தரம் உயர்த்துவதோடு சர்வதேச ரீதியாக இலங்கையின் பட்டதாரிகளும் சுலபமாக வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். இது இவர்கள் குடும்பங்களில் வருமானத்தை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

3. மூன்று மொழிகளில் ஆவணங்களையும் பாடப் புத்தகங்களையும் அச்சடிப்பதற்கான செலவுகளையும் மீதப்படுத்துகின்றது.

4. பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான சர்வதேச அறிவுசார் வல்லுநர்களை இலகுவாக உள்வாங்க முடியும். இருப்பினும் புதிய தாய்மொழிக் கல்விக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் இடையில் ஓர் நேர்கணியமான தொடர்பு இருப்பதாக ஜப்பான், ஜேர்மன், சீனா போன்ற நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை புதிய அறிவை உருவாக்குவதைவிட அறிவை பரவலாக்கம் செய்வதன் மூலம் அதிக நன்மைகள் பெற முடியும் எனச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். அறிவுப் பரவலாக்கத்துக்கு ஆங்கிலக்கல்வி அதிக பங்களிப்புச் செய்யும்

5. இன்றைய உலகமயமாக்கத்தில் வெளி உலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆங்கில மொழிக்கல்வியும் அதன் விரிவாக்கமும் அதிக பங்களிப்பைச் செய்ய முடியும்.

6. இனமுரண்பாட்டுக்கு ஓர் முற்றுப்புள்ளியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இருப்பினும் இதில் ஒரு குறைபாடு உள்ளது. குறிப்பாக ஓர் இனத்தை மற்றும் மொழியை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்தும் அரசியல்வாதிகளின் பிழைப்பில் மண் போட வேண்டி இருக்கும். எனவே அரசியல்வாதிகள் இக்கொள்கையை ஜனநாயக அரசியலில் விரும்ப மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கொள்கையால் அரசியல்வாதிக்கு அதிக நன்மை கிடையா விட்டால் ஜனநாயகத்தில் இக்கொள்கைக்கு எதிராக பல எதிர்ப்புக்களை அடிமட்டத்தில் இருந்து திரட்டி புரட்சியை ஏற்படுத்த இவர்கள் முனைவார்கள். அவ்வாறான எதிர்ப்புக்களை முளையிலேயே கிள்ளி எறிவதோடு நாட்டை தாராள ஜனநாயகத்தில் இருந்து விலக்கி ஒரு கட்சி அரசியலுக்கு மாற்றுதல் வேண்டும். ஒரு கட்சி ஆட்சி குடும்ப அரசியலாக அன்றி நாட்டின் எல்லா இன, மத மொழி பிரதேச மக்களையும் ஒன்றிணைக்கின்ற தேசிய அரசியல் கட்சி ஆட்சி முறையாக மாற்றமடைய வேண்டும். சிங்கப்பூரில் PAP அவ்வாறான ஓர் கட்சியாகும். இம்மாற்றங்கள் அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டம் நோக்கி அன்றி, மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டத்துக்குச் செல்ல வேண்டும்.

சிங்கப்பூரில் இன ஒற்றுமையை ஏற்படுத்திய மிகவும் பிரதான காரணி ஆங்கிலக் கல்வியை உயர்கல்வியின் மொழி மூலம் ஆக மாற்றி அரசகரும மொழியாக மாற்றியமை ஆகும். ஏனைய மொழிகளை தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தி அவற்றை செம்மையாக அமுல்படுத்தியமை ஆகும். இலங்கையில் 13ம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தமிழும் அரச கரும மொழியாக மாற்றப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பிரச்சினை மொழிக்கொள்கை சிறிய வீதம் கூட அமுல்படுத்தப்படவில்லை என்பதாகும். மொழி அமுலாக்கல் ஆணைக்குழு மட்டுமன்றி இதற்கான ஓர் தேசிய மொழி அமுலாக்கல் அமைச்சு கூட இருக்கிறது. ஆனால் நீதிமன்றத்திலே நீதிபதி கூட தமிழ் கைதியைப் பார்த்து சிங்களத்தில் கேள்வி கேட்கின்ற நிலையில் இருக்கின்றது. சட்டம் ஒழுங்கு நீதி போன்றவற்றுக்கு பொறுப்பாக இருக்கின்ற நீதித்துறையிலேயே இந்நிலைமை ஆயின் ஏனைய அரச நிறுவனங்கள், திணைக்களங்களில் தமிழ்மொழி அமுலாக்கல் நிலைமை எவ்வாறு இருக்கும் என அறிந்துகொள்ள முடியும்.

நல்லாட்சி என்பது சிங்கப்பூரில் மிகவும் திறமையாக பேணப்பட்டது. சிறுபான்மை மக்களின் உரிமைகள் 100 வீதம் சமமாக பேணப்படா விட்டாலும் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுடன் மனஸ்தாபங்கள் இல்லாது இணைந்து வாழும் அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணப்பட்டது. இது நாட்டுக்குள் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை கொடுத்தது மட்டும் அல்ல சர்வதேச நாடுகளில் இருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையைத் தூண்டி வெளிநாட்டு முதலீட்டைக் கவர்ந்து இழுத்தது.

இலங்கையில் 2009 யுத்தம் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்புச் செலவு தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. குமார் ரூபசிங்க (2007) குறிப்பிடுவது போன்று இப்பாதுகாப்பு செலவில் ஒரு வீதத்தை மொழி அமுலாக்கத்துக்கு செலவு செய்தால் நாட்டின் தேசிய நல்லிணக்கம் மிக விரைவாக இடம்பெறும் என்கிறார். அரசியல் தீர்வு இல்லாதது மட்டும் அல்ல, அரசியல் தீர்வு இல்லாமல் பாராளுமன்றத்தின் அதிகாரம் இல்லாமல் ஏற்கனவே பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ள மொழி அமுலாக்கத்தில் ஒரு வீத சட்டம் கூட அமுல்படுத்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிலைமை உள்நாட்டில் முதலீட்டாளர்களின் நன்மதிப்பை ஏற்படுத்தாது மறுபுறத்தில் ஒரு டொலரை ஒரு வெளிநாட்டவன் இலங்கையில் முதலிடுவது என்றால் இக்கொள்கை, சட்டம், அரசாங்கத்தின் கொள்கை போன்றவற்றில் ஒன்றுக்கு பல தடவை யோசித்து முதலிடுவான். சிங்கப்பூரில் இருந்து இலங்கை இந்த இன ஒற்றுமைக்கான மொழி அமுலாக்கத்தில் பல பாடங்களை கற்க வேண்டி இருக்கின்றது.

தமிழ்மொழி அமுலாக்கம் நடைமுறையில் உள்ள தாராள ஜனநாயக முறையில் சாத்தியமற்றது. இலங்கை அரசாங்கம் உளரீதியாக தமிழ்மொழி அமுலாக்கத்தை நூற்றுக்கு 10 சதவீதம் கூட அமுல்படுத்த முடியாது. காரணம் அவ்வாறு ஒரு சிங்களத் தலைவர் முன்வரும்போது அவருடைய கட்சிக்குள்ளேயே பல எதிர்ப்புக்கள் தோன்றும். இவ்எதிர்ப்புக்கள் கட்சிக்கு வெளியிலும் இருக்கும். எதிர்கட்சிகளிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பும். இதன் காரணமாக தனது ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து பேணிப் பாதுகாக்க முயற்சிக்கின்ற எந்த ஓர் அரசியல்வாதியும் இந்த விசப் பரீட்சைக்கு இறங்க முற்படமாட்டார். உலகத்துக்கு காட்டுவதற்கு சட்டத்தில் இருக்கும். எனவே இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கட்சி ஜனநாயக முறை இருக்கும்வரை இந்த மொழி முரண்பாடு இருக்கும்.

இந்த மொழி அமுலாக்கம் அதன் அடிப்படையிலான தேசிய நல்லிணக்கம் என்பது ஓர் கட்சி ஆட்சியினால் அல்லது சிங்கப்பூரைப் போன்று ஒரு கட்சி என்றும் தலைமை தாங்கும் ஓர் அரசியல் பொறிமுறை ஊடாக அடையப்படலாம். ஆனால் அவ்வாறான ஓர் அரசியல் மாற்றம் இலங்கையில் தற்போது (2004-2012) இருந்து வருகின்றது. ஆட்சியில் இருக்கின்ற கட்சியும் அரசாங்கமும் ஓர் ஜனநாயகம் என்ற பதாகையை தாங்கி இருந்தாலும் ஓர் மென்மையான சர்வாதிகார ஆட்சி நடைபெறுகின்றது என்பதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இரண்டுக்கு மேல் பல தடவைகள் ஆட்சிக்கு வர முடியும் என்ற சட்ட உருவாக்கம் மற்றும் நீதித்துறைக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் தொடர்கின்ற நெருக்கடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இருப்பினும் சிங்கப்பூர், மலேசியாவின் முகமட் மஹதீர் ஆட்சி அல்லது சீனாவைப் போன்று ஒரு கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் அரசியல் பொறிமுறை இலங்கையில் பின்வரும் விடயங்களில் முரண்படுகின்றது.

1. இலங்கையில் ஒருகட்சி ஆட்சிமுறை எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து உருவாக்கவில்லை. பதவிக்காக கட்சி தழுவிய அரசியல்வாதிகளைவிட உளரீதியாக தேசிய இலங்கையை கட்டியெழுப்புவதற்காக ஏனைய கட்சிகள் ஆளும் கட்சியுடன் இணையவில்லை.

2. இலங்கையில் தற்போது இருக்கும் ஒரு கட்சியை பெரும்பான்மை ஆட்சிப் பலமாகக் கொண்ட பொறிமுறை பெரும்பான்மை மக்களுக்குள் எல்லா பிரதேச, கட்சி மற்றும் திறமைசாலிகளை உள்வாங்கவில்லை. இது உடனடியாக இடம்பெறாது விட்டாலும், நீண்ட காலத்திலும் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் குறைவாக இருக்கின்றன. குறிப்பாக ஜனதா விமர்த்தி பிறமுன (JVP) மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (UNP) என்பவற்றை இந்த ஆளும் கட்சி உள்வாங்கவில்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3.* சிறுபான்மை மக்களின் கட்சிகளில் இலங்கையில் இனப் பிரச்சனையுடன் நேடியாகத் தொடர்புடைய இலங்கை தமிழர்களை அதிகளவில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகளை ஆளும் கட்சி உள்வாங்கவில்லை. குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களின் அதிக ஆதரவைப் பெற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பு (TNA) என்ற கட்சியை ஓரம்கட்டிக் கொண்டு அல்லது அச்சுறுத்திக் கொண்டு ஒரு கட்சி முறையை ஏற்படுத்த முடியாது.

*4.* எல்லாவற்றிற்கும் மேலாக உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் இலங்கையின் தற்போதைய அரசை(2012) மிகவும் விமர்சனத்திற்கு இட்டுச்செல்கின்ற விடயம் யாதெனில் இலங்கையின் ஒரு கட்சி தலைமை தாங்கும் ஆட்சி முறையானது குடும்ப ஆட்சி முறையாக காணப்படு கின்றமையாகும். இது குறித்த கட்சிக்குள்ளேயே எதிர்காலத்தில் பிரச்சனைகளையும் புரட்சிகளையும் ஏற்படுத்தலாம். சிங்கப்பூரில் லீ குவான் யுவுக்கு பின்னர் அவரின் மகன் ஆட்சியில் இருந்தாலும் லீயுடைய ஆட்சியில் சிங்கப்பூரில் சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கைத்தரம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. சிங்கப்பூருக்கு சிறந்த கைத்தொழில் மற்றும் சேவை உற்பத்திக்கான அடித்தளத்தை இட்டார். இது லீ ஆட்சியின் மீது மக்களின் விருப்பை அதிகரித்து கட்சிக்குள் குத்து வெட்டு இல்லாமல் நேர்மையாக கட்சி ஆதரவாளர்களின் விருப்பு வாக்குக்கு இணங்க அவருடைய மக்கள் பிரதமராகியுள்ளனர். லீயுடைய மகன் தற்போதைய பிரதமர் சிங்கப்பூரில் அதிதிறமையான வெளி நாடுகளில் அதிசிறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற இராணுவப் பிரிகேடியர் ஆவார்.

மேலும் லீ ஆட்சியில் இருந்தபோது தனது குடும்பத்தில் அவருடைய சகோதரர்களுக்கு அல்லது பிள்ளைகளுக்கு அமைச்சு பதவி அல்ல ஓர் சாதாரண அரச திணைக்களத்தின் தலைமைப் பொறுப்பைக் கூட கொடுக்கவில்லை. மேலும் சட்டம், ஒழுங்கு, நிதி போன்ற விடயங்களை தனது குடும்பத்துக்கு சாதகமாக பயன்படுத்தவில்லை. சுயாதீனமான இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு, நீதி சேவை ஆணைக்குழு என்பன தொழிற்பட்டன. நாட்டின் நன்மைக்கு தொழிற்கட்சி ஆதரவாளர்களை ஆளும் கட்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பதற்கு சில சந்தர்ப்பங்களில் சட்டம் ஒழுங்கு பக்கச் சார்பாக தொழிற்பட்டதாக சில ஆய்வுகள் குறிப்பிட்டபோதும், லீ தனது குடும்ப நலனுக்காக சட்டம் ஒழுங்கு நீதியைப் பயன்படுத்தி சொத்து சேர்க்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே இலங்கையில் அவ்வாறான நல்லாட்சிக்கான சுயாதீனமான ஆணைக்குழுக்கள் பலரால் வழியுறுத்தப் பட்ட போதும், நடைமுறையில் எந்த ஒரு அரசியல் தலைவர்களும் அதை கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுத்ததாகத் தெரியவில்லை. இவ்வாறான ஓர் நிலைமை ஒரு கட்சி ஆட்சி முறைக்கு உகந்ததல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

5. இலங்கையில் ஒரு கட்சி தலைமை தாங்கும் ஆட்சிமுறையில் இருக்கின்ற இன்னொரு குறைபாடு தலைமைத்துவத்தின் தரக்குறைபாடு ஆகும். நாட்டின் தலைவர்கள் பரம்பரை அரசியலுக்கு அப்பால் சிறந்த தரமான கல்விப் பின்பலத்தை கொண்டு உருவாகவில்லை. பொருளாதார மற்றும் அரசியல் ஆலோசனைகளை உள்வாங்கி நாட்டை இனம், மதம், மொழிக்கு அப்பால் இலங்கைத் தேசியம் என்ற அடிப்படையில் கட்டியெழுப்புகின்ற பக்குவப்பட்ட அரசியல் தலைமை இல்லாமையும் ஓர் குறைபாடாகும். மக்களின் வாக்குகளை பெற்ற பிரபல்யமான தலைமைகள் சிறந்த தலைமைகள் அல்ல என்றும் மாறாக தூரநோக்கு உள்ள அபிவிருத்தியை நோக்காக கொண்ட அரசியல் தலைமைகள் பிரபல்யமாக இருக்கமாட்டார்கள் என்றும் ஒரு அறிஞர் குறிப்பிடுகின்றார்.

இந்த வகையில் லீ ஒக்ஸ்பேர்ட் மற்றும் லண்டன் அரசியல் பொருளாதார கல்லூரியில் (LSE) கல்வி பயின்ற சிறந்த கல்விப் பின்புலத்தை கொண்டவர். மலேசியாவில் முகமட் முஹதீர் ஓர் வைத்திய கலாநிதி ஆவார். இவர்கள் பல்லின சமூகம் உள்ள நாட்டில் நாட்டை ஓர் கட்சி தலைமை தாங்கும் ஆட்சி மூலம் கட்டியெழுப்பியது போன்று இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் உருவாக்கக்கூடிய தரமான கல்விப் பின்பலத்தைக் கொண்ட தலைவர்கள் இருக்கின்றார்களா? என்ற கேள்வி எழுகின்றது. எனவே இவ்வாறான தூய குடும்ப அரசியல் பின்பலத்தை அடிப்படை யாகக் கொண்ட தலைவர்களிடம் உயர்தரத்திலான் ஓர் கட்சி தலைமை தாங்கும் ஆட்சி முறையை ஒப்படைத்தால் நாடு இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளுக்கும் புரட்சிகளுக்கும் இட்டுச் செல்லும் என கருத முடியும் என்பதை இலங்கையின் கடந்த கால அனுபவங்கள் காட்டி நிற்கின்றன.

6. இலங்கையில் ஒரு கட்சி ஆட்சி முறையிலான அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பொருளாதாரம் அல்லாத காரணிகளும் சாதகமாகக் காணப்படவில்லை எனலாம். உலகத்தில் எல்லாப் பகுதிகளிலும் யுத்தங்களும், இன, சமய முரண்பாடுகளும் காணப்பட்டன. ஆனால் காலஓட்டத்தில் அவை சமூக மாற்றங்கள் ஊடாக பொருளாதார மாற்றங்களுக்கு வித்திட்டன. இலங்கை மக்களின் மனப்பாங்கு, வரலாறு, சமய நம்பிக்கைகள், தத்துவங்களின் மாற்றம் என்பது மிக கீழ் மட்டத்திலேயே இருக்கின்றன. இன, மத, மொழி ரீதியாக சிந்திக்கின்ற ஓர் மக்கள் கூட்டத்தை கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலான இனவாத அரசியல் உருவாக்கிவிட்டது. எனவே இவற்றுக்கு அப்பால் மக்களை ஒன்றிணைப்பது கடினமாக இருக்கிறது. அரசாங்கம் சிங்கள பௌத்த நாடாக இலங்கையை மாற்றினால் அவற்றுக்கு ஆதரவு அதிகமாக இருக்கும். எனவே மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டுவராது இலங்கையில் ஒரு கட்சி ஆட்சி முறை சாத்தியமற்றதாக இருக்கிறது.

1960களில் சிறுபான்மை மக்களின் வணக்கத் தலங்கள் மீது பெரும்பான்மை மக்கள் தாக்குதல் செய்தார்கள், சிறைச்சாலைகளில் சிறுபான்மை மக்களை கொடூரமாகக் கொலை செய்தார்கள். இது பக்குவப்படாத காலம் எனக் கருதினால், இப்பிரச்சினைகளின் விளைவில் உருவான யுத்தத்துக்கு பின்னரும் 2012 இலும் இத்தாக்குதல்கள் தொடர்கின்றன. உலக மாற்றமும் இலங்கை மக்களின் மாற்றமும் அரசியல்வாதிகளின் உளப்பாங்கை மாற்றவில்லை. அதேவேளை இலங்கையின் கடந்த கால கொடூர யுத்தமும் மாற்றவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இந்நிலையில் ஓர் கட்சி ஆட்சிமுறை மென்மேலும் பௌத்த சிங்கள் இனவாதத்தை தூண்டுமேயொழிய மாறாக தேசிய நல்லிணக்கம் ஏற்படாது என சிலர் வலியுறுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தற்போது அரசியல்வாதிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தேசிய நல்லிணக்கம் என்பது சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளினைப் பாதுகாத்தல் என்று இல்லாமல் அவர்களைப் பெரும்பான்மை இனத்துடன் ஒன்றிணைத்து அவர்களின் ஒரு மொழி ஓர் சமயம் என்பவற்றை ஆயுதப் படைகள் மூலம் சிறுபான்மை மக்களிடையே பரவச் செய்தலாகும். இது ஒரு புதிய வகையில் அமைந்த தேசிய நல்லிணக்கம் ஆகும். இலங்கையில் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் பூர்வீகத்தில் இருந்து இல்லாமல் இடையிட்டு வளர்ந்து வந்ததாயின் இந்த நல்லிணக்கம் சாத்தியமாகலாம். ஆனால் இலங்கையின் முழு சனத்தொகையை விட 3 மடங்கு மேலான தமிழ் மக்களையும் அவர்களின் கலாச்சாரத்தை கொண்ட இந்தியாவின் தமிழ் நாட்டின் 14 கடல்வழி தூரத்தில், இலங்கையின் வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழர்களையும் அவர்களின் அடையாளங் களையும் தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் பெரும்பான்மை மக்களுடன் ஒருமைப்படுத்தல் இலங்கையில் இன முரண்பாட்டைக் களைவதற்கு பதிலாக, தமிழர்களை இலங்கையில் இருந்து பிரித்து இலங்கைக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து கடந்த காலத்தை போன்று மென்மேலும் இலங்கைக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும். இலங்கையில் தனிநாட்டுக் கோரிக்கை தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதால் உடனடியாக உள்நாட்டு சக்திகளால் மட்டும் உருவாக்கப்படவில்லை. இதில் வெளிநாட்டு சக்திகளுக்கு அதிக பங்கு உண்டு.

பூகோள அரசியல் மாற்றங்களின் பின்னணியிலும் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் அரசியல் தலைமைகளின் நடவடிக்கைகளின் பின்னணியிலும் இலங்கையில் நீடித்து நிற்கக்கூடிய நிரந்தரமான அமைதி உருவாகுமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இலங்கை பூர்வீகமாக வாழ்கின்ற சொந்தநாட்டு சிறுபான்மை மக்களின் உரிமைகளை அடக்கி ஒடுக்கி இலங்கை மக்கள் எல்லோரையும் அன்னிய மற்றும் பிராந்திய ஆதிக்கத்தில் விழச் செய்கின்ற நிகழ்வுகளே கடந்த காலத்தில் நிகழ்ந்தன. எதிர்காலத்திலும் இவ்வாறான ஓர் நிலை தோன்றுவதற்கான அரசியல் பரிமாணங்கள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரில் மலே நாட்டு மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர். சீனர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். லீ ஓர் சீனர் ஆவார். சிங்கப்பூரை லீ ஓர் சீன நாடாக உருவாக்க முயற்சிக்கவில்லை. அரசாங் கத்தின் சிறுபான்மையை அரவணைக்கும் கொள்கைகள், சிறுபான்மை மக்களை தேசிய சிங்கப்பூரினை கட்டியெழுப்புவதற்கு துணைபுரியச் செய்தன. மாறாக மலே நாட்டவர்கள் மலேசியாவுடன் சேர்ந்து சிங்கப்பூருக்கு எதிராக போர்க்கொடி தூக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இது சிங்கப்பூரின் எல்லா இன மக்களையும் உள்ளீர்க்கும் ஆட்சியினால் ஏற்பட்டதாகும். பல கட்சியுள்ள தாராள ஜனநாயகத்தில் சிங்கப்பூரின் அரசியல் பயணித்து இருந்தால் சிங்கப்பூரில் இன நல்லிணக்கம் கேள்விக்குறியாக மாறி பொருளாதார அபிவிருத்தியும் மிகவும் கீழ் நிலைக்குச் சென்று இருக்கும்.

லீயின் ஆரம்ப காலத்தில் PAP க்குள்ளேயே சீனமொழிக் கல்வி மற்றும் சீனக் கலாச்சாரத்தின் சார்பாக வாதிடுகின்ற பல சக்தி வாய்ந்த தலைவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் லீயின் கொள்கைக்கு எதிராக பிரச்சாரம் செய்தனர்.[40] லீயின் கல்விப் பின்புலம் மற்றும் உயர்தரத்திலான தலைமைத்துவப் பண்பு என்பன லீயை அவர்கள் பக்கம் சாராமல் தூரநோக்கு அடிப்படையில் சிந்தித்து பொதுவான ஓர் மொழிக் கொள்கைக்கு சென்றுள்ளார்.[41] ஏட்டிக்குப் போட்டியாக லீயும் பெரும் பான்மை மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு மூன்றாம் வகுப்பு அரசியல் செய்யவில்லை மாறாகத் தான் ஓர் உயர்நிலைத் தரத்திலான தலைவர் என்பதை நீரூபித்துக் காட்டியுள்ளார்.

---

[40] The English-educated, Chinese leadership, headed by Lee, feared the local Chinese business class which backed China and Chinese-language rights, and once in power was determined not to be beholden to it. Among the leaders of the Chinese business community who strongly supported China and Chinese language education, Tan Kah Kee had been the foremost pre-WWII figure. After the war, he was "the real Chinese leader with a mass following" but in 1950 was forced by the British colonial authorities to remain in China, where he became an official of the Chinese Communist Party. Following Tan's exile to China, his successor was Tan Lark Sye. In 1956 Tan Lark Sye was instrumental in the establishment of the Chinese-language Nanyang University as a bastion of Chinese culture, with the support of a wide section of the Chinese business community and Chinatown. Huff. W.G. (1995) P.1432

[41] Tan Lark Sye had as trenchant views, expressed in his well-known observation that English education resulted in "increasing taxes, laying traps, turning out fools and wasting public funds." He warned that "If we do not take steps to preserve our culture now.. .in 40 or 50 years perhaps we shall no longer call ourselves Chinese" …….. His views did not prevail: at the beginning of the 198Os, Nanyang University was finally subsumed under government direction into the English-language Singapore National University, Huff. W.G. (1995) P.1432



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பொதுச் சேவையும் இன ஒற்றுமையும்

ஓர் நாட்டில் இராணுவப் பொலிஸ், கடற்படை, பொதுநிர்வாகம் என பல பொதுச்சேவைகள் நாட்டின் மக்களைக் பணிக்கமர்த்தி வழங்கப்படுகினறன. பல இன, மொழி பேசும் நாடுகளில் பொதுச் சேவைகள் அனைத்தும் எல்லா இன மக்களையும் பூரணமான விகிதாசார அடிப்படையில் இல்லையாயினும் அதிகளவு வீதாசார அடிப்படையில் வழங்கப்படும்போது தேசிய நல்லிணக்கம் ஏற்படும் என்பதற்கு சிங்கப்பூரில் இருந்து இலங்கை பல அனுபவங்களை பெற்றுக் கொள்ள முடியும். முதலாவதாக சிங்கப்பூரில் அனைத்து இளைஞர்களும் யுவதிகளுக்கும் 18 வயதை அடைந்தவுடன் கட்டாயமாக இராணுவப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. தேசிய சேவை என்பது சிங்கப்பூரில் கட்டாய ஓர் சேவை ஆகும். சிங்கப்பூரின் இராணுவப் படையில் எல்லா இன மக்களும் இணைக்கப்பட்டனர். இதன் முக்கியத்துவத்தை லீ பல தடவைகள் எடுத்துக் காட்டியுள்ளார்.[42]

சிங்கப்பூரின் தேசிய சேவையானது சிங்கப்பூரின் பல்லின மக்களை ஒன்றிணைக்க உதவியது. தேசிய சேவையில் இனரீதியான பதவிகள், சலுகைகள் மற்றும் பதவி உயர்வுகள், வழங்கப்படாது திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சிங்கப்பூரின் முப்படைகளிலும் பதவிகளும் பதவி உயர்வுகளும் அவர்களின் இன, மொழி அடிப்டையில் இல்லாது அவரவர் திறமைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டன. இது பின்னர் ஏனைய அரச சேவைகளிலும் உள்வாங்கப்பட்டது. சிங்கப்பூரில் எந்த ஒரு அரச நிறுவனங்களிலும் மூன்று இன மக்களுக்கும் அவர்களின் இன விகிதத்துக்கு ஏற்ப வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தன. இது இன ஒற்றுமையின் அத்திவாரமாக இருந்தது. இலங்கையில் சுதந்திரத்தின்போது பொதுச்சேவைகளில் தமிழர்களின் பங்கு அதிகமாக காணப்பட்டது. பின்னர் இது படிப்படியாகக் குறைக்கப்பட்டு. இன்று

[42]"To be effective, the SAF has to mobilize and involve the whole society in defense activities. So, school principals, teachers, parents, employers, and community leaders are brought in to a supporting network under a concept called "Total defense" This keeps morale high" Lee Kuan Yew (2011), P.27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்படைகளில் சிங்களவர்களின் பங்கு 97 வீதமாகவும் அரச சேவையில் 63.2 வீதமாகவும் காணப்படுகின்றது. தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.[43]

- ஓர் நாட்டின் பொதுச்சேவையை அரசியல்வாதிகளின் ஆதரவாளர் களை நிரப்பும் குப்பை கூடையாக மாறக்கூடாது, குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிஸ்படை ஆகிய இரண்டும் சிறந்த புத்திக் கூர்மையான உயர்தர மாணவர்களை தேர்ந்து எடுத்து அவர்களுக்கு சிறந்த பல்கலைக்கழக கல்வி மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியை கொடுப்பதன் மூலம் உயர்தர பொதுப் பணியாளர்களாக உருவாக்க முடியும். நாட்டின் இராணுவமும் பொலிஸ்படையும் கூலிக்கு மாரடிக்கும் அரசியல்வாதிகளுக்கு ஏவல் புரியும் தொழிற்படையோ அல்லது காடையர் கூட்டமோ அல்ல. குறிப்பாக பல இனமக்கள் வாழ்கின்ற நாட்டில் சமூகத்தில் குற்றச் செயல்களை புரிந்து தனது வாழ்க்கையை ஓட்ட முடியாத, ஏழ்மையான முரட்டுக் கூட்டத்தை இப்படைகளுக்கு இணைக்கக் கூடாது என்பதில் லீ மிகவும் கவனமாக இருந்துள்ளார்.

ஓர் நாட்டின் படைக்கட்டுமானத்தில் ஆரம்ப நிலையில் இந்த தரம் மிக முக்கியமானதாகும். சிங்கப்பூர் நல்லாட்சி மற்றும் ஊழல் மோசடி கட்டுப்பாடு, வேகமான நிதிச்சேவை, பொலிஸ் படையின் சட்டம் ஒழுங்கை பராமரித்தல் போன்ற விடயங்களில் உயர்நிலையில் இருந்தமைக்கு இந்த பொதுச் சேவைகளின் ஆள்சேர்ப்பின் தகைமைக ளுக்கும் பொதுச் சேவையின் தரத்துக்கும் இடையில் ஓர் நேர்த் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.[44] சிங்கப்பூரில் இப்படைகளுக்கு சேர்க்கப்பட்டவர்கள் சிறந்த ஒழுக்கத்தை உடைய திறமையான பல்கலைக்கழக மாணவர்கள் ஆகும். இவர்கள் இச்சேவை களுக்கு உள்வாங்கப்பட்டதன் பின்னர் உலகில் பல தலைசிறந்த

[43] "Notional service has a profound important on Singapore society over the last 30 years. It has become a rite to passage our young men and has helped to unity our people. They learn to live and a part of our way of life that has helped to unity our people. They learn to live and work closely with each other, regardless of race language, or religion food taboos of Muslims and Hindus are respected, as are all religions rites, from Buddhism, Hindi Muslim, Sikh to Christian and Zoroastrian. Whether your father is a minister, banker, professional, laborer, taxi driver, or hawker, your military standing depends on your performance" Lee Kuan Yew (2011)P.27

[44] பார்க்க, Eliza w. y. Lee and m. Shamsul Haque( 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு புலமை பரிசில்களைக் கொடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்கள் மூன்று நிலைகளில் உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் பயிற்சியளிக்கப்பட்டனர். இறுதி நிலையில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பயிற்சி பொது அல்லது வியாபார முகாமைத்துவம் ஆகும்.[45]

நாட்டின் அரசியல் தலைவர்கள் ஓர் சிறப்பு கல்விக் கூடத்தில் நீண்டகல்வி ஊடாக உருவாக்கப்பட வேண்டும் என எடுத்துக்கூறிய பிளேற்றோ போன்று லீயும் சிங்கப்பூரின் படைகளையும் அரசியல் தலைவர்களையும், மந்திரிகளையும் சிறந்த தரமான கல்வி மற்றும் பயிற்சிகளை கொடுத்து தரமான சேவையாளர்களாக உருவாக்கியுள்ளார். இது பின்னர் நாட்டில் இனமுரண்பாடு இல்லாத இனப்பக்கச்சார்பு இல்லாத தேசிய பொதுச்சேவை படையை உருவாக்கி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு நேர்கணியமான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

இலங்கையில் பொதுச் சேவையில் சிங்கப்பூரின் அனுபவத்தை ஒப்புநோக்குவதன் ஊடாக இலங்கையில் குறைந்த அபிவிருத்திக்கான காரணத்தை அடையாளம் காணமுடியும். இலங்கையில் ஆரம்ப காலத்தில் இராணுவம் மற்றும் பொலிஸ் படைக்கு இலங்கையின் முன்னணி கல்லூரிகளான றோயல், ஆனந்தா, சென்தோமஸ் போன்றவற்றில் கல்வி கற்ற மாணவர்கள் உள்வாங்கப்பட்டார்கள். உயர் பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் உயர்வான திறமையான மாணவர்கள் என்ற முடிவுக்கு வரமுடியாது. இவர்கள் முதல் தர மாணவர்கள் அல்ல. மேலும் இவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு பல்துறைகள் உள்ளடக்கிய பயிற்சியையும் பெறவில்லை. இலங்கையில் இவ்வுயர் கல்லூரிகளில் கல்வி கற்றவர்கள் திறமையான மாணவர்கள் அல்ல என்ற பண்புக்கு அப்பால் இலங்கையின் உயர்வர்க்கம் மற்றும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் ஆவார். இலங்கையில் உள்ள இப்படைகள் இலங்கையில் அரசியல்வாதிகளும் உயர் வர்க்க மக்களும்

---

[45] "The quality to the early batches was reassuring by 1995, tour former SAF Scholar, having risen to senior passions, entered politics and later become cabinet minister:- My son Brigadiers general Lee Hasien Long ………………." Lee Kuan Yew (2011), P.28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன உளப்பாங்கில் இருந்தார்களோ அதே உளப்பாங்கிலேயே வளர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு முதல் நிலையில் இராணுவ பொலிஸ் படைக்கு சேர்க்கப்பட்டவர்கள் சிங்கப்பூரைப் போன்று முதல்தர மாணவர்கள் அல்ல என்பதோடு இவர்களின் உளப்பாங்கு மகாவம்ச உளப்பாங்காகவே இருந்தது. இலங்கையில் உள்ள எல்லா இன மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் மதித்து தேசிய இன நல்லிணக்கத்தை உருவாக்கக்கூடிய பாதுகாப்புப் படையை இலங்கை உருவாக்கத் தவறிவிட்டது மட்டுமல்ல இப்படைகள் இன வீதாசாரத்துக்கு மேலாக சிங்களவர்களை அதிகம் உள்வாங்கியிருந்தமை நாட்டின் சமூக அரசியல் ஸ்த்திரத்தன்மையைப் பாதித்து நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை கடுமையாகப் பாதித்து இருந்தது.

இரண்டாம் நிலையில் இலங்கையின் முப்படைக்கும் சேர்க்கப்பட்டவர்கள் கிராமிய வறிய குடும்பத்தை சேர்ந்த மக்கள் ஆவார். இவர்கள் முழுமையாக சிங்கள மக்களை உள்ளடக்கி இருந்தனர். இனக்கலவரங்களின் போது இலங்கை இராணுவமும் பொலிஸ் படையும் சிங்கள காடையர்களுடன் இணைந்து சிறுபான்மை மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு இருந்தனர்.[46] இலங்கையில் போர் உக்கிரமடைந்த போது இராணுவ மற்றும் பொலிஸ் படைக்கு மிகக் குறைந்த தகுதியில் சிங்கள மக்கள் மட்டும் உள்வாங்கப்பட்டனர். இப்படைகளில் தமிழர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு ஓர் நாட்டை கட்டியெழுப்புவதற்கு இருக்கின்ற முப்படைக்கட்டுமானங்கள் இலங்கையில் சிங்கப்பூரைப் போன்று இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பதிலாக அரசியல்வாதிகளின் ஏவலுக்கு துணைபுரியும் பொலிஸ் படைகளாக மாறி இனமுரண்பாட்டை தூண்டுவதற்கு காரணமாக மாறினார்கள். இன, மத, மொழி வேறுபாடு இல்லாத தேசத்தை கட்டியெழுப்பும் படைகள் சிங்கள பௌத்த தேசத்தை கட்டியெழுப்பும் படைகளாக மாற்றமடைந்தன.

இலங்கையில் முப்படைகளும் மூவின மக்களும் பொதுவான ஓர் படையாக இன்றி சிங்களமக்களுக்குரிய ஓர் படையாக தொழிற்படுவதை அவதானிக்க முடியும்.

---

[46] பார்க்க: Tambiah S J (1991)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அட்டவணை 3.1: இலங்கையில் 18-30 வயதிலான ஆண்களின் தொழில் வகைகளின் சதவீதம்***

| | அரசாங்கம் | இராணுவம் | தனியார் | தற்காலி | வியாபாரம் | கமத் தொழில் | வேலை செய்வோர் | மாதிரி எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 63.2% | 97.1% | 61.2% | 60.5% | 63.9% | 75.5% | 65.5% | 1,796 |
| இலங்கைத் தமிழர்கள் | 20.3% | 1.4% | 23.0% | 25.6% | 13.0% | 21.3% | 21.6% | 593 |
| இந்திய தமிழர்கள் | 0.5% | 0.0% | 2.8% | 3.0% | 1.4% | 1.6% | 2.2% | 59 |
| முஸ்லீம்கள் | 15.6% | 1.4% | 12.4% | 10.1% | 18.5% | 2.1% | 9.9% | 270 |
| ஏனையவர்கள் | 0.5% | 0.0% | 0.7% | 0.8% | 3.2% | 0.0% | 0.9% | 26 |
| மொத்தம் | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 2,744 |
| மாதிரி எண்ணிக்கை | 212 | 210 | 575 | 1,020 | 216 | 440 | 2,744 | |

*Source: SLIS 1999/2000*

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்துக்கு வரும் தென்பகுதி உல்லாசப்பயணிகளுக்கு பாடசாலைகள், கோயில்கள் என பொது இடங்களில் பொது இடங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் அனுமதியின்றி இராணுவம் தனது மேலாண்மையைப் பயன்படுத்தி வலுக்கட்டாயமாக அவ்விடங்களில் தங்கவைக்கின்ற நடவடிக்கைகளை நான் அவதானித்து இருக்கின்றேன். தென்பகுதிக்கு நான் பல்கலைக்கழக மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றபோது தங்குமிட வசதியில் இருந்த குறைபாடு காரணமாக பல மணித்தியாலங்கள் வீதியில் மாணவர்களுடன் இரவுப் பொழுதை ஒரு பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் கழிக்க வேண்டி ஏற்பட்டது. நாம் பல்கலைக்கழக மாணவர்கள் என அறிந்தும் அருகில் உள்ள பாடசாலையில் மலசலகூடத்தை கூட பொலிஸார் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. எங்களை புலிகளாகவே நோக்கினர். எனவே இலங்கையில் படையில் சிறுபான்மை மக்களை இணைக்காமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுறம் இருக்க, முப்படைகளும் தமது சேவையில் இனப் பேதப்படுத்தலை மேற்கொள்வதை அவதானிக்க முடியும். இது ஒற்றுமையை ஏற்படுத்தாது. அண்மைக்காலத்தில் வடக்கு கிழக்கில் முப்படையினரும் வீடுகள் அமைத்து அதை வறியமக்களுக்கு கையளிக்கின்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கென அரசாங்கம் நிதியை கொடுக்கின்றது. பாடசாலைகள், வறியவர்கள் பொது இடங்களை துப்பரவு செய்தல் என இராணுவத்தின் இச்சேவைகள் ஓரளவு தமிழ்மக்களிடையே இராணுவத்தினர் மீது இருந்த பயம், அவநம்பிக்கை என்பவற்றை குறைத்து அவர்கள் மீது ஓர் நன்மதிப்பை ஏற்படுத்துகின்றது. இருப்பினும் இவை ஓர் சிறிய நடவடிக்கைகள் ஆகும். யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றவையாகும். பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரும் இராணுவமும் சிங்கள மக்களுக்கு சார்பாக தமது கடமைகளை செய்வதால் தமிழ் மக்கள் இராணுவத்தை இலங்கை இராணுவம் என அழைக்காமல் சிங்கள் இராணுவம் என அழைப்பதைக் காணமுடிகிறது. சிங்கப்பூரில் இந்நிலைமை நேர் எதிரானது ஆகும்.

ஓர் பொலிஸ் அதிகாரி தமது கடமையைச் செய்வதில் ஓர் அரசியல்வாதிகூட தலையிட முடியாது. அரசியல் தலைவருக்கே பாரபட்சம் காட்ட முடியாது எனில் ஓர் இன மக்களுக்கு எப்படி பாரபட்சம் காட்ட முடியும். இவ்வாறான ஓர் பக்கம் சாராத காவல்துறை, பாதுகாப்புத்துறை, நீதித்துறை என்பன சிங்கப்பூரில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்க இலங்கையில் இந்நிலைமை எதிர்மறையாகச் சென்றது.

இலங்கையில் அண்மைக்காலத்தில் தலைமைத்துவப் பயிற்சி என்ற அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் போன்றவர்களுக்கு இராணுவத்தினரால் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இது ஓர் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையாக இருந்தாலும் அடிப்படையில் படைச் சேர்ப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் மேலோட்டமான இந்நடவடிக்கைகள் பலனைக் கொடுக்காது. மேலும் பொலிஸ்படையில் தமிழர்கள் சேர்க்கப்பட்டு பொலிஸ் நிலையங்களில் சிங்கள பொலிஸ் அதிகாரிகளுக்கு எடுபிடி வேலை செய்கின்ற கூலிப்படைகளாக இருக்கின்றனர். எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் உள்ள பதவிகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அண்மையில் தமிழ் இளம் பெண்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆண்களைச் சேர்க்காது பெண்கள் சேர்த்தமை தொடர்பாக பல விமர்சனங்களை பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. மேலும் இப்பெண்கள் சுய விருப்பம் இன்றி வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எது எவ்வாறு இருப்பினும் முப்படைகளிலும் தமிழர்களை இணைப்பது தேசிய இன ஒற்றுமையை ஏற்படுத்தலாம். ஆனால் இது ஓர் தூரநோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். அடிப்படையில் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை உறுதிப்படுத்தும் சட்டங்களை அல்லது சட்ட அமுலாக்கமே இல்லாது மேலோட்டமாக படைகளில் தமிழர்களை இணைத்தல் பலனைக் கொடுக்காது என்பதற்கு கடந்தகால அனுபவம் சான்றாகும்.

### 3. வீடமைப்புத் திட்டமும் இன ஒற்றுமையும்

சிங்கப்பூர் வீடமைப்பு அபிவிருத்தி சபை (HDB) என்பது அரசாங் கத்துக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற இன்னொரு பிரதான அரச தொழில் முயற்சியாக இருந்தது. இவ்வீடமைப்புத் திட்டம் உலகத்துக்கே ஓர் முன்மாதிரியான திட்டமாகும். இன்று சிங்கப்பூரில் வாழ்கின்ற 90 சதவீதமான மக்களுக்கு சொந்த வீடுகள் தொடர் மாடியில் இருக்கின்றன. சிங்கப்பூரில் வீடமைப்புத் திட்டத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் இவ்வீடு அமைப்புத் திட்டம் நன்கு திட்டமிடப்பட்டு நாட்டின் மக்களை சுறுசுறுப்பாக உழைக்கத் தூண்டிய ஓர் திட்டமாகும்.

இலங்கையில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் வீடமைப்புக்கு என நிதியை ஒதுக்கிட்டும் பின்னர் அவ்வீடுகளை கட்டுவதற்கு தனியாருக்கு ஒப்பந்தங்கள் கொடுத்து அவர்கள் மிகவும் தரக் குறை வாகக் கட்டி முடிக்க, அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் ஆதரவாளர் களுக்கு முற்றாக இலவசமாக பகிர்ந்து கொடுக்கிறார்கள். இலவசமாக வீட்டைப் பெற்றவர்கள் தொழில் செய்வதற்கு தூண்டுதல் இன்றி வீட்டில் இருந்து உல்லாசமாக ஏனைய சமூக சேவைகளை (கல்வி, சுகாதாரம், மருத்துவம்) இலவசமாக நுகர்ந்து அரசாங்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுக்கும் சார்ந்து இருக்கும் ஓர் ஏழைக் கூட்டமாக உருவாகி நின்றது. மேலும் இவ்வீடுகள் சிறந்த பராமரிப்பு இன்றி காலப்போக்கில் பழுதடைந்து வருகின்றன. வீடுகள் கட்டப்பட்ட அமைப்பிலும் சுகாதாரக் குறைபாடுகள், சூழல் குறைபாடுகள் காணப்படுகின்றன. மேலும் இவ்வீடுகள் சிறிய சிறிய துண்டுகளாகக் காணப்படுவதோடு பெரியளவான இடத்தை உள்வாங்கி இருக்கின்றன. மூன்று நான்கு மாடிகளுக்கு மேல் அரச வீடமைப்புத் திட்டங்களை இலங்கையில் பார்க்க முடியாது. வீடமைப்பு திட்டத்தில் நிலப்பயன்பாடு திட்டமிடல் என்பது அறவே இல்லை என்றே கூற வேண்டும். சிங்கப்பூரை விட இலங்கையில் நிலப்பரப்பு அதிகமாக இருந்தாலும் உலகில் நிலப்பரப்பு கூடிய நாடுகளில் கூட செறிவு கூடிய வீடமைப்பு திட்டங்களையே காணமுடியும். உதாரணமாக சீனாவில் 50,60 மாடிகளில் வீடமைப்பு திட்டங்கள் காணப்படுகின்றன இலங்கையில் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் மாடிகள் ஒன்று கூட இல்லாமல் தனி வீடுகளாகவும் இருந்துள்ளன.

சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் நன்கு திட்டமிட்டு நிலப்பயன் பாட்டை உச்சப்படுத்திய ஓர் பாரிய திட்டமாகும். இவ்வீடுகளில் பகிர்வில் இன விகிதாசாரம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டது. ஓர் இன, மொழி, மத மக்களுக்கு என எந்த ஒரு வீட்டுத்தொகுதியும் அமைக்கப்படவில்லை. மாறாக எல்லா இன மக்களும் கூடி வாழத்தக்க வகையில் நாட்டின் இன விகிதாசாரத்துக்கு என்ற வகையில் வீடுகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. பகிர்ந்து கொடுக்கப்பட்ட வீடுகள் உரிமையாளரின் வங்கிக்கடன் அல்லது வீடமைப்பு அபிவிருத்தி சபையின் கடன் முடிவடையும் வரை வீட்டின் சொத்துரிமைப் பத்திரம் உரிமையாளருக்கு வழங்கப்படவில்லை. மாறாக இவர்கள் எங்கிருந்து கடன் பெற்றார்களோ அவர்களின் பிடியில் இருந்து வீட்டை விற்பதாயின் குறித்த கடன் கொடுத்த நிறுவனந்தான் விற்க முடியும். இந்த பிணைப்பு குடியிருப்பாளர்களை (நாட்டின் பிரசைகளை) கடுமையாக உழைக்கத் தூண்டியது. குறிப்பிட்டளவு ஓர் சிறிய தொகை பணத்தைக் கொண்டு வீடு வாங்கி குடியமரலாம் ஆனால் பல வருடங்களுக்கு பின்பே வீடு குறித்த நபருக்கு உரிமையாகும். இடையில் விற்பதாயின் பல இலட்சம் இழப்பு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வீடமைப்புத் திட்டத்தில் வீட்டைப் பெற்றவர் வீட்டுடனும் தொழிலுடனும் பிணைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். தொழிலை விட்டால் வீட்டை இழக்க வேண்டி இருக்கும். மேலும் நீண்ட காலம் சேமித்த பணத்தையும் இழக்க வேண்டி இருக்கும். தொழிலை விட்டு விட்டு வீட்டில் நீண்டகாலமாக தொடர்ந்து குடியிருக்க முடியாது. குறுகிய காலத்தில் வீட்டுக்குரிய மாதாந்த தவணைக் கட்டணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் வீட்டை விட்டு வெளியேற்றுவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி சபைக்கு பூரண சுதந்திரம் உண்டு. இதில் ஒரு வீதம் கூட அரசியல்வாதி தலையிட முடியாது. சட்டம், ஒழுங்கு மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இலங்கையில் வீடமைப்பு திட்டமோ அல்லது குடியேற்றத் திட்டமோ எதிர்பார்த்த பலனை தரமுடியாமல் இருந்தமைக்கு பல காரணங்களை சிங்கப்பூரை தொடர்புபடுத்திக் குறிப்பிடலாம். முதலாவது இலங்கையின் வீடமைப்புத் திட்டம் அதிகமான ஓர் அரசியல் தலையீடு நிறைந்த திட்டமாகும். இவ்வீடமைப்பு திட்டத்தில் வீடுகளைப் பெற்றவர்கள் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இங்கு வீடுகள் பகிந்து கொடுக்கப்பட்டபோது இன வீதாசாரம் பேணப்படவில்லை. பல வீடமைப்பு தொகுதிகள் குறித்த ஓர் இனங்களை மையப்படுத்தி இருந்தன. வீடமைப்பு திட்டங்களில் சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்பட்டு இருந்தனர்.

மேலும் வீடமைப்புத் திட்டத்தில் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து கொடுக்கப்பட்ட வீடுகளில் சிறுபான்மை மக்கள் விரட்டப் பட்ட பல சம்பவங்கள் இருக்கின்றன. இனக்கலவரங்களின் போது குறித்த பிரதேசத்துக்குரிய அரசியல்வாதியும் காவல்துறையினரும் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து இவர்களின் வீடுகளை நாசப்படுத்தியதைக் காணலாம். உதாரணமாக 1983 இனக்கலவரத்தின் போது கொழும்பில் சொய்சாபுரத்தில் மற்றும் குணசிங்கபுரத்தில் அரச வீட்டுத்திட்டத்தில் வசித்த மக்களின் உடமைகள் சூரையாடப்பட்டு வீடுகளை பெரும்பான்மை அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் தங்கள் உடமையாக்கியுள்ளனர். பெரும்பான்மை மக்களுக்குள்ளேயே அரசியல் கட்சி சார்பாக இவ்வீடமைப்பு திட்ட பகிர்வில் உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாளியை இனம் காணாது ஆளும்கட்சி ஆதரவாளர்களுக்கு கொடுக்கப்பட்டமையை அவதானிக்கலாம். இவ்விடயத்தில் சிங்கப்பூரையும் இலங்கையையும் ஒப்பிட்டு நோக்கும்போது இலங்கையில் இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வந்து இரண்டு கட்சியுமே சிறுபான்மை மக்களுக்கு எதிராக வன்முறைகளை தூண்டி விடுவதில் போட்டியாக செயற்பட்டு உள்ளன.

யார் சிறுபான்மை மக்களின் உரிமைகளை பறித்து இலங்கையை சிங்கள தேசமாக மாற்றுகிறார்களோ அவர்களுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்தது. எனவே இரு பிரதான அரசியல் கட்சிகளும் இக்கொள்கைகளை முன்னெடுப்பதில் தங்களுக்குள் போட்டியிட்டு சிறுபான்மை மக்களுக்கு எதிராக கொள்கைகளை முன்னெடுத்தார்கள். மக்களை பாதுகாக்கின்ற காவல்துறை மற்றும் இராணுவம் ஒருபக்க ரீதியாக அரசியல்வாதிகளின் ஏவல் படைகளாக மாறின. நாம் முன்னர் கூறியது போன்று இப்படைகளின் மூவின மக்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை மற்றும் இப்படைகளில் கல்வி குறைந்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டமை என்பன வீடமைப்புத் திட்டத்தில் இன வெளியேற்றத்தை தூண்டிய காரணிகள் ஆகும்.

சிங்கப்பூரைப் போன்று சுயாதீனமான, உயர்ந்த தரமான கல்வி யைக் கொண்ட எல்லா இன மக்களையும் உள்ளடக்கிய காவல்துறை மற்றும் இராணுவம் இருந்து இருக்குமானால் வீடமைப்புத் திட்டங்களில் சிறுபான்மை மக்களின் வெளியேற்றத்தை நல்லாட்சி ஊடாக தடுத்து நிறுத்தி இருக்கும். இலங்கையில் சட்டம் ஒழுங்கு பற்றி குறிப்பிடுகின்ற அரசியல்வாதிகளே சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொண்டு சிறுபான்மை மக்களுக்கு எதிராக அதனை பயன்படுத்திய பல சம்பவங்கள் இருக்கின்றன. 1981 இல் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இருந்து 100m தூரத்திற்குள் அமைந்த பொது நூலகம் எரிக்கப்பட்டது. நூல் நிலையத்துக்கே இந்நிலைமை எனில் வீடமைப்பு தொகுதிகளில் உள்ள உயிரின் நிலைமை எவ்வாறு இருந்து இருக்கும் என்பது தெளிவாகின்றது. இவ்வாறான ஓர் சூழ்நிலை வீடமைப்புத் திட்டத்தில் இன ஒற்றுமையை கேள்விக்குறியாக மாறியது. இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை இலங்கையின் உலர் வலயக் குடியேற்றத் திட்டங்களிலும் அவதானிக்கலாம் சிறுபான்மை மக்கள் தாமாகவே வெளியேறியுள்ளனர்

இலங்கையின் வீடமைப்பு திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான இரண்டாவது காரணம் இலங்கையில் வீட்டுத் திட்டம் இலவச வீட்டுத் திட்டமாக இருந்தமை ஆகும். இலங்கை ஓர் சமூக நலனியல் அரசு ஆகும் *(Social Welfare State).* ஆனால் சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டத்தில் வழங்கப்பட்ட வீடு தூய தனியார் பண்டமாகும். சிங்கப்பூர் அரசு ஓர் அபிவிருத்தி அரசு ஆகும் *(Developmental State).* எனவே இரு அரசுகளின் நோக்கம் நேர் எதிராக வேறுபடுவதால் அவர்களால் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கான விலையும் வேறுபட்டது. இலங்கை அரசாங்கம் எவ்வளவுக்கு எவ்வளவு அரச வளங்களை மக்களுக்கு வாரி இறைத்து மக்களின் வாக்குகளை அவ்வளவு பெற்றுக்கொண்டது. அந்நிலைமை சிங்கப்பூரில் நடைபெறவில்லை. ஒரே கட்சி ஆட்சியில் இருந்தமையால் இது எல்லா மக்களுக்கும் உயர்ந்த விலைக்கு வீடுகளை கட்டிக் கொடுத்து நிதிப்பலமான அரசாக உருவானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –04

# சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியும் அவற்றின் மூலங்களும்

## 1. அறிமுகம் *(Introduction)*

ஆசியாவிலும் உலகத்திலும் பொருளாதார அபிவிருத்தியில் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் ஓர் நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது.[47] இப்பொருளாதார அபிவிருத்தியையும், அவற்றுக்கு பங்களிப்பு செய்த காரணிகளையும் அடையாளம் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை அறிமுகம், பொருளாதார அபிவிருத்தியின் போக்கு, அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்த காரணிகள் மற்றும் தொகுப்புரை என நான்கு பிரதான தலைப்புக்களில் நோக்கப்படுகின்றது.

1819ஆம் ஆண்டு சிங்கப்பூர் பிரித்தானிய வர்த்தக கம்பனியின் ஓர் கொலனியாக உருவாக்கப்பட்டது. 1963 இல் இது மலேசியாவுடன் இணைந்து இரண்டு வருடங்களுக்கு பின்னர் மீண்டும் பிரிக்கப்பட்டு, 1965 இல் ஓர் சுதந்திர நாடாகியது. ஆரம்பத்தில் பல மீனவக் கிராமங் களைக் கொண்டிருந்த இந்நாடு குடிப்பதற்கு நீர் போன்ற இயற்கை வளங்களைக் கூட கொண்டிருக்காத போதும் இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தலா வருமானத்திற்கு சமமான வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் பெற்றுக் காணப்படுகின்றது. 1962 இல் சிங்கப்பூரின் தலாவருமானம் இலங்கையை விட உயர்வாகக் காணப்பட்டாலும், இதன் தலாவருமானத்திற்கும் இலங்கையின்

---

[47] After Japan, it is the most aggressively self-modernizing nation state in the Pacific, a model for Malaya, Korea, Taiwan and the Philippines. The huge international airport has turned a slum-ridden relic of British imperialism into a stop-over city with a high-risebusiness district, a pan-island expressway, and huge estates of regimented housing blocks,W.G. Huff (1995).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலாவருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு US$ 300 ஆகும். இது 2005 இல் US$ 25450 ஆக பாரிய அளவில் வேறுபடுகின்றது.

தென்கிழக்கு ஆசியாவில் மலேசியாவுக்கு தென் பகுதியாக இந்தோனேசியாவுக்கு கிழக்கே அமைந்துள்ள சிங்கப்பூரின் மொத்தப் பரப்பளவு 692.7 $km^2$ ஆகும். இதில் நிலம் 682.7$km^2$ ஆகவும் நீர் 10 $km^2$ ஆகவும் காணப்படுகின்றது. 2006 இல் 4.5 மில்லியன் சனத்தொகையை கொண்டிருந்தது. சிங்கப்பூர் 76.8% சீனர்களையும் 13.9% மலேசியர்களையும் 7.9% இந்தியர்களையும் 1.4% ஏனையவர் களையும் கொண்டுள்ளது. மத அடிப்படையில் நோக்கினால், 42.5% பௌத்தர்களாகவும் 14.9% இஸ்லாமியர்களாகவும் 8.5% *Taoist* களாகவும் 8.5% இந்துக்களாகவும் 4.8% கத்தோலிக்கர்களாகவும் 9.8% ஏனைய கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர். தேசிய மொழிகளாக சீனமொழி, மலேமொழி, தமிழ்மொழி காணப்படுகின்றது. அலுவலக மொழியாக ஆங்கிலம் காணப்படுகிறது. எழுத்தறிவு 92.5 வீதம் ஆகும்.

ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறுகிறது. பிரதம மந்திரிக்கு அதிக அதிகாரம் கொண்ட பாராளுமன்ற ஆட்சி முறை காணப்படுகின்றது. மக்கள் செயற்பாட்டுக் கட்சி *(People Actions Party -PAP)* பிரதான கட்சி ஆகும். இக்கட்சி 1959 இல் இருந்து தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கின்றது. இக்கட்சியைவிட ஜனநாயக முன்னேற்றக் கட்சி (DPP) சிங்கப்பூர் ஜனநாயக முன்னணி (SDA) சிங்கப்பூர் ஜனநாயக கட்சி (SDP) போன்ற பல கட்சிகளும் உள்ளன. 1959 இல் இருந்து இன்றுவரை PAP தான் அறுதிப் பெரும்பான்மை வாக்கு பலத்துடன் ஆட்சியில் இருக்கின்றது. பல கட்சிகள் இருந்தாலும் PAP ஏனைய கட்சிகள் ஆட்சிக்கு வராதபடி பல மறைமுகமான கட்டுப் பாடுகளை விதித்து ஜனநாயக மரபுகளைக் கட்டுப்படுத்துகின்றது. 1965-2004 வரையிலான காலப்பகுதியில் சிங்கப்பூரின் சராசரி ஜனநாயக சுட்டெண் 2.3 என்பது குறிப்பிடத்தக்கது. இது இந்தியாவில் 9 ஆகும். பல கட்சிகள் உலகத்திற்கு காட்டுவதற்காக உள்ளன. அவை சுதந்திரமாக செயற்பட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியின் போக்குகள்** *(Trends of Economic Development in Singapore)*

**1.தலா வருமானம்**

வரைபடம் 4.1 சிங்கப்பூரின் தலாவருமானத்தின் போக்கை காட்டுகின்றது. சிங்கப்பூரின் தலா வருமானம் 1962 இல் US$ 450 ஆக இருந்தது இது 2005 இல் US$ 26620 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு ஆசியாவின் தலா வருமானம் இக்காலப் பகுதியில் US$ 72 இல் இருந்து US$ 1627 ஆக மட்டுமே அதிகரித்துள்ளது. 1997 தென்கிழக்கு ஆசியாவில் இடம் பெற்றிருந்த நெருக்கடியானது சிங்கப்பூரின் தலா வருமானத்தைக் குறைத்துள்ளது. இது 2001 வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2002 க்கு பின்னர் சற்று அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

**வரைபடம் 4.1:கிழக்கு ஆசியாவில் சிங்கப்பூரின் தலாவருமானத்தின் போக்கு**




*மூலம்:உலகவங்கியின் புள்ளிவிபர தளம்*

**2. உள்நாட்டு உற்பத்தியின் துறை சார் பங்களிப்பு**

சிங்கப்பூரின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறையே (60%) முன்னணி வகிக்கின்றது. இரண்டாவது துறையாக கைத்தொழில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை(38%) விளங்குகின்றது. விவசாயத்துறை ஒரு வீதத்துக்கு குறைந்த பங்களிப்பையே செய்கின்றது.

**3.பொருளாதார வளர்ச்சி வீதம்**

*சிங்கப்பூர் 1962-2005 காலப்பகுதியில் சராசரி 7.% பொருளாதார வளர்ச்சியை(GDP) பெற்றது. 1978 - 1997 காலப்பகுதியில் சராசரி 8.15% ஐ பெற்றது. ஆகக் கூடியது 13.7 வீதமாகவும் ஆகக் குறைந்தது -2.3 வீதமும் ஆகும். வரைபடம் 4.2 சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சி வீதத்தின் போக்கை காட்டுகின்றது.*

**வரைபடம் 4.2: சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சியின் போக்கு**





**4.பணவீக்கம்**

*1962 - 2005 காலப்பகுதியில் சிங்கப்பூரின் சராசரி பணவீக்கம் 2.75 சதவீதமாக காணப்பட்ட்து. இது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்பட்ட வீதத்தை விட குறைவானதாகும். இக்காலத்தில் மிக உயர்வான பணவீக்க வீதம் 22.36 ஆகவும் மிக குறைந்த விலை மாற்ற வீதம் -1.84 ஆகவும் காணப்படுகிறது. ஜனநாயகம் கட்டுப்படுத்தப் பட்டாலும் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச் செலுத்தும் பணவீக்கத்தை மிக குறைந்த மட்டத்தில் கொண்டிருந்தமையால் PAP மக்கள் ஆதரவைப் பெற்றது. குறைந்த பணவீக்கத்தையும் வேகமான*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சியும் நீண்ட காலத்துக்கு பேணுதல் என்பது சிறந்த ஒரு பொருளாதார உறுதிப்பாடு ஆகும். வரைபடம் 4.3 சிங்கப்பூரின் பணவீக்கத்தின் போக்கை காட்டுகின்றது.

வரைபடம் 4.3: சிங்கப்பூரின் பணவீக்கத்தின் போக்கு




மூலம்: உலகவங்கியின் புள்ளிவிபர தளம்

## 5.நாணய மாற்று வீதத்தின் உறுதிப்பாடு

சிங்கப்பூர் டொலரின் பெறுமானம் அமெரிக்க டொலருக்கு எதிராக 1971-2005 காலப்பகுதியில் ஆண்டுக்கு சராசரியாக 1.2 சதவீதத்தால் பெறுமான ஏற்றத்தைப் பெற்றது. ஆனால் கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் எல்லா நாணயங்களின் பெறுமானமும் அமெரிக்க டொலருக்கு எதிராக இக்காலப்பகுதியில் சராசரியாக 10.19 சதவீதத்தால் பெறுமானத் தேய்வினைக் கொண்டிருந்தது. சிங்கப்பூர் குறைந்த பணவீக்கத்தை கொண்டிருந்தமைக்கு இந்த நாணய மாற்று வீத உறுதிப்பாடும் ஓர் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.பொருளாதார அபிவிருத்திக்கு பங்காற்றிய காரணிகள்
*(Causes for Economic Development)*

#### i.அரசாங்கத்தின் பங்கு

சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியில் அரசாங்கத்தின் பங்கு மிகச் சிறப்பாக இருந்துள்ளது. 1970 களில் ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் பல நாடுகள் தங்கள் நாட்டின் தூதுக் குழுக்களை அனுப்பி சிங்கப்பூர் எப்படி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தது என்பதை கற்றார்கள். L.Lin இன் கருத்துப்படி சிங்கப்பூரின் பொருளாதார வெற்றியானது திறந்த சந்தைப் பொருளாதார கொள்கைக்கு அப்பால் திறந்த பொருளாதாரத்தை சரியாக வழிநடத்திய மிகக் கடுமையான அரச தலையீட்டுக் கொள்கையே காரணமானது என்கிறார் *(Heavily Interventionist Policy)*. அநேகமான ஆய்வுகளின் அடிப்படையில் சிங்கப்பூர் பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் மீது அரசாங்கத்தின் வழிநடத்தலே இவ்வெற்றிக்கு காரணமாகும் எனக் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் தலையீட்டுக் கொள்கையானது மிக சிறப்பாக செயற்பட்டமைக்கு பிரதான காரணம் அரசியல் ஆட்சியின் நீடித்ததன்மை ஆகும். 1959 இல் சிங்கப்பூர் பிரித்தானியர் ஆட்சியில் இருந்து விலகியதில் இருந்து PAP கட்சியானது இன்றுவரை தொடர்ந்து ஆட்சியில் இருக்கின்றது. PAP ஒழுங்கான முறையில் நடாத்தப்பட்ட ஜனநாயக தேர்தல் ஊடாகவே இந்த நீண்ட ஆட்சியை கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1959 இல் ஆட்சிக்கு வந்த சிங்கப்பூரின் பொருளாதார சிற்பி *Lee Kuan Yew* 1990 வரை அரசாங்கத்தின் தலைமை பதவியை வகித்துள்ளார். 1970களில் உலக பொருளாதாரங்களில் அரசாங்க தலையீடானது பிரச்சினைக்குரியதொன்றாக இருந்த அதேவேளை சிங்கப்பூரில் அரச தலையீடு ஓர் அதீத வெற்றியை பெற்றுக்கொடுத்துள்ளது. இது சிங்கப்பூருக்கேயுரிய ஓர் பண்பாக மட்டுமன்றி ஆசியாவின் வெற்றி பெற்ற பொருளாதார வேங்கைகளின் ஓர் பொதுப்பண்பாகவும் காணப்படுகின்றது.

ஆசியாவின் வெற்றிக்கதை குறிப்பிடுவது யாதெனில் அரசாங்க தலையீடு சிறப்பாக இருந்தால் பொருளாதார அபிவிருத்தி இலகுவாக அடையப்படலாம் என்பதாகும். இதன் கருத்து அரசாங்கத்தின் தலையீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக பொது நிதியை மக்கள் நலன்பேணும் திட்டங்களுக்கு வாரி இறைத்து மக்களை உற்பத்தித்திறன் அற்ற மக்கள் கூட்டமாக உருவாக்கி அரசாங்கத்தை வெளிநாடுகளில் நிதிக்காக தவம் இருக்கவும் பிச்சைக்காரனாகவும் கடன் கொடுப்பவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு எல்லாம் தலை ஆட்டுகின்ற அரசாகவும் உருவாக்குவது அல்ல. மாறாக மக்கள் நலன் பேணும் திட்டங்களை நாட்டின் மூலதன இருப்பை அதிகரிப்பதற்கு பயன்படுத்தி மக்களை ஒரு உற்பத்தித்திறன் உள்ள கூட்டமாக மாற்றுவதோடு நிதிப் பலத்தில் உறுதியாக இருந்து பொருளாதாரத்தை வழிநடத்துகின்ற பலமான ஒரு அரசாங்கமாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்தியானது ஓர் நகர அரசு என்ற நிலையில் தோன்றியதாகும். நான்கு எல்லைகளிலும் கட்டுப்பாடுகளை விதித்து வழிநடத்தக் கூடிய சிறிய நாடாக இருந்தமையாலும் இது பாரிய வெற்றியினைப் பெற்றது. ஆசியாவில் இதன் இடவமைவும் சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாக அமைந்துள்ளது. கிழக்கையும் மேற்கையும் இணைக்கின்ற ஓர் புவியியல் கேத்திர மையத்தில் இருந்த மையும் இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு காரணமானது. உலகத்தின் முக்கியமான நிதிச்சந்தைகளை இணைக்கின்ற கேந்திர நிலையமாக சிங்கப்பூர் விளங்கியது. சிங்கப்பூரின் கைத்தொழில் மயமாக்கல் கொள்கையானது. கைத்தொழில் ஏற்றுமதியின் அளவை அதிகரித்துள்ளது. 1960 இல் சிங்கப்பூரின் நேரடியான கைத்தொழில் ஏற்றுமதியானது GDP இன் வீதமாக 10.7 வீதமாக இருந்தது. இது 1992 இல் 48.6 வீதமாக அதிகரித்துள்ளது. மொத்த வேலை வாய்ப்பில் 1960 இல் 15.7 சதவீதத்தை வழங்கிய கைத்தொழில் துறையானது 1942 இல் 27.0 வீதமாக அதிகரித்துள்ளது. சிங்கப்பூரின் நிதிச் சந்தையானது ஆசியப் பிராந்தியத்திலும் உலகத்திலும் ஓர் முக்கியமான ஒரு பங்கினை வகித்துள்ளது. உலகத்தில் இயங்கும் முதன்மையான நிதிச் சந்தைகளான லண்டன், நியுயோர்க் மற்றும் ரோக்கியோ போன்றவற்றுக்கு அடுத்ததாக சிங்கப்பூர் நிதிச்சந்தை நான்காவது இடத்தை வகிக்கின்றது.

ii. **ஊழிய சந்தையை ஒழுங்குபடுத்துதல்**

சிங்கப்பூரின் தொழிலாளர்களின் ஊழியத்துக்கு ஓர் சிறந்த கூலியினை நிர்ணயித்த அரசாங்கமானது தொழிற்சங்க நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக ஊழியர்கள் நாட்டின் அமைதியை சீர்குலைப்பதை தடுப்பதற்காக எல்லா தொழிற்சங்கங்களையும் இயக்கங்களையும் ஒன்றிணைத்து அதனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. நன்கு தாபிக்கப்பட்ட ஏதேச்சையான அரசாங்கமானது தொழிற்சங்கங்கள் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது. இதற்கேற்ப கட்டுப்பாடுகள் மற்றும் PAP இன் நடவடிக்கைகள் என்பன தொழிற்சங்கங்கள் மற்றும் இயக்கங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்ததை தவிர்த்ததோடு பேரம் பேசும் சக்தியை தொழிலாளர்களிடம் இருந்து தொழில் வழங்குனர்களுக்கு மாற்றீடு செய்தது. இந்நடவடிக்கைகள் பொருளாதாரத்துக்கு தொழிற்சங்கங்களில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை தவிர்த்ததோடு நாட்டில் அமைதியையும் ஏற்படுத்தியது. 1972 இல் அமைக்கப்பட்ட தேசிய கூலி நிர்ணய சபையானது அரசாங்கம், PAP மற்றும் தொழில் வழங்குனர் கள் ஆகிய மூன்று பிரிவினரையும் உள்ளடக்கி இருந்தது. இந்த சபையானது அரசாங்கத்தின் பொருளாதார முன்னெடுப்புக்களுடன் இசைந்த வகையில் கூலி நிர்ணயத்துக்கான உடன்பாடுகளை செய்தால் அரசாங்கம் சாராத தொழிற்சங்கங்கள் முற்றாக ஒழிந்தன. இவ்வாறான கூலி நிர்ணயமானது தொழிற்சங்கங்கள் உற்பத்தித்திறன் இன்றி கூலியை அதிகரிப்பதை தடை செய்தது. உற்பத்தித்திறன் அதிகரித்தால் மட்டுமே கூலி உயர்வு, விலை மட்டத்தை கவனத்தில் எடுத்து அதிகரிக்கப்பட்டது.

சிங்கப்பூரின் ஒழுங்குபடுத்தப்பட்ட ஊழியச் சந்தையானது சர்வதேச ரீதியாக போட்டியான கூலிகளை உருவாக்கியதோடு வெளிநாட்டு பல்தேசிய நிறுவனங்களை கவரத்தக்க வகையில் ஊழியர்களின் வேலை நிறுத்தங்களை நீக்கியது. அரசியல் உறுதிப்பாடானது நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானது. ஊழியச் சந்தையின்மீது அரசாங்கம் கொண்டிருந்த தலையீடானது ஊழிய வர்க்கத்தில் இருந்து வரும் ஆபத்துக்களையும் உறுதியின்மையையும் தவிர்த்தது. இதன் கருத்து அரசாங்கம் ஊழியச் சுரண்டல்களுக்கு சார்பாக கொள்கைகளை வகுத்தது என்பது அல்ல. மாறாக சுதந்திரமான தொழிற்சங்கங்கள் என்ற போர்வையில் நாட்டின் அமைதியை சீர்குலைத்து உற்பத்தித்திறன் இல்லாமலே கூலி உயர்வைப் பெறுவதை தடுத்தது. சிங்கப்பூரில் ஊதியமானது USAஇல் வழங்கப்பட்ட ஊதியத்துக்கு மேலாக இருந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரின் குறைந்த பணவீக்கமும் இந்த வெற்றிக்கு பங்களிப்புச் செய்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### iii.வெளிநாட்டு நேரடி முதலீடு

ஊழியத்தின் மீதான அரசாங்கத்தின் தலையீடு மற்றும் குறைந்த பணவீக்கம் கூலியை ஓர் வீச்சுக்குள் வைத்திருந்ததோடு வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் கவர்ந்து இழுத்தது. ஓர் உலகளாவிய இலாபத் தின் அளவில் நாட்டுக்குள் மூலதனம் உட்பாயும் போது, இந்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கூலியை மாற்றுவதாக இருப்பின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதால் மட்டுமே இலாபத்தைத் தொடர முடிந்தது. இது மூலதன உட்பாய்ச்சலை அதிகரித்தது. சிங்கப்பூருக்கு உட்புகுந்த மூலதனத்தின் இயல்பு யாதெனில் அவை பட்டியலிடப்பட்ட முதலீடு அல்லாமல் நீண்டகால முதலீடுகளாகவும் கைத்தொழில் மற்றும் சேவைத்துறை சார்ந்ததாகவும் இருந்தமை ஆகும். சிங்கப்பூருக்கு வந்த முதலீடுகள் நாட்டின் மூலதன திரட்சியை ஏற்படுத்தின. மொத்த நிலையான மூலதனவாக் கத்தின் 1967 - 69 இல் 9.2 வீதத்தைக் கொண்டிருந்த இம்முதலீடுகள் 1980 - 92 இல் 26.3 வீதமாக அதிகரித்துள்ளது. ஆசியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக ஆகக்கூடிய FDI ஐ பெற்ற நாடாக சிங்கப்பூர் காணப்படுகின்றது. 1970 களில் சிங்கப்பூரின் சென்மதி நிலுவைக் கணக்கில் மூலதனக் கணக்கு மீதி மிகைநிலையைக் கொண்டிருந்ததோடு இம்மிகைநிலை நடைமுறைக் கணக்கு குறை நிலைக்கு மேலாக காணப்பட்டது. 1990 இல் தலா ஓர் சிங்கப்பூர் நாட்டவர் US$ 767ஐ FDI ஆக பெற்றார். இது சீனாவில் US $ 1.50 ஆக இருந்தது. உலகத்தில் நான்காவது நிலையில் அதிக FDI ஐ US$ இல் இருந்து பெறும் நாடாக இன்று இது இருக்கின்றது. வரைபடம் 4.4 சிங்கப்பூரின் FDI இன் போக்கை காட்டுகின்றது.

**வரைபடம் 4.4:கிழக்கு ஆசியாவில் சிங்கப்பூரின் FDI இன் போக்கு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு ஆசியாவின் நேரடி வெளிநாட்டு முதலீடு 1978 - 2005 இல் சராசரி 2.14 சதவீதமாக காணப்பட்டது (GDP இல்). இது சிங்கப்பூரில் 1973-2005 காலப்பகுதியில் 10.32 சதவீதமாக காணப்பட்டது. ஆகக் கூடுதலான FDI (GDP இல்) பெற்ற நாடாக சிங்கப்பூர் விளங்கியது. அதிக முதலீட்டை பெற்றமைக்கு இங்கு நிலவிய அரசியல் ஸ்திரத்தன்மை பிரதான காரணமாகும். சிங்கப்பூரில் மூலதன திரட்சி அதிகரிப்பதற்கு FDI யும் காரணமானது

iv.**அரசாங்கத்தால் உந்தப்பட்ட சேமிப்புக்கள் மற்றும் மூலதன திரட்சி**

ஊழியச் சந்தை மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடு மற்றும் பாரிய அளவிலான பல்தேசிய முயற்சிகள் போன்றன அரசாங்கத்தை உள்நாட்டு சேமிப்பை அதிகரிக்கக் கூடிய சாத்தியத்தை வழங்கியது. சிங்கப்பூரின் நிதி அமைச்சர் மற்றும் பிரதம மந்திரி ஆகியோர் உள்நாட்டு சேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அதிக சேமிப்பைத் தூண்டுவதற்கான உத்திகளை மேற்கொண்டனர். சிங்கப்பூரின் உள்நாட்டு சேமிப்பு அதிகரிப்பதற்கு பின்வருவன காரணங்கள் ஆகின.

i. அதிகளவான வெளிநாட்டு நிறுவனங்களின் பிரவேசம் அதிக வேலைவாய்ப்புக்களை வழங்கியது. இது வேலையின்மையைக் குறைத்தது. 1966 இல் 8.9 வீதமாக இருந்த வேலையின்மை வீதம் 1973 இல் 4.5 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

ii. பெண்கள் தொழிலில் ஈடுபடுதல் அதிகரித்து சேமிப்பு அதிகரித்தது. 1957 தொழிலில் பெண்களின் பங்குபற்றும் வீதம் 21.6 ஆகும். 1980 இல் 44.3 வீதமாகவும் 1990இல் 53 வீதமாகவும் அதிகரித்தது.

iii. பல்தேசிய கம்பனிகளின் அதிகளவான கூலியும் இவ் அதிகரிப்புக்குக் காரணமானது.

iv. சிங்கப்பூரின் நிறுவனமயமாக்கல் காரணமாக குடும்பத்தில் பணம் செலுத்தப்படாத தொழிலாளர்களின் அளவு குறைவடைந்து 1970 இல் 20.7 வீதமாக இருந்த கூலி செலுத்தாத குடும்பத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1990 இல் 7.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிங்கப்பூரின் தேசிய சேமிப்பில் அரசாங்கத்தின் சேமிப்பு அதிகரித்துள்ளது. தேசிய சேமிப்பில் 1974 இல் கால் பங்குக்கு குறைவாக இருந்த அரச சேமிப்பானது 1984 இல் ஐந்தில் மூன்று பங்காக அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் பிரதானமான சபைகளான வீடமைப்பு அபிவிருத்தி சபை, ஜேரொவ் நகர கூட்டுத்தாபனம், பொதுப்பயன்கள் சபை, சிங்கப்பூரின் துறைமுக அதிகார சபை, சிங்கப்பூரின் தொடர்பாடல் அதிகார சபை மற்றும் சென்தேஸா (Sentosa) அபிவிருத்தி கூட்டுத்தாபனம் போன்றன இலாபத்தில் இயங்கிய பொதுத்துறை அரச முயற்சிகள் ஆகும். சிங்கப்பூரின் அரச கட்டுப்பாட்டில் இருந்த மின்சக்தி சபையில் விலையை தனியுரிமையாக உயர்வாக நிர்ணயித்தது. இதில் பெறப்பட்ட இலாபத்தை வீடமைப்பு அபிவிருத்தி சபைக்கு மானியமாக வழங்கியது. அரசாங்கத்தின் வரி வருமானங்கள் இதன் நுகர்வுச் செலவுக்கு பயன்படுத்தப்படவில்லை. மாறாக இவை மூலதன செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டன. சிங்கப்பூரின் நிதிச்சந்தையின் வளர்ச்சி மற்றும் நம்பகத்தன்மை என்பன தனியார் துறையின் சேமிப்பை அதிகரித்து நுகர்வைக் குறைத்தது. 1960 இல் தனியார் நுகர்வுச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 89.4 ஆக இருந்தது. இது 1992 இல் 43.0 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

1960 இல் 11.4 வீதமாக இருந்த மொத்த மூலதனவாக்கம் (GDP இன் வீதமாக) 1992 இல் 40.4 வீதமாக அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் நுகர்வுச் செலவானது பெரிதாக மாற்றமடையாது 10 சதவீதத்துக்கு அண்மித்ததாக இருக்கின்றது. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட மிகை நிலையும் பொது சேமிப்பை மென்மேலும் அதிகரிக்கத் தூண்டியது. இருப்பினும் இந்த மிகை நிலையானது எந்தவகையிலும் அரசாங்கம் அபிவிருத்தி மீது செலவு செய்யாமையைக் குறித்து நிற்கவில்லை. அபிவிருத்திக்கான அதிகரித்த மீண்டெழும் செலவின் மத்தியிலும் அரசின் வரவு செலவுத்திட்டம் மிகை நிலையைக் கொண்டிருந்தது. வரைபடம் 4.5 சிங்கப்பூரின் நுகர்வைக் குறைத்து மூலதனதிரட்சியை உருவாக்கிய அணுகுமுறையின் போக்கை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரைபடம் 4.5: சிங்கப்பூரின் நுகர்வு மற்றும் மூலதனச் செலவு**




சிங்கப்பூரின் தேசிய சேமிப்பைத் தூண்டிய காரணிகளில் தனியார் நுகர்வுச் செலவை குறைப்பதில், சிங்கப்பூரின் மத்திய நம்பிக்கை நிதியம் *(Central Provident Fund)* ஓர் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இது ஓர் சமூக பாதுகாப்புக்கான திட்டமாகும். ஓர் ஆய்வின்படி இந்த நிதியம் சிங்கப்பூரின் உள்நாட்டு தேசிய சேமிப்பை அதிகரிப்பதற்கு 1967-89களுக்கு இடையில் 3.8% ஆல் பங்களிப்புச் செய்துள்ளது. சிங்கப்பூரின் தேசிய சேமிப்பில் காணப்படுகின்ற ஓர் முக்கிய பண்பு யாதெனில் உலகத்தில் வளர்ந்து வருகின்ற நாடுகள் தங்கள் நாட்டில் குறிப்பாக பொதுத்துறையில் சேமிப்பு பற்றாக்குறையால் வெளிநாட்டு சேமிப்பை அல்லது உள்நாட்டு தனியார் சேமிப்பை வரவு செலவு திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பிணைகள், முறிகள், உண்டியல்கள் போன்றவற்றை விற்று வெளிநாட்டு சேமிப்புக்களை திரட்டியுள்ளன. ஆனால் சிங்கப்பூர் அரசாங்கமானது தனது சேமிப்பை வெளிநாட்டில் உள்ள இந்த நிதிச் சொத்துக்களில் முதலீடு செய்துள்ளது.[48] மொத்த மூலதனவாக்கம் 1962 - 2005 க்கு இடையில் சராசரி 33.9% ஆகும். இது ஆசியாவிலே மிக உயர்வான வீதம் ஆகும்.

[48]The government had begum to invest much of public savings abroad inequities bonds, real estate and short term assess. Singapore exchanged an outflow of national saving for an inflow of private foreign capital ……… it can be argued that by the 1980 government forced abstinence pushed the savings ration to a level that Singapore was over saving" meaning the unwarranted sacrifice of current consumption by Singaporeans. S.Vasoo and Lee.J (2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வருடங்களில் மூலதனவாக்கம் 48.6% மாக இருந்தது. மூலதனவாக்கம் ஆரம்ப காலத்தில் குறைவாக இருந்து 1978 க்கு பின்னர் மிக உயர்ந்த வேகத்துக்குச் சென்று 1999க்கு பின்னர் குறைவடைந்து செல்கின்றது. சிங்கப்பூரின் மூலதனத் திரட்சி 1984 க்கு முன்னர் (அபிவிருத்தியின் ஆரம்பத்தில்) நுகர்வுச் செலவை குறைப்பதன் ஊடாகவே பெறப்பட்டது.

இவ்வாறான ஓர் நிலையில் 1985 இல் மிகை இயக்க பொருளாதாரம் *(Overheating Economy)* என்பது சிங்கப்பூர் பொருளாதாரத்தின் ஓர் பண்பாக அவதானிக்கப்பட்டது. எது எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் இந்த சேமிப்புத் தூண்டல் கொள்கை முன்னெடுப்பானது இரு விடயங்களில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தியது.

**i.** இந்த தேசிய சேமிப்பானது சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு குறைநிலையை குறைத்து பருநிலைப் பொருளாதார உறுதிப்பாட்டை அதிகரித்தது.

**ii.** இந்த சேமிப்பு தூண்டல் (நுகர்வை குறைத்து) விலை உறுதிப்பாட்டை அதிகரித்தது. நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்தி பருநிலை உறுதிப்பாட்டையும் அதிகரித்தது. வெளிவாரி உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியது. நாணயப் பெறுமதியேற்றம் ஏற்பட்டது. உள்வாரி உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியது. உள்நாட்டில் விலை உறுதிப்பாட்டை எய்தியது. இந்த சேமிப்பானது சிங்கப்பூரின் மிக தரமான உள்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தவும், வரிச்சலுகைகளை வழங்கவும் அரசாங்கத்துக்கு தேவையான நிதிப் பலத்தை வழங்கியது.

### v.அரசாங்க தொழில் முயற்சிகள்

1983 இல் 490 அரச முயற்சிகள் பகுதியாகவோ, அல்லது முழுமையாகவோ அரசாங்கத்துக்கு சொந்தமாகக் காணப்பட்டன. இவை இரண்டு பிரதான பங்கினை சிங்கப்பூர் பொருளாதாரத்தில் கொண்டிருந்தன. முதலாவதாக இம்முயற்சிகள் இலாபத்தில் இயங்கின. இவை பழைய நட்டத்தில் இயங்கிய கம்பனிகளை தேசிய மயப்படுத்தியதால் தோன்றியவை அல்ல. மாறாக இவை புதிதாக உருவாக்கப்பட்டவையாகவும் ஓர் வினைத்திறனான உற்பத்தித்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட தொழிலாளர்களை கொண்டு நிர்வகிக்கப்பட்டவையாகவும் இருந்தன. அரச தொழில் முயற்சிகள் உலகளாவிய ரீதியில் தரமான சேவைகளையும் வழங்கியுள்ளன. உதாரணமாக சிங்கப்பூர் விமானக் கம்பனி சர்வதேச ரீதியாக தரமாக செயற்படுகின்ற ஓர் இலாபத்தை சம்பாதிக்கும் விமான சேவையாகும். சிங்கப்பூரின் அரச வங்கிகள் உலகளாவிய தரத்தில் இலாபத்தில் இயங்குகின்றன.

### vi. பருநிலைப் பொருளாதார உறுதிப்பாடு.

சிங்கப்பூரின் பருநிலை பொருளாதாரக் குறிகாட்டிகளான பொருளாதார வளர்ச்சி வீதம், பணவீக்கம், நாணயமாற்று வீத உறுதிப்பாடு, வரவுசெலவுதிட்டப் பற்றாக்குறை, வேலையின்மை வீதம் போன்றன சாதமான ஓர் நிலையினைக் கொண்டிருந்தன. அரசாங்கமானது கூலி நிர்ணயத்தின் மீது கொண்டிருந்த செல்வாக்கின் காரணமாக விலை உறுதிப்பாட்டினை பேணக்கூடியதாக இருந்தது. இவ்உறுதியான கூலி நிர்ணயமானது சர்வதேச ரீதியில் ஏற்றுமதிப் பொருட்களுக்கான போட்டித்தன்மையைத் தொடர்ந்து பேணுவதற்கு வழிவகுத்தது. சிங்கப்பூர் டொலரின் அகப்பெறுமதியும் புறப்பெறுமதியும் உறுதியாக இருந்தமை சர்வதேச ரீதியில் முதலீட்டாளர்களுக்கு ஓர் ஊக்குவிப்பை வழங்கி இருந்தது. இவ்உறுதிப்பாடானது அரசாங்கத்தின் நிதிப் பலத்தால் ஏற்பட்டதாகும். அரசாங்க நிர்வாகம் வினைத்திறமையாக தொழிற் பட்டதன் காரணமாக அரசிறையையும் ஏனைய வருமானங்களையும் வினைத்திறமையாக சேகரிக்கக் கூடியதாக இருந்தது. மத்திய நம்பிக்கை நிதியத்தின் நிதிப்பலமும் குறைந்த வட்டி வீதத்தில் அரசாங்கம் நிதியைப் பெற வழிவகுத்தது. இது அரசாங்கத்தின் செலவால் தோன்றும் பண வீக்க அமுக்கத்தைக் குறைத்திருந்தது.

அதாவது அரசாங்கத்தின் அபிவிருத்திக்கான செலவினங்களை ஈடுசெய்ய பண ஆக்கத்தை உருவாக்குகின்ற மூலங்களில் இருந்து நிதியீட்டம் செய்யாமல், அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு நிறுவனமான இந்நிதியத்தில் இருந்து பெறப்பட்டதன் காரணமாக பணவீக்க அமுக்கம் குறைக்கப்பட்டது. இந்நிதியத்தில் இருந்து பயனாளிகள் வீடு வாங்குவதற்கு கடன் பெறக்கூடியதாக இருந்தது. 1970 களில் 33% க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமான மக்கள் சொந்த வீட்டைக் கொண்டிருந்தார்கள். இது 1990 அளவில் 88% மாக அதிகரித்தது. சிங்கப்பூர் தொழிலாளர்கள் மெய்க் கூலியில் அதிக நன்மை அடைந்தனர். இது தொழிலாளர்களை அரசாங்கத்தின் கூலி நிர்ணயத்தை ஏற்கச் செய்தது. இது குறைந்த பணவீக்கம் காரணமாக அதிக முதலீட்டை உள்வர தூண்டி மென்மேலும் பருநிலைப் பொருளாதார உறுதிப்பாட்டை ஓர் வட்டச்சுழலில் அதிகரிக்கச் செய்தது.

vii. **சர்வதேச நிதிச் சேவைகளின் அபிவிருத்தி**

சிங்கப்பூரை சர்வதேச நிதி சந்தைக்கான மையமாக உருவாகுவதற்கு பங்காற்றிய காரணிகள்.

i. அரசாங்கத்தின் சிறந்த பொதுப்பொருட்களின் வழங்கல்கள்

i. சந்தைகளின் நேர்மைத்தன்மையை தொடர்ந்து பாதுகாத்தல்

ii.இலகுவான தொழிற்பாட்டை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் ஊக்குவிப்புக்கள்.

iii.அரச நிர்வாகத்தை வேகப்படுத்தியமை.

ii. அரசாங்கத்தின் சுதந்திரமான பொருளாதாரக் கொள்கை முன்னெடுப்புக்கள்.

i. புதிய நிதிக் கருவிகளை அறிமுகப்படுத்தியமை

ii. பல சர்வதேச நிதி நிறுவனங்களை அனுமதித்தமை. சிங்கப்பூர் *Financial Suppermarket* ஆக மாறியது.

iii. அரசாங்கமானது நிதிச் சந்தை வளர்ச்சிக்குத் தேவையான பௌதீக மற்றும் மனித மூலதனத் திரட்சியை உருவாக்கியமை. உதாரண மாக சிங்கப்பூரின் தொலைத்தொடர்புமுறை பௌதீக மூலதன வாக்கத்தின் ஊடாக நிதிச் சந்தை வளர்வதற்கு பங்காற்றி உள்ளது. சிங்கப்பூரின் திட்டமிடலாளர்கள் சிங்கப்பூரின் நீண்ட கால நோக்கத்தை கொண்டு கல்வியில் மாற்றங்களைச் செய்தார்கள். இது மனித மூலதனவாக்கத்தை அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. உலகத்தின் சுழற்சியில் உள்ள சர்வதேச நிதி மையங்களின் மூடு நேரத்தில் சிங்கப்பூருக்கு ஏற்பட்ட வாய்ப்பு.[49]

v. அரசாங்கத்தின் கடுமையான சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள், சுயாதீனமான நீதிச் சேவை மற்றும் உறுதியான பருநிலைப் பொருளாதார செயலாற்றம்.[50]

vi. பாதுகாப்பு நிதி வலைப்பின்னல் இல்லாமையால் மிகைமிஞ்சிய நிதி ஒழுங்குபடுத்தல்கள்.[51]

சிங்கப்பூரின் அபிவிருத்தி மாதிரியில் முதற்பங்கு அரசாங்கத்துக்கு உரியதாகும். இவ்வெற்றியானது அரசாங்கமானது ஓர் அபிவிருத்திக்கான அரசாங்கமாக இருந்து தொழிற்பட்டமையால் தோன்றியது ஆகும். அரசாங்கமானது இரண்டு பிரதானமான வினாக்களுக்கான விடைகள் மீது கவனம் செலுத்தியது. முதலாவது, அபிவிருத்தி அடைவதற்கு தடையாக இருப்பவை யாவை? அவற்றை அகற்றியமை. இரண்டாவது, அரசாங்கமானது அபிவிருத்தியை தூண்டுவதற்கு எவற்றைச் செய்ய வேண்டும்? இந்த இரண்டு கோணங்களில் ஐந்து காரணிகள் கவனத்தில் எடுத்து ஆராயப்படுகின்றன

---

[49] "Look here, the financial world begins in Zurich. Zurich bank open at 9.00 clock in the morning, later Frankfurt, later London, in the afternoon, Zurich close then Frankfurt and London. In the meantime New York is open. So London hands over financial money traffic to New York. In the afternoon New York closes, they had already handed over to san Francisco. When San Francisco closes in afternoon, world is covered with evil. Nothing happens until next day 9.00 A.M. Swiss time, then Swiss bank open. If we put Singapore in between, before San Francisco closes, Singapore would have taken over. And when Singapore closes, it would have handed over to Zurich. Then, For the first time since creation, we will have a 24- hour round – the –world service in money and Banking" by Winseminus, chief adviser to Lee Kuan Yew, p. 71 , Lee Kuan Yew ( 2011)

[50] "Foundation for our financial centre were the rule of law, an independent judiciary, and a stable, competent, and honest government that pursued sound macroeconomics policies, with budget surplus almost every year. This led to a strong and stable Singapore dollar, with exchange rate that dampened imported inflation" p. 73 , Lee Kuan Yew ( 2011)

[51] "Singapore's financial center was considered over- regulated compare to Hong Kong…….Hong Kong enjoyed the backing of the British flag and Bank of England. Singapore, with no such safety net, could not have recovered from so dramatic a fall as easily". P. 78, Lee Kuan Yew ( 2011)6 In Singapore, distinguishing features of its post- 1959 political and economic leaders were their personal integrity, a high level of formal education and, often, extensive training in economics. Although this last did not extend to Lee Kuan Yew, his approach to economics was "that of a person recognizing that he has some training in the subject [who] uses it to appraise the judgment of fully professional economists and use their advice to check some of his own ideas" Huff. W.G. (1995) p.1432



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## viii. சிறந்த அரசியல் தலைமைத்துவமும் ஊழல் ஒழிப்பும்

சிங்கப்பூரின் பொருளாதார வெற்றிக்கு பின்னால் அரசியல் தலைமைத் துவம் இருக்கிறது. *Lee Kuan Yew* (லீ) இன் அரசியல் தலைமைத்து வத்தின் பிரதான பண்புகளாக பல காணப்படுகின்றன. உயர்ந்த கல்வி கற்ற ஒரு தலைமையாக இருந்துள்ளார். அது மட்டுமல்ல, இவர் பொருளியலில் கலாநிதிப்பட்டத்தை உலகப் புகழ்பெற்ற கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். *(Ruler should be as Philosophers).* இவர் ஒரு யதார்த்தவாதியாக விளங்கியதோடு *(Leader should be with Pragmatism)* மேலைத்தேசப் பாணியில் அபிவிருத்தி மாதிரியை முன்னெடுக்கவில்லை. தாராள கொள்கை என்பது அரசியலில் மேலைத் தேசத்தைப் போன்றல்லாது வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது *(Wise copy versus blind copy from Western).* பொருளாதார சீர்திருத் தங்களிலும் சற்று தளர்வு இருந்தாலும், அரச தலையிடாக் கொள்கையை முற்று முழுதாக விரும்பவில்லை. இவர் பல நாடுகளின் வரலாற்றை கற்று தனது சொந்த சிந்தனைகளின் அடிப்படையில் சிங்கப்பூரை கட்டி எழுப்பினார். இவருடைய அறிவும் மற்றும் ஏனைய புலமையாளர்க ளின் ஆலோசனைகளையும் பெற்றமை, மற்றவர்கள் வழங்கிய அறிவுரையை உள்வாங்ககூடிய பாடப்புத்தக அறிவும் அனுபவ அறிவும் இருந்தமை போன்றன இப் பொருளாதார வெற்றிக்கான தலைமைத்துவ பண்பை காட்டி நிற்கின்றன.[52] பொருளாதாரக் கொள்கையானது இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களால் வகுக்கப்பட வேண்டும். அவற்றை அமுல்படுத்துவதும் பொருளியலாளர்களாகவே இருக்க வேண்டும். மாறாக மூன்றாம் வகுப்பு மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற மூன்றாம் வகுப்பு அரசியல்வாதியாக இருக்கக்கூடாது. தைவானிலும் இந்தப் பண்பு காணப்படுகின்றது. *("Economic matters required skilled specialists")* தென்கொரியாவும் இந்த உண்மையை கவனத்தில் கொண்டு வெற்றி பெற்றது. ஆனால் இந்தோனேசியா, இலங்கை, பிலிப்பின்ஸ் போன்றன தோல்வி அடைந்தன. தலைமைத்துவ பண்புக்கான உதாரணத்துக்காக

---

[52] In Singapore, distinguishing features of its post- 1959 political and economic leaders were their personal integrity, a high level of formal education and, often, extensive training in economics. Although this last did not extend to Lee Kuan Yew, his approach to economics was "that of a person recognizing that he has some training in the subject [who] uses it to appraise the judgment of fully professional economists and use their advice to check some of his own ideas" Huff. W.G. (1995) p.1432



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீயின் அரசியல் தலைமைத்துவ பண்பு வெளிப்படுகின்ற பல சம்பவங்களில் மூன்று சம்பவங்களை எடுத்துக்காட்டலாம்.

i. PAP க்குள் இரண்டாம் நிலை தலைமையில் இருந்தவரும் சீனாவின் பக்க பலத்தால் பெரும்பான்மை சீனர்களின் ஆதரவை கொண்டிருந்தவருமான ஜனரல் *Tan Lark Sye* வேண்டுகோளுக்கு இணங்கி பல மொழிகள் பேசப்படும் சிங்கப்பூரில் சீன மொழியை அரச கரும மொழியாக சீன இனத்தவரான லீ அமுல்படுத்த வில்லை. மாறாக ஆங்கிலத்தையே அரச கரும மொழியாக்கினார். லீ ஒரு மூன்றாம் வகுப்பு நிலை அரசியல்வாதியாக மாறி, சீன மொழியை அரச மொழியாக அமுல்படுத்தியிருந்தால், 76 சதவீத மான சீனமக்களின் மற்றும் ஆசியாவில் வலுவான தனது தாய் நாடான சீனாவின் ஆதரவையும் பெற்று ஜனநாயக அரசியலில் வாக்கு வங்கியை வலுப்படுத்தி பெரும்பான்மை மக்களுக்குள் கொடிகட்டி பறந்து சாக்கடை அரசியல் நடத்தி இருக்கலாம்.

ஆனால் சிங்கப்பூர் இன ஒற்றுமையுடன் இன்றைய பொருளாதார நிலையை பெற்று இருக்குமா? என்பது கேள்விக் குறியே. இன ஒற்றுமையையும் பொருளாதார அபிவிருத்தியையும் தொடர்பு படுத்துகின்ற பல ஆய்வுகள் லீ இன் இந்த தூர நோக்குடைய தலைமைத்துவ பண்பைப் பற்றி மேற்கோள் காட்டியுள்ளன. சிங்கப்பூரின் ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் லீயின் அரசாங்கத்தில் தமிழராக இருந்துள்ளனர்.

ii. ஒரு முறை லீயின் மனைவி சிங்கப்பூரின் அரச வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக இருந்து தமது மகனின் பெயரில் ஆடம்பரமான தொடர்மாடி வீட்டில் ஒரு வீட்டை வழமையான கழிவு வீதத்திலும் 3 வீதம் அதிகமாக வாங்கியுள்ளார். இந்த விடயம் பாராளுமன்றத்துக்குச் சென்றது. எதிர்கட்சியினர் கூச்சலிட்டனர். பிரச்சினையின் உண்மை நிலையை கண்டறியும் வரை அரசு லீயின் மனைவியை அவரின் பதவியில் இருந்து இடை நிறுத்தியது. இறுதியாக அவர் அரசின் சட்ட திட்டங்களுக்கு இணங்கவே அக்கழிவைப் பெற்றார் என்பது நிரூபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியில் செல்வாக்குக் கொண்டிருந்த லீ அரசின் சட்ட திட்டங்களில் இருந்து தமது குடும்பத்தை காப்பாற்றவும் இல்லை. காப்பாற்ற முயற்சிக்கவும் இல்லை.

iii. சிங்கப்பூரின் தேசிய அபிவிருத்திக்கான அமைச்சரும் லீயின் நெருங்கிய நண்பருமான *Teh Cheang Wan* அவருக்கு எதிராக ஊழல் வழக்கு காரணமாக 1986 மார்கழி 14ம் நாள் தற்கொலை செய்துள்ளார். சர்வதிகார ஆட்சியைக் கொண்டிருந்த லீ அரசின் சட்ட திட்டங்களில் இருந்து தமது நண்பனையும் காப்பாற்ற வில்லை. காப்பாற்ற முயற்சிக்கவும் இல்லை. *Teh Cheang Wan* க்கு தற்கொலையை விட வேறு வழி இருக்கவில்லை. இச்சம்பவம் ஏனையவர்களை திருத்தியமைத்தது. நல்லாட்சியை உருவாக்கியது. உலகத்தில் ஊழல் ஒழிப்பில் சிங்கப்பூர் இரண்டாம் நிலையில் உள்ளது.

## 4. தொகுப்புரை

சிங்கப்பூரின் அபிவிருத்தி மாதிரியானது ஹொங்கொங் மற்றும் சுவிற்சலாந்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு முறை லீயை பார்த்து நீங்கள் சிங்கப்பூரை அபிவிருத்தி செய்வதற்கு எதாவது ஓர் அபிவிருத்தி மாதிரியை மனதில் கொண்டுள்ளீர்களா? என வினாவிய போது லீ "இல்லை, நாங்கள் ஹொங்கொங், சுவிற்சலாந்து மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகள் கடைப்பிடித்த சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்துக்குரிய பண்பின் மூலங்களை பெற்று அவற்றை முன்னேற்றினோம்" என்றார். சிங்கப்பூர் ஓர் நகர அரசுக்குரிய நாடாகும். இந்த அபிவிருத்தி மாதிரியை பெரிய சனத்தொகையையும் பரப்பளவை யும் கொண்ட நாடுகளுக்கு பிரயோகிக்க முடியாது என குறை கூறுபவர் களும் உள்ளனர். மேலும் ஏதேட்சையான மென்மையான சர்வாதிகார ஆட்சிக்கும் *(Authoritarianism)* பொருளாதார அபிவிருத்திக்கும் உள்ள நேர்கணியத் தொடர்பை எந்த ஓர் ஆய்வும் ஆணித்தரமாக இன்றுவரை வற்புறுத்தவில்லை. ஒரு சில நாடுகள் இந்த அணுகுமுறை ஊடாக பொருளாதார அபிவிருத்தியில் வெற்றி பெற்றுள்ளன. ஆனால் உலகத்தில் பல நாடுகள் இவ் அணுகுமுறையால் வெற்றி பெறவில்லை. இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்றன இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இருப்பினும் மறுபுறத்தில் ஜனநாயக ஆட்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலும் ஓர் சீரான நேர்த் தொடர்பு இருப்பதை எந்த ஆய்வும் இன்று வரை நிரூபிக்கவில்லை. சில நாடுகளில் ஜனநாயகம் சார்ந்த அபிவிருத்தி மாதிரி வெற்றி பெற, இன்னொரு நாட்டில் அது தோல்வி அடைந்துள்ளது.

இதே போன்றே சிங்கப்பூரில் மென்மையான சர்வாதிகார ஆட்சியைக் கொண்ட அபிவிருத்தி மாதிரி வெற்றி பெற்றாலும், எல்லா நாட்டிலும் வெற்றி பெறும் எனக் கூற முடியாது. அபிவிருத்தி மாதிரிகள், பொருளாதார கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் போன்றவற்றுக்கு அப்பால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் வெற்றி என்பது நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தால் பெரிதும் தீர்மானிக்கப்படு கின்றது என்பதற்கு சிங்கப்பூர் சிறந்த உதாரணம் ஆகும். 1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிங்கப்பூரின் அணுகுமுறையைப் பயன்படுத்தி இலங்கையை தென் ஆசியாவில் குட்டிச் சிங்கப்பூராக மாற்ற முயன்ற முயற்சியானது கான மயிலாட அதைக் கண்டிருந்த வான் கோழியும் தானும் தன் இறகை விரித்து ஆடிய கதையாக முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –05

# நல்லாட்சியும் பொருளாதார அபிவிருத்தியும்

இந்தியாவில் டெல்கியில் ஆறு காமுகர்கள் பேரூந்தில் வைத்து மருத்துவக் கல்லூரி மாணவியை கற்பழித்து விட்டு பேரூந்தில் இருந்து கீழே வீசி விட்டு சென்று விட்டார்கள். பல அரசியல்வாதிகள் ஊழல் குற்றச்சாட்டின் மத்தியிலும் ஆட்சிக்கு வருகின்றார்கள். தமிழ்நாட்டில் செல்வி ஜெயலலிதா முன்னைய ஆட்சிக் காலத்தில் பலகோடி ரூபா மோசடி செய்திருந்தார். இவரை கருணாநிதி ஆட்சியில் சட்டத்தின் முன்நிறுத்தி சிறைச்சாலையிலும் இருந்தார். ஜெயலலிதாவின் இந்த ஊழல், மோசடிகள் படித்தவர்கள் தொடங்கி பாமர மக்கள்வரை அறியும் வகையில் எல்லா தொடர்பு சாதனங்களும் பிரச்சாரம் செய்தன. ஆனால் மறுபடியும் செல்வி ஜெயலலிதா மிகப் பெரிய பெரும்பான்மை வெற்றியுடன் ஆட்சிப்பீடம் ஏறியது மட்டும் அல்ல, அடுத்த முறையும் கருணாநிதியின் ஆட்சியின் பின்பு தற்போது தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்து வருகின்றார்.

ஆறு கோடி தமிழ் மக்களுக்கு மேல் வாழும் இந்தியாவில் செல்வி ஜெயலலிதாவையும் மற்றும் கலைஞர் கருணாநிதியையும் விட்டால் வேறு தலைவர்கள் இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது. இச்சம்பவங்கள் உலகத்திலேயே ஜனநாயகத்தை போதித்து கொண்டிருக்கும் பாரதநாட்டில் சர்வ சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியலில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுதல் அரசியல்வாதிக்கு உரிய ஓர் தகுதியாகக் கொள்ளப்படுகின்றது. இந்தியாவில் சில நகரங்களில் உள்ள தெருக்களில் இரவில் மட்டும் அல்ல பகலில் கூட பெண்கள் தனிமையாக பயணிக்க முடியாத அளவுக்கு சட்டமும் நீதியும் சீர்கெட்டு இருக்கின்றது. இந்தியா சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் நீங்கியும் இந்த சமூக அரசியல் மாற்றம் இன்றி இந்தியா தவிக்கின்றது. இந்தியாவில் பொதுச் சேவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதாயின் பல நாட்கள் அலுவலகங்களுக்கு ஏறி இறங்கி மேலாக கீழாக பல ரூபாக்கள் இலஞ்சமாக கொடுத்துத்தான் ஓர் சேவையைப் பெற வேண்டியிருக்கின்றது. கொலை, களவு, கொள்ளை, கப்பம் கேட்டல், ஆள்கடத்தல் என்பன மலிந்த நாடாக இந்தியா இருக்கின்றது. இலங்கையிலும் இவை போன்ற பல நல்லாட்சிக்கு தடையாக இருக்கின்ற நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உண்மையில் இலங்கை, இந்தியா போன்ற இந்நாடுகள் மேலைத்தேய நாடுகள் அல்லது கிழக்கு ஆசிய நாடுகள் அடைந்த பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு நீண்ட காலம் தவம் இருக்க வேண்டும்.

1950 களில் ஏறத்தாழ இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் அபிவிருத்தி சிங்கப்பூர் , தென்கொரியா, கொங்கொங் மற்றும் தைவான் போன்ற நாடுகளைவிட உயர்மட்டத்தில் இருந்தன. ஆனால் 2012 இல் இந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி இலங்கை, இந்தியா போன்ற நாடுகளை விட பல மடங்குகள் அதிகமாகும். பல ஆய்வுகளின் அடிப்படையில் நல்லாட்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையில் நேர்க்கணியமான உறுதியான தொடர்பு காணப்படுகின்றது.[53]

இந்தியாவை அல்லது இலங்கையை உலகத்தில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்கு கொண்டு வருவதற்கு இன்றைய உலக பொருளாதார வல்லரசுகளான ஜப்பான் , அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் A-Z வரையான எல்லா தொழில்நுட்பங்களையும், மூலதனத்தையும், மனிதவள மேம்பாட்டு உதவிகளையும் எதுவித ஒழிப்பு மறைப்பு இன்றி 100 க்கு 100 வீதம் வழங்குகின்றது எனக் கருதுவோமானால், அடுத்த 10 வருடங்களில் அல்லது 20 வருடங்களில் இந்தியா அமெரிக்காவின் தரத்துக்கு பொருளாதார அபிவிருத்தியில் வளர்ந்து விடுமா? நிச்சயமாக 50 ஆண்டுகள் கடந்தாலும் இந்தியா மாறுமா? என்பது கேள்விக்குறியே ஆகும். ஓர் நாட்டுக்கு போதிய பௌதீகவளம் மற்றும் நிதிவளம், உன்னதமான மனிதவளம் மற்றும் அபிவிருத்திக்கு தேவையான அனைத்து வளங்களையும் கொண்டிருந்தாலும், அந்நாடு அபிவிருத்தியை அடைந்து விடுமா? என்பது இன்று ஆராய்ச்சிக்குரிய விடயமாக இருக்கின்றது. நிச்சயமாக சிறந்த அரசியல் தலைமைத்துவமும் நல்லாட்சியும் அந்த

[53] "There are extensive econometric studies that show strong correlation between long-term economic performance and good governance. In other words, the quality of governance fundamentally determines long-run developmental outcomes". P.30 , Shalendra D. Sharma (2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் இல்லையாயின் குறித்த நாட்டில் இவ்வளங்கள் எல்லாவற்றையும் கொண்டிருந்தாலும் பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியாது.

நாட்டின் நீண்ட காலத்தை நோக்காக கொண்ட நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை எய்துவதற்கான அரசியல் தலைமையை நாட்டு மக்கள் அனைவரது வாக்கு உரிமையை பயன்படுத்தி தெரிவு செய்கின்ற ஜனநாயக அரசியல் பொறிமுறை ஊடாக வினைத்திறமையாக தெரிவு செய்ய முடியுமா? என எங்களில் அநேகமானவர்கள் கருதுகின்றனர். உண்மையில், ஜனநாயகமயமாக்கல் நல்லாட்சியின் ஒரு அங்கமாக இருந்த போதும், தாராள ஜனநாயகம் ஊடாக நல்லாட்சியை ஏற்படுத்த முடியாது என்பதற்கு இந்தியா மற்றும் இலங்கையும் ஓர் மென்மையான சர்வதிகார ஆட்சி முறை ஊடாகத்தான் நல்லாட்சியை ஏற்படுத்தலாம் என்பதற்கு சிங்கப்பூரும் சிறந்த உதாரணம் ஆகும்.

இந்தியாவில் உள்ள ஓர் விமான நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் "சப்போட்" செய்யுங்கள் என தனது வாயால் மன்றாடுகின்றான். இதே இந்தியனுக்கு சிங்கப்பூரில் "சப்போட்" என்ற வார்த்தையைக் கூறினாலேயே அவனை பிடித்து மேல் அதிகாரிகளிடம் ஒப்படைத்து தண்டனை பெற்றுக் கொடுக்கின்றான். ஒரே இன மக்கள் வெவ்வேறு இடங்களில் வேறுபடுத்தப்பட்ட முறையில் செயற்படுகின்றார்கள். இந்தியாவில் அரசியலும் ஜனநாயகமும் இந்தியனை தன் வாயால் இலஞ்சம் கேட்கும் நிலைக்கு வளர்த்து விட்டு இருக்கின்றது. சிங்கப்பூரில் குறைந்த ஜனநாயகம் உள்ள அரசியல் பொறிமுறையும் அதன் வழியான மென்மையான சர்வாதிகார ஆட்சியும் ஓர் இந்தியனை உன்னத மனிதனாக மாற்றியுள்ளது. எனவே எல்லோரும் மனிதர்கள்தான் ஆனால் அந்த நாட்டில் உள்ள சட்டங்களும் அரசியல் தலைமைத்துவமும் தான் அவர்களை நல்லவர்களாக அல்லது கெட்டவர்களாக மாற்றுகின்றது.[54]

---

[54] "In what is essentially an honest society there can be and will be scandalous instances of corruption as there will also be outbreaks of crime and violence. But such a society will make every effort to restrain, detect and punish those who attempt to deviate from the standers of honesty that it upholds and respects. It will not honor and encourage into positions of power and prestige the corrupt men who have successfully circumvented the law". By S.Rajaratnam as Minister for Culture (1959), Minister for Foreign Affairs (1965), Minister of Labour (1968-71) and second Deputy Prime Minister (1973). He was appointed Senior Minister in 1988 after he retired from active politics. , quoted by Prof Syed Hussein Alatas in 'corruption and the Destiny of Asia, ' Prentice Hall (H) Sdn, Bhd, 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் சிங்கப்பூர் நல்லாட்சி மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பவற்றில் மூன்றாம் நிலையில் இருக்கின்றது. சட்டம், ஒழுங்கு என்பன சிறப்பாக தொழிற்பட்டு நாட்டில் அமைதி நிலையை உருவாக்கியுள்ளது. அரச இயந்திரம் மிகவும் வேகமாக தொழிற்படுகின்றது. காவல்துறை, புலனாய்வுத்துறை, ஊழல் மோசடி ஒழிப்பு குழு, நீதித்துறை என்பன மிகவும் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் தொழிற்பட்டு நல்லாட்சியை உருவாக்கியுள்ளது.[55] இது பொருளாதார அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளில் பங்காற்றியுள்ளது. நல்லாட்சி கோட்பாட்டு அடிப்படையில் ஆறு பிரிவுகளைக் கொண்டது.[56]

## சிங்கப்பூரில் நல்லாட்சியை உருவாக்க துணைபுரிந்த காரணிகள்

### 1. சிறந்த தலைமைத்துவம்

தலைமைத்துவம் பிரதம மந்திரி தொடங்கி அமைச்சர்கள், அரச உயர் அதிகாரிகள் என எல்லா மட்டத்திலும் தூய்மையானவர்களாக இருந்தமை நல்லாட்சியை உருவாக்கியது. இதுபற்றி ஆறாவது அத்தியாயம் தனியாக நோக்குகின்றது.

### 2. குறைந்த ஜனநாயகம்

உலகில் உள்ள நாடுகளை அவற்றின் ஜனநாயக அடிப்படையில் பாகுபடுத்தும் போது, சிங்கப்பூர் 10 க்கு 2 புள்ளிகளையே கடந்த 50 ஆண்டுகளில் சாராசரியாகப் பெற்றுள்ளது. இது 1965 க்கு முன்னர் 8 ஆக காணப்பட்டது. இலங்கையில் இது சராசரியாக 7 ஆகும். இந்தியாவில் 10 ஆகும். குறைந்த ஜனநாயகம் என்பது ஒரு கட்சியை *People's Action Party (PAP)* தொடர்ச்சியாக ஆட்சியமைக்க செய்வதன்

---

[55] " The Government is deeply conscious that a Government cannot survive, no matter how good its aims and intention are, If corruption exists in tips ranks and its public services on which it depends to provide the efficient and effective administrative machinery to translate its policies into action… Therefore, this Government is determined to take all possible steps to see that all necessary legislative and administrative measures are taken to reduce the opportunities of corruption, to make its detection easier and to deter and punish severely those who are susceptible to it and engage it shamelessly". By Ong Pang Boon, then Minister for Home Affairs, in the First Legislative Assembly, February 13, 1960

[56]Quality of governance is divided into six categories aimed at capturing how governments are selected, monitored, and replaced; a government's capacity to formulate and implement sound policies; and the respect of citizens and the state for the institutions that govern them. The six measured indicators are: (a) voice and accountability; (b) political stability and lack of violence; (c) government effectiveness; (d) regulatory quality; (e) rule of law; and (f) control of corruption. P.30 , Shalendra D. Sharma (2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஏற்பட்டுள்ளது. பேச்சு சுதந்திரம் , எதிர்க்கட்சிகளின் சுயாதீனமான விமர்சனம் என்பன மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும். எல்லா மக்களும் கருத்துக்களை தெரிவிப்பது ஜனநாயக ஆட்சியில் ஓர் உரிமையாக கொள்ளப்பட்டாலும், எல்லோரும் கருத்துக்கூறி நாடு ஒருமித்த கருத்துக்கு வரமுடியாமல் உள்ளது. எல்லா கட்சிகளையும் சுதந்திரமாக தொழிற்பட அனுமதிக்கும்போது நாட்டுக்கு பொறுப்புக் கூறுவது யார் என்பது வினாவாகும். ஆட்சியில் இருக்கும்போது எல்லா அரசாங்கங்களும் தனது குறுங்கால நோக்கம் கருதி நாட்டின் செல்வத்தை வீண்விரயம் செய்ய வழிவகுக்கின்றன. ஒரு ஆட்சி தொடர்ச்சியாக இருக்கும்போது நாட்டு மக்களுக்கு பொறுப்பு கூறும் தன்மை அதிகரிக் கின்றது. ஒரு கட்சி நாட்டின் வெற்றி தோல்விகளில் பொறுப்பு ஏற்க முடியும் வேறு யாரிடமும் இந்த பொறுப்பை சுமத்த முடியாது. எனவே நாட்டு மக்களுக்கு ஏதாவது செய்து நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற உந்து சக்தி அதிகரிக்கின்றது. பலர் ஆட்சியில் பங்கு கொள்ளும் போது ஓர் கட்சி இன்னொரு கட்சி மீது குற்றம் சாட்டி பொறுப்பை தட்டிக் கழிக்கின்றது. நாட்டு மக்கள் அனைவரும் தமது வாக்குரிமையை வினைத்திறமையாகப் பயன்படுத்தும் காலம் வரும்வரை தாராள ஜனநாயகம் நாட்டுக்கு நன்மை பயக்கும் எனக் கூற முடியாது.[57] இருப்பினும் இக்கருத்து நாட்டின் தலைமைத்துவத்தை பொறுத்தும் தீர்மானிக்கப்படுகின்றது.[58]

---

[57] In Singapore, good governance is not realized in liberal democratic conditions but instead seems to serve as a barrier to liberal democratic ideas such as civil society being embedded in domestic political discourse. Caoili, Rachel (2005) p.34

[58] As seen in 122BC… .The authors of the Huai-nan Tzu, a philosophical work of the early Han period said to be compiled at the court of Liu Ann, grandson of the first Han emperor, around 122 BC aptly described the decisive influence of rulers in the promotion of rectitude values, or vices. 'The power to achieve success or failure,' it says 'lies with the ruler. If the measuring line is true then the wood will be straight, not because one makes a special effort, but because that which it is "ruled" by makes it so. In the same way if the ruler is sincere and scoundrels will go into hiding, but if the ruler is not upright then evil men will have their way and loyal men will retire to seclusion. Why is it that people often scratch melons or grourds with their fingernails, but never scratch stones or jewels? Because no matter how hard they scratch stones or jewels they can never make impression. In the same way if the ruler can be made to adhere to right, maintain fairness, and follow, and follow a measuring – line, as it were, in measuring high and low, then even through his ministers come to him with evil designs it will be the same as dashing eggs against a rock or throwing fire in to water. King Ling loved slim waists and all the women went on diet and starved themselves. This King of Tueh admired bravery and all the men outside each other in dangerous feats defying death. From this we may see that he wields authority can change the customs and transform the manner of his people.'Quoted by Prof SyteHussein Alatas in 'Corruption and the Destiny of Asia;, Prentice Hall (M) Sdn Bhd, 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சுயாதீனமான அரச நிறுவனங்கள்

அரசின்கீழ் தொழிற்படுகின்ற காவல்துறை, நீதித்துறை ஏனைய அதிகாரமிக்க ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள் போன்றவற்றின் மீது அரசியல்வாதிகளின் தலையீடுகள் காணப்படாமையும் நல்லாட்சிக்கு காரணமாகும். ஆரம்பத்தில் இவை இணைந்து இருந்தன.[59] ஆதாரம் இருந்தால் ஒரு சாதாரண பொலிஸ் அதிகாரி ஒரு அமைச்சரை கைது செய்ய முடியும். அமைச்சரோ அல்லது ஏனைய அரசியல்வாதிகளோ இந்நிறுவனங்களின் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்த முடியாது. நல்லாட்சிக்குரிய சட்டம், ஒழுங்குகளை நிர்வகிக்கின்ற நிறுவன அமைப்புக்கள் சுயாதீனமாக இயங்க வழி செய்தமை சிங்கப்பூரில் நல்லாட்சியை உருவாக்கியது.[60] "இந்நிறுவனங்களில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் பல்கலைக்கழகங்களில் உயர்தரத்தி லான முதல்தர மாணவர்கள் ஆவார்கள். இவர்கள் வெளிநாடுகளில் முதல்தர பல்கலைக்கழகங்களில் மூன்று நான்கு ஆண்டுகள் பட்டப் படிப்பின் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கி பயிற்சியளிக்கப் பட்டார்கள்.[61]

---

[59] Forty – four years ago, in consignment of 1,800 lbs of opium worth about S$400,000 at that time was hijacked at Ponggol by a gang of robbers, and among them were number of police detectives! A special team under the charge of a senior officer from the Anti-Corruption Force was appointed by the Government to investigate the robbery, which resulted in an Assistant Superintendent dismissed and another officer retired. The Government.... formed a special team to review the matter... On 17 May 1952, the team was shifted to the second floor of the Supreme Court. After the inquiry was completed in September 1952, the Government decided to retain the Special team to replace the Anti-Corruption Branch. The team, independent of the Police Force, would investigate all corruption offences in Singapore to ensure impartiality. Quoted from The CPIB in-house newsletter "The Probe', September, 1995

[60] "..... The Prime Minister is responsible for the integrity of the whole civil service, the public sector, as well as the Judge and the Minister. It is his responsibility to keep the system clean. If he does not, and we have a corrupt Prime minister, then we are in serious trouble. We have safeguarded that situation, because under the Constitution if the Prime Minister would not give leave to the CPIB to pursue a case, the CPIB So, even the Prime Minister can be investigated". Lee Hsien Loong, Deputy Prime Minister, in Parliament, match 13, 2003

[61] Governance in Singapore involves: 1. Meritocracy - recruiting civil servants on the basis of merit, thereby favouring efficiency as the basis for promotion rather than seniority; 2. Emphasis on clean government through stringent anti-corruption measures;3. Pragmatism – relying on MNCs for growth rather than conforming to regional anti-American or anti-MNC attitudes of the time;4. Reliance on policy diffusion – using role models in international society to inspire public policy in areas such as defense, crime prevention, technical education, and quality control. Caoili, Rachel (2005) p.39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தங்கள் சேவையின்போது எந்த தனிப்பட்ட அல்லது அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புக்களுக்கு அன்றி, நாட்டின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய சேவையாற்றினார்கள். இச்சேவைகளுக்கு இவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் அமெரிக்காவில் இதே தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தைவிட உயர்வானதாகும். மேலும் இவர்கள் நாட்டின் அரச மாற்றம் இல்லாமையால் தொடர்ந்து எந்தவித அரசியல் கட்சிகளுக்கும் பக்கம் சாராமல் நடுநிலைமையாகத் தொழிற்பட்டனர். நாட்டின் நல்லாட்சி மலர்ந்தது. இது பொருளாதார அபிவிருத்திக்குப் பங்காற்றியது.[62]

### 3. நல்லாட்சிக்கு தொழில் நுட்பம் உதவியமை

சிங்கப்பூரில் நல்லாட்சி இடம்பெற்றமைக்கு தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்களை அரச நிர்வாகம் காலதாமதம் இன்றி உள்வாங்கிய மையும் ஒரு காரணமாகும். எலக்றோனிக் சிங்கப்பூர் என்பது பலர் குற்றம் புரிவதைத் தடுத்தது. பொது இடங்கள் எல்லாவற்றிலும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அவை மிகவும் நுட்பமாக அவதானிக்கப்பட்டிருக்கின்றன. இது குற்றம் புரிந்தவர்களை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு உதவுகின்றது.

அன்ரனி என்ற ஓர் கணனி பொறியியலாளர் தனது மனைவியை ஓர் கொலைகாரனைப் பயன்படுத்தி மொபைல் போனை பயன்படுத்தாது இணையம் மூலம் கட்டளை கொடுத்து வழிநடத்தி கொலை செய்தார். சிங்கப்பூர் காவல்துறைக்கு இந்தக் கொலை தற்கொலை என்பதற்கான தடயங்கள்தான் அதிகமாக இருந்தது. காரணம் கொலையை வழிநடத்திய கணவன் தொழில்நுட்பத்தில் திறமையான என்ஜினியர் ஆவார். எனவே இந்த சம்பவம் காவல்துறைக்கு பெரிய சவாலாக இருந்தது. கொலை செய்வித்த கணவன் எதுவித தடயங்களும் இல்லாது

---

[62] "We ensure complete accountability and open separateness between personal assets and public funds. Corruption, which was a concern in many new countries, had to be eradicated and kept down...... The cleaning and disinfecting has to start from the top and go downwards in a through and systematic way. It is a long and laborious process that can be carried out only by a very strong group of leaders with the courage and moral authority derived from in questioned integrity".Excerpt from 'Effective Leadership, Singapore – Style by Lee Kuan Yew, Senior Minister, as reproduced in the Straits Times, October 19, 2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கட்டளை இட்ட மடிக்கணனியில் எல்லா பதிவுகளையும் அழித்து விட்டார். சிங்கப்பூர் காவல்துறை அவருடைய மடிக்கணனியில் இருந்து கார்ட் டிஸ்கை றேஸ் செய்து பைல்களை அழித்த பின்னரும் கொம்பியூட்டர் மொழியில் மடிக்கணனியில் இருந்து தடயங்களை எடுத்து அவர்தான் கொலை செய்தார் என்பதை நிரூபித்தார்கள்.

இதேபோன்று இன்னொரு சம்பவம் இடம்பெற்றது. ஓர் சட்டத்துக்கு மாறான பக்கச் சார்பான நடவடிக்கைக்கு பேராசிரியர் ஒருவர் பாலியல் இன்பத்தை இலஞ்சமாகப் பெற்றார். பல்கலைக்கழகத்தில் முதல்தர மாணவிக்கு விரிவுரையாளர் பதவியை கொடுக்காது அவர் பாலியல் தொடர்பை வைத்திருந்த இரண்டாம் நிலையில் உள்ள மாணவிக்கு (மேலைத்தேச கலாச்சார குடும்பத்து மாணவி) அப்பதவியை வழங்கியிருந்தார். இது தனிப்பட்ட ஒருவரின் தீர்மானம் அன்றி குழுவின் தீர்மானமாக இருந்த போதும் இரண்டாம் நிலையில் இருந்த மாணவிக்கு பேராசிரியர் கல்வி கற்பித்த காலத்திலேயே இவருடைய பாடங்களுக்கு அதிக புள்ளிகளை வழங்கியதாலும் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது மற்றவர்களைவிட இவர் அதிக புள்ளிகளை வழங்கியதாலும் இவ்அதிகார துஸ்பிரயோகத்தின் வழி வந்த குற்றம் இடம்பெற்றது. இந்த பக்கச்சார்புக்கு இவர் பணம் எதுவும் இலஞ்சமாகப் பெறவில்லை மாறாக அம்மாணவியிடமிருந்து பாலியல் இன்பத்தைப் பெற்றார்.

மேலைத்தேச கலாசாரத்தில் ஆசிரியர் மாணவியுடன் பாலியல் உறவை கொண்டிருப்பது மாணவி விரும்பாதவரை குற்றம் அல்ல. சிங்கப்பூர் பல்லின கலாசாரத்தை கொண்ட நாடு ஆகும். இரண்டாம் நிலையில் இருந்து பாதிக்கப்பட்ட மாணவி இலஞ்ச ஒழிப்பு குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். இக்குற்றத்தை கண்டுபிடிப்பது மிகவும் கஸ்டமானது. இன்னொருவரைக் கொண்டு விடைத்தாள்கள் மதிப்பீடு செய்த போதும் சமூக விஞ்ஞானப் பாடங்களில் புள்ளிகளில் சிறிய வேறுபாடு தவிர்க்க முடியாதது ஆகும்.

மேலும் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உள்ள பாலியல் உறவை மனித நாகரீகத்தில் படம்பிடித்து நிரூபிக்க முடியாது. இது ஓர் நாகரீகமான செயல் அல்ல. எனவே அதிகாரிகள் பொது இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கமராக்களில் குறித்த பேராசிரியர் ஏனைய மாணவிகளைவிட குறித்த மாணவியுடன் அதிக நேரம் உல்லாசமாக பயணம் செய்து வந்தமையையும் மற்றும் தனிப்பட்ட வீடுகளில் இருவரும் பல மணி நேரம் தங்கி இருந்தமையையும், ஆதாரமாக எடுத்துக்காட்டி இருவருக்கும் பாலியல் உறவு இருந்தது என்றும், எனவே பேராசிரியர் பாலியல் இன்பத்தை இலஞ்சமாக பெற்றார் என நிரூபித்து தண்டனை கொடுத்தது.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் பல்கலைக்கழகத்தில் வயது வந்த குறித்த மாணவியுடன் மாணவியின் சம்மதத்துடன் பேராசிரியர் பாலியல் தொடர்பை வைத்திருந்தது குற்றம் அல்ல. இவ்உறவுக்காக குறித்த மாணவிக்கு சார்பாக தனது சேவையை தவறாக பயன்படுத்தியமைதான் குற்றம் என எடுத்துக்காட்டப்பட்டது. இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் சிங்கப்பூரில் இலத்திரனியல் தொழில்நுட்பம் நல்லாட்சியை கொண்டு வருவதற்கு உதவியது.

CPIB இன் வினைத்திறமையான கண்டு பிடிப்புக்களுக்கு இன்னொரு உணர்வுகளுடன் கூடிய ஊழல் சம்பவத்தையும் குறிப்பிடலாம். சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகததில் கல்வி பயின்ற மாணவியான *Ko wen Hui* யிடம் இருந்து சட்டத்துறை பேராசிரியர் பாலியல் இன்பத்தையும் சில பொருட்களையும் பெற்றுள்ளார். 21 வயதான Ko என்ற மாணவி 2010 ஜனவரியில் 41 வயாதான *Tey Tsun Hang* என்ற பேராசிரியரிடம் ஓர் பாட அலகை கற்றார். அப்போது மாணவி யின் பெறுபேற்று தரத்தை பரீட்சையில் செயல்திறன் இல்லாமல் பாலியல் இன்பத்தை பெற்றுக்கொண்டு அதிகரித்தமைக்கு சிங்கப்பூரின் குற்ற புலனாய்வு பொலிசாரால் 6 குற்றங்கள் சுமத்தப்பட்டன. மாணவியின் கல்விசார் பெறுபேற்றை திறமைக்கு அதிகமாக கொடுத்து, ஆசிரியர் பதவியை தவறாகப் பயன்படுத்தியமைக்காக இந்தப் பேராசிரியர்

1. S$ 740 பெறுமதியான *Montblanc* பேனை
2. S$230 பெறுமதியான இரண்டு சேட்டுக்கள்
3. S$160 பெறுமதியான Ipod Touch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஹோட்டலில் S$ 1280 பெறுமதியான இரவு உணவு

5. விலை கூறப்படாத கன்னித்தன்மை (முதல் முதல் செக்ஸ் உறவுத் தன்மை கொண்டமை)

6. வழக்கமான பாலியல் உறவு.

போன்றவற்றை பெற்றுள்ளார். $ 1280 இரவு உணவு விடுதியில் Ko உடன் சேர்ந்து ஒன்பது மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இவர்கள் அனைவரையும் இந்தப் பேராசிரியர் ஓர் புத்தகத்தை எழுதுவதற்கு ஆய்வுக்காக பயன்படுத்தியிருந்தார். இந்த வழக்கு(2013) தற்போது சிங்கப்பூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தண்டப்பணம் தண்டனைகள் இன்றும் அறிவிக்கப்படவில்லை.

## 4. தீர்மானம் எடுக்கும் அதிகாரம்

சிங்கப்பூரில் நல்லாட்சி உருவாவதற்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்தியப்படுத்தப்படாமல் பரவலாக்கப்பட்டிருந்தமையும் ஓர் காரணம் ஆகும். ஓர் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸ் அலுவலர் போக்குவரத்து விதி மீறப்படும் போது குறித்த இடத்திலேயே தண்டம் அறவிடுவதற்கு அதிகாரம் இருக்கிறது. இலஞ்ச ஒழிப்பு திணைக்களத்தில் உள்ள ஓர் அலுவலர் ஆதாரம் இருந்தால் எந்த அமைச்சரையும் கைது செய்ய முடியும். அவர்களுடைய வீடுகளை, வங்கிக் கணக்குகளை தன்னை யார் என அடையாளப்படுத்திவிட்டு பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது.[63] மற்றக் கட்சிகளை ஆட்சிக்கு வராமல் அடக்கிய லீ குவான் யு நாட்டின் முழு அதிகாரங் களையும் தன்வசப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக அதிகாரங்களை தனது தலையீடு இன்றி ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் பிரித்துக் கொடுத்தமை நல்லாட்சியை உருவாக்கியிருந்தது. பிரித்துக் கொடுக்கப் பட்ட அதிகாரங்கள் துஸ்பிரயோகம் செய்யப்படும்போது கடுமையான

---

[63] "...... I have every intention to make sure that Singapore remains corruption free. I will not let standards drop. and everybody should know that corruption in nanny form will not be tolerated I expect all Ministers, all MPs and all public officers to set good examples for others to follows. All PAP members declare to me their family assets and all Ministers, including the Prime Minister, declare to the President their family assets.... if there is any allegation against any MP or Minister of assets wrongfully gained or corruptly gained, the CPIB will investigate. If the MP concerned is unable to explain how he had acquired these assets, or why he had not declared them, he will be charged for corruption".By Goh Chok Tong, Prime Minister, in Parliament, March 30, 1993


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனைகள் கொடுக்கப்பட்டன. லீ யின் நண்பரும் அமைச்சரு மானவர் தான் செய்த குற்றத்துக்காக தற்கொலை செய்துகொண்டமை நல்லாட்சியின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

சிங்கப்பூரில் ஒரு முறை ஓர் உயர்தர அதிகாரி ஓர் தொடர்மாடி மனையில் உள்ள மண்டபத்தில் களியாட்டம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டு லிப்ரில் இறங்கியபோது மது போதையில் லிப்ரிக்குள் வாந்தி எடுத்து விட்டார். அவர் வீடு வந்து பக்ஸ் மிசினை பார்த்தபோது பொது இடத்தில் பொது மக்களுக்கு அசௌகரியமாக நடந்துகொண்ட குற்றத்துக்காக இரண்டு வாரங்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான கடிதம் வந்திருந்தது. ஓர் உயர் அதிகாரியை உடனடியாக தண்டிக்க கூடிய வகையில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் எல்லோருக்கும் பரவலாக்கப்பட்டமை மட்டுமல்ல அத்தீர்மானத்தில் ஏனையவர்கள் தலையிடவும் முடியாது. அமெரிக்க நாட்டு பிரஜை ஒருவர் சிங்கப்பூரில் ஒரு குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார். சிங்கப்பூரின் சட்டத்தின்படி இக்குற்றத்துக்கு தண்டப் பணத்துடன் ஆறு சவுக்கடியும் வழங்கப்படும். பணம் செலுத்துவது அமெரிக்கருக்கு பிரச்சினையாக இருக்கவில்லை. பொது இடத்தில் அமெரிக்க பிரஜை ஒருவரை அடிப்பது அமெரிக்க அரசாங்கத்துக்கே அவமானமாக இருந்தது. அதுவும் அமெரிக்காவிடம் இருந்து நிறைய உதவிகளைப் பெற்ற ஒரு சிறிய நாடு இவ்வாறான தண்டனை கொடுப்பது மிகவும் அவமானமாக இருந்தது. இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி தலையிட்டு சவுக்கடி தண்டணையை நீக்கும்படி கேட்டிருந்தார். அமெரிக்க ஜனாதிபதி கேட்டதற்காக சவுக்கடி ஆறில் இருந்து மூன்றாக குறைக்கப்பட்டதே ஒழிய நீக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சட்டம் ஒழுங்கு மிகவும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டமை நல்லாட்சியை உருவாக்கியது.

### 5. உயர்ந்த தண்டப் பணம்

சிங்கப்பூரில் நல்லாட்சியை ஏற்படுத்திய மிக முக்கியமான காரணி சிங்கப்பூரில் குற்றங்களுக்கு அறவிடப்படும் அதிக தண்டப்பணம் ஆகும். இத்தண்டப்பணம் செலுத்த முடியாத பலர் நாட்டை விட்டு வெளியேறிய சம்பவங்களும் உள்ளன. வங்கியில் கடன் பெற்று விட்டு கடனை திருப்பிச் செலுத்தாவிட்டால் பிணை நின்றவரின் சொத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட பறிமுதல் செய்வதற்கும் சட்டத்தில் இடம் இருக்கின்றது.[64] மேலும் குற்றங்களுக்கு அதிக தண்டப்பணம் அறவிட்டு மக்களை நற்பிரஜைகளாக மாற்றுகின்ற வழிமுறையை சிங்கப்பூர், ஸ்ரேல், கொங்ஹொங் மற்றும் சுவிஸ்லாந்து போன்ற நாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டது.

ஜேர்மனில் வசித்த எனது நண்பர் ஒருவர் தனது குடும்பத்துடன் சுவிஸ்லாந்தில் சுற்றுலா செய்த போது வேக கட்டுப்பாட்டை மீறி கார் செலுத்தியமைக்கு 100 பிராங் தண்டப்பணம் செலுத்தும்படி சுவிஸ் பொலிஸிடம் இருந்து சில மாதத்துக்கு பின்னர் ஜேர்மனிக்கு கடிதம் வந்தது. உடனே எனது நண்பர் தான் பிள்ளைகளுடன் பயணம் செய்தேன் அப்படி வேகமாக பயணிக்க சந்தர்ப்பம் இல்லை என சுவிஸ் பொலிஸ்க்கு ஓர் கடிதத்தை அனுப்பினார், மூன்று மாதம் கடந்து ஜேர்மனியில் அவருடைய வீட்டுக்கு ஒரு பொதி ஒன்று வந்தது. அதில் ஓர் இறுவட்டு (C.D இல்) அவர் வேகக் கட்டுப்பாட்டை மீறியமைக்கான தன்னியக்க கமறாக்கள் பதிவு செய்த வீடியோ படங்கள் இருந்தன. தற்போது தண்டப்பணம் 500 சுவிஸ் பிராங் என இன்னொரு கடிதமும் இணைக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக தண்டனைகளை உயர்வாக வழங்குவதன் மூலம் நாட்டை நல்லாட்சி உள்ள நாடாக மாற்றலாம்.

நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றியபோது தெஹிவளையில் இருந்து பஸ்சில் பயணம் செய்தேன். பஸ்தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்தாமல் வேறு இடத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றியமைக்காக பொலிஸ் அதிகாரி பஸ்ஸை மறித்தார். பொஸிஸ் என்ன ஏது என கேட்பதற்கு முன்னர் பஸ் நடத்துனர் உடனடியாக தனது பணப்பையை எடுத்து அதில் 100 ரூபா தாளை எடுத்துக்கொண்டு பொலிஸ் அதிகாரியை நோக்கி சென்றார். சிறிது நேரத்தில் தடையின்றி பஸ் புறப்பட்டது. இது எப்படி நல்லாட்சியை ஏற்படுத்தும்? சிங்கப்பூரில் அறிவிடப்பட்ட தண்டப்பணம் காரணமாக

---

[64] "In 1960, we changed the outdated 1937 anticorruption law and widened the definition of gratuity to include anything to value. The amendments gave wide powers to investigators, including arrest, search and investigations of bank accounts and bank book of suspected persons, and their wife's, children or agents.......... in 1989, we increased the maximum fine for corruption from S$10000 to S$ 100000. giving false and misinformation to the CPIB became an offense subject to imprisonment and a fine of up to S$ 10000, and courts were empowered to confiscate the benefits derived from corruption" Pp.159-160, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இரவுக்குள் பல செல்வந்தர்கள் வறியவர்களாக மாறினார்கள். இவ்வாறு அறவிடப்பட்ட தண்டப்பணம் நல்லாட்சியை மென்மேலும் வளப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. இலங்கையில் நல்லாட்சிக்குரிய நிறுவனங்கள் 100க்கு 100 வீதம் சிங்கப்பூரைப் போன்று சுயாதீனமாக தொழிற்படுவதாக இருந்தால் 90 வீதமான அரசியல்வாதிகள் ஓர் இரவுக்குள் அரசியல் வாழ்வில் இருந்து வீடு செல்ல நேரிடும்.

## 6. பொதுச் சேவை அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுக்கான உயர்ந்த சம்பளம்

ஒப்பீட்டு ரீதியில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த சம்பளம் ஊழல் மோசடி இல்லாமல் சிங்கப்பூரில் நல்லாட்சியை ஏற்படுத்தியது.[65]

அட்டவணை 6.1: சிங்கப்பூரில் உயர் அதிகாரிகள் மற்றும் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான மாதாந்த சம்பளம்

| தரம் | மாதாந்த சம்பளம் |
|---|---|
| அதிகாரி தரம் V | US$ 30091 |
| அதிகாரி தரம் IV | US$25802 |
| அதிகாரி தரம் III | US$25511 |
| அதிகாரி தரம் II | US$18652 |
| அதிகாரி தரம் I | US$15791 |
| **உதவிச் செயலாளர்** | |
| உயர்தரம் D1 | US$8020 |
| உயர்தரம் D | US$7273 |
| உயர்தரம் E1 | US$6744 |
| உயர்தரம் E | US$6217 |

மூலம்: Jon.S.T Quah (2001)

[65] "When we had no serious unemployment by 1970, and every body breathed a little easier, I increased minister salaries from S$ 2500 to S& 4500 per month but kept my own fixed at S$ 3500 to remind public service that restraint was still nessary.p168, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரின் நல்லாட்சி பின்வரும் வழிகளில் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

### 1. நல்லாட்சியும் உள்நாட்டு முதலீடும்

சிங்கப்பூர் ஆரம்பத்தில் உள்நாட்டில் பெரியளவான முதலீட்டாளர்களை கொண்டிருக்கவில்லையாயினும் நல்லாட்சி சிங்கப்பூர் மக்களை குறிப்பாக உயர்தர மனிதவளத்தையும் சிறிய மூலதனத்தையும் கொண்ட மக்களை வெளிநாடுகளுக்கு இடம் பெயராமல் தடுத்தது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நல்லாட்சி யின்மை காரணமாக பல கோடி உயர்தர மனிதவளத்தை கொண்ட மக்கள் வெளிநாடுகளுக்கு தங்களுடைய பௌதீக மூலதனத்துடனும் புலம்பெயர்ந்து பிற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ள னர். ஒரு நாட்டில் நல்லாட்சியின்மை காரணமாக உயர்தரமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறினால் கீழ் தரமான மக்களும் அவர்களில் இருந்து கீழ்த்தரமான அரசியல் தலைவர்களும் உருவாகி நாட்டை பாதாள நிலைக்கு இட்டுச் செல்வார்கள்.

### 2.வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு மனித வளத்தை கவர்ந்தது.

சிங்கப்பூரின் நல்லாட்சி வெளிநாட்டவரை சிங்கப்பூரில் முதலீடு செய்யத் தூண்டியது. மூலதனப் பற்றாக்குறை நீங்கியது. அரசு தனது வருமானத்தை வெளிநாடுகளில் சேமிக்ககூடிய வகையில் மூலதனவாக்கம் அதிகரித்தது. மேலும் சிங்கப்பூரின் நல்லாட்சி காரணமாக ஆசிய நாடுகளில் படித்த திறன்மிக்க உயர்தர மனித வளத்தை சிங்கப்பூர் கவர்ந்து இழுத்தது. குறைவிருத்தி நாடுகளில் நல்லாட்சி இன்மையால் ஒதுங்கி அமைதியாக வாழ விரும்பிய உயர்தர மனிதர்களை சிங்கப்பூரும் தன்வசம் இழுத்து அவர்களைக் கொண்டு நாட்டினை முன்னேற்றியது.

### 3. அரசாங்கத்தின் நன்மதிப்பின் உயர்வும் அரசமுறிகளின் விற்பனையும்

சிங்கப்பூர் அரசாங்கத்தின் நல்லாட்சி காரணமாக சர்வதேச நாடுகளில் அரச முறிகளுக்கான கேள்வி உயர்ந்தது. இது சிங்கப்பூர் அரசுக்கு தேவையான நிதியை சர்வதேச நாடுகளில் விற்பனை செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக்கும் உள்கட்டுமானத்துக்கும் தேவையான நிதிவளம் சர்வசாதாரணமாக கிடைத்தது.

**4. தொழில்நுட்பம்**

சிங்கப்பூரில் நல்லாட்சிக்கு தொழில்நுட்பம் பங்காற்றியது போல தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு நல்லாட்சி பங்காற்றியது. நல்லாட்சிக்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையில் இருவழித் தொடர்பு காணப்படுகின்றது. உயர்தர மனித வளத்தின் மேம்பாடு தொழில் நுட்பத்தை உள்வாங்கவும் புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடிக்கவும் உதவியது. இது நல்லாட்சியால் ஏற்பட்ட பொருளாதார நன்மை ஆகும்.

**5. அரச வருமானத்தின் பெருக்கம்**

சிங்கப்பூரின் நல்லாட்சி காரணமாக அரசாங்கத்துக்கு பல வழிகளில் வருமானம் கிடைத்தது. தண்டப்பணம் மூலம் பெற்ற வருமானத்தை விட பல நிறுவனங்களையும் மக்களையும் வரி செலுத்துவதில் இருந்து தப்பிக்க முடியாதபடி சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதன் காரணமாக அரசாங்கத்தின் வரி வருமானம் அதிகரித்து திறைசேரி நிதிப்பலம் மிக்க நிறுவனமாக மாறியது.

**6. பொது நிறுவனங்களின் வளர்ச்சி**

சிங்கப்பூரின் நல்லாட்சி அரச தொழில் முயற்சிகளை ஊழல் அதிகார துஸ்பிரயோகம் இன்றி வினைத்திறமையாக தொழிற்படச் செய்தது. பல குறைவிருத்தி நாடுகளின் அரச தொழில் முயற்சிகள் அரசியல்வாதிகளின் இச்சைகளை தீர்க்கும் நிறுவனங்களாக இருந்து அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களை வேலைக்கு அமர்த்தி பல மில்லியன்களை விழுங்கி, இறுதியில் அவைகள் தனியார் மயமாக்கப் பட்டன. இந்தப் பண்பு சிங்கப்பூரில் வேறுபடுகின்றது. உலகிலே திறமையாக இயங்கும் அரச தொழில் முயற்சிகளுக்கு சிங்கப்பூர் சிறந்த உதாரணம் ஆகும். சிங்கப்பூரின் அரச விமானச் சேவை (சிங்கப்பூர் ஏயார்லைன்) உலகத்தில் சிறந்த விமானச் கேவைக்கான விருதினை 10 தடவைகளுக்கு மேலாக பெற்றது. அரச வங்கிகள் உலகில் முதல்தர வங்கிகளுக்கு நிகராக இருக்கின்றன. அரசாங்கத்துக்கு வருமானத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டித்தரும் பிரதான மார்க்கங்களாக இந்த அரச தொழில் முயற்சிகள் விளங்குகின்றன. இது நல்லாட்சியால் இடம் பெற்றவை ஆகும்.

### 7. நல்லாட்சியும் மனித மூலதனத்தின் உள் வருகையும்

வெளிநாட்டு மனித மூலதனமும் நல்லாட்சி காரணமாக சிங்கப்பூருக்கு கிடைத்தது. உலகத்தில் குறிப்பாக ஆசியாவில் உள்ள நாடுகளின் அதி கூடிய திறமைசாலிகள் நல்லாட்சி காரணமாக சிங்கப்பூருக்குள் உள்ளீரக்கப்பட்டனர்.[66]

சிங்கப்பூரின் நல்லாட்சி இவ்வாறு பல்வேறு வழிகளில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த போதும். சிங்கப்பூரின் குறைந்த ஜனநாயகம் என்பது சிங்கப்பூரில் நல்லாட்சி இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக சிலர் குற்றம் கூறுகின்றனர். சிங்கப்பூர் தாராள ஜனநாயகத்தில் பயணித்து இருந்தால் நல்லாட்சி இன்று இந்தியா இலங்கையில் இருப்பது போன்று மோசமான நிலைக்குச் சென்று இருக்கும். மென்மையான சர்வாதிகாரத்தினூடான தூரநோக்கு உள்ள தலைமைத்துவத்தால் மட்டும்தான் நல்லாட்சியை ஏற்படுத்தி அதனூடாக பொருளாதார நன்மைகளையும் அபிவிருத்தியையும் பெற முடியும் என்பதற்கு சிங்கப்பூர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

---

[66] " Without foreign talent, we would done as well. In my first cabinet of 10, I was the only one born and educated in Singapore. Keng Swee and Chin Chye were born in Malaysia, Raja in Ceylon. Our present chief justice, Youn Pung How, came from Malaysia as did attorney general, Chab Sek Keong. So the list could roll on. Thousand of engineers, managers, and other professionals who came from abroad have helped us to grow. They are extra megabytes in Singapore's computer. If we do not top up with foreign talent, we will not make it into the top leageu" P.144, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –06

# சிங்கப்பூரின் அரசியல் தலைமைத்துவமும் பொருளாதார அபிவிருத்தியும்: லீ குவான் யூ பற்றிய ஒரு பார்வை

## 1. அறிமுகம்

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாக் கண்டத்தில் 692 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பல மீனவக் கிராமங்களையும் மரத்தினால் அமைக்கப்பட்ட குடிசைகளையும் கொண்டிருந்த சிங்கப்பூர் இன்று பல நூற்றுக்கணக்கான தொடர்மாடி வீடுகளையும் விரைவான கடுகதி பெருந்தெருக்கள் மற்றும் புகையிரத வீதிகளையும்கொண்டு உலகிலே பல பொருளாதார நிபுணர்களின் உள்ளங்களைக் கவரக் கூடிய அளவுக்கு அபிவிருத்தியில் முன்னேறிய நாடாக ஜப்பானுக்கு அடுத்ததாக காணப்படுகின்றது.[67] 1950 களில் சிங்கப்பூரிலுள்ள அரசியல் தலைவர்கள் இலண்டனுக்குப் பயணம் செய்வதற்கு சிங்கப்பூரிலிருந்து நேரடியான விமான சேவை இல்லாத காரணத்தினால் இலங்கையின் கட்டுநாயக்கா விமான நிலையத்தை தெரிவு செய்து கொழும்பிலிருந்து லண்டனுக்கு நேரடியாக பயணம் செய்துள்ளனர்.[68]

1961 இல் இலங்கையின் தலா வருமானத்துக்கும் சிங்கப்பூரின் தலாவருமானத்துக்கும் இடையில் வேறுபாடு US$ 150 ஆகும். 2005ல் இவ்வேறுபாடு 1961 இல் இருந்ததை விட 81 மடங்குக்கு அதிகமாக அதிகரித்து US$ 26000 ஆக காணப்படுகின்றது. சிங்கப்பூரின் இவ்வாறான ஓர் துரித அபிவிருத்தியை தூண்டிய காரணிகளை ஆய்வு செய்பவர்கள் முன்வைக்கும் பல காரணிகளில் மிகவும் முக்கியமான

[67] Singapore has been described as " the world's most successful economy" (Lim, 1983) and regarded as "the most successful of East Asia's 'four dragons'," which also comprise South Korea, Hong Kong and Taiwan (Giordano and Kato, 1993).

[68] Lakshman W.D [ed] [1997] kw;Wk;mkpu;jypq;fk; (2008), Amirthalingam Kopalapillai (2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணியாக சிங்கப்பூரை கட்டியெழுப்பிய பொருளாதார சிற்பியான லீ குவான் யூ *(Lee Kuan Yew)* ஐ குறிப்பிடுகின்றனர். உலகிலே பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக பலரால் பல தடவைகள் மேற்கோள் காட்டப்பட்டு முன்னணி வகிக்கும் ஓர் தலைவராக லீ விளங்குகின்றார். சிங்கப்பூரின் அதி வேகமான பொருளாதார அபிவிருத்திக்கு பின்னால் அத்திவாரமாக அமைவது சிங்கப்பூரில் லீயினால் தலைமை தாங்கப்பட்ட அரசியல் தலைமைத்துவம் ஆகும்.[69]

இக்கட்டுரையானது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அரசியல் தலைமைத்துவம் எவ்வாறு பங்காற்றுகிறது என்பதனை சிங்கப்பூரின் நீண்டகால தலைவரும் தற்போது சிங்கப்பூரின் அமைச்சரவையில் சிரேஷ்ட ஆலோசனை அமைச்சராக இருக்கும் லீ குவான் யூ இன் தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டுவதன் ஊடாக விளக்குகின்றது.[70] இக்கட்டுரை லீயின் பொருளாதார அபிவிருத்திக்கான தளத்தை ஏற்படுத்திய வாழ்க்கை வரலாறு, அரசியல் சிந்தனை, இன ஒற்றுமை, தொழிற்சங்கம், ஊழல் ஒழிப்பு, தூரநோக்குத் திட்டமிடல், நடைமுறைவாதம் மற்றும் நல்லாட்சி போன்ற தலைப்புக்களில் ஆய்வு செய்கின்றது.

## 2. வாழ்க்கை வரலாறு

லீயின் பரம்பரை சீனாவில் இருந்து சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்து பொருளாதார நோக்கில் சிங்கப்பூரை தாய்நாடாகக் கொண்டிருந்தது. இவர் சிங்கப்பூரில் குடியேறிய சீனர்களில் நான்காவது பரம்பரையை சேர்ந்தவர். இவருடைய தாத்தா *Lee Bok Boon* **1846** இல் சீனாவின்

---

[69] If a stable state and government buoyed by some kind of economic growth does not guarantee against corruption but instead generates more and more of it, what then would achieve the non-corrupt situation of governance. The answer is a clean political leadership. One resolve of the leadership of a political party in Singapore clarifies the significant role of leadership in the fight against corruption. In his memories, the former Prime Minister of the Singapore, Mr Lee Kuan Yew, reveled the thinking of his colleagues on corruption as the decisive factors for the party to contest the 1959 election to form the government rather than to spend another five-year term in the opposition......Hence a leadership that is serious about the moral condition of the bureaucracy expresses its genuine concern about the problem of corruption. Prof Syed Hussein Alatasin 'Corruption and the Destiny of Asia,' Prentice Hall (M) Sdn Bhd, 1999

[70] ......"I cannot think of another statesman anywhere in the world more deserving of the honor than the Senior Minister.. In paying tribute to him, we are honoring integrity and its twin pillars, transparency and accountability. Mr Lee has shown all too clearly that given the necessary political will, corruption could be decisively liked". By Tunku Abdul AzizPresident, Transparancy International, Malayaian Chapter at the "global Integrity Award', quoted in The Straits Times, August 25, 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவாங்டொங் மாகாணத்தில் (ஹொங்கொங்குக்கு அருகில் உள்ள பொருளாதார செழிப்பு நிறைந்த மாகாணம்) பிறந்தார். சிறு வயதிலிருந்து ஆங்கிலக் கலாச்சாரத்துக்கு மிகவும் செல்வாக்குக்கு உட்பட்டவராக லீ குவான் யூ விளங்கினார். இவருடைய ஆங்கிலப் பெயர் *"Harry"* ஆகும். 1923ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16ம் திகதி பிறந்த இவர் 1950 *Kwa Geok Choo* என்பவரை திருமணம் செய்து இரண்டு மகன்மார்களையும் ஒரு மகளையும் பெற்று எடுத்தனர். இவருடைய மூத்த மகன் *Lee Hsien Loong* முன்னாள் இராணுவ பிரிகேடியர் 2004 இல் இருந்து சிங்கப்பூரின் பிரதம மந்திரியாக இருக்கின்றார். 1945-1949 காலத்தில் லீ கேம்பிறிட்ஜில் உள்ள *Fitzwilliam* கல்லூரியில் சட்டம் பயின்று முதல் வகுப்பில் பட்டம் பெற்றதோடு இலண்டனிலுள்ள அரசியலுக்கும் பொருளியலுக்குமான பள்ளியிலும் *(LSE)* பகுதியாகக் கல்வி கற்றுள்ளார்.[71]

1950 இல் லீ குவான் யூ லேசாக் அன்ட் ஒவ் *(Laycock & ong)* என்ற சட்ட நிறுவனத்தில் தனது பாரிஸ்டர் பட்டத்துக்கு வக்கீல் தொழிலின் பயிற்சிக்காக சேர்ந்தார். அக்காலத்தில் சிங்கப்பூரின் அரசியல் நிலைமை மிக மோசமாக இருந்தது. ஆட்சி அதிகாரங்கள் யாவும் பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடமிருந்தது. இக்காலத்தில் சிங்கப்பூரில் அரசியலில் இருந்த உள்நாட்டவர்களில் அநேகமானவர்கள் பிரித்தானியாவில் சட்டம் அல்லது மருத்துவம் படித்த ஓர் மேட்டுக்குடி வர்க்கமாக இருந்தார்கள். அவர்கள் ஆங்கில மோகத்தில் அதிக மதிப்புக் கொண்டிருந்தமையால் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக சிங்கப்பூரின் சுதந்திரத்துக்காக மிகவும் தயக்கமான எதிர்ப்பைக் காட்டினார்கள். இவ்வாறான ஓர் சூழ்நிலையில் மக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு தொண்டாற்றும் நலனியலில் அதிக அக்கறை கொண்ட ஒரு சோஸலிசவாதியாக லீ குவான் யூ சிங்கப்பூரின் அரசியலுக்கு நுழைகிறார். ஆனால் இவருடைய மூலம் மேட்டுக்குடி வர்க்கம் ஆகும்.

---

[71] In Singapore, distinguishing features of its post- 1959 political and economic leaders were their personal integrity, a high level of formal education and, often, extensive training in economics. Although this last did not extend to Lee Kuan Yew, his approach to economics was "that of a person recognising that he has some training in the subject [who] uses it to appraise the judgement of fully professional economists and use their advice to check some of his own ideas" Huff. W.G. (1995), p.142



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தலைமைத்துவத்தின் அரசியல் சிந்தனை

லீ பற்றிய தலைமைத்துவப் பண்பில் காணப்படுகின்ற ஓர் முக்கியமான பண்பு யாதெனில் இவருடைய அரசியல் சிந்தனையானது முன்னுக்குப்பின் முரணாகக் காணப்பட்டமையாகும். அதாவது லீயை ஒரு முதலாளித்துவவாதி என்றும் அவரால் சிங்கப்பூரில் கட்டி யெழுப்பப்பட்ட பொருளாதாரம் முதலாளித்துவம் சார்ந்தது என்பதும் பொதுவாக பலராலும் அடையாளம் காணப்பட்டபோதும் இவருடைய அரசியல் ஆரம்பம் முதலாளித்துவமாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேறு ஒரு வார்த்தையில் குறிப்பிடுவதாயின் லீயின் அரசியல் ஆரம்பம் சோஸலிச பாதையாக இருந்து முடிவு முதலாளித்துவமாக இருந்துள்ளது.[72] *Michael.D (2000)* லீயின் முரண்பட்ட அரசியல் சிந்தனையை எடுத்துக் காட்டுகின்றார். அரசியல் தலைவர் ஒருவர் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன் னெடுப்பதற்கு பொருளாதார சிந்தனையின் இரண்டு துருவத்திலும் பூரணமான அறிவு இருக்கவேண்டும் என்பது லீயின் அனுபவத்தில் இருந்து அறிந்துகொள்ளலாம். சோஸலிசத்தில் ஆரம்பமாகி அதில் உள்ள நன்மை தீமைகளை அனுபவ ரீதியாக பெற்று, பின்னர் முதலாளித்துவத்துக்கு மாறுகின்றபோது ஒரே தலைமைத்துவம் இரண்டு முறையிலும் உள்ள நன்மைகளைப் பெறுவதற்கான ஒரு பொது வான பொருளாதார முறையைக் கடைப்பிடித்து நாட்டை முன்னேற்ற முடியும். ஆசியாவில் அநேகமான பொருளாதார வெற்றி பெற்ற நாடுகள் ஆரம்பத்தில் சோஸலிசப் பண்பு சார்ந்த பொருளா தாரங்களாக இருந்து முதலாளித்துவ பொருளாதாரங்களாக மாற்ற மடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு தேவையான தலைமைத்துவத்துக்கு இருக்க வேண்டிய இப்பல்பரிமான அரசியல் பொருளாதார சிந்தனையின் பண்பு லீயிடம் கல்வியறிவூடாகவும் அனுபவ ரீதியாகவும் இருந்துள்ளது.

---

[72] இரு அரசியல் பாதைகளின் இணைக்கப்பட்ட பன்பு சீனாவில் டெங்சியாப்பிங்கின் தலைமைத்துவத்திலும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### லீயின் சோஸலிச நடவடிக்கைகள்

லீயைப் பற்றிய ஆய்வுகள் பல இவருடைய அரசியல் தோற்றத்தில் இருந்த சோஸலிசம் சார்ந்த நடவடிக்கைகளை இனம் காட்டுகின்றன.

i) **1952** இல் சிங்கப்பூரில் நடந்த தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாக பல சட்ட உதவிகளை செய்து தன்னை ஓர் தொழிலாளர் நலன் சார்ந்த சிந்தனையாளன் என அடையாளப்படுத்தியுள்ளார்.

ii) இவர் சிங்கப்பூரில் பல தொழிற்சங்கங்களுக்கு ஆதரவாக வாதாடியுள்ளார்.

iii) இவருடைய நண்பர்கள் பலர் தொழிற்சங்கவாதிகளாகவும் சோஸலிசவாதிகளாகவும் காணப்பட்டுள்ளனர். உதாரணமாக *Kenny Byrne*, ராஜரத்தினம், *Samad Ismail*, தேவன் நாயர் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

iv) லீயின் ஆரம்பகால சிந்தனைகளையும் சொற்பொழிவுகளையும் பிரசுரித்த பத்திரிகைகளாகிய உடுசதன் மெலாயு என்பது சோஸலிசம் சார்ந்த ஓர் இடதுசாரி பத்திரிகையாக இருந்துள்ளது.

v) **1954** மே **13** இல் நடைபெற்ற மாணவப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் சார்பாக லீ ஆஜராகி வாதிட்டுள்ளார். இந்நடவடிக்கை சோஸலிச சிந்தனையுள்ள மாணவர்கள் மத்தியில் லீயின் ஆதரவை அதிகரிக்கச் செய்துள்ளது.

vi) **1954** நவம்பர் **21** இல் உருவாக்கப்பட்ட மக்கள் செயல் கட்சி *(People's Action Party –PAP)* கம்யூனிஸ்ட் ஆதரவு பெற்ற தொழிற்சங்க உறுப்பினர்களை கொண்டிருந்துள்ளது. கம்யூனிஸ்ட்டுக்கள் மேலும் பிற்காலத்தில் அதிகரிக்கப்பட்டது.[73]

vii) **1955** இல் நடந்த சட்டசபைத் தேர்தலில் PAP க்கு **3** இடங்கள் மட்டும் கிடைத்து எதிர்கட்சித் தலைவராகவும் இடதுசாரிக் கட்சியாகிய PAP க்கு தலைவராகவும் லீ இருந்துள்ளார். இடதுசாரிகள் சோஸலிசவாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

[73] Yet to this day, the original leaders of people's action party (PAP) maintain that they were socilist when they came to power in 1959. Michael. D (2000), p.110.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii) *1957* இல் PAP க்குள் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் பெரும்பான்மையினராக இருக்கும் அளவுக்கு லீ குவான் யூ ஓர் இடதுசாரிகளை ஆதரிக்கும் ஓர் தலைவராக இருந்துள்ளார்.

இவ்வாறு லீயின் அரசியல் ஆரம்பம் ஓர் சோஸலிசம் சார்ந்த ஒன்றாகவே இருந்துள்ளது. அவருடைய சோஸலிச தொடர்புகளை அவர் தனது நூலில் குறிப்பிட்டு இருக்கின்றார்.[74] ஆனால் இக்கொள்கை ஊடாக நாட்டின் துரிதமான அபிவிருத்தியை அடைய முடியாது என்பதை நன்கு உணர்ந்த லீ PAP இல் இருந்து கம்யூனிஸ்ட்டுக்களை அகற்றி கட்சியை முதலாளித்துவம் சார்ந்ததாக மாற்றியமைத்துள்ளார். PAP பின்வரும் வழிகளில் கம்யூனிஸ்ட்டுக்களை கட்சியில் இருந்து அகற்றியது.

i) லிம் யூ ஹாக் அரசின் கம்யூனிஸ்ட்டுக்களுக்கு எதிரான நடவடிக்கையில் 35 க்கு மேற்பட்ட கம்யூனிஸ்ட்டுக்களை சிறைப் பிடித்தது. இதில் PAP ஐ சேர்ந்த 5 நிர்வாகசபை உறுப்பினர்களும் 11 நிர்வாகிகளும் உள்ளடங்கி இருந்தனர். இந்நடவடிக்கை PAPல் லீ யை முதலாளித்துவம் சார்ந்த ஆதரவாளர்களுடன் தொழிற்படச் செய்தது.

ii) PAP இன் யாப்பில் செய்யப்பட்ட மாற்றமானது புதிதாக கட்சியில் சேர்பவர்கள் நிர்வாக குழுவில் இடம்பெறுவதையும் பதவி வகிப்பதையும் தடை செய்தது. இந்நடவடிக்கை கம்யூனிஸ்ட்டுக்களை ஓரங்கட்டிக் கொண்டு வலதுசாரிகளின் கைகளை ஓங்கச் செய்தது.

iii) *1961* இல் PAP கட்சியில் இருந்த கம்யூனிஸ்ட்டுக்கள் சிங்கப்பூர்-மலேசியா இணைப்புக் குறித்து எழுந்த பிரச்சனையால் தனியே பிரிந்து பாரிஸான் சோஸலிசக் கட்சியை தொடங்கியமையானது லீயை முற்றுமுழுதாக PAP ஐ முதலாளித்துவம் நோக்கி செல்ல வழிவகுத்தது.

iv) பாரிஸான் சோஸலிசக் கட்சிக்கு தலைமை தாங்கிய லீ சியு சோ (Lee Siew Choh) சீனாவில் மவோசேதுங்கின் கலாச்சாரப் புரட்சியால் தூண்டப்பட்டு சிங்கப்பூரையும் அதே பாணியில் புரட்சியை ஏற்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்கள்

---

[74] "After London, I attended a socialist International Conference in Stockholm to keep in touch with British and Europian Socialist party leaders" p.37. Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி கம்யூனிஸ்ட்டுக்களுக்கு சிங்கப்பூரிலிருந்து ஆதரவு குறையத் தொடங்கியது. இது மறுபுறத்தில் PAP இன் ஆதரவை அதிகரிக்கச் செய்தது.

v) 1965 இல் மலேசியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற சிங்கப்பூரில் PAP இன் பல திட்டமிட்ட நடவடிக்கைகள் கம்யூனிஸ்ட்டுக் களை அரசியலில் இருந்து அகற்றுவதற்கு காரணமாக அமைந்தது. லீ குவான் யூ எதிரிகளை ( தன்னை ஆரம்பத்தில் அரசியலுக்குக் கொண்டுவந்து பிரபல்யமடையச் செய்த இடதுசாரிகளை) திட்டமிட்டு அகற்றிய அதே நேரம் தனது அரசியல் அதிகாரத் தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள் மக்கள் மத்தியில் அவரின் செல்வாக்கு அதிகரிக்க காரணமாகியது. இவரின் சிறந்த அரசியல் தலைமைத்துவம் என்பது அரசியல் எதிரிகளை அரசியலிலிருந்து வெளியேற்றிய துடன் முற்றுப் பெறவில்லை. மாறாக வெளியேற்றிய பின்னர் கிடைத்த அரசியல் வெற்றியை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தியதால் உருவானதாகும்.

vi) லீயின் தலைமையின் கீழ் PAP ன் பொருளாதாரக் கொள்கை யானது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியதன் காரணமாக எதிர்க்கட்சியான கம்யூனிஸ்ட்டுக்களுக்கு இருந்த ஆதரவு குறைவடைந்து இறுதியாக 1980 ல் தேர்தல் பிரச்சாரத்தில் "1966ல் நாங்கள் செய்தது பெரும் தவறுதான் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என லீ சியு கோ மன்னிப்பு கேட்டுக் கொள்ளும் அளவுக்கு லீயின் அரசியல் தலைமைத்துவம் மேம்பட்டுள்ளது.

லீ குவான் யூ பிரித்தானியாவில் கல்வி கற்றபோது அவருடைய நெருங்கிய நண்பர்கள் அனைவரும் இடதுசாரிகளாக பிரித்தானிய தொழிற்கட்சியை சார்ந்தவர்களாக இருந்துள்ளனர். இவருடைய ஆரம்பகால அரசியல் பொருளாதாரக் கொள்கையில்கூட தொழிற்கட்சி அரசாங்கம் பிரித்தானியாவில் கடைப்பிடித்த கொள்கையின் செல்வாக்கு காணப்பட்டுள்ளது. உதாரணமாக உலகத்தில் இரண்டாம் உலகயுத்தம் முடிந்த பின்னர் பொருளாதார வளர்ச்சியைப் பெற்ற மேலைத்தேச நாடுகள் பொருளாதார வளர்ச்சியை சமூக நலசெலவீடுகள் ஊடாக பங்கீடு செய்வதற்கு வேண்டிய கொள்கைகளை கடைப்பிடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பிரித்தானியாவில் தொழிலாளர் கட்சி பல நலன்புரி செலவீடுகள் ஊடாக அபிவிருத்தியை அடைய வேண்டிய கடப்பாட்டில் இருந்தது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற பிரித்தானியக் குடியேற்ற நாடுகளிலிருந்து கல்வி கற்பதற்கு பிரித்தானியா சென்ற இளம் புலமையாளர்கள் பிரித்தானியாவில் தொழிற்கட்சி கடைப்பிடித்த சமூக நலக் கொள்கையை சோஸலிசத்துக்கு மாற்றீடான ஓர் கொள்கையாகக் கருதி தங்கள் நாடுகளிலும் அக்கொள்கையை அமுல்படுத்தி ஓர் சமூகநல அரசை உருவாக்க முயன்றனர்.[75] உண்மையில் மேலைத்தேச நாடுகளின் சமூகநல செலவீடுகள் ஊடான வருமான மீள் பங்கீடு அவைகளின் பொருளாதார வரலாற்று ஓட்டத்தில் அவசியமாக இருந்தது.

இந்நாடுகள் பல்வேறு ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் குடியேற்றங்களைத் ஸ்தாபித்து செல்வத் திரட்சியைப் பெற்ற பின்னர் வருமான மீள்பங்கீடு அவசியமாக இருந்தது. சமூக அபிவிருத்தி, இலவசக்கல்வி, இலவச உணவு, இலவச மருத்துவம், இலவச அல்லது மானிய அடிப்படையிலான வீடு போன்ற பல்வேறுபட்ட சமூகநலச் செலவீடுகளை பயன்படுத்தி சமூக அபிவிருத்தி அடையப் பெற்றது. குடியேற்றத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளுக்கு இந்த சமூகநலச் செலவீடுகள் மற்றும் சோஸலிச கொள் கையை விட சமூக அபிவிருத்திக்கு முன்னர் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடிய செலவீடுகள் அவசியப்பட்டன. சுருக்கமாகக் கூறினால் மேலைத் தேசத்துக்குத் தேவைப்பட்ட நலஅரசு இருந்த காலம் (2ம் யுத்த முடிவு) குறைவிருத்தி நாடுகளுக்கு அபிவிருத்தி அரசை உருவாக்க வேண்டிய காலமாக இருந்தது. குறைவிருத்தி நாடுகளில் இருந்து மேலைத் தேசத்துக்கு (பிரித்தானியாவிற்கு) கல்வி கற்கச் சென்ற கொள்கை வகுப்பில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய தலைவர்களில் இந்த உண்மையை சரியாக உணர்ந்தவர் லீ குவான் யூ ஆவார்.[76]

---

[75]"They were going to createa just a society for the British workers. The beginning of a welfare state cheap council housing, free medicine and dental treatment, free spectacles, generous unemployment benefits. Off course, for stadents from colonies, like singapore and malaysia, It was a great attractions as alternative to communism. Michael Barr (2000) P.112.

[76]"Lee Kuan Yew was undoubtedly genuine in his belief in Fabian socialism in his university days. But there has been little detailed attention paid later development (socialism) eventual abandonment of his socialist idea or his attitude to the welfare state.... Lee never intended to build a a welfare state in Singapore"Micheal (2000),p.112



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தலைமைத்துவமும் யதார்த்த வாதமும்

சோஸலிசப் பின்புலத்திலும் சோஸலிச ஆதரவாளர்களையும் அதிகமாகக் கொண்டிருந்த PAP கட்சியும் அதன் தலைவர்களும் குறிப்பாக லீ குவான் யூ மேலைத்தேச அபிவிருத்திக் கோட்பாடு எங்களுக்குப் பொருத்தமானதா? என்பது தொடர்பாக யதார்த்த பூர்வமாக சிந்திக்கத் தலைப்பட்டிருந்தனர். பிரித்தானியாவில் கல்வி கற்றாலும் அந்நாட்டின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் யாவும் எமது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பயன்படுத்த முடியாது என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டனர். தலைவர்கள் நடைமுறைவாதத்தை பின்பற்றி அபிவிருத்தியை எய்தினர்.[77] தலைவர்கள் கருத்தியலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நடைமுறைவாதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.[78] எனவே சோஸலிசத்துக்கு மாற்றீடு எனக் கூறத்தக்க சமூகநல செலவீடுகள் மற்றும் சமூக அபிவிருத்தியைவிட பொருளாதார வளர்ச்சியை முன்னிலைப்படுத்துகின்ற அபிவிருத்தி அரசு ஒன்றைத் ஸ்தாபிக்க முற்பட்டமை தலைமைத்துவத்தின் அவருடைய யதார்த்த வாதத்தை தெளிவாகக் காட்டுகின்றது.

அவ்வாறான ஓர் அபிவிருத்தி அரசு ஒன்றை உருவாக்க முற்பட்ட வேளை அவர் இரண்டு பிரதான பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. முதலாவது தனது PAP கட்சிக்குள் பலர் சோஸலிச இடதுசாரிகளாக இருந்தனர். இவர்கள் இடதுசாரிகளாக இருப்பதனால் சமூகநலச் செலவீடுகளையும் சமூகநல அரசையும் ஆதரித்தனர். இரண்டாவது PAP க்கு வெளியேயும் சோஸலிசவாதிகள் எதிர்க்கட்சியாக

---

[77] "From late 60s, I have visited Hong Kong almost every year, to study and to understand why Hong Kong people work with so much more drive and vigorous than the people in Singapore and to learn something from them....through the Hong Kong watching, I concluded that state welfare and subsidies blunted the individual's drive to succeed...I resolved to reverse course on the welfare policies which my party had inherited or copied from the British labor party's policies. Lee Kuan yew p.113

[78] "Perhaps the most important reason why government interventionism succeeded in Singapore was because of a pragmatism - the test of what works - rather than rigid ideo logical commitment to a free market or to state direction. There was a clear understanding of the limitations of smallness and extreme openness for an economy such as Singapore's in departing from free trade to "govern the market" (Wade, 1990). In this regard, Singapore's brand of interventionism, not South Korea's, may be the more reliable model for less-developed countries aiming to become late industrializers".Huff. W.G. (1995), P.1435



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் குறுங்கால விருப்பங்களுக்கு தீனிபோடக்கூடிய வகையில் சமூகநலச் செலவீடுகளை முதன்மைப்படுத்தியிருந்தனர். சிங்கப்பூரின் அன்றைய தேவை ஓர் சமூகநல அரசு அல்லாமல் ஓர் அபிவிருத்தி அரசுதான் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட லீ குவான் யூ சமூகநலச் செலவீடுகளை தூண்டக் காரணமாக இருக்கின்ற அரசியல் பன்முகத்தன்மை மற்றும் ஏனைய ஜனநாயக மரபுகள் போன்றவற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் நசுக்க முற்பட்டிருந்தார். பல எதிர்க்கட்சி சார்பான அங்கத்தவர்களுக்கு கொலை மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் கூட இடம்பெற்றுள்ளது.[79]

எதிர்கட்சி தேர்தல் காலங்களில் சுதந்திரமாக தேர்தல் பிரச்சாரங் களை செய்ய முடியாமல் இருந்தது. எதிர்கட்சியினர் தங்கள் கருத்துக் களை பொது மேடைகளில் எடுத்துக்கூற அனுமதி மறுக்கப்பட்டிருந்த வேளையில் தமது கருத்துக்களை ஒலிநாடாக்களில் பதிவு செய்து மக்களுக்கு இரகசியமாக விநியோகித்திருந்தனர். இவ்வாறு ஜனநாயக மரபுகளை நசுக்குவது அதன் அடிப்படையில் ஒரு கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருப்பது பொருளாதார ரீதியாக பல நன்மைகளை பெற்றுக்கொடுத்தது. எதிர்க்கட்சியினரை அடக்குவதற்கு PAP மேற் கொண்ட பிரதான தந்திரோபாயம் அவர்கள் மீது அவதூறு வழக்குப் போடுதல். எதிர்கட்சி உறுப்பினர்கள் மீது போடப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளில் அதிக தண்டம் விதிக்கப்பட்டிருந்தது. அத்தொகையை செலுத்தமுடியாமல் பெரும்பாலானவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் குடியேறியுள்ளனர். மேலும் தண்டம் செலுத்த முடியாதவர்கள் திவாலானவராக *(Bankruptcy)* அறிவிக்கப்பட்டு தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டது. பலருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சியின் பலத்தை சிதைப்பதற்கு வீடமைப்புத் திட்டத்தை ஒரு கருவியாக பயன்படுத்தினர். ஓர் கிராமம் முழுமையாக எதிர்க்கட்சிக்கு

---

[79] 1987 இல் சிங்கப்பூரில் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தின் படி 22 பேரை கைது செய்தது. அவர்களில் பெரும்பான்மையாளர் வர்க்கம் கத்தோலிக்கர்கள்இ சமூக சேவகர்கள்இ நல்ல தொழிலில் இருந்தவர்கள் விசாரணையின்றி இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். PAP அரசுக்கெதிராக மக்களைத் தூண்டிவிட பிரச்சாரம் செய்தார்கள் என குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இது "மார்க்சிஸ்ட் சதி" என அழைக்கப்படுகிறது. இச்சதியின் முக்கிய பாதிரியார் *Vincent Cheng* ஆவார். முகில்,(2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக இருந்தபோது தொடர்மாடி மனைகள் அமைப்பதற்காக அவ்வாறான எதிர்க்கட்சி ஆதரவான கிராமங்களை தேர்ந்தெடுத்து மக்களை வேறு இடத்தில் தற்காலிகமாக குடியமர்த்தினர். பின்னர் தொடர்மாடிக் கட்டடத்தில் வீடு பகிர்ந்தளிக்கும்போது எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் ஒன்று சேராதவாறு வேறுபட்ட மனைகளுக்கும் இடங்களுக்கும் மாற்றப்பட்டனர். எதிர்க்கட்சியான சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சியின்,(SDP) பொதுச்செயலாளரான சீ சூன் ஜீவான் *(Chee Soon Juan)* பொது இடங்களில் பேசியமைக்காக பல தடவைகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பல சோஸலிச சார்புடைய தலைவர்கள் தமது சோஸலிச சிந்தனையை கைவிடுவதாக அறிவித்த பின்பே சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். மேலும் இவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு இருந்த பழைய திரைமறைவு செயல்களை தெரியப்படுத்துவதோடு எதிர்காலத்தில் எந்த தொடர்பும் வைத்திருக்க மாட்டோம் என்ற எழுத்து மூலமான உத்தரவாதத்தை வழங்கிய பின்புதான் உள்நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

ஜனநாயகத்தை லீ குவான் யூ தனது பார்வையில் மக்களுக்கு வேண்டாத ஓர் அரசியல் உரிமை எனக் கருதவில்லை. அவர் ஜனநாயகத்தை வரவேற்றார். ஆனால் ஜனநாயகம் தொடர்பாக அவருடைய நடைமுறைவியல் வாதம் என்னவெனில் ஜனநாயகம் குறைவிருத்தி நாடுகளில் மக்கள் மத்தியில் சீராக தொழிற்படாது என்பதாகும். ஜனநாயகத்தில் இருக்கின்ற கோட்பாட்டு ரீதியான குறைபாடுகளுக்கு அப்பால் ஜனநாயகத்தை சரியாகப் பயன்படுத்துவதற்கு ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கும் மக்கள் அறிவுடையவர்களாக இருக்க வேண்டும். மக்கள் அறிவற்றவர்களாக மந்தை கூட்டங்கள் போன்று சிந்தனையற்றவர்களாக ஒருவர் பின் ஒருவர் செல்பவர்களாக இருந்தால் ஜனநாயகம் தோல்வியடைந்து விடுகிறது. எனவே அரசியல்வாதி ஜனநாயகம் என்ற மாய மானைக் காட்டி நாட்டையும் பொருளாதாரத்தையும் சீரழிப்பான் என்பதை உறுதியாக நம்பினார்.[80] ஜனநாயகத்தை நடைமுறையோடு ஒப்பிட்டு எங்கள் சமூகத்திற்கு அது

[80] I do not believe that democracy necessarily leads to dev elopment. I believe that what a country needs to develop is discipline more than democracy. (Lee Kuan Yew cited in the *Economist*, August 27, 1994, p. 15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தம் உடையதாக இருக்கிறதா? என்பதை சற்று அவதானிக்க வேண்டும் என பல நேர் காணலில் லீ குவான் யூ குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சிக்கு ஜனநாயகம் ஓர் அத்திவாரமாக இருப்பினும் ஊழல், மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் இல்லாத எல்லா மக்களும் பொருளாதாரத்தில் உயரக்கூடிய ஓர் பொருளாதார சுபீட்சத்தை ஜனநாயகம் ஏற்படுத்தி தரமாட்டாது என்பதில் உறுதியாக இருந்து இருக்கிறார்.[81] மேலைத் தேசத்தில் மேட்டுக்குடி வர்க்கமாக கல்வி கற்று அரசியலில் புகுந்த லீ ஏனைய பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகள் கடைப்பிடித்த தாராள ஜனநாயகம் என்ற கோட்பாட்டில் இருந்து விலகி மென்மையான சர்வதிகார ஆட்சி என்ற நடைமுறைவாதத்தை உணர்ந்து அதை துஸ்பிரயோகம் செய்யாது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தியமை அவரின் யதார்த்தவாத தலைமைத்துவ பண்பை எடுத்துக்காட்டுகின்றது.

## 5. தலைமைத்துவமும் இன ஒற்றுமையும்

லீ குவான் யூ தாராள ஜனநாயகத்தின் வழி பொருளாதார அபிவிருத்தி மீது அதிக நம்பிக்கை கொள்ளாமைக்கு இன்னொரு காரணம் சிங்கப்பூரின் இனக் குழுக்களின் பிரிவுகள் ஆகும். இலங்கையின் இன விகிதாசாரம் போன்று ஏறத்தாழ 76 சதவீதமான மக்கள் சிங்கப்பூரில் சீன மக்களாக இருக்கின்றனர். எனவே ஜனநாயகப் பொறிமுறையூடாக நாட்டை அபிவிருத்தி செய்வதாக இருந்தால் இன அடிப்படையில் பெரும்பான்மை மக்கள்தான் தொடர்ந்தும் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள். சீன மக்கள் பெரும்பான்மையாக இருப்பது மட்டுமல்ல அவர்கள் நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றக்கூடிய வகையில் 2/3 பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்ற நிலையில் நாட்டின் பாராளுமன்ற தாராள ஜனநாயகம் ஊடாக அபிவிருத்திக்கு தேவையான வளங்கள் பங்கிடப்படும் போது பெரும்பான்மை மக்கள் சார்பாக பங்கீடு இருக்கும் என்பது தவிர்க்க முடியாதது.

---

[81] "All people of all countries needed a good government. A country first has economic development then democracy may follow. With a few of exception, democracy has not brought good government to new developing countries. Democracy has not led development because the government did establish the stability and discipline necessary for development" Lee Kuan Yew, carried by Mya Maung (1996),p.98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சிறுபான்மையாக இருக்கின்ற தமிழ் மற்றும் மலே மக்கள் அபிவிருத்தியில் இருந்து ஓரம் கட்டப்படுவதற்கான சாத்தியங்கள் தாராள ஜனநாயகத்தில் இருப்பதை உணர்ந்தார். இதனால் அரசியல் கட்சிகள் இன, மத, மொழி, பிரதேச அடிப்படையில் ஜனநாயக சுதந்திரம் ஊடாக சமூகத்தை சின்னாபின்னமாக்கி நாட்டின் சட்டம், ஒழுங்கு மற்றும் அமைதி சீர்குலைவதை அவதானித்தார். 1965 இற்கு முன்னர் இனக்கலவரங்கள், அரசியல் குழப்பங்கள், ஊர்வலங்கள் போன்ற பல அமைதிக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய சம்பவங்கள் தாராள ஜனநாயகத்தின் வழி உருவாகியமையை அனுபவத்தில் உணர்ந்து கொண்ட லீ குவான் யூ இன ஒற்றுமையை சீர்குலைக்க ஜனநாயக சுதந்திரத்தை கட்டுப்படுத்தியமை அவரின் தலைமைத்துவப் பண்பை எடுத்துக்காட்டுகிறது.

ஜனநாயகத்தை கட்டுப்படுத்தும்போது இலங்கையில் பகுதியான சர்வதிகார ஆட்சியான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் தலைவர்கள் தொழிற்பட்டது போன்று சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும் பெரும்பான்மை மக்களுக்கு சார்பாகவும் தொழிற்படவில்லை. உதாரணமாக *Tan Lark Sye* என்ற PAP இல் செல்வாக்கு கொண்டிருந்த ஒருவர் இன்றைய சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் சீன மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என 1956 இல் இலங்கையில் ஏற்பட்ட மொழிப் பிரச்சனை போன்று சிங்கப்பூரிலும் ஏற்பட்டிருந்தது.[82] PAP க்குள் இருந்த சீன நாட்டின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த வர்த்தகத்திலும் அரசியலிலும் பிரபலயமாக இருந்த பல சீனர்கள் சிங்கப்பூர் ஒரு சீன மொழி தேசமாக உருவாக்கப்பட வேண்டும் என வாதிட்டு மக்கள் மத்தியில் குழப்பங்களையும் இனமுரண்பாடுகளையும் தூண்டக்கூடிய கருத்துக்களையும் வெளியிட்டனர்.

இப்பிரச்சினையில் லீ குவான் யூ வின் தலைமைத்துவம் நன்றாக வெளிப்படுத்தப்படுகிறது. இவர் ஓர் சீன வம்சாவளியாக இருந்தும், தனது கட்சிக்குள்ளே சீன மொழியை அலுவலக மொழியாக பயன்படுத்துவதற்கு ஆதரவு மிகுதியாக இருந்தும், சீன மொழி அமுலாக்கத்துக்கு பின்னால்

---

[82] "Increasing taxes, laying traps. Turing out pools and wasting public funds"... If we do not take steps to preserve our culture now, in 40 or 50 years perhaps we shall no longer call our self Chinese" (Eastern Economic Review, 1980, p.161)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தாய்நாடான சீனாவின் செல்வாக்கை அவர் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தும், பல மொழி பேசுகின்ற சிங்கப்பூரில் இறுதியாக ஆங்கில மொழியையே அலுவலக மொழியாக பிரகடனப்படுத்தினார். இவர் தூர நோக்கற்ற ஓர் அரசியல்வாதியாக இருந்திருந்தால் இலங்கையில் 1956 இல் நிகழ்ந்தது போன்று தனி சீன சட்டத்தை கொண்டுவந்து பெரும் பான்மை சீன மக்களிடையே கொடிகட்டிப் பறந்து தாய்நாட்டின் ஆசீர்வாதத்துடன் மூன்றாம் தரவகுப்பு அரசியல் நடத்தி இருக்கலாம்.

ஆனால் இவர் ஓர் தூரநோக்கு கொண்ட தலைவனுக்குரிய பண்பினைக் கொண்டிருந்ததன் காரணமாக அவ்வாறான சீன மொழியை அமுல்படுத்தி குறுங்கால அரசியல் இலாபம் தேட முற்பட வில்லை எனலாம். இவர் ஓர் யதார்த்தவாதியாவார். தன்னை 76 சத வீத சீன மக்களிடையே பிரபல்யப்படுத்த முற்படவில்லை. மாறாக உலகத்திலே ஆகக் கூடிய அளவு மேற்கோள் காட்டக்கூடிய அளவிற்கு உலக மக்களிடையே பிரபல்யமடைவதற்கான பொது மொழிக் கொள்கையை அமுல்படுத்தி சிங்கப்பூரின் சமூகங்களை ஒன்றிணைத்தார்.

லீ குவான் யூ வின் மொழி தொடர்பான தீர்மானத்துக்கு இலங்கை யில் நடந்த சம்பவங்கள் அவருக்கு ஓர் அனுபவத்தைக் கொடுத்திருக் கின்றது. இலங்கையில் தனிச்சிங்கள சட்டம் கொண்டு வந்த 1956 இல் லீ குவான் யூ இலங்கைக்கு தனது முதலாவது அலுவலக பயணத்தை மேற்கொண்டு இருக்கின்றார். இலங்கையில் உலக யுத்தத்தால் பாதிக்கப்படாத பிரமிக்கத்தக்க பொதுக் கட்டிடங்களையும் ஏனைய உள்கட்டுமான வசதிகளையும் பார்த்து பிரமித்து இருக்கின்றார்.[83] இலங்கையின் பொருளாதார செழிப்பை பார்த்து சந்தோஷமடைந்தவர் 1956 ஏப்ரல் பிரதமர் பதவிக்கு வந்த S.W.R.D பண்டாரநாயக்காவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனிச்சிங்களச் சட்டம் இருந்ததை நன்கு அவதானித்து இருக்கிறார். இச்சட்டத்தின் பின்னர் 1956 முழுவதும்

---

[83] Architect of Singapore, Lee Kuan Yew states that Sri Lanka's dilemmas of development as"My first visit to Sri Lanka was in April 1956………I was impressed by the public buildings… undamaged by the war … more resources and better infrastructure than Singapore…….Ceylon was Britin's model Commonwealth country. After the war…. When Ceylon gained independent in 1948, it was the classic model of the gradual evolution to independence….Alas, it did not work out. During my visit over the year, I watched a promising country go to waste. One- man- one-vote did not solve a basic problem….. it is sad that the country whose ancient name Serendip has given the English language the word ' serendipity' is now the epitome of conflicts…. and hopelessness" ( See Banda Dayaratne.O.G, 2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் அமைதியின்மை ஏற்பட்டதை லீ நன்றாக கற்றுணர்ந்து தனது நாட்டில் தோன்றிய பிரச்சனைக்கான தீர்விற்கு ஓர் அனுபவமாக இலங்கைப் பிரச்சனையை எடுத்து இருக்கிறார். ஓர் நேர்காணலில் லீ இதனை வெளிப்படையாக குறிப்பிட்டு இருக்கிறார்

### 6. தலைமைத்துவமும் மதிநுட்பமும்

லீ 1959 இல் இருந்து 1990 வரை 31 வருடங்கள் சிங்கப்பூரின் பிரதம மந்திரியாக இருந்து இன்று மதிநுட்ப அமைச்சராக இருக்கிறார். சிங்கப்பூரின் எதிர்காலம் தொடர்பாக பின்வருமாறு ஆலோசனை வழங்கி இருக்கின்றார். "இன்னும் ஐம்பதாண்டு அரசியலில் இருப்பதற்கு நாங்கள் புதிதாக எதையும் செய்ய வேண்டியதில்லை. கடந்த ஐம்பதாண்டுகளாக என்ன செய்து வருகின்றோமோ அதையே ஒழுங்காக செய்து வந்தால் போதும். இரு விடயங்கள் இன்று மட்டுமல்ல என்றும் நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும். முதலாவது 'சுயமாற்றங்கள்' இரண்டாவது இளைஞர்களாக இருந்தாலும் திறமையுள்ளவர்களை கட்சியிலும் ஆட்சியிலும் ஏற்றுக்கொள்வது, அவர்களை அங்கீகரிப்பது, அவர்களை நாளைய நாளுக்காக தயார் செய்வது, மேற்கொள்ளப்படும் எந்தவொரு விவாதமும் நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும், மாற்றுக் கருத்துக்களைக் கூட கட்சிக்குள்ளேயே விவாதிக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் நிதானமாக இருக்கிறேன். கட்சிக்குள்ளே அவற்றை விவாதிப்பதில் தவறில்லை. கட்சிகளுக்கிடையேதான் விவாதிக்கக் கூடாது. பிறகு அது வேறொரு தளமாக, கட்சியாகி உருவாகி இடையறாத தொல்லைகள் தரக்கூடும். நாட்டு நலனில் அவை ஏற்படுத்தும் பிரச்சனைகள் நாட்டுக்கும் மக்களுக்கும் எப்போதும் நல்லதல்ல." பா. இராகவன் (முகில்) (2006), p.63

விவாதம் ஆரோக்கியமானது அது நாட்டு மக்களை முரண்பாட்டுக்கு இட்டு தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஜனநாயக உரிமை என்ற அடிப்படையில் எவரும் வாயில் வரும் எல்லாவற்றையும் கூறுவதால் ஏற்படும் பிரச்சனைகளை லீ குவான் யூ நன்றாக அறிந்திருக்கிறார். எனவே பேச்சு சுதந்திரத்தை கட்சிக்கு வெளியே கட்டுப்படுத்தியிருக்கிறார். 1966 பெப்ரவரி முதலாம் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூர் இராணுவத்தில் மலேய இன இராணுவத்தினர் ஓர் கலகம் செய்தனர். இக்கலகத்தை லீ நேரடியாக சென்று சாதுரியமாக தன்கையில் ஒலிபெருக்கி ஒன்றை வைத்துக் கொண்டு அந்த மலாய வீரர்களிடம் "இப்படி ஓர் கலவரம் நடந்துவிட்டது. அதற்கு காரணம் வார்த்தைகளின் புரிதலில் ஏற்பட்ட தவறு ஆகும். சிங்கப்பூர் குடிமக்கள் அல்லாத மலாய் வீரர்களை இராணுவத்தில் சேர்க்க வேண்டாம் என அவர் கூறிய வார்த்தைகள் அனைத்து மலாய் வீரர்களையும் இராணுவத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற விதமாக உங்களிடம் கூறப்பட்டிருகின்றது இதுதான் நடந்தது" எனக் கூறி புத்திசாதுரியமாக நெருக்கடிகளை தீர்த்து வைத்துள்ளார்.

லீ குவான் யூ நாட்டுக்கு தேவையான சில ஒப்பந்தங்களை மக்கள் நலன்கருதி உருவாக்கி அவற்றை பொதுமக்களுக்கு மறைப்பு செய்து இருக்கிறார். சிங்கப்பூரின் இராணுவ உருவாக்கத்துக்கு ஸ்ரேல் உதவி புரிந்தது. இந்த இராணுவ உதவி முஸ்லிம் மதத்தை பின்பற்றுபவர்கள் மத்தியில் அமைதியின்மையை உருவாக்கும் என்பதற்காக இறுதிவரை மூடி மறைக்கப்பட்டிருந்தது. லீயின் தலைமைத்துவ பண்பை சிங்கப்பூரின் இராணுவ உருவாக்கத்திலும் அவதானிக்கலாம். இராணுவத்தில் மூன்று இன மக்களையும் கணிசமான அளவு பேணுவதன் ஊடாக இனப் பிரச்சனை உருவாகாமல் தவிர்க்கப்பட்டது.

சிங்கப்பூரில் உருவாக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்திச் சபை *(Housing Development Board- HDB)* லீ குவான் யூ வின் பொருளாதார அபிவிருத்திக்கான தலைமைத்துவ மதிநுட்ப பண்பை எடுத்துக் காட்டுகிறது. HDB இல் இன ஒற்றுமையைப் பேணுவதற்காக இன விகிதாசாரத்தின் அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டன. இது ஓர் இனத்தை ஓரங்கட்டாமல் எல்லா இனத்தையும் ஒருங்கமைத்து முன்னெடுத்து செல்லப்பட்ட அபிவிருத்தித் திட்டமாக இருக்கிறது. இரண்டாவது HDB ல் வழங்கப்பட்ட வீடுகள் ஓர் இலவச பண்டமாகவோ அல்லது மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட பண்டமாகவோ இருக்க வில்லை. முற்று முழுதாக சந்தை விலையில் இவை வழங்கப்பட்டன. அரசுக்கு வருவாயை அதிகரித்த அரச நிறுவனங்களில் HDB ஒன்றாக இருந்தது. மூன்றாவது சமூகத்தின் நலனை அதிகரிக்கின்ற ஓர் பண்டமாக வீட்டுவசதி பொருளாதார வளர்ச்சியுடன் இணைக்கப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது சமூகநல செலவீடுகள் மக்களின் அடிப்படை வசதிகளை வழங்கியதோடு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியுடனும் நேரடியாக இணைக்கப்பட்டிருந்தது. பல குறைவிருத்தி நாடுகளில் சமூகநல செலவீடுகள் அரசியல்வாதிகளின் சுயநல இச்சையைப் பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. அவைகளில் பல பொருளாதார வளர்ச்சிக்கோ அல்லது நாட்டின் செல்வத்தின் அதிகரிப்பிற்கோ இட்டுச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வீடமைப்புத் திட்டம் ஊடாக சமூக ஒருமைப்பாட்டை கட்டியெழுப்பினார். ஒரே இன, சமய மக்கள் ஒரே பகுதியில் குடிமக்களாக வசிப்பதைத் தவிர்க்கலாம் என்பதற்காக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாறு இனக்குடிகளாக பிரிந்து வாழ்வதால் இனவேறுபாடுகள் அதிகரித்து இனக் கலவரங்கள் தோன்ற வாய்ப்புள்ளது எனக் கருதினார். எனவே ஒரு குறிப்பிட்டளவு வருமானமுடைய எல்லா இன மக்களும் ஒரே பகுதியில் வசிக்கும்படியாக குடியிருப்பு பகுதிகள் உருவாக்கப்பட்டன. குறிப்பிட்ட வருமான மட்டத்தில் உயர் வருமானம் உள்ளவர்களும் தாழ்வருமானம் உள்ளவர்களும் ஒன்றாகவே இணைந்து வாழ்ந்தனர். சர்வதிகாரப் பண்புகள் நிறைந்த ஆட்சியுடன் எதிர்க்கட்சியின் செயற்பாடுகளைப் கட்டுப்படுத்திக் கொண்டு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறுவதற்கு லீ குவான் யூ எடுத்த பிரதான ஓர் பொருளாதார அபிவிருத்தி ஆயுதம் HDB ஆகும். இதன் கருத்து அரச நிதியை உயர்த்தவே இன்றி தனது செல்வாக்கை உயர்த்த பயன்படுத்தியது அல்ல. HDB இலாபத்தில் இயங்கிய ஓர் அரச நிறுவனம் ஆகும்.

சிங்கப்பூரின் சிற்பிக்கு உறுதுணையாக இருந்தவர் கலாநிதி ஆல்பர்ட் வீன்சீமியஸ் *(Dr. Albert Winsemius)* என்பவர் ஆவார். இவர் *1961-1984* வரை *23* ஆண்டுகள் சிங்கப்பூரின் பொருளாதார ஆலோசகராக பணியாற்றி உள்ளார். பொருளாதார ஆலோசகரின் அறிவுரையை உள்வாங்கி தனது சுயசிந்தனையில் மதிப்பீடு செய்து அவற்றை நடைமுறைப்படுத்தியதால் லீ குவான் யூவின் பொருளாதார தலைமைத்துவம் சிறப்பாக பேசப்படுகிறது. லீ குவான் யூ இவரிடம் இருந்து ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நிறுவனங்களின் நிர்வாக செயல் அதிகாரிகள் என்ன நினைப்பார்கள் எப்படி செயல்படுவார்கள் என்பதை கற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. தலைமைத்துவமும் தொழிலாளர் நலனும்

சிங்கப்பூரின் சிற்பி மனித உரிமைகள் மற்றும் ஊழியர்களின் உரிமைகள் போன்றவற்றை நசுக்கித்தான் சிங்கப்பூரை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பினார் என வாதிட முடியாது. இவர் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆதரித்த ஓர் தலைவர் அல்ல. மறுபுறத்தில் இவர் தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து அவர்களின் உழைப்பை முதலாளித்துவ வர்க்கம் உறிஞ்சி எடுப்பதையும் விரும்பிய தலைவர் அல்ல. மாறாக தொழிலாளர்கள் தங்கள் உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கு ஏற்ப நியாய பூர்வமான ஊழியம் பெறுவதை ஏற்றுக்கொண்டார்.[84] மேலும் இவர் ஊழியர்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தி தொழிற்சங்க நடவடிக்கை ஊடாக உற்பத்திதிறன் இல்லாமல் ஊழிய அதிகரிப்பை பெற்றுக்கொண்டு நாட்டின் அமைதியை சீர்குலைப்பதைத் தடுத்தார். கூலி தொழிலாளர்களின் செயல்திறன் அடிப்படையில் இருக்க வேண்டுமே ஒழிய அவர்களின் வேலை நேரத்தால் அல்ல என்ற உளப்பாங்கை ஏற்படுத்தினார்.[85] தொழிற்சங்கங்கள் முதலாளிகளுக்கு பக்க பலமாக இருந்தால்தான் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என நம்பினார்.

"பொன் முட்டைகள் தேவை என்பதற்காக பொன் முட்டையிடும் வாத்துக்களைக் கொல்லக் கூடாது. இது தொழிற்சங்கத் தலைவர்களிடம் நான் வைக்கும் வேண்டுகோள்"லீ குவான் யூ இராகவன் பா (முகில்) *(2006),* p.*103*

தொழிற்சங்கத் தலைவர்கள் படித்தவர்களாக இருக்க வேண்டுமென லீ நம்பினார். சோஸலிசம் பற்றியோ அல்லது முதலாளித்துவம் பற்றியோ பூரணமான அறிவு இல்லாத தொழிற்சங்கத் தலைவர்கள் மக்களை பல்வேறுபட்ட பிரச்சாரங்கள் ஊடாக குழப்பமடையச் செய்து நாட்டின் அமைதியைச் சீர்குலைப்பார்கள். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு

---

[84] "Union leader should inrerpret government policies and relate them to realities of workers attitudes and works hapits so that the union can play more effective role to get workers hightly motivated and imbued with the ideals of continuously increasing productivities" by Lee Kuan Yew , Michael D Baar (2000), p. 280

[85] "We needed new attitudes, the most important of which was that pay must accord with performance, not time spent on the Job." P.84, Lee Kuan Yew(2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் முக்கிய காரணிகள். எனவே சோஸலிசவாதிகளின் கலப்பில்லாத தொழிற்சங்கங்கள் இருக்குமானால் வேலை நிறுத்தங்கள் மற்றும் மோதல்கள் தவிர்க்கப்படும். இவ்வாறான உண்மையை உணர்ந்த லீ குவான் யூ தொழிற்சங்கங்கள் அனைத்தையும் தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தார். பிரித்தானியாவில் இருந்து குடியேற்ற நாடுகளில் வேர் விட்டு இருந்த தாராள ஜனநாயகத்தை எப்படிக் கட்டுப்படுத்தி சமூகநல செலவீடுகளைக் குறைத்தாரோ அதேபோன்று பிரித்தானியாவின் மரபில் இருந்து சிங்கப்பூர் பின்பற்றி வந்த தொழிற்சங்க கொள்கையும் தொழில் வளர்ச்சியை பாதித்து இருந்தது. நாடு பொருளாதார ரீதியாக தொழில்களை வளர்த்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கக்கூடிய மூலதன இருப்பு ஏற்படுவதற்கு முன்னர் தொழிற்சங்கங்களை வளரவிட்டால் அவை தொழில்களின் வளர்ச்சியை பாதிப்பதுடன் நாட்டின் அபிவிருத்தியை வளர்ச்சியின்றி சமூகநலச் செலவீடுகள் பக்கம் திசை திருப்பி ஒட்டு மொத்தமான பொருளாதார அபிவிருத்தியை மந்தமடையச் செய்யும் என நம்பினார். தொழிற்சங்கங்கள் தொழில் நிறுவனங்களின் உண்மை நிலையை பற்றி அக்கறை கொள்ளாமல் எப்படி முதலாளிமார்களிடம் இருந்து அதிக ஊதியம் மற்றும் சலுகைகளைப் பெறுவதிலேயே கட்டுப்பாடற்ற தொழிற்சங்கங்களும் அவைகளின் தொழிலாளர்களும் ஆர்வம் செலுத்துவர். இதன் காரணமாக தொழிலாளர்கள் ஓர் சுதந்திரமான தொழிற்சங்கத்திலிருந்து பெறும் நன்மைகளை பெறுவதற்கு கட்டுப்பாடான ஓர் குடையின் கீழான தொழிற்சங்கம் உதவும் என நம்பினார். தொழிற்சங்கங்களை ஓர் மென்மையான சர்வாதிகார கொள்கையைப் பயன்படுத்தி கட்டுப்படுத்திய அதேவேளை தொழிலாளர்களை முதலாளித்துவ வர்க்கம் சுரண்டாதவாறு ஊழிய மற்றும் ஊதியப் பாதுகாப்பையும் ஏற்படுத்தினார்.

1968ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டது. அவர்கள் தடையை மீறும் சந்தர்ப்பத்தில் அவர்களை கைது செய்து தண்டப்பணம் அறவிடுவதையும் சட்டம் தெளிவாக வரையறுத்தது. இப்புதிய தொழிற்சங்க சட்டத்தினால் நாட்டில் தொழிற்சங்கங்களால் ஏற்பட்ட அமைதியின்மை முடிவுக்கு வந்தது. புதிய முதலீடுகள் பெருக்கமடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாகின. நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்தது.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை நசுக்கிய போதும் தொழிலாளர்களின் ஊழியத்தை நிர்ணயம் செய்வதற்காக 1972 இல் தேசிய தொழிற்சங்க சபை (NTUC) அமைக்கப்பட்டது. இச்சபையானது அரசு, தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிகள் ஆகிய 3 பிரிவினரை உள்ளடக்கிய முக்கோண சபையாக இருந்தது. ஊழிய உயர்வு, உற்பத்தித் திறனுக்கான ஊக்குவிப்புத்தொகை போன்றன இச்சபையால் தீர்மானிக்கப்பட்டு அவை கடுமையாக அமுல்படுத்தப்பட்டன. ஊழியர்களுக்கு கிடைக்கின்ற நலச்சேவை வசதிகள் காலப்போக்கில் NTUC க்கு பதிலாக PAP இன் கிளைகள் மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இறுதியாக PAP NTUC BEST என்ற நிலை உருவானது.[86] இச்சபையால் ஏற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் நாட்டின் எந்தப் பிரிவினரையும் பாதிக்காது சமூக அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தியது. வருடந் தோறும் ஊதியம் அதிகரிக்கப்படவில்லை. மாறாக அடிப்படைச் சம்பளம் என நிலையான ஓர் தொகையை வைத்துக்கொண்டு ஊக்கத் தொகை வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. தொழிற்சங்கங்களுக்கும் அரசுக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுத்தியமை லீ குவான் யூ வின் தலைமைத்துவ பண்பை எடுத்துக் காட்டுகிறது. இவ்வுறவை வளர்ப்பதற்கு லீக்கு பக்க துணையாக தேவன் நாயர் *(Devan Nair)* செயற்பட்டு இருக்கிறார்.[87] இவ்வாறு பக்கத்துணையாக இருந்த தேவன்நாயரைக் கூட பிறிதொரு சம்பவத்தில் லீ குவான் யூ தண்டித்து இருக்கிறார். இது தலைமைத்துவத்தின் உண்மைத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

## 8. தலைமைத்துவமும் நல்லாட்சியும்

ஒரு முறை சிங்கப்பூரின் மூன்றாவது ஜனாதிபதியாக இருந்த தேவன் நாயர் ஒரு விருந்துபசாரத்தில் மது அருந்திவிட்டு பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொண்டார். இதை விசாரித்த மருத்துவ குழு

---

[86] பார்க்க Michael D Baar (2000), p. 289

[87] "I needed him (Devan Nair) in Singapore to play a key role in maintaining indusrial peace and persuading our workers to increase productivity and efficiency. It was an enormous advanrage for me to have Devan as secretary- general of the NTUC" p.88, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மதுவுக்கு அடிமையாகி சுயகட்டுப்பாட்டை இழந்ததாக 7 பேர் கொண்ட மருத்துவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கையைக் காரணம் காட்டி லீ குவான் யூ தனது மிக நெருங்கிய நண்பராக இருந்து தொழிலாளர்களை ஒன்றிணைத்து லீயின் அரசியல் பலம் அதிகரிக்க காரணமாக இருந்த தேவன்நாயரை பதவியில் இருந்து நிறுத்தினார். ஒன்றரை வருடம் கழித்து *Far Easten Economic Review* என்ற பத்திரிகையில் தேவன் நாயர் தான் மதுவுக்கு அடிமையாக இருந்ததில்லை என்றும் கடிதம் எழுதியிருந்ததோடு 11 வருடங்கள் கழித்து கனடாவில் ஓர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தனது உடல்நிலை திட்டமிட்டு தவறாக கணிக்கப்பட்டிருந்தது என தேவன் நாயர் கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. எது எவ்வாறெனினும் லீ தான் கட்டியெழுப்பிய தேசத்துக்கு ஏற்பட்ட அபகீர்த்தியை தனது நட்பு எனும் மகுடத்தை விட்டுக் கொடுத்தே நிலை நிறுத்தியிருக்கிறார். இது நாட்டை நேசித்து நல்லாட்சியை உருவாக்கிய இவரின் தலைமைத்துவ பண்பை எடுத்துக் காட்டுகிறது.[88]

1986 டிசம்பர் 15ம் திகதி லீ குவானின் நெருங்கிய நண்பரும் தேசிய வளர்ச்சித்துறை அமைச்சருமான தே சியாங் வான் *(Teh Cheang Wan)* தான் இலஞ்ச ஊழலில் கைது செய்யப்பட்டிருந்தவேளை தற்கொலை செய்வதற்கு முன்னர் பிரதமர் லீ குவான் யூ விற்கு ஓர் கடிதம் எழுதினார்.

*"கடந்த இரண்டு வாரங்களாக என் மனம் மிகவும் துயரத்தில் ஆழ்ந்தது. அமைதியின்றி தவித்தேன். நடந்த அந்த துரதிஸ்டவசமான சம்பவத்துக்கு நான்தான் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே என் தவறுக்காக ஒரு பொறுப்புள்ள குடிமகனாக எனக்கு நானே இந்த அதிகபட்ச தண்டனையைக் கொடுத்துக் கொள்கிறேன்" P.162, Lee Kuan Yew (2011)*

இக்கடிதம் எழுதுவதற்கு முன்னர் இவர் லீ குவான் யூவை சந்தித்து தான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்க முயன்றுள்ளார். ஆனால் லீ

---

[88] We ensure complete accountability and open separateness between personal assets and public funds. Corruption, which was a concern in many new countries, had to be eradicated and kept down...... The cleaning and disinfecting has to start from the top and go downwards in a through and systematic way. It is a long and laborious process that can be carried out only by a very strong group of leaders with the courage and moral authority derived from in questioned integrity. Lee Kuan Yew (2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவான் யூ திட்டவட்டமாக இவரை சந்திப்பதற்கு மறுத்து ஊழல் லஞ்சம் இல்லாத ஓர் நாட்டை உருவாக்குவதற்கு தனது நெருங்கிய நண்பரை இழந்தமையானது தலைமைத்துவ பண்பை எடுத்துக் காட்டுகின்றது.[89] உலகில் ஊழல், லஞ்சம் இல்லாத நாடுகளின் வரிசையில் சிங்கப்பூர் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. எத்தனை ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தாலும், எத்தனை தொடர்பு சாதனங்கள் மானபங்கப்படுத்தியும், அலட்சியமாக நீதிமன்றத்துக்குச் சென்று ஏன் சிறைத்தண்டனை கூட அனுபவித்து கஷ்டப்படாமல் விடுதலையாகி தியாகிகளாக வெளிவரும் இந்திய நாட்டு அரசியல்வாதிகள் போல சிங்கப்பூரில் அரசியல்வாதிகளோ அல்லது அதிகாரிகளோ தங்கள் கைவரிசையை காட்ட முடியாது. இவ்வாறான ஓர் ஊழல் இல்லாத நாடாக சிங்கப்பூர் மிளிர்வதற்கு காரணம் தலைமைத்துவம் ஊழல் இல்லாமல் இதை ஒழிப்பதற்கான சட்ட திட்டங்களை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றமையாகும்.[90] 1959க்கு முன்னர் தற்போதைய இந்தியாவைவிட மிக மோசமான ஊழல் மோசடிகள் சிங்கப்பூரில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இலஞ்சம், ஊழலை ஒழிப்பதற்கு லீ குவான் யூ அதிக அக்கறை செலுத்தினார்.[91] "அரசன் எவ்வழி மக்களும் அவ்வழி" என்ற பழமொழிக்கேற்ப தலைமைத்துவம் நேர்மையானதாகவும் ஊழல் அற்றதாகவும் இருக்கும்போதுதான் அதற்குக் கீழேயுள்ள அதிகாரிகள் மக்கள் நேர்மையைக் கடைப் பிடிப்பார்கள் என்பதை உணர்ந்து

---

[89] "Cabinet secretary reported this and said the had asked to see me. I replied that I could not until investigations were over. A week later, on the morning of 15 December 1986, my security officer reported that Teh had died and left me a letter. Prime minister " I have been feeling very sad and depressed for the last two weeks. I feel responsible for the occurrence of this unfortunate incident and I feel I should accept full responsibility. As an honorable oriental gentleman I feel it is only right that I should pay the highest penalty for my mistake. Your faithfully Teh Cheang Wan P.162, Lee Kuan Yew (2011)

[90] "First, we had to set the example. If the ministers were taking something on the side, his personal secretary must know, right? So, we have got to set an example, not only in being uncorrupt but also in being thrifty and economical… .. We wanted to trim the cost of government No wastage, no lavish entertainment, no big offices. We set the tone, the example, they followed. They responded to it." Lee Kuan Yew, Senior Minister, in 'Lee Kuan Yew'. The Man and His Ideas', Singapore Press Holdings and Times Editions, 1997

[91] It started with "a deep sense of mission to established clean and effective government', tough laws and the political will to come down hard on those who do otherwise, The Straits Times, September, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவத்தை தூய்மையாக்கினார்.[92] அடிக்கடி மாறுகின்ற அரசு இருக்கும் போது அரசியல்வாதிகள் தப்பித்துக்கொள்ள முடியும் என்பதால் ஊழல் ஒழிப்புக்கு நிலையான ஆட்சியின் கீழ் கடுமையான சட்டங்களை அமுல்படுத்தினார்.

"தேர்தலில் எவ்வளவு பணம் செலவழிக்கிறோமோ அதே அளவு வெற்றி பெற வாய்ப்புள்ளது என்பது தான் ஆசிய நாடுகளில் நிலவும் சாபம்.[93] எனவே தேர்தலில் வெற்றி பெற ஒரு வேட்பாளன் தான் செலவளிக்கும் பணத்தை பதவிக்கு வந்த பின் மீண்டும் இரு மடங்காக சம்பாதிக்க நினைக்கிறார். அப்போதுதான் அதை உபயோகித்து அடுத்த முறையும் வெற்றிபெற முடியும். ஆனால் சிங்கப்பூரில் நாங்கள் தேர்தலுக்காக செலவழிக்கும் பணம் சட்ட விதிகளுக்குட்பட்டதுதான். மிகவும் குறைந்த தொகைதான். நாங்கள் தேர்தல் அன்று வாக்காளர்களை கட்டாயமாக அழைத்துச்சென்று வாக்குகளைப் பெறுவதில்லை. வாக்காளர்களுக்கு வாக்குகள் பரிசுகள் அழிப்பதில்லை. அதற்காக கட்டாயமாக வாக்களிக்க வேண்டும் என்ற சட்டத்தையே நிறைவேற்றியுள் ளோம். நாங்கள் எங்கள் வாக்குகளை பொது மக்களுக்கு செய்யும் பொதுநலத் தொண்டுகள் மூலந்தான் பெறுகின்றோம். அமைச்சர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அவர்கள் தனியே சொத்து சேர்ப்பது என்பது ஆசிய நாடுகளில் கலாச்சாரமாகவே ஆகிவிட்டது. எனவே சிங்கப்பூரில் தனியார்துறை உயர் அதிகாரிகள் போல அமைச்சர்களுக்கும் நல்ல சம்பளம் வழங்கப்படுகிறது" லீ குவான் யூ- இராகவன் பா (முகில்) (2006), p.122

இலஞ்சம் ஒழிப்பு அதிகாரிகள் அரசியல்வாதிகளின் வீடுகளை எந்த நேரத்திலும் சென்று சுதந்திரமாக சோதனையிடவும், குற்றம்

[92]"The moment key leaders are less than incorruptible, less than stern in demanding high standers, from that moment the structure of administrative integrity will weaken, and eventually crumble.Singapore can survive only if Ministers and senior officers are incorruptible and efficient… Only when we uphold the integrity of the administration can the economy work in a way which enables Singaporeans to clearly see the nexus between hard work and high rewards. Only then will people, foreigners and Singaporeans, invest in Singapore; only then will Singaporeans, invest in Singapore; only then will Singaporeans work to improve themselves and their children through better education and further training, instead of hoping for windfalls through power friends and relatives or through greasing contacts in the right places ". Lee Kuan Yew, Senoir Minister, then Prime Minister, in Parliament, 1979.

[93] " In Thailand , a former government minister described it as " Commercial democracy, purchased mandate" in 1996, some 2000 candidates spent abouit US$ 1.2 billion. One prime minister called as Mr ATM because he was renowned for dispensing cash to candidates and voters……….In Malaysia , UMNO leader call it " money politics" p. 164, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தால் அவர்களை கைது செய்யவும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். இவர்கள் தன்னிச்சையாக சுதந்திரமாக இயங்க அனுமதித்தது மட்டுமல்ல அவர்களுடைய சேவை திறமையாக இயங்குவதற்கு பக்க துணையாக இருக்கும் காவல்துறை மற்றும் நீதித்துறையும் சுயாதீனமாக இயங்கியது. இதனை சுவிஸ்லாந்திலும் அவதானிக்கலாம். ஒருமுறை பத்திரிகையாளர் ஒருவர் லீயை பார்த்து சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏதாவது ஒரு நாட்டின் மாதிரியை முன்மாதிரியாக பயன்படுத்தியுள்ளீர்களா? என கேட்ட போது "சுவிஸ்லாந்து, இஸ்ரேல் மற்றும் ஹொங்கொங் நாடுகள் பயன்படுத்திய மாதிரியை நாங்கள் மென்மேலும் விருத்தி செய்தோம்" என்றார்.[94]

## 9. தொகுப்புரை

ஜப்பானை தளமாக கொண்ட பிரபல்யமான ஒரு ஆய்வு சஞ்சிகைக்கு மூலதனவாக்கத்தில் அதி உந்துதலுக்கான அரசியல் பின்தள்ளுதல் என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக் கட்டுரையை அனுப்பியிருந்தேன். இக்கட்டுரையானது குறைவிருத்தி நாடுகள் மூலதனவாக்கம் தொடர்பான நச்சுச் சுழலை உடைத்துக்கொண்டு அபிவிருத்தியில் முன்னேறுவதற்கு தூரநோக்கு உள்ள தலைமைத்துவத்தின் கீழ் எதேட்சை அதிகார அரசு ஒன்றின் அவசியத்தை ஆசிய நாடுகளின் அபிவிருத்தி அனுபவங்களை குறிப்பாக சிங்கப்பூரின் தலைமைத்துவத்தை முன்வைத்து விபரித்து இருந்தது. இக்கட்டுரை பிரசுரிப்பதற்கு நிராகரிக்கப்பட்டு அதற்கான காரணங்கள் சில எனக்கு தரப்பட்டது. பதிப்பாசிரியர் எழுப்பிய வினாக்களில் மிக முக்கியமான ஒன்று தூரநோக்கு தலைமைத்துவம் என்பது என்ன? அதை எப்படி வரையறுப்பது? என்பது ஆகும். ஒரு நாட்டுக்குள் சிறந்த தலைமைத்துவம் என போற்றப்படுபவர் இன்னொரு நாட்டுக்கு காலனாகவும் இருப்பார். ஏன் அவருடைய சொந்த நாட்டுக்குள்ளேயே அவருடைய தலைமைத்துவத்தை இன்னொரு பிரிவினர் மிகவும் கடுமையாக விமர்சிப்பார்கள்.

எனவே எனது ஆசிரியரும் பேராசிரியருமான வி.பி சிவநாதன் ஒரு கலந்துரையாடலில் கூறியது போன்று அபிவிருத்தி தந்திரோபாயத்தில்

---

[94] When asked whether after 1965 Singapore's leadership had "a model in mind," Lee Kuan Yew replied, No, we borrowed an electric fashion elements of What Hong Kong was doing What Switzerland was doing What Israel was doing and we improvised" Lee Kuan Yew (1993) cited in Huff. W.G. (1995), p.1434



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் முடிந்த முடிபு அல்லது இதுதான் பொது விதி என எதையும் சமூக விஞ்ஞானத்தில் அழுத்தமாகக் கூற முடியாது. ஒரு தலைமைத்துவத்தின் பண்பு ஒரு நாட்டில் வெற்றி பெற்றது என்றால் அதே பண்பையுடைய இன்னொரு தலைமைத்துவம் இன்னொரு நாட்டில் தோல்வியடையலாம். பொருளாதார அபிவிருத்தியின் வெற்றி என்பது தனித்து ஒரு சில காரணிகளால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. பல காரணிகள் பல கோணங்களில் செல்வாக்கு செலுத்துகின்றன. எனவே லீ குவான் யூவின் தலைமைத்துவ பண்பினால்தான் சிங்கப்பூர் வெற்றி பெற்றது எனக் கூற முடியாது. ஏனைய பல காரணிகள் இவ்விடயத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இருப்பினும் எவ்வாறான சிக்கலான பிரச்சினைகளையும் ஒரு தலைமைத்துவம் அபிவிருத்திக்கு சார்பாக மாற்றலாம். பொருளாதார அபிவிருத்திக்கான தலைமைத்துவம் என்பது ஒரு இராணுவ கட்டளைத் தளபதி அல்லது கப்பலின் கப்டன் போன்றது. தனது பாதையில் உருவாகும் எல்லா பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான அனுமதியை தன்னை கட்டுப்படுத்துபவர்களிடம் (மக்கள் பிரதிநிதிகள்) கேட்டு அனுமதி பெற்று செய்து கொண்டிருக்க முடியாது. எனவே சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப தனித்து தலைமைத்துவத்தின் தீர்மானம்தான் வெற்றியை தீர்மானிக்கின்றது. சிங்கப்பூரின் வெற்றியை பார்த்துத்தான் ஜே.ஆர்.ஜயவர்த்தனா இலங்கையிலும் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

ஆனால் இலங்கை பொருளாதார அபிவிருத்தியில் வெற்றி பெறவில்லை. ஜயவர்த்தனாவின் தலைமைத்துவத்துக்கு அப்பால் நாட்டின் வரலாறு, புவிசார் அரசியல், பிராந்திய அரசியல், மக்களின் உளப்பாங்கு எனப் பல காரணிகள் இலங்கையின் தோல்விக்கு காரணமாக இருக்கின்றன. இருப்பினும் தலைமைத்துவத்துக்கு பிரதான பங்கு இருக்கின்றது. சிங்கப்பூரின் தலைமைத்துவம் இக்காரணிகளை சாதகமாக மாற்றியமைத்தது. இலங்கையின் வரலாற்றில் ஜே.ஆர் ஜயவர்த்தனா என்ற அரசியல் தலைவர் இல்லையாயின் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி எவ்வாறு இருந்து இருக்கும் என்பது சிங்கப்பூரின் தலைமைத்துவத்தை நோக்கும் போது எம் முன் எழும் வினாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் –07

# சமூக நலன்புரி கொள்கையும் பொருளாதார அபிவிருத்தியும்

அபிவிருத்தி என்ற எண்ணக்கரு இன்று பல்பரிமாண நோக்குகளைக் கொண்டிருக்கிறது. ஓர் நாட்டின் அபிவிருத்தியில் வளர்ச்சியை முதன்மைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி என்பது அபிவிருத்தியின் அடிப்படையாக இருந்தபோதும் சமூக அபிவிருத்தி என்பது 1950 மற்றும் 1960 களில் இருந்த நிலையைவிட இன்று மேலோங்கி இருக்கின்றது. ஒரு பொருளாதாரத்தின் பொருளாதார அபிவிருத்தியா? அல்லது சமூக அபிவிருத்தியா? முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற வாதப்பிரதிவாதங்கள் இவ்வெளியீட்டின் பல கட்டுரைகளில் ஆராயப்பட்டிருக்கின்றது. இவ்விளக்கங்களின் இறுதி முடிவாக அபிவிருத்திக்குப் பொருளாதார வளர்ச்சியை அடிப்படை யாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தி முதன்மையானது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை ஆகும். எனவே பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக சமூக அபிவிருத்தி கொள்கைகள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது சிங்கப்பூருடைய அனுபவத்தில் இலங்கையை தொடர்புபடுத்தி ஒப்பிட்டு அபிவிருத்தி புலமையாளர்களுக்கு கொண்டு வருவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமூக நலக்கொள்கைகள் மற்றும் சமூக சேவைகளை வழங்குவதில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இலங்கை முதலிடத்தில் இருக்கக் கூடியளவுக்கு உயர் ஸ்தானத்தில் இருக்கின்றது. இலங்கையின் இந்த அதீத சமூக அபிவிருத்தி தொடர்பாக புகழாரம் சூட்டுபவர்களும் இருக்கின்றார்கள். அதேநேரத்தில் விமர்சனம் செய்பவர்களும் இருக்கின்றார்கள். புலமையாளர்கள் தண்ணீர் போன்றவர்கள். தண்ணீரை வெவ்வேறு வடிவிலான போத்தலில் விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும்போது தண்ணீரின் வடிவங்கள் அவை சார்ந்த போத்தல்களின் வடிவங்களின் அடிப்படையில் வேறுபடுகின்றது. இதேபோன்று அபிவிருத்தியாளர்களும் அவர்களின் கல்விச் சூழலுக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் கடைப்பிடித்த சமூக நலத்திட்டங்களும் கொள்கைகளும் இலங்கையில் தமிழர்கள் இருந்த ஸ்தானத்தை சிங்களவர்களுக்கு வழங்குவதாக மேற்கொள்ளப்பட்டன என்பது கண்கூடு. இருப்பினும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இச்சமூக அபிவிருத்திக்கு பொருளியல் கோட்பாட்டு சாயம் பூசி, இதனை ஓர் வருமான மீள்பங்கீடு என ஆதாரம் தேடும் புலமையாளர் களே இலங்கையில் அதிகம் இருக்கின்றார்கள். உண்மையில் இலங்கை யின் இனமுரண்பாடு மற்றும் யுத்தத்திற்கு அடிப்படை காரணம் இந்த சமூக நலக்கொள்கைகள் என வாதிடமுடியும். ஓர் நாட்டின் சமூக நலத்திட்டங்களும் கொள்கைகளும் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு பல பாடங்களை சிங்கப்பூரிடம் இருந்து இலங்கை கற்றுக் கொள்ள முடியும்.

சிங்கப்பூரினுடைய சமூக அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமூக நலக்கொள்கைகளில் இருந்து இலங்கை மட்டும் அல்ல வளர்ச்சி அடைந்த பல ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் கூட பல பாடங்களை கற்றுக்கொள்ள முடியும். ஓர் அபிவிருத்திவாதத்தை அடைந்து கொள் வதற்கு சமூக நலக் கொள்கைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு இலங்கைக்கு சிங்கப்பூர் சிறந்த ஓர் முன் உதாரணம் ஆகும்.[95]

*(Feldstein, (1974), Mishra (1984) Pierson (1995) Buti Franco (1999)* போன்ற பொருளியல் அறிஞர்கள் மேலைத்தேச நாடுகளின் நலக் கொள்கைகளும் நலச் செலவீடுகளும் இந்நாடுகளில் வேலையின்மை மற்றும் வறுமைக்கு எவ்வாறு காரணமாகின்றன என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர். இந்நாடுகளில் சமூக நலக் கொள்கைகள் அபிவிருத் திக்கு அவசியமானவை. உலகத்திலே அபிவிருத்தியின் ஆரம்ப கட்டம்

---

[95] Singapore Provide a good example of a developmentalist approach to social welfare that successfully hormonisses economic and social objectives" S. Vasoo (2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேச குறிப்பாக மேற்கு ஐரோப்பா ஆகும். இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் பல நாடுகள் குடியேற்றத்தை கொண்டிருந்த பின்னர் பல நாடுகளிடம் இருந்து விடுதலை பெற்றன. மேற்கு ஐரோப்பாவின் வரலாறு அபிவிருத்தித் தந்திரோபாயம் மற்றும் பின்புலம் என்பன இன்றைய குறைவிருத்தி நாடுகளில் இருந்து முற்றிலும் வேறுபடுகின்றன. எனவே மேலைத்தேச நாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமூக நலக் கொள்கைகள் குறைவிருத்தி நாடுகளுக்கு பொருத்தமற்றவையாக இருக்கலாம் என்பது தெளிவாகின்றது. மேலைத்தேச நாடுகள் பல குறைவிருத்தி நாடுகளில் சமூக நலக் கொள்கைகள் மற்றும் அவை சார்ந்த நலத்திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைக்கப்படாதபோது சிங்கப்பூரின் சமூக அபிவிருத்தித் திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைக்கப் பட்டு வேகமான வளர்ச்சிக்கு துணை புரிந்துள்ளன. சிங்கப்பூரும் இலங்கையும் நீண்டகாலம் பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

இரு நாடுகளின் அரசியல் தலைவர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் தங்களுடைய கல்வியை, பட்டப்பின்படிப்பை மற்றும் பயிற்சிகளை பிரித்தானியாவிலே மேற்கொண்டு இருந்தனர். இவர்கள் பிரித்தானியாவில் தங்கள் நாடுகளின் அபிவிருத்திக்கான பிரித்தானிய அனுபவத்தை கற்ற காலமானது பிரித்தானியாவுக்கு வருமானத்தை மீள்பங்கீடு செய்த காலம் ஆகும். அதாவது நீண்ட காலம் பல வறிய நாடுகளில் செல்வத்தை சுரண்டி தன்னை வளம்படுத்திக் கொண்டிருந்த பிரித்தானியாவில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. தொழிற்கட்சியின் அபிவிருத்திக் கொள்கையில் சமூக நலத்திட்டங்கள் அவசியமாக இருந்தமை ஓர் கட்சி சார்ந்த இலக்காக மட்டுமன்றி பொருளாதாரத்தின் அபிவிருத்தி சார்ந்த காலத்தின் தேவை கருதிய ஒரு இலக்காக இருந்தது. ஒரு பொருளாதாரம் கணிசமான செல்வத்தை ஈட்டிய பின்னர் வருமான மீள்பங்கீடு அவசியமான ஒன்றாகும். எனவே பிரித்தானியாவுக்கும் வருமான மீள்பங்கீடு என்பது இரண்டாம் உலக யுத்தத்திற்கும் பின்னர் பொருளாதார பரிணாம அபிவிருத்தியில் ஒரு காலத்தின் தேவையாக இருந்ததுடன் அது தொழிற்கட்சியின் தொழிலாளர்கள் நலன் பேணும் சமூக நலத்திட்டக் கொள்கைகளுடன் இணங்கிச் செல்வதாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலக யுத்தத்துக்கு பின்னர் இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய பொருளாதாரங்கள் இருந்த பொருளாதார நிலையில் மற்றும் அவற்றின் தலாவருமான அடிப்படையில் இவைகளின் பொருளாதார அபிவிருத்தி இலக்கு வருமான மீள்பங்கீடு அல்ல. மாறாக வருமானத்தை உருவாக்குதல் *(Generating wealth)* ஆகும். எனவே இலங்கை மற்றும் சிங்கப்பூரின் அபிவிருத்திக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் பிரதான பொருளாதார இலக்கான செல்வத்தை உருவாக்குதல் என்ற நோக்கத்துடனான கொள்கை இவர்கள் பயிற்றப்பட்ட பிரித்தானிய நாட்டின் அபிவிருத்தி இலக்கான வருமான மீள் பங்கீடு கொள்கை (செல்வத்தின் மீள்பங்கீடு) என்பதுடன் முரண்பட்டு இருந்தது. பிரித்தானியாவில் அனேகமான கற்கைநெறிகள் அரசாங்க கொள்கையை (தொழிற்கட்சியின் கொள்கை) மட்டும் போதிக்கவில்லை. மாறாக அபிவிருத்திக் கோட்பாட்டில் செல்வத்தின் மீள்பங்கீட்டின் அவசியத்தையும் கற்பித்தன.

எனவே குறைவிருத்தி நாடுகளில் இருந்து பிரித்தானியாவில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள், பிரித்தானியாவின் கவர்ச்சிகரமான சமூகநலச் சேவைகளின் பக்கம் கவரப்பட்டனர். பனிப்போர் உக்கிரமாகிக் கொண்டிருந்த இக்காலத்தில் சமூக நலத்திட்டங்களை சோசலிசத்திற்கான ஓர் மாற்றுக் கொள்கையாக குறைவிருத்தி நாடுகள் கடைப்பிடிக்க தலைப்பட்டன. மேலும் ஜனநாயக சுதந்திரத்தையும் பலகட்சி ஆட்சிமுறையையும் விரிவாக்கிய இலங்கை போன்ற நாடுகளின் அரசியல்வாதிகளுக்கு இந்தக் கொள்கை மிகப்பெரிய ஒரு வரப்பிரசாதமாக அமைந்து சமூக நலத்திட்டங்கள் ஊடாக அவர்களுடைய வாக்கு வங்கியை பலப்படுத்தியுள்ளார்கள். ஆனால் உண்மையில் இந்த நலத்திட்டங்களான இலசவக் கல்வி, இலவச மருத்துவம், உணவு மானியம், இலவச சுகாதார சேவைகள், இலவச வீட்டு வாடகை, இலவச பாடப்புத்தகம், இலவச சீருடை மற்றும் ஏனைய சமூக நலச் சேவைகள் வறிய, செல்வத்தை உருவாக்க தேவையான அடிக்கட்டுமானங்களை கொண்டிருக்காத இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் நீண்டகால அபிவிருத்தியை மிகவும் கடுமையாகப் பாதித்து நெருக்கடிகளைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியா செல்வத்தை மீள்பங்கீடு செய்த காலம் இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு செல்வத்தை உருவாக்க வேண்டிய காலமாக இருந்தது. இந்த யாதார்த்தத்தை நன்றாக விளங்கி நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப நலக்கொள்கைகளை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசியலில் தலைமைத்துவத்திற்குரியதாகும். அவ்வாறான தூர நோக்குள்ள பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டிய பொறுப்பும் அதற்கான கல்விப் பின்புலத்தையும் எந்த அரசியல் தலைமைத்துவம் கொண்டிருந்ததோ, அவர்கள் நாட்டின் அபிவிருத்தியை உறுதியான அடித்தளத்தில் இருந்து முன்னெடுத்துச் சென்றார்கள். சிங்கப்பூரில் லீக்கு இந்தப் பண்பு இருந்தது. இலங்கையில் இவருடைய காலத்தில் இருந்த தலைவர்களுக்கு இந்தப் பண்பு காணப்படவில்லை.

பிரித்தானியாவில் இருந்த பல்கலைக்கழகங்கள் கடந்த காலத்தைப் பற்றி அதிகம் மீட்டு பார்ப்பவர்களாகவும் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றி அதிகம் அக்கறை கொள்ளாதவர்களாகவும் காணப்பட்டனர். அமெரிக்க பல்கலைக்கழகங்கள் இப்பண்புக்கு மாறுபட்டன. அவை கடந்த காலத்தைவிட எதிர்காலத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தன. லீ இந்த யதார்த்தத்தை புரிந்து நிகழ்கால மற்றும் எதிர்காலத்தை பற்றிய பொருளாதார இலக்குகளையே கவனத்தில் கொண்டார்.[96] எனவே இரு நாடுகளின் அபிவிருத்தியும் வேறுபட்ட திசையில் இலங்கை சமூக ஜனநாயக நலச் சேவை அரசாகவும், சிங்கப்பூர் பொருளாதார உள்கட்டுமானங்களையும் சார்ந்த அபிவிருத்தி அரசாகவும் சென்றது. இங்கு கருத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் சிங்கப்பூர் சமூகநலத்திட்டங்களையும் அபிவிருத்திவாதத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்தமை ஆகும்.

அபிவிருத்திவாதிகள் *(Developmentalists)* சமூக நலக்கொள்கைகளை பொருளாதார அபிவிருத்தியை மையப்படுத்தி நீடித்து இருக்கக் கூடிய

---

[96] "Academics in Cambridge, Massachusetts were different from those in Cambridge, England. British dons of the 1940s to 1960s were happy to be in their ivory tower, separated from the hurly-burly of London and Westminster. American professors on other hand, increased their statue by being associated with the government. In the Kennedy administration many of the professors would take the Boston New York-Washington shuttle. The forte of British academics of that period was in rigorous study of the past, not of the present or the future, which involved conjecture. They did not have direct interaction with business and industry that Harvard Business School provided. The American unlike British did not combine themselves to a critical examination of the past. Investigating the present to predict the future is strength of American scholarship" Lee Kuan Yew, (2011) P.460



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலும் மற்றும் இக்கொள்கைகள் மக்களுடைய உற்பத்தி ஆற்றலை அதிகரித்து அதனூடாக உற்பத்தித்திறனை அதிகரிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் நீண்டகால நோக்கில் உறுதியான அபிவிருத்தியை அடையும் என நம்பினார்கள். இது மேலைத்தேச சமூக நலவாதிகளின் தனித்து வருமானத்தை மாற்றீடு செய்தல் என்ற கொள்கையில் இருந்து வேறுபடுகின்றது.[97] சிங்கப்பூரின் சமூக நலக் கொள்கையானது கண்மூடித்தனமாக பிரித்தானியா அல்லது மேலைத்தேச நாடுகளின் நலனியல் கொள்கை சார்ந்து இருக்கவில்லை. சமூகத்தேவைகளையும் வருமான மீள்பங்கீட்டையும் வலியுறுத்தும் மேலைத்தேசக் கொள்கைக்கு மாறாக பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட நலக்கொள்கை பின்பற்றப்பட்டது.

### மத்திய சேமலாப நிதியம் (CPF)

சிங்கப்பூர் ஊழியர்களை வினைத்திறமையான மக்களாக மாற்றுவதற்கு கையாண்ட உத்திகளில் ஒன்று மத்திய சேமலாப நிதியைக் கொண்டு வீடுகளை வாங்க அனுமதித்தமை ஆகும். சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்தபோது ஊழியர் சேமலாப நிதிக்கு மக்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது. 1955ல் தொழில் வழங்குனர் 5% தையும் தொழிலாளி 5% வீதத்தையும் சேர்த்து 10% CPF ற்கு வழங்கியிருந்தன. இவ்வீதம் 1965 ற்குப் பின்னர் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு 1985ல் 25+25=50% மாக இருந்தது. ஓர் உழைப்பாளி தனது சம்பளத்தில் அரைப்பங்கினை ஊழியர் சேமலாப நிதியில் சேமித்தது இவர்களுடைய சேமிப்பு ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றது. தொழில் அமைச்சர் தொழிலாளர்கள் அதிகளவு தொகையை நுகர்வுக்கு எடுத்துச் செல்ல லீயை வேண்டினார். ஆனால் லீ உடன்படவில்லை.[98] ஊழியர் சேமலாப நிதியின் பங்கினை சேமிப்பினைத் தூண்டி அதை குடியிருப்பு மனைகளில் முதலீடு செய்யத் தூண்டினார். ஏனைய நாடுகளின்

---

[97] "from the beginning the peoples action party (PAP) focused its attention on Economic Development and little resources their allocated for social welfare in addition the party the leadership took a different approach to social policy from that adopted in Britain and other Europian nations. Instead of Using social policy as mean of addressing social needs and redistributing income, the party implement social policies that were intended social policies that were intended to serve the interests of Economic development"Vasoo. S.and Lee.J (2001)

[98] "while provident funds in other counties usually function only to provide retirement income, singapoor's CPF facilitated a huge housing program, Tranforming a huge housing program, Tranforming Singapore in the process both Physically and Socially". Vasoo. S.and Lee.J (2001) P.278



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமலாப நிதி அவர்களின் ஓய்வுக்காலத்தில் அவர்களின் சமூக நலச் சேமிப்பு செலவுக்கான சேமிப்பாக இருக்கின்றபோது சிங்கப்பூரில் இது பெரியளவான வீடமைப்புத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டு ஊழியர்கள் வேலை செய்கின்ற காலத்திலேயே சொந்த வீட்டில் சௌகரியமாக வாழ வழியமைத்துக் கொடுத்ததுடன் ஓர் வீட்டுக்கு சொந்தக்காரராக்கத் தூண்டியது. சிங்கப்பூரில் அரசாங்கத்தால் 80% மான மக்களுக்கு சொந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இந்த 80 சதவீத மக்களின் வீட்டு உடைமையில் அரசாங்கம் ஒரு டொலரைக்கூட இலவசமாகக் கொடுக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வீடு தூய தனியார் பண்டமாகும். சந்தைவிலையில் மக்களுக்கு கடன் வசதி செய்து கொடுத்ததே அரசாங்கத்தின் மிகப்பெரிய பங்களிப்பு ஆகும். இக்கொள்கையானது தொழிலாளர்களை கடுமையாக உழைக்கத் தூண்டி நாட்டின் உற்பத்தியை அதிகரித்தது.[99]

சிங்கப்பூரின் மத்திய சேமலாப நிதியம் மக்களை சுயமாக சொந்தக் காலில் நிற்பதற்காக மக்களுக்காக சுயமாக வடிவமைக்கப்பட்டது. இதில் அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பு பூச்சியமாகும். சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஒரு பரம்பரையுடன் முற்றுப் பெற்றது. அடுத்த இளமையான பரம்பரைக்கு அது சுமையாக இருக்காத வண்ணம் திட்டமிடப்பட்டது. 1990 இன் நடுப்பகுதியில் வேலை செய்வோர் 18.5 வீதம் வேலை கொடுப்போர் 21.5 வீதத்தையும் மொத்தமாக 40 வீதத்தைச் செலுத்தினர்.

சிங்கப்பூரில் வீடமைப்பு அபிவிருத்தி சபையும் (HDB) மத்திய சேமலாப நிதியமும் பொருளாதார அபிவிருத்தியை தூண்டக்கூடிய வகையில் சமூக அபிவிருத்தியுடன் இணைக்கப்பட்டிருந்தன. 1968இல் EPF கொண்டு வீடு வாங்கலாம் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன் காரணமாக ஏனைய நாடுகளில் வீடமைப்புத் திட்டத்திற்கென அரசு வருமானத்தில் செலவு செய்யும் பெரும்பகுதிச் செலவு போன்ற நிதியிழப்பு தவிர்க்கப்பட்டது. மாறாக அரசு அதிக இலாபம் ஈட்டியது.

[99] "while provident funds in other counties usually function only to provide retirement income, singapoor's CPF facilitated a huge housing program, Tranforming a huge housing program, Tranforming Singapore in the process both Physically and Socially". Vasoo. S.and Lee.J (2001) P.278



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் தங்களது கடின உழைப்பால் வீடு ஒன்றை சொந்தமாக்கிக் கொண்டனர்.[100] CPF மற்றும் ஏனைய சேமிப்பு திட்டங்கள் மூலம் அரசு திரட்டிய நிதியானது நன்கு திட்டமிடப்பட்டு நீண்டகால முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டன. உள்கட்டு மானங்களான வீதிகள், விமான நிலையங்கள், கடுகதி வீதிகள், புகையிரதப் பாதைகள், துறைமுகங்கள், மின்சார நிலையங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இம்முதலீடுகள் அரசுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுத்து வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை நீங்கி பணவீக்கம் குறைந்தது.[101]

இலங்கை உட்பட்ட பல குறைவிருத்தி நாடுகளிலும் மேலைத்தேச அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பொருளாதார அபிவிருத்தியில் இருந்து சமூகநல அபிவிருத்தி வேறாக்கப்பட்டிருக்கிறது. சமூகநலக் கொள்கையானது சமூக தேவைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதல்ல. மாறாக இக்கொள்கையானது சமூக தேவைகளை நிறைவேற்றுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதமாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. சிங்கப்பூரில் சமூக நலக் கொள்கையானது சமூக தேவைகளை நிறைவேற்றுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதமாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

உதாரணமாக சிங்கப்பூரில் உருவாக்கப்பட்ட வீடுகள் நாட்டின் மூலதன இருப்பை அதிகரித்து வளர்ச்சியைத் தூண்டின. அதேநேரத்தில் இக்கொள்கையால் 80 வீதமான சிங்கப்பூர் மக்கள் சொந்த வீட்டினை உடைமையாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொண்டார்கள். சமூகநலக் கொள்கையானது வளர்ச்சியை விரைவாக்கி சமூக மேம்பாட்டையும் உறுதிப்படுத்தியது.

இலங்கையில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட சமூகநலத் திட்டங்களை அடையாளப்படுத்துவது கடினமாகும். உதாரணமாக இலங்கையில் இலவசமாக வழங்கப்படும் உயர்தர வகுப்பு இலவசக்

---

[100] "Singapore's housing policy enhances social integration a dofferent income ethnic groups one housed togetherand They live and interact with one another.This agenda for social integration is critical as Singapore is multy – racial society and need to be prevent gettos has been an important policy objectives" Vasoo. S.and Lee.J (2001) P.280

[101] " All these helped the government to pay for infrastructure : roads, bridges, airports, containers ports, power station, reservioirs, and a mass rapid trasit system. By avoiding wastful expenditure, we kept inflation low and did not borrow foreign funds." P. 106, Lee Kuan Yew(2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி மூலம் பல்கலைக்கழகத்திற்கு எத்தனை பேர் புகுகிறார்கள் என நோக்கும்போது, ஏறத்தாழ 90 வீதமான மாணவர்கள் தனியார் கல்வி ஊடாகவே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றார்கள். இவ்வாறு இலவசக் கல்வி என்ற பெயரில் தனியார் கல்வி ஊடாக விவசாய பின்னணியை கொண்ட குடும்பத்தில் இருந்து விவசாய பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவன் பல்கலைக்கழகம் புகுவதற்கு முன்பு தனது குடும்பத்துடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறான். இலவச பல்கலைக்கழக கல்வியைப் பயின்று B.Sc பட்டத்தை பெற்றவுடன் வங்கிகளிலும் அரசாங்கத்திலும் வேலைவாய்ப்புத் தேடி அலைகின்ற பாரிதாப நிலையை நாம் நடைமுறையில் பார்க்கின்றோம். ஆரம்பக் கல்வி தொடங்கி உயர்கல்விவரை இலவசமாக அரச செலவில் படித்துவிட்டு குடும்ப பின்னணியில் ஏற்கனவே செய்த தொழிலையும் புறக்கணித்து விட்டு அரசாங்கத்தின் கைகளை எதிர்பார்த்திருக்கும் ஏழ்மைப்பட்ட பட்டதாரிகளையே இன்றைய இலவச உயர் கல்வி உருவாக்கி இருக்கின்றது. அரசாங்க பொது நிறுவனங்கள் மற்றும் திணைக் களங்களில் பட்டதாரிகளுக்கு வேலை இல்லையாயின் இவர்களின் நிலைமை மிக மோசமானதாக இருக்கும்.

எனவே இலவசக் கல்வியின் தரம் இலங்கையில் இந்நிலையில் இருக்கின்றது. ஏனைய சமூகநலச் சேவைகளிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இலங்கையின் சமூக நலச் சேவைகள் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றன என்பதை உறுதியாக நிரூபிப்பதற்கான ஆய்வுகள் எதையும் இலங்கையில் காணமுடியாது.

**சமூக அபிவிருத்தியியல் அரசு** *(Social Developmental State)*

அபிவிருத்தி அரசு சமூக நலச் செலவீடு அபிவிருத்தி இலக்குகளுடன் இணைகின்றபோது அதனை சமூக அபிவிருத்தியியல் அரசு என அழைக்கப்படுகின்றது. சமூக நலச் செலவீடுகள் நாட்டின் தனிமனிதன் மற்றும் ஒட்டுமொத்தமான நாட்டினதும் உற்பத்தி ஆற்றலை அதிகரித்து நாட்டின் மொத்தத்தேசிய வருமானத்தை அதிகரிப்பதாக அமைய வேண்டும். சிங்கப்பூரின் சமூக நலக்கொள்கை அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் ஊடாக சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்தது. இலங்கையின் சமூக நலக்கொள்கையும் அபிவிருத்திக் கொள்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட நிலையில் பயணிக்கின்றன. இரண்டுக்கும் இடையில் இணைவு காணப்படவில்லை எனலாம்.

*Castells, Goh* மற்றும் *Kwok (1990)* சிங்கப்பூரிலும் ஹொங்கொங்கிலும் 1970 களில் பொது வீடமைப்புக் கொள்கையானது தொழிலாளர்களுக்கு ஓர் முக்கியமான சமூகக் கூலியை கொடுத்து அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்ததாக குறிப்பிட்டுள்ளனர்.[102] சிங்கப்பூரின் வீடமைப்பு நிகழ்சித்திட்டம் இவ்வாறு ஒரு சமூகநலத் திட்டமாகவும் அதேநேரத்தில் நாட்டின் உற்பத்தித்திறனை அதிகரித்து, மூலதனவாக்கத்தை அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாகப் பங்களிப்பு செய்துள்ளது. சிங்கப்பூரின் வீடமைப்புக்கான முதலீடு மொத்த மூலதன வாக்கத்தில் 8 - 10 சதவீத பங்களிப்பைச் செய்துள்ளது.

எது எவ்வாறு எனினும் சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் அரசியலில் பதவியை தக்க வைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமெனவும் இது சமூக மேம்பாட்டையோ அல்லது சொத்துக்களின் பெறுமான அதிகரிப்பையோ ஏற்படுத்தவில்லை என விமர்சனம் செய்பவர்களும் இருக்கின்றார்கள் *(Chua 1997)*.[103]

## இலங்கையின் சமூக நலன்புரிக் கொள்கைகளும் அதன் தாக்கங்களும்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முதல் நிலையில் சர்வசன வாக்குரிமையைக் கொண்டிருந்த இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை நலச் சேவைகளும் மற்றும் நலன்புரிக் கொள்கைகளும் பெரிதும் பாதித்தன. இது சுதந்திரத்துக்கு பின்னர் பின்பற்ற முற்பட்ட முதலாளித்துவ இனத்துவ வர்க்க நலன் பேணும் கொள்கைக்கு மேலும் உறுதுணையாயிருந்தது. இலங்கை ஏறக்குறைய 1930கள் முதல் இச்சேவைகளை படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருந்தது.

இலங்கை ஒரு நலன்புரிவாத அரசாக உருப்பெறுவதென்பது 1931ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒரு வளர்ச்சியாயிருந்தது என நாம் எடுத்துக்காட்ட முடியும்.

---

[102] Public Huousing Policy in both Singapore and Hong Kong during (1970) Provided important social wages for the wokers to regenerate Productivity. Provision at home owernership to the population helped enhanced the work ethnic and reinforced family responsibility" Vasoo. S.and Lee.J (2001) P.280, P.281.

[103] "Singaporean Housing system has sought to depoliticize the population by exchanging social goods for political legitimacy" Vasoo. S.and Lee.J (2001) P.280, P.281.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சிங்கப்பூரில் இருந்து வேறுபடுகின்றது. நலன்புரிச் செலவுகள் நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்தியதோ அல்லது இல்லையோ, அரசியல்வாதிகள் ஆட்சிக்குவர இந்நலன்புரிவாதம் அவசியமாயிருந்தது.

இலங்கைக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தின் தன்மையானது அரசாங்கங்களை பொதுமக்களின் ஆதரவில் நேரடியாகத் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியிருந்தது. பொது மக்களின் வாக்குரிமையுடன் இணைந்த கட்சிமுறை இன்னமும் வளர்ச்சியடையாத ஒரு நிலையில் மக்கள் நேரடியாக உணர்ந்து அனுபவிக்கக்கூடிய சில வசதிகளை அவர்களுக்கு அதுவும் குறிப்பாகக் குறைவான வாழ்க்கை மட்டத்திலிருந்த ஏராளமான பெரும்பான்மை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே அவர்களைக் கவரக் கூடிய முக்கிய வழியாகவிருந்தது.

மேலும் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குரிமையின் மத்தியிலும் நாடு இன்னமும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் மக்கள் பொருளாதார அலுவல்களில் நேரடியாகவோ அல்லது பரந்தளவிலோ ஈடுபடக்கூடியவகையிற் பொருளாதாரத்தில் அமைப்பு ரீதியான மாற்றங்களெதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. எனவே மக்களை மகிழ்விக்கக் கூடிய நன்மைகள் சிலவற்றை நலச்சேவைகளினூடாக வழங்குவது அரசாங்கத்தைப் பொறுத்து பெறுமதி வாய்ந்த ஒன்றாக இருந்தது. பெரும்பாலான நாட்டு மக்கள் தமது வாழ்க்கை முறையிற் சாதகமான திருப்பு முனையெதனையும் சுதந்திரத்தின் ஊடாக எதிர்பார்க்க முடியவில்லை. அதன் கருத்து அவர்கள் மேற்கொண்டிருந்த பொருளாதார அலுவல்களிலும் பெரியளவான மாற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதேயாகும். எனவே சமூக நலன்புரி சேவைகளை முன்போலவே தொடர்ந்து கையாள வேண்டியிருந்தது. இவற்றுக்கு மேலாக சுதந்திரம் பெறப்பட்ட விதமும் அதனை இலங்கை அனுபவிக்க முற்பட்ட விதமும் சமூக நலன்புரிச் சேவைகளை இன்னொரு வகையிலும் அவசியமாக்கியிருந்தன எனலாம்.

பொது மக்களிடமிருந்து அரசியல் உயர் வர்க்கத்தினர் என்ற வகையில் துண்டிக்கப்பட்டிருந்த இந்த அரசியல் தலைமை பொது மக்களை நாடிச் செல்ல வேண்டியிருந்த போது எந்த ஒரு நீண்ட காலத்தை நோக்கமாககொண்ட கொள்கையையும் அதன்வழியான பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகளையும் மக்கள் ஏற்றுக்கொள்வாரென்ற நம்பிக்கையிற் செல்ல முடியவில்லை. அதற்குப் பதிலாக மக்கள் உறுதியாக வரவேற்கக் கூடியதும் மக்களை உடனடியாக மகிழ்விக்கக் கூடியதுமான குறுங்கால நலன்களைக் கருத்தில் கொண்ட திட்டங்கள் சிலவற்றுடன்தான் அவர்களை சந்திக்க வேண்டியிருந்தது. அரசியல்வாதிகளுக்கு சமூக நலன்புரிச் சேவைகள் மிகச் சிறந்த அதற்குரிய சாதனமாக செயற்பட முடிந்தன.

மேலும் மேற்குறித்தது மாத்திரமன்றிக் குடியேற்ற நாட்டுவாதம் அறிமுகமாவதற்கு முந்திய சிங்கள மன்னராட்சிக் காலத்தில் நாட்டு மக்களின் பாதுகாவலன் என்ற முறையில் அவர்களுக்கு வேண்டிய பலவித அத்தியாவசியத் தேவைகளையும் வழங்குவதற்கான பொறுப்பினை மன்னனே ஏற்றுக்கொண்டிருந்தான். இதில் இரண்டு சேவைகள் முக்கிய இடத்தைப் பெற்றன. முதலாவது, உள்நாட்டு விவசாயத்துக்கு அதிக சேவையை செய்து இருத்தல் ஆகும். இரண்டாவது பௌத்த மதத்துக்கு தொண்டாற்றியிருத்தல் வேண்டும். இப்போது குடியேற்றநாட்டு வாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் மீண்டும் இந்த மரபினைப் புதுப்பித்து அத்தகைய வசதிகளை நலச் சேவைகளினூடாகச் சமூகத்திற்கு வழங்க வேண்டுமென்ற சிந்தனையும் அவ்வாறான சேவைகளை அரசாங்கம் நீடிப்பதற்கான முடிவைச் செல்வாக்கினுக்குட் படுத்தியிருக்கலாம் எனலாம். இலங்கை சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டிருந்தபோது சமூக நலன்புரி நடவடிக்கைகளிலிருந்து விடுபட முடியாத ஒரு கட்டத்தை அரசாங்கம் அடைந்திருந்ததெனலாம். அதனாலேயே சுதந்திர இலங்கையின் முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே (1947-48) "இலவசக்கல்வி, இலவசப் பால் விநியோகம், குழந்தைகளுக்கான இலவச உணவு, அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியம் போன்ற முன்னேற்றம் மிக்க சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தவோ அல்லது இல்லாமற் செய்யவோ போவதில்லை என நிதி மந்திரி பிரகடனப்படுத்தினார். 1948/49 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க மொத்தச் செலவீட்டில் ஏறக்குறைய 40 சதவீத சமூக சேவைகளுக்கெனவே ஒதுக்கப்பட்டது. இதிலும் பெரும் பகுதி உணவு விநியோகத்திற்கான மானியமாகவே சென்றது. உதாரணமாக 1951-52 நிதியாண்டில் மொத்தம் ரூபா 257 மில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுக் குறைநிலை ஏற்பட்டவிடத்து. அதில் ரூபா 245 மில்லியன் வரை உணவு மானியமாகவே சென்றதாக மதிப்பிடப்பட்டது.

அரசியல்வாதிகள் பொருளாதார நிபுணர்கள் ஊடாகவும் அவை சார்ந்த புத்திஜீவிகள் ஊடாகவும் சமூக நலன்புரி நடவடிக்கைகள் "முன்னேற்றம் மிக்க சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்" என வர்ணிக்கப்பட்டது மாத்திரமன்றி அவற்றை வழங்குவதன் மூலம் இலங்கை தன்னை நியாயத்துடனும் பெருமையுடனும் ஒரு "சமூக சேவை அரசு" என அழைத்துக்கொள்ளலாமெனவும் எடுத்துக் கூறப்பட்டது. பொதுமக்களைப் பொறுத்தவரை அவர்கள் இவற்றை அனுபவிப்பதன் ஊடாக சந்தோசம் அடைந்தனர். இவை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையை மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விடயத்தில் மிக முன்னணிக்கு எடுத்துச் சென்றிருந்ததென்பதிலும் சந்தேகமில்லை.

ஆனால் இந்நிலைமை மக்களின் தனிப்பட்ட ஆற்றலை மந்தப்படுத்தி உற்பத்தித்திறன் அற்ற என்றுமே அரசாங்கத்தின் கைகளை எதிர்பார்த்து இருக்கும் வினைத்திறன் இல்லாத மக்கள் கூட்டத்தை உருவாக்கியுள்ளது. அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டிருக்கும் தராதர நிலையைப் புலப்படுத்தும் நவீன குறிகாட்டியாகிய பௌதீக வாழ்க்கை நிலைக் குறிகாட்டி *(Physical Quality of Life Index)* 1921ஆம் ஆண்டு 18.9 லிருந்து 1946 இல் 45 ஆக உயர்ந்து இருந்தது. இலங்கையின் 1946ஆம் ஆண்டின் நிலை இந்தியாவில் 1980 அளவிலேயே அடையப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.[104] ஆனால் இக்குறிகாட்டி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்காற்றியதா என்பது கேள்விக்குறியே. உதாரணமாக இலவசக் கல்வியினால் எத்தனை மாணவர்கள் இன்று பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றார்கள்?

உதாரணத்துக்காக இலங்கையில் சமூக நலச் செலவீடுகளால் நாம் சமூக அபிவிருத்தியில் ஜப்பானுக்கு அண்மித்துவிட்டோம் என பெருமிதம் அடைகின்ற ஆய்வாளர்களும் நம்மிடையே உள்ளனர். நாம் கற்ற கல்வியறிவால் நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு என்ன பங்களிப்புச் செய்துள்ளோம்? ஓர் பட்டதாரிக்கு பல இலட்சம் ரூபாவை அரசாங்கம்

---

[104] பார்க்க வி.நித்தியானந்தன் (1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவு செய்த பின்னரும் அவருக்கு அரசாங்கம் வேலை வழங்க வேண்டிய நிலையில் உள்ளது. அவர் பட்டதாரி ஆகியவுடன் அவர் ஏற்கனவே செய்து வந்த சுயதொழிலை கைவிட்டு விட்டு அரசியல் கட்சியுடன் இணைந்து வேலை வாய்ப்புக்களுக்கு போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. ஏனைய இலவசத் திட்டங்களையும் சமூகநலச் செலவீடுகளையும் நோக்கினால் அவையும் உருப்படியான எதையும் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யவில்லை. 60 வயதில் இறப்பவர்களுக்கு சமூக நலச் செலவீடுகளைச் செய்து 80 வயது வரை வாழவைக்க வேண்டுமா? ஆனால் அச்செலவீடுகளிற்கான மூலம் உள்நாட்டில் நிலைத்து இருக்க வேண்டும். வெளிநாடுகளில் கடன்களையும் நன்கொடைகளையும் பெற்று இவ்நீடித்த ஆயுட்காலத்தால் நாம் என்ன பயனைப் பெற்றோம். அபிவிருத்தியாளர்கள் என தங்களை தாங்களே கூறிக்கொள்பவர்களுக்கு புள்ளி விபர ரீதியாக ஆயுட்காலத்தையும் எழுத்தறிவையும் சிசு மரண வீதத்தையும் எடுத்துக்காட்டுவதற்கும் மற்றும் அரசியல்வாதிகளின் வாக்கு வங்கியை பலப்படுத்துவதற்கும் வழியமைத்ததே ஒழிய அபிவிருத்தியின் அடிக்கட்டுமானத்துக்கு (வளர்ச்சிக்கு) இது பங்களிப்புச் செய்யவில்லை என்பது எனது வாதமாகும்.

இவ்வாறான முரண்பாடுடைய அபிவிருத்தி சிந்தனை மேலைத்தேச முறையில் அமைந்த ஜனநாயக மரபையும் சமூக நலக் கொள்கைகளையும் பின்பற்றியதால் ஏற்பட்டதாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகள் குறிப்பாக NICs அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தில் இந்த நலன்புரி வாதத்தில் இருந்து விலகி பௌதீக மூலதனவாக்கத்தில் கவனம் செலுத்தின. குறிப்பாக சிங்கப்பூர் இந்நிலையில் இருந்து வேறுபட்டுச் சென்றது. இவ்வாறு கிடைக்கப் பெற்ற மூலதனவாக்கத்தால் கிடைக்கப்பெற்ற பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு பின்னர் சமூக நலச் செலவீடுகளை செய்தனர். நலக்கொள்கைகள் மக்களின் தனிப்பட்ட ஆற்றலை மழுங்கடிப்பதாக லீ உறுதியாக நம்பினார்.[105]

---

[105] "Watching the ever-increasing costs of the welfare state in Britain and Sweden, we decided to avoid this debilitating system. We noted by the basic duties of the head of the family, the drive in the people weakened. Welfare undermined self- reliance. People did not have to work for their families' well-being. The handouts become a way of life. The downward spiral was relentless as motivation and productivity went down. People lost the drive to achieve because they paid too much in taxes. They become dependent on the state for their basic needs" p. 104, Lee Kuan Yew (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வழங்கப்பட்ட நலன்புரி சேவைகள் ஊடாக நடுத்தர, தாழ்மட்ட வகுப்பினரின் அரசியல் ரீதியான ஆதரவைக் கோரி நின்ற போது அதன் வழி இடதுசாரிக் கட்சிகள் அவர்கள் மத்தியிற் செல்வாக்குப் பெறுவதைத் தடுத்து அதனைத் தம்மை நோக்கித் திருப்பி விடக்கூடிய வாய்ப்பும் அரசாங்கத்திற்கிருந்தது. அதனாலேயே சமூக உதவிச் செலவினங்களை ஒரு தவறான கொள்கையென ஆரம்பம் முதல் மத்திய வங்கி சுட்டிக்காட்டிய நிலையிலும் இக்கட்டான சில நெருக்கடிகள் தோன்றும்வரை அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டவில்லையெனலாம். கடந்த காலத்தில் இச்சமூக நலச் சேவைகள் பெற்ற இடத்தை 1990க்கு பின்னர் பாதுகாப்புச் சேவை பெறுகின்றது. பெருந்தொகையான கிராமிய சிங்கள இளைஞர்களுக்கு பாதுகாப்புச் சேவையில் நிரந்தர அரச நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. நலன்புரிச் சேவைகள் எதுவித பாகுபாடுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவாக வழங்கப்பட்டவிடத்துத் தம்மிலும் தாழ் நிலையிலிருந்த வர்க்கத்தினர் பெற்றுக்கொண்ட அதேயளவான நன்மைகளை உயர் வகுப்பினரும் அனுபவிக்க முடிந்தது. அதனால் பாதுகாப்புச் சேவை மற்றும் நலன்புரிச் சேவை ஆகிய இரண்டையும் வழங்குவதன் மூலம் உயர் வகுப்பினருக்கு எதுவித தேறிய நட்டமும் ஏற்படவில்லை. ஆகவே அவை குறைந்தது அப்போதைய நிலையிலாவது ஏனைய வர்க்க நலன் கருதிய முயற்சிகளுடன் இணைந்த வகையில் உயர் வகுப்பினரின் நலன்களை மேம்படுத்துவதற்குப் பெரிதும் உதவுவதாகக் காணப்பட்டன. இது விடயத்தில் உணவு மானியம், ஏனைய செலவினங்களை விட முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது.

உணவு மானியத்தின் பிரதான அம்சம் யாதெனில் அது திறந்த சந்தை விலையைவிட குறைவான ஒரு விலையில் ஒரு தொகை உணவுப் பண்டங்களை நுகர்வோருக்குப் பங்கீடு செய்வதேயாகும். ஏனைய பண்டங்களும் இதில் உள்ளடங்கியிருந்த போதும் அரிசியைப் பொறுத்தவரையிலே உணவு மானியம் பிரதானமாகச் செயற்படுத்தப்பட்டது. எமது நோக்கில் உணவு மானியத்தின் மூலம் ஏற்பட்ட பிரதான தாக்கம் யாதெனில் அது உள்நாட்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தோருக்கும் தூண்டுதலை பெருமளவு குறைத்து விட்டமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் உணவிலான மானியத்தை நுகர்வோருக்கு வழங்கி அரிசியின் விலையைக் குறைத்தது மாத்திரமன்றி அவ்விலையில் ஒரு குறிப்பிட்ட தொகை அரிசியை ஒவ்வொரு வாரமும் நிரம்பல் செய்யவும் முன்வந்ததால் உள்நாட்டு அரிசி பற்றாக்குறையாகவிருந்தவிடத்துக் கணிசமானளவு அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியும் நேரிட்டது. விலையின் மீதான மானியம், அரிசி இறக்குமதி என்ற இரண்டும் சேர்ந்து அரிசிக்கான திறந்த சந்தைவிலையை அமுக்கிவிடக் கூடியனவாயிருந்தது.

உதாரணமாக ஏறக்குறைய ஒரேயளவு தொகை அரிசி இறக்குமதிக்கான பெறுமதி 1951 ஆம் ஆண்டு மொத்தம் ரூபா 236.2 மில்லியனிலிருந்து 1952 இல் ரூபா 328.7 மில்லியனாக அதிகரிக்க அதே காலப்பகுதியில் உள்நாட்டு அரிசியின் திறந்த சந்தை விலை கொத்து ஒன்றிற்கு 75 சதத்திலிருந்து 73 சதமாகக் குறைவடைந்திருந்தது (பார்க்க வி.நித்தியானந்தன் (1989). உலக சந்தையில் அரிசியின் விலை அதிகரித்துச் சென்ற நிலையிலும் உள்நாட்டில் விலை வீழ்ச்சியடைந்தமையை இது புலப்படுத்துகின்றது.[106] இது உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு தூண்டுதலாக எந்த வகையிலும் செயற்பட்டிருக்க முடியாது. ஆனால் அதன் மூலம் தவறான முறையில் ஏற்பட்டிருக்கக் கூடிய தாக்கங்களைத் தவிர்க்கும் வகையில் 1948 ஆம் ஆண்டிலேயே உத்தரவாத விலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதன் கீழ் திறந்த சந்தைவிலைக்குச் சமமான ஒரு விலையை நிர்ணயித்து அவ்விலையில் குடியான்களின் நெல் அனைத்தையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் முன்வந்தது. சிறந்த நெல் உற்பத்திப் பிரதேசங்களாகிய மட்டக்களப்பு, பொலநறுவை போன்றவற்றில் மொத்த உற்பத்தியின் 60 முதல் 65 சதவீதம் வரை விலைத் திட்டத்துக்குப் புறம்பாகவே விற்பனை செய்யப்படுவதாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

உணவு மானியம் என்பது இரண்டாம் உலக யுத்த நிலைமைகளினால் உந்தப்பட்டுத் தற்செயலாகவே அமுலுக்கு வந்ததொன்றாயிருந்த போதும் அரசாங்கத்தினாற் பாதுகாக்கப்பட்டு 2009 உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த நிலையிலும் இது தொடர்கின்றது. இலங்கையில் இதன் ஆதரவில் தங்கியிருக்கும் சிற்றுடைமைக் குடியான்கள் வர்க்கமொன்றை

---

106 பார்க்க வி.நித்தியானந்தன் (1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதில் இது பெரிதும் உதவியாயிருந்ததென்பதை மறுக்க முடியாது. ஏற்கனவே குடியேற்ற திட்டங்களின் வழி சிறிய பரப்புடைய நிலங்களின் சொந்தக்காரராக மாற்றப்பட்டிருந்த குடியான்கள் அரிசிக்கான மானிய விலை, அதன் இறக்குமதி, 1978 க்கு பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை என்பவை காரணமாகத் தமது பிரதான தொழில் மூலம் உற்பத்தியைப் பெருக்கி வருமானத்தை விரிவாக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு இடமளிக்கப்படவில்லை. அதன் விளைவாகக் குடியான்கள் என்ற தரத்தினின்றும் அவர்கள் விடுபடுவதும் தடுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கான உற்பத்திக்கான தூண்டுதல் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் அவர்களில் பெரும்பாலோர் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு அல்லது அதற்கு சற்றுக் கூடுதலாகவே வெளியீட்டில் ஈடுபடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டி ருந்தனர். உத்தரவாத விலைத்திட்டம் இந்தச் செய்முறையைத் தடுப்பதற் கான ஒரு கருவியாகக் கருதப்பட்டபோதும் அது கொண்டிருந்த குறைபாடுகள் அதனை அவ்வாறு இயங்கவிடாது தடுத்து விட்டிருந்தன.

உத்தரவாத விலைத்திட்டத்தில் பொதிந்துள்ள இந்தக் குறைபாடு களுக்குப் புறம்பாகவும் அது விவசாயிகள் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு தூண்டுகோலாகச் செயற்படவில்லையென்றே கூற வேண்டும். ஏனெனில் பங்கீட்டின்கீழ் வழங்கப்படும் அரிசி அளவு குறைக்கப்பட்டு திறந்த சந்தையில் அரிசித் தேவையின் ஒரு பகுதியையாவது வாங்கும்படி நுகர்வோர் கட்டாயப்படுத்தப்பட்டவிடத்து அரிசி உற்பத்தி அதிகரித்துச் சென்றதை அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக வி.நித்தியானந்தன் (1989) குறிப்பிடுவது போன்று 1966 டிசம்பரில் பங்கீட்டில் வழங்கப்பட்ட அரிசி இரு கொத்துக்கள் என்ற அளவிலிருந்து ஒரு கொத்தாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து நெல் உற்பத்தி 1966 இல் 43.7 மில்லியன் புசல்களிலிருந்து 1970ஆம் ஆண்டு 77.4 மில்லியன் புசல்களாக அதிகரித்தது அதேநேரத்தில் உத்தரவாத விலை புசலொன்றுக்கு ரூபா 12 என்பதிலிருந்து 14 ஆக உயர்த்தப்பட்ட நிலையிலும் உத்தரவாத விலைதிட்டத்தின் கீழான கொள்வனவு 1966 இல் 28 மில்லியன் புசல்களிலிருந்து 1967 ஆம் ஆண்டு 13.4 மில்லியன் புசல்களாகக் குறைவடைந்தது. இதன் கருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகள் தமது உற்பத்தியின் பெரும்பங்கினை திறந்த சந்தையில் விற்றனரென்பதேயாகும். இதிலிருந்து உத்தரவாத விலைத் திட்டம் வழங்கிய தூண்டுதலை விடப் பங்கீட்டரிசி வடிவிலான உணவு மானியம் ஏற்படுத்திய தூண்டுதலின்மை கூடியளவு வலிமை வாய்ந்ததாயிருந்தமையை இவர் எடுத்துக்காட்டுகிறார். இதிலிருந்து இலங்கையின் தாராள ஜனநாயக அரசியலானது சமூக நலன்புரிச் செலவுகள் ஊடாக எவ்வாறு நாட்டின் பிரதான நெல் உற்பத்தியைப் பாதித்தது என்பதை அறிய முடிகிறது.

நெல் உற்பத்தியை அதிகரிப்பதில் உத்தரவாத விலைத் திட்டம் முழுமையாகத் தோல்வியையே தழுவியுள்ளதென விலைத் திட்டம் நடைமுறையிலிருந்த முதற் பன்னிரண்டு ஆண்டுகளுக்கான நெல் விளைச்சலை பற்றிய தரவுகளைக் கொண்டு பீ.சீ.பன்சில் *(P.C.Banil)* முன் வைத்த கருத்தும் இதனையே உறுதிப்படுத்துகின்றது. அது மாத்திரமன்றி உத்தரவாத விலைத் திட்டம் குடியானவரின் உற்பத்திக்கான ஒரு தூண்டுதலாகச் செயற்பட்டதென எடுத்துக் கொண்டாற்கூட விவசாயிகள் சுயமான முறையிலன்றி அரசாங்கம் முன்வந்து அளிக்கக்கூடிய ஆதரவின் கீழேயே உற்பத்தியை அதிகரித்து முன்னேற முடியுமென்ற ஓர் உணர்வு அவர்கள் மத்தியில் வேரூன்றிய ஒரு கூட்டத்தினராகக் குடியானவர் வளர்த்தெடுக்கப்பட்டனர். இந்நிலமை சிங்கப்பூரின் நலன்புரிக் கொள்கையுடன் முரண்படுகின்றது. அரசாங்கத்தின் ஏனைய சமூக நலன்புரிச் சேவைகள் மக்களை மேலும் சோம்பலடைய உறுதுணை புரிந்தன.

எனவே ஒரு புறத்தில் அரசாங்கத்தின் உணவு உற்பத்திக்கொள்கை சிறு நில உடைமையாளர் வர்க்கமொன்றை உருவாக்குவதுடன் இணைந்ததொன்றாயிருக்க மறுபுறம், சமூக நலன்புரிச் சேவைகளும் குறிப்பாக உணவு மானியமும் இச்சிற்றுடைமை வர்க்கத்தினரை அந்தரத்திலேயே வைத்திருப்பதுடன் அரசாங்கப் பொறிமுறை மீது நேரடியாகத் தங்கியிருக்கும்படி செய்வதற்கும் உதவி, பிறர் தயவில் தங்கியிருக்கின்ற மக்களை உருவாக்க வழிவகை செய்தது. அதன் மூலம் இனத்துவ முதலாளித்துவ அரசியல்வாதிகள் தனது அதிகாரத்தை பேணிக்கொள்வதுடன் தானே பெரியளவான நாட்டு மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன் என்ற ஒரு மாயையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்களிடமிருந்து எதிர்ப்பெதுவும் தோன்றாமற் பார்த்துக் கொள்வதற்கும் வசதியாயிருந்தது. அத்தகைய பொருளாதார சமூக தந்திரோபாயங்களின் தனி இலக்கு முதலாளித்துவ வர்க்க மற்றும் இனத்துவ நலன் பேணுவதேயென வாதிட முடியாவிடினும் அவை தத்தமக்குரிய நேரடி நோக்கங்களை ஈடேற்றிய அதே சமயம் ஒரு மறைமுக நிலையில் இனத்துவ முதலாளி வர்க்க நலன்களை உறுதிப்படுத்துவதற்கும் பெரிதும் உதவி செய்தன எனலாம்.

இவ்வாறு அபிவிருத்தி என்ற போர்வையில் நாட்டைக் குட்டிச்சுவராக்கிய நலன்புரி வாதக் கொள்கைகள் மற்றும் சேவைகளின் முக்கிய தன்மை யாதெனில் அவை இலங்கையின் நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்தியை எவ்வகையிலும் கருத்திற்கொள்ளாது ஒரு குறுங்கால அரசியல் இலக்கு நோக்கி செயற்பட்டன என்பதேயாகும். இலங்கையின் விவசாயத்துறை அழிவடைந்து சென்றமை ஒருபுறமிருக்க, கைத்தொழில் முன்னேற்றம் எறக்குறைய முற்றாகவே மழுங்கடிக்கப் பட்டதுடன் விவசாயத்துறை அபிவிருத்தியும் தவறான ஒரு பாதையில் இட்டுச்செல்வதற்கு இவை காரணமாக இருந்தன. அபிவிருத்தியாளர்கள் சமூக நலன்புரி சேவைகளை முதன்மைப்படுத்தி பொருளாதார வளர்ச்சி யின் நோக்கங்களை மயக்க நிலைக்குட்படுத்தி சமூக அபிவிருத்தியை வலியுறுத்தி வளர்ச்சியைப் புறக்கணிக்கும் ஒரு நிலைக்கும் இடமளித்தனர். இது இன்று சமூக நலச் கொள்கைதான் அபிவிருத்திக் கொள்கை என கொள்கைவகுப்பாளர் போதிக்க இடம் கொடுத்தது. இதனால் இலங்கையின் அபிவிருத்திப் பிரச்சனைகள் இலகுவிற் கண்டறியப்பட முடியாதவாறு பெரும் குழப்ப நிலைக்குள்ளாகிய தாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையின் பிரித்தானியர் விட்டுச் சென்ற பெருந்தோட்டத் துறையில் இருந்த கிடைத்த உயரிய வருமானத்தை அரசியல்வாதிகள் நலன்புரி சேவைகளுக்கு செலவு செய்து நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை நாசம் செய்தார்கள். 1950ஆம் ஆண்டின் முடிவளவில் இலங்கை வசமிருந்த வெளிநாட்டுச் சொத்துக்கள் அவ்வாண்டுக்கான இறக்குமதிப் பெறுமதியின் ஏறக்குறைய 92 சதவீதத்திற்குச் சமனாயிருந்தது. ஆனால் இதே காலப்பகுதியில், வெளிநாட்டு வர்த்தகத்திற் பெருமளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்த வேறு சில அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில், இந்த வீதாசாரம் இலங்கையை விடக் குறைவாயிருந்தமை கவனிக்கத்தக்கது. உதாரணமாக வி.நித்தியானந்தன் (1989) எடுத்துக் காட்டுவது போன்று நியூசிலாந்தில் இது 41 சத வீதமாகவும், பெல்ஜியத்தில் 39 சத வீதமாகவும் டென்மார்க்கில் 12 சத வீதமாகவும் காணப்பட்டது. இலங்கை இன்றைய அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட இவ்விடயத்தில் உயர் நிலையில் இருந்தது.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான நிலையில் வேண்டியிருந்த தெல்லாம் பெருந்தோட்டத்துறை மூலம் நாட்டிற்குப் பெருமளவில் கிடைத்திருந்த அந்நியச் செலாவணியைத் தகுந்தபடி முகாமை செய்து அதனை "உகந்த" உற்பத்தி முயற்சிகள் நோக்கித் திருப்பி விடுவதேயாகும். உற்பத்தி முயற்சிகள் "உகந்தவையாக" இருக்க வேண்டுமெனக் கூறுமிடத்து அவை குறிப்பிட்ட ஒரு சாராரின் குறிப்பாக அரசியல் வாதிகளின் நலன்களை அல்லது நாட்டு மக்களது குறுகிய கால பலாபலன்களைக் கணிப்பிலெடுக்காது நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கும் தேசத்தின் நீண்டகால நன்மையைக் கருத்திற் கொள்வதாக இருக்க வேண்டுமென்பதேயாகும். அதனை மேலும் தெளிவாக்கின், முயற்சிகள் முதல் விளைவுத் துறையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையாக இல்லாமல் பொருளாதாரத்திற்கு உறுதி கொடுக்கக்கூடிய கைத்தொழில் துறை, உணவு விவசாயத்துறை போன்றவற்றிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதேயாகும். எனினும் இந்த உண்மைகள் எதனையும் கருத்திற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கமோ அதனைச் சார்ந்த இனத்துவ முதலாளி அரசியல் வர்க்கமோ தவறிவிட்டது.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் பெருந்தோட்ட முதலாளித்துவ வர்க்க இனத்துவ அரசியல்வாதிகள் இழைத்த தவறினை இரு நிலைகளில் வி.நித்தியானந்தன் (1989) எடுத்துக்காட்டுகிறார். முதலாவது, தமது முதலீடுகளை அவர்கள் தாம் முழு அக்கறை கொண்டிருந்த பெருந்தோட்டத் துறையினின்றும் பெயர்த்தெடுப்பதற் குத் தயாராயிருக்கவில்லை. இரண்டாவது, அவர்களது நடவடிக்கைகளி லிருந்து உழைக்கப்பட்ட இலாபங்கள் ஓர் உயர்ச்சிப் போக்கைக் காட்டிக்கொண்டிருந்தபோது அவைகள் பயனுள்ள வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிடப்படுவதற்குப் பதிலாக வீண்விரயம் செய்யப்பட்டன என்பதே அதிமுக்கியத்துவம் வாய்ந்த தவறாயிருந்தது.

வருமானத்தை நேரடிநிலையில் உழைத்துக் கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தினர் அதனை கைத்தொழில் முதலீடுகளில் முதலீடு செய்யாது மிகையான நுகர்விற் செலவிட்டமையாகும். வி.நித்தியானந்தன் (1989) எடுத்துக்காட்டுவது போன்று 1948 - 50 இரு வருட காலப் பகுதிக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட சில இறக்குமதிப் பொருட்களுக்குரிய செலவு வருடாந்த சராசரியாகிய ரூபா 35.1 மில்லியன் என்ற அளவில் இருந்து 1951 தொடக்கம் 1952 வருடத்தில் ரூபா 72.8 மில்லியனாக உயர்வடைந்தமையைக் காணலாம். இது 100 சதவீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்பென்பது குறிப்பிடத்தக்கது. ஒரு தனிப் பொருளாகிய மோட்டார் வாகனங்களின் மீதான செலவு மாத்திரம் இக்கால கட்டங்களுக்கிடையே ரூபா 15.5 மில்லியனில் இருந்து ரூபா 35.6 மில்லியனாக உயர்வடைந்திருந்தது.

இலங்கையில் வாக்கு வங்கியை நோக்கமாகக் கொண்ட அரசியல் சாதாரண மக்களுக்கு சமூக நலன்புரிச் சேவைகளும் உயர் வர்க்கத்துக்கு ஆடம்பர நுகர்வு இறக்குமதியிலும் ஒட்டு மொத்தமாக தகுதிக்கு மீறிய நுகர்வு நோக்கி சென்று கொண்டிருந்தது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே, மத்திய வங்கியானது இலங்கை 1952 இலும் 1953 இலும் அதன் வருமானத்தால் நியாயப்படுத்தக் கூடியதை பார்க்கிலும் மிக உயர்வான ஒரு நுகர்வு மட்டத்தை கொண்டிருப்பதாகக் குறை கூறியது.[107] உயர்மட்ட ஆடம்பர நுகர்வு என்பது கடுமையான செயற்கை கட்டுப்பாடு கையாளப்படும் நிலைகளில் அன்றி ஏனைய காலங்களில் இலங்கை பொருளாதாரத்தின் நிரந்தரமான ஒரு அம்சமாகவே தங்கிவிட்டதெனலாம்.

எனவே இனத்துவ மற்றும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் தமது ஆடம்பர வாழ்க்கைத்தரத்தை பேணுவதற்கான உயர்மட்ட நுகர்வை நிரந்தரப்படுத்துவதற்கு முயன்றனரென்றால், அவர்களை பிரதிநிதித்துவப் படுத்திய அரசாங்கம் தாழ்மட்டத்தவர் உட்பட நாட்டின் முழுச் சனத்தொகைக்குமான சில சமூக நல வசதிகளை ஏற்படுத்தி

[107] வி.நித்தியானந்தன் (1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதன் மூலம் தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் வர்க்க ரீதியாக உருவாகக் கூடிய எதிர்ப்பினை அணைத்துவிட முயன்றது. இந்த வர்க்க நலன் பேணும் அபிவிருத்தித் தந்திரோபாயம் மிகுந்த செலவுடன் கூடிய சமூக நல அரசுகளை பாராளுமன்றத் தேர்தல் ஊடாக உருவாக்கி மூலதனச் செலவை அதிகரிக்க முடியாமைக்கு இட்டுச் சென்றது என்பது ஒரு புறம் இருக்க, நாட்டின் இனமுரண்பாட்டுக்கும் தூபம் இட்டு 1983 பின்னர் பாதுகாப்புச் சேவை என்ற பாரிய அரச செலவின அதிகரிப்புக்கும் இட்டுச் சென்றது.

அரசாங்கம் 1948 இல் இருந்து 1983 வரை மேற்கொள்ளப்பட்ட நலச் செலவீடுகளில் பிரதானமானவையாக உணவு மானியம், இலவச சுகாதார வைத்திய சேவைகள், இலவசக் கல்வி, போக்குவரத்து கட்டணங்களிலான மானியம், குடியான் விவசாயத்துக்கான மாற்றல் கள், ஈரவலயத்தில் இருந்து குடியான்களை உலர்வலய குடியேற்றங்களில் குடியேற்றுவதற்கான மானியங்கள் போன்றன அடங்கும். 1950களில் ஏற்பட்ட பெருந்தோட்டத்தின் அடிப்படையிலான பொருளாதாரச் செழிப்பை வர்க்க நலன் பேணுவதற்கு செலவு செய்து வீண்விரய மாக்கிய அரசு 1978 பின்னர் மேலைத்தேசத்தில் இருந்து கிடைத்த நன்கொடைகள் மற்றும் ஏனைய அன்னிய உதவிகளை மேற்குறிப்பிட்ட நலச்சேவைகளுடன் ஆரம்பத்தில் மகாவலிதிட்டத்திலும் பின்னர் வடக்கு கிழக்கு யுத்தத்திலும் செலவு செய்து இனவாத அரசியலை தொடர்ந்து பேணுவதற்கு பயன்படுத்தியது. இரண்டுக்கும் இடையிலான பொதுவான அம்சம் யாதெனில் இவை யாவுமே பெரும்பான்மை மக்களின் வாக்கு வங்கியை கவர்வதனை நோக்காகக் கொண்டவை ஆகும். இச்சேவைகள் நாட்டு மக்களுக்கு தேவையான அத்தியவசியத் தேவைகளை பூர்த்தி செய்தபோதும் அவற்றை வீண்விரயம் என குறிப்பிடுவதற்கு சில வலுவான காரணங்கள் உள்ளன.

### 1. முரண்பாடான அபிவிருத்தி தந்திரோபாயம்

நாம் கோட்பாடுகளில் மற்றும் சிங்கப்பூரின் அனுபவத்தில் இருந்து எடுத்துக் காட்டியது போன்று பொருளாதாரத்தின் அடித்தளமாக இருக்கின்ற மூலதன இருப்பை அதிகரித்து நாட்டின் நீண்டகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்கு முன்னர் இவை வழங்கப்பட்டமை ஆகும். வி.நித்தியானந்தன் (1989) இதை அழகாக எடுத்து விளக்குகின்றார்.

*"பொருளாதார அபிவிருத்தியின் பரம்பல் (வருமானப் பங்கீடு) அம்சம் மாத்திரம் வலியுறுத்தப்பட்டு உற்பத்தி அம்சம் கைவிடப்பட்டிருந்தது. சமூக அல்லது பரம்பல் அம்சங்கள் பொருளாதார அபிவிருத்தியின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக, அதையும் விட முக்கியமாகப் பொருளாதார அபிவிருத்தியின் இறுதிக் குறிக்கோளாக இருந்த போதும் அது பொருளாதார வளர்ச்சி கருதிய உற்பத்தி முயற்சிகளுடன் இணைந்து செல்வதொன்றாக இருக்க வேண்டும். அதாவது சமூக செலவினங்களை தொடர்ந்து பேணுவதற்குரிய வருமானம் பொருளாதார அமைப்பில் இருந்து தொடர்ச்சியாக உருவாக்கப்பட வேண்டும்.''. ஆகவே தாம் வாழ்ந்திருந்த பொருளாதார அமைப்பு இன்னமும் வழங்குவதற்கு தயாரில்லாத சில வசதிகளை இலங்கை மக்கள் அனுபவிக்க முற்பட்டிருந்தனர்". இவ்வாறான ஓர் நிலையையே ஜோன் ரொபின்சன் (Joan Robinson) "இலங்கை மரத்தை நாட்டுவதற்கு முன்னதாகவே அதன் பழத்தை ருசி பார்த்துவிட்டது."* எனக் குறிப்பிட்டார். P.150-51

அரசாங்கத்தின் சமூக நலன்புரி சேவைகளை வழங்கும் கொள்கையானது ஒப்பீட்டு ரீதியாகப் பல பொருட்களினதும் சேவைகளினதும் சமமான பரம்பலை உறுதிப்படுத்தியதென்ற அளவில் வெற்றி என்றே கூற வேண்டும். ஆனால் பங்கீட்டுடன் இணைந்த வகையில் நாட்டின் உற்பத்தியை (வளர்ச்சியை) உயர்த்த அது தவறிவிட்டது. பொருளாதார வளர்ச்சி குறைவு என்பதுடன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு தொழில் வாய்ப்புக்கள் உருவாக்குவதற்கு இவை பங்களிப்புச் செய்யவில்லை. மேலும் இந்நலச் சேவைகள் ஊடாக வறியவர்கள் உற்பத்திக்கான சொத்துக்களை திரட்ட முடியுமென்பதை உத்தரவாதப்படுத்தக் கூடியதாயிருக்கவில்லை. அந்தளவிற்கு அதன் நலக் கொள்கைகளும் நிலச் சீர்திருத்தமும் ஒப்பீட்டு ரீதியாக வெற்றியைத் தரவில்லை என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இலங்கையின் அனுபவத்தில் உற்பத்தி ( பொருளாதார வளர்ச்சி) இன்றி சமூக நலச் செலவீடுகள் ஊடாக வருமானப் பங்கீட்டை தொடர்ந்தமைக்கு பொருளியலில் எந்தவித கோட்பாட்டு பின்னனியோ அல்லது நாடுகளின் வரலாற்று அனுபவத்தையோ எடுத்துக் காட்ட முடியாமல் இருக்கிறது. இந்த அபிவிருத்தி முரண்பாடு குதிரையை வண்டி இழுப்பதற்கு ஒத்தது. இந்த முரண்பட்ட அபிவிருத்திக் கொள்கையை வருமானப் பங்கீட்டுடன் கூடிய வளர்ச்சி என சிலர் *(W.D.Lakshman, 1997)* நியாயப்படுத்த முயன்ற போதும் நாடுகளின் அனுபவங்களைக் கொண்டு அவர்களால் அதை நிரூபிக்க முடியவில்லை. இந்த கொள்கைக்குப் பின்னால் பொருளாதார நலன்களை விட குறுங்கால வர்க்க மற்றும் இனத்துவ அரசியல் நலன்களே முதல் இடத்தை வகித்துள்ளன என்பது வெளிப்படையாகின்றது.

**2. நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவாக வழங்கியமை**

சமூக நலன்புரி சேவைகளின் மீதான செலவை "விரயம்" என்று கொள்ளுவதற்கு இன்னொரு காரணம், அச்சேவைகள் எத்தகைய வேறுபாடுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவாக வழங்கப்பட்டமையாகும். நலன்புரி சேவைகளை அவற்றைப் பணம் கொடுத்துப் பெற முடியாத தாழ் வருமான வகுப்பினருக்கு மாத்திரம் அளித்திருந்தால் அவற்றை உண்மையிலேயே பயன்தரு சேவைகள் என வர்ணித்திருக்க முடியும். ஆனால் இங்கு வறியவர்கள் உட்பட ஏனைய வருமான மட்டங்களில் உள்ளவர்களும் அவற்றை அனுபவிக்கும் ஒரு நிலை காணப்பட்டது.

இலங்கையில் மேலைத்தேச ஜனநாயக வழியான மக்கள் ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப கட்டங்களிலேயே சமூக நலன்புரிச் சேவைகளை வழங்கும் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருந்தன. இது ஒவ்வொரு தனிப்பட்டவனுக்கும் வேண்டிய சில அத்திய அவசிய தேவைகளை அவனுக்கு நேரடியாகவே எடுத்துச் சென்ற காரணத்தினால் தனக்குரிய தேவைகள் எவை என்பது பற்றி அவன் உணர்வுடைய வகையில் சிந்திப்பதற்கோ அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவன் அணி திரள்வதற்கான வாய்ப்பினையோ முற்றாக தடுத்து விட்டிருந்தது. அதன் மூலம் ஒருவர் செய்யும் தொழிலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் அல்லது வர்க்க ரீதியான காரணங்களின் வழி மக்கள் தமக்கென சில வசதிகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஒன்று சேர்வதற்கான சந்தர்ப்பமும் குறைவடைந்திருந்தது.

அதனால் அவர்கள் மத்தியில் சில பொருளியற் காரணங்களின் செல்வாக்கினால் உருவாகியிருக்க வேண்டிய அரசியல் ரீதியான ஒருமித்த தன்மையும் ஏற்பட முடியாது போயிற்று எனலாம். மக்களின் வாசல்படிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமூக நலச் சேவைகள் ஒரு நீண்டகால நோக்கில் வர்க்க அடிப்படை அரசியல் வளர்ச்சியடைவதை பெருமளவிற்கு தடுத்து விட்டிருந்தன. முதலாளி வர்க்கத்தினர் தமது நல உரிமைகளை மிக இறுக்கமாக பேணிக்கொண்டதன் மூலம் ஏனைய சாராரின் சமூக வளர்ச்சிக்கான சாதனங்களை அழித்து விட்டிருந்தனர். பொருளியல் ரீதியான மார்க்கங்களின் அரசியல் ஒருங்கிணைப்பானது ஏற்பட முடியாத நிலையில் இனம், மதம், மொழி, கலாச்சாரம் போன்ற ஏனைய காரணிகளை அரசியல் நடைமுறைக்கான சாதனமாக அவர்கள் கொள்ள முற்பட்டதில் வியப்பில்லை. ஆகவே இலங்கையில் இனவாத அரசியலின் எழுச்சிக்கும் மிக ஆரம்ப நிலையிலேயே வழங்கப்பட்ட சமூக நலசேவைகளுக்கும் இடையே தெளிவான ஒரு தொடர்பு இருப்பதாக எடுத்துக்காட்ட முடியும்.[108]

### 3. சமூக நலச்செலவீடுகளில் இனரீதியான பேதப்படுத்தல்கள்

இச்சமூக நலச் செலவீடுகளின் பங்கீடு பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் ஆட்சி அதிகாரத்தில் இலங்கையில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் வரையறுக்கப்பட்டதாக அல்லது முற்றாக புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. சில பாராளுமன்ற பிரதிநிதிகள்

---

[108] "Although in academic and policy discussions, Sri Lanka was quoted as a replicable success case in achieving redistributive justice among developing countries, these discussions have rarely drawn attention to the critical issue of its sustainability. By the 1960s there were clear signs that Sri Lanka had been living far beyond its means (ILO, 1971). In the absence of sustained rapid growth, the ability to continue with the welfare state gradually came under increasing threat on two fronts: First, the maintenance of the welfare system itself required a continuous flow of resources to finance it. Secondly, the state had to face massive social demand that sprang from an extensive welfare system. People who were brought up within the welfare system had improved human capabilities to be utilised productively and higher social expectations to be satisfied." Srimal Abeyrathne, (2004)p,1302



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் சுயநலனுக்காக அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும் அவர்களால் இச்சமூக நலச் சேவைகளின் பகிர்வில் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் ஓர் சமத்துவத்தை பேண அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியாமல் இருந்தது. இதன் விளைவு வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் இச்செலவீடுகளில் இருந்து பேதப்படுத்தப்பட்டமை ஆகும். இது சமூகங்களுக்கு இடையில் முரண்பாட்டை உருவாக்கி நாட்டின் அமைதியை சீர்குலைத்தமையால் இவை பொருளாதாரத்துக்கு வீண்விரயமே.

அட்டவணை 7.1: பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர்கள் விகிதம்

| ஆண்டுகள் | இலங்கை அ | தென்பகுதி ஆ | வடக்கு மற்றும் கிழக்கு இ |
|---|---|---|---|
| 1957 | 33.0 | 35.41 | 31.7 |
| 1960 | 31.47 | 32.81 | 29.65 |
| 1973 | 26 | 26.73 | 27.08 |
| 1976 | 23.23 | 22.7 | 20.35 |
| 1982 | 26.3 | 28.43 | 33.33 |
| 1984 | 26.16 | 27.95 | 35.23 |
| 1997 | 22.96 | 22.5 | 33.1 |
| 1999 | 22.2 | 21.89 | 32.14 |
| 2001 | 22 | 21.78 | 28.94 |


மூலம்:Selvarathinam Santhirasegaram (2012)

அ.இலங்கை பூராக ஆ.சிங்களமக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களின் சராசரி , இ. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களின் சராசரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடம் 7.1:பாடசாலையில் ஆசிரியர் மாணவர் விகிதம்





வரைபடம் 7.2:பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் மாணவர் விகிதம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடம் 7.3:பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் வீதாசாரம்




Source: Fifty years of Sri Lanka's independence, A Socio- economic review (1998)


வரைபடம் 7.4: சிசு மரண வீதம்(1000 பிறப்புக்களுக்கு)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரைபடம் 7.5: பிரதேசஅடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரம் (2002)**




மூலம்: Selvarathinam Santhirasegaram (2012)

## 4. வினைத்திறனோ அல்லது உற்பத்தித்திறனோ இல்லாத சமூகநலச் செலவீடுகள்

இலங்கையில் இலவசக் கல்வியால் மட்டும் எத்தனை பேர் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றார்கள்? தற்போது ஆண்டு ஐந்து புலமைபரிசில் சித்தியடைபவர்களில் ஏறத்தாழ 90 சதவீதம் தனியார் முயற்சியால் ஏற்படுகின்றது. பல்கலைக்கழக கல்வியை தொடர்பவர்களில் (மருத்துவம் மற்றும் பொறியியல் நீங்களாக) எத்தனை பேர் அரசாங்கத்தின் ஆதரவு இன்றி தாங்கள் கற்ற கல்வியால் கிடைத்த வினைத்திறன் அடிப்படையில் சுயமாக தொழில் பெறுகின்றார்கள். இவர்கள் பெற்ற கல்வியானது நாட்டின் தேசிய உற்பத்தித்திறனுக்கு பங்காற்றுகின்றதா? பட்டம் பெற்று வெளியேறுபவர்களுக்கு அரசாங்கம் நான்கு வருடங்களுக்கு பின்னரானாலும் ஆசிரியர் நியமனம் வழங்காது இருந்தால், குறிப்பாக கலைப் பட்டதாரிகளின் நிலை என்னவாகும்?


*Srimal Abeyrathne* (2004) ஆய்வின்படி இலங்கையில் 1970 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட *JVP* மற்றும் தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சியும் மற்றும் அமைதியின்மையானது நாட்டில் 1960 களின் பிற்பகுதியில் அதிகரிக்கப்பட்ட இலவசக் கல்வி மீதான செலவினத்தால் உருவாகியது என்கிறார். அதிகரிக்கப்பட்ட பெரும்பான்மை இன பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொழில் வழங்குவதற்கான தொழில் உற்பத்தி முயற்சிகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் JVPயில் இணைந்தார்கள். மறுபுறத்தில் கல்வியின் தரப்படுத்தலால் விரக்தியுற்ற தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் அரசுக்கு எதிரான வன்முறையில் இறங்கினார்கள். இரண்டு முரண்பாடுகளுக்கும் அடிப்படைக் காரணம் முதலாளித்துவ நலன் பேணும் அரசாங்கங்கள் வழங்கிய இலவசக் கல்வியாகும்.

**வரைபடம் 7.6 இலவசக் கல்வி மீதான அரசின் செலவு (GDPஇன் வீதம்)**




இன்று JVP க்கு பின்னால் அணிதிரள்பவர்கள் கல்வி கற்ற வேலையில்லாத இளைஞர்கள் ஆவர். இலங்கையின் இலவசக் கல்வியானது பல்வேறு கோணங்களில் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யாமை ஒருபுறம் இருக்க, இது பல்வேறு நிலைகளில் நாட்டில் அமைதியின்மை தோன்றக் காரணமாக இருந்துள்ளது. எனவே இச்செலவீடுகள் பொருளாதாரத்துக்கு வீண்விரயமே.[109]

## 5. தகுதிக்கு மீறிய இனரீதியான பாதுகாப்புச் சேவை


அரசாங்கம் 1983 இல் இருந்து பாதுகாப்புச் செலவினத்தை பயங்கரவாதத்துக்கு எதிரான செலவு எனக் குறிப்பிடுகின்றது. இச்சமூக சேவையானது எந்தளவுக்கு இலங்கை மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பை வழங்குகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை ஆகும். வளர்ந்து வரும் ஒரு பொருளாதாரத்தில் எவரும் பாதுகாப்புச் செலவினத்தை பயன்தரு செலவு என குறிப்பிட்டது இல்லை. இது நீண்ட காலத்துக்குத் தொடருமானால் அது பொருளாதாரத்துக்கு பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும். இலங்கையில் 1984இல் இருந்து தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது.

[109] "The twin political conflict is an emergence of ambitious radical youth from both Sinhala and Tamil communities simultaneously against the established traditional political system of the country, represented also by both communities. It emerged in an economic background where the economy continued to fail in absorbing the youth into a mainstream development process, in which the charismatic political leaders had an opportunity to mobilise them into armed Struggles." Srimal Abeyrathne, (2004) p-1299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**வரைபடம் 7.7: ஆசிய நாடுகளின் பாதுகாப்பு மீதான அரச செலவினம்**




மூலம்: உலக வங்கியின் தரவுத் தளத்தில் இருந்து வரையப்பட்டது

ஆசியாவில் பாகிஸ்தானுக்கு அடுத்ததாக பாதுகாப்புச் செலவினத்தை அதிகமாகக் கொண்ட நாடு இலங்கை ஆகும். இலங்கையில் 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்புச் செலவு அதிகரித்த போக்கையே கொண்டிருக்கின்றது.

**வரைபடம் 7.8: இலங்கையின் தலா பாதுகாப்புச் செலவு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டத்துறையின் மூலம் பெற்ற வருமானத்தை அடிப்படையாக கொண்டு சமூக நலச் செலவீடுகள் மூலம் அரசியல் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்திருந்த வர்க்க மற்றும் இனத்துவ அரசுகளும் அரசியல்வாதிகளும் காலப் போக்கில் பெருந்தோட்ட வருமானம் குறைந்தபோது இனத்துவ அரசியல் ஊடாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். இது கால ஓட்டத்தில் இனமுரண்பாடுகளுக்கு இட்டுச் சென்று யுத்தத்தில் முடிவடைந்து பாதுகாப்புச் செலவை அதிகரித்தது.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தை பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமாக எடுத்துக் காட்டுவதன் ஊடாக சர்வதேச நாடுகளில் இருந்து அதிகளவான வெளிநாட்டு உதவியை இலங்கை பெற்றது. இலங்கையில் பாதுகாப்புச் செலவினம் கிராமிய சிங்கள மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதன் ஊடாக பெரும்பான்மை மக்களின் வறுமை குறைப்புக்கு காரணமானது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து அங்கிருந்து கணிசமான வெளிநாட்டு பண அனுப்புதல்கள் ஊடாக வடக்கு கிழக்கு அபிவிருத்தியானது தென்பகுதி பொருட்களை சந்தைப்படுத்தும் மாகாணங்களாக இருப்பதுடன் சீவனோபாய விவசாயத்தை சார்ந்து இருக்கின்றது. யுத்தத்துக்கு பின்னரும் அரசின் பாதுகாப்பு செலவினத்தின் அதிகரிப்பு இலங்கையில் நிச்சயமற்ற தன்மை தொடர்வதை முதலீட்டாளர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

### 6. ஏனைய துறைகளின் வளர்ச்சியை தடுத்தமை

பொருளாதார அபிவிருத்தியின் அம்சங்களில் முடக்கியிருக்க கூடிய பணத்தை சமூக நலன்புரிச் சேவைகள் உள்வாங்கிக் கொண்டதன் மூலம் விரயம் ஏற்பட்டிருந்த அதேநேரத்தில் வழங்கப்பட்ட சேவைகளோ வளர்ச்சி வேகத்தை ஒன்றிற் குறைப்பதன் மூலம் அல்லது தடுப்பதன் மூலம் விரயத்தை ஒரு மறைமுக நிலையில் அதிகப்படுத்தியமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். உணவு விநியோகத்தில் பங்கீட்டரிசியின் வழியில் வழங்கப்பட்ட மானியம் குடியான்களின் உற்பத்தி தூண்டுதலை இல்லாமல் ஆக்கியது. ஆகவே அதன் மூலம் உள்நாட்டில் உற்பத்தியாயிருக்கவேண்டிய அரிசி உற்பத்தியாகாமையால் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவினை இறக்குமதி செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்நிலையில் சமூக சேவைகள் வழங்கப்படுவதென்ற அளவிலான விரயம் ஒருபுறம் இருக்க அவை ஏற்படுத்திய தூண்டுதலின்மை மூலம் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டபோது அதற்கென உண்டாக்கிய செலவு விரயத்தை மிகைப்படுத்துவதாயிருந்தது. அதே போன்ற விரயம் இன்னொரு மட்டத்திலும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நாட்டில் ஏற்கனவே பெரும்பான்மையினராயிருந்த குடியான்கள் வர்க்கத்திற்கும் அதேபோல குடியேற்ற திட்டங்களின் வழிபுதிதாக உருவாக்கப்பட்ட சிற்றுடைமை வர்க்கத்திற்கும் அவர்களுடைய அடிப்படையான சில தேவைகளை அவர்களே வருமான உயர்வழி தேடிக் கொள்ளும்படி விட்டு விடுவதற்கு பதிலாக அரசாங்கம் தானே முன்வந்து அவற்றை வழங்கியவிடத்து அவர்களை தாம் வாழ்ந்த கிராமிய புறங்களில் இருந்து நாட்டின் நகர்ப்புறங்கள் நோக்கி தள்ளி விடக்கூடிய உந்து சக்திகளின் செல்வாக்கு மிகக் குறைவாகவே இடம்பெற கூடியதாயிருந்தது. அதன் விளைவு யாதெனில் இலங்கையின் நகரமயமாக்க வேகம் மிகக் குறைவடைந்தமையாகும். வர்க்க நலன் பேணும் கொள்கையின் ஒரு பகுதியாயிருந்த கைத்தொழில் மயமாக்கத்தை பலவீனப்படுத்தும் செய்முறை அதற்குமேலும் துணைபுரிவதாயிருந்தது. இது நகர் புறத்திலிருந்து உருவாக்ககூடிய "இழுவை" சக்திகளின் விசையையும் குறைத்துவிடக் கூடியதாயிருந்தது என நித்தியானந்தன் (1989) குறிப்பிட்டுள்ளார்.

1950களில் சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய வெளிநாட்டு சொத்துக்களை நாடு தியாகம் செய்து விட்டிருந்தது. ஆனால் நீண்டகால நோக்கில் இதை "தியாகம்" என வர்ணிப்பதற்குப் பதிலாக இது "தற்கொலை" என்பதற்கு ஒப்பாகவே இருந்தது எனலாம். ஏனெனில் அன்றில் இருந்து இன்று வரையிலான இலங்கையின் பொருளாதார வரலாற்றில் அத்துணை உள்நாட்டு வளங்களைக் கொண்டு அபிவிருத்தி மீது இலகுவான முறையில் கவனம் செலுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு உறுதியான அடித்தளம் இடும் ஒரு சிறந்த சந்தர்ப்பம் அதன் பின்பு ஒரு போதும் ஏற்படவில்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டு ரீதியாக பார்க்கும் இடத்து அபிவிருத்தி செயன்முறையை மிகச் சுலபமாக ஆரம்பித்து இருக்கக்கூடிய ஒரு பொன்னான கால கட்டமாக அது விளங்கியிருந்தது எனலாம். எனினும் அரசாங்கம் அதனை முற்றாகவே கைநழுவ விட்டிருந்தது. இது விடயத்தில் மத்தியவங்கி மற்றும் சில புலமையாளர்கள் தீர்க்கதரிசனத்துடன் வழங்கிய பல ஆலோசனைகளை அரசாங்கம் தட்டிக் கழித்தமை நாட்டின் தூரதிஸ்டம் என்றே கூற வேண்டும். இக்குறைபாடுகளையும் அதன் மூலம் ஏற்பட்ட விளைவுகளையும் நாம் இன்று அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இலங்கையின் தலைவர்கள் வரவு செலவுத் திட்ட உரைகளின் போது வரவு செலவுத்திட்ட கொள்கையின் நோக்கம் தேசிய பொருளாதார நடவடிக்கையின் முழு உருவத்தையும் ஒழுங்கினையும் கட்டுப்படுத்துவதே என குறிப்பிட்டார்கள் எனினும் மேலே விளக்கிய அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து கடந்த காலத்திலும் நடைமுறையிலும் அரசாங்கம் அத்தகைய கட்டுப்பாடுகள் எதனையும் பொருளாதார அலுவல்களின் மீது பிரயோகித்திருப்பதற்கான ஆதாரத்தை காணமுடிய வில்லை. மாறாக ஏற்றுமதிச் சந்தை ஒன்றை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு சக்திகளின் போக்கில் அதாவது கட்டற்ற ஒரு முறையில் செல்வதற்குத்தான் இடமளிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் இச்சக்திகளின் செல்வாக்கை மேலும் மேம்படுத்துவன ...ாகவே காணப்பட்டன. இலங்கையின் திறந்த பொருளாதாரக் ... க 1983 க்கு பின்னர் இராணுவ வரவு செலவுத்திட்டத்தை ... ச் செல்ல உதவியது என *Rajesh Venugopal* (2011) குறி...

---

... experience with market reforms have two important specificities to bear in mind. Firs... ...nomic reform agenda has, since its introduction in 1977, proceeded apace in parallel with the prosecution of a worsening ethnic conflict, and its escalation into a civil war in 1983. Sri Lanka's switch from state to market in 1977 occurred significantly ahead of the wave of market reform that swept Latin America and Africa in the 1980s, and more than a decade before India. ..... Secondly, the market reform agenda in Sri Lanka has had to contend with the fact that it is widely viewed as illegitimate within the dominant framework of political morality that regulates state-society relations. The development of electoral politics in Sri Lanka from the 1930s-70s occurred parallel to and in close connection with the construction of a massive social democratic-welfare state. Political parties competed and came to power on populist electoral platforms to expand the role of the state; and in doing so, helped enshrine certain moral notions of the legitimate and necessary role of the state. **Rajesh Venugopal (2011)** P.142



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சில காலத்தில் வரவு செலவுத் திட்டத்தில் "முன்னேற்றம் மிக்க சமூக" பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் என வர்ணிக்கப்பட்ட அதே நலன்புரி சேவைகளை பிறிதொரு காலத்தில் ஒன்றிற் குறைக்க வேண்டிய அல்லது முற்றாகவே மீளப் பெற வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆட்சியாளர்கள் வந்தனர். அது மாத்திரமன்றி அவை அபிவிருத்தியின் மீதான ஒரு சுமை எனவும் எடுத்துக் காட்ட முயன்றார்கள். கடந்த காலத்தில் நலன்புரி சேவைகள் சிலவற்றைக் குறைக்கும் அல்லது முற்றாகவே நிறுத்தும் நடவடிக்கைகள் விரைவாகவே செயற்பட்டிருந்தன. உதாரணமாக 1953 ஆகஸ்ட் மாதத்தில் அரிசியின் மீதான மானியம் அகற்றப்பட்டமை காரணமாக அதன் விலை கொத்தொன்றுக்கு ஏறக்குறைய மூன்று மடங்காக- 25 சதத்திலிருந்து 70 சதமாக உயர்வடைந்தது. சீனி விலை ஏற்கெனவே 1952 செப்டம்பர் முதல் இறாத்தலொன்றுக்குப் 15 சதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. இது தவிர, வேறு சில வகைச் சமூக சேவைகள் முற்றாகவே மீளப் பெறப்பட்டிருந்தன. பாடசாலைச் சிறார்களுக்கான மதிய உணவு நிறுத்தப்பட்டமையும், பால் வழங்கும் நிலையங்கள் மூடப்பட்டமையும் இவற்றிற் குறிப்பிடத்தக்கவை.

ஏனைய சில சேவைகளிலும் பொது உதவி விகிதம் குறைக்கப் பட்டமை காரணமாக அவற்றின் விலைகள் உயர்வடைந்தன. உதாரணமாக, தபாற் கட்டணங்களும் புகையிரதக் கட்டணங்களும் ஏறக்குறைய இரு மடங்காக அதிகரிக்கப்பட்டன. எனினும் அரசாங்கம் சுதந்திரமடைந்த காலத்தில் சீர்தூக்கிப் பார்த்துத் தேவையான திருத்தங்களுடன் அமுல் நடத்தியிருக்க வேண்டிய சமூக நலன்புரி சேவைத் திட்டத்தை, அவ்வாறில்லாது திடீரென ஒரு பாரிய வெட்டுக் குட்படுத்தத் தீர்மானித்தமை அரசாங்கத்தின் கொள்கையை முன்னுக்குப் பின் முரணானதொன்றாகத் தெரியப்படுத்தியதுடன், முற்றிலும் பொருத்தமற்ற ஒரு நடவடிக்கையாகவும் வெளிப்படுத்தியது. அதற்கும் மேலாகப் பொதுவாக நாட்டு மக்களும், குறிப்பாக இடது சாரிகளும், அதனை ஏற்றுக் கொள்ளவும் தயாராயிருக்கவில்லை. ஜனநாயக சுதந்திரத்தை ஒரு கருவியாக பயன்படுத்தி இவற்றை மீண்டும் பெற முயற்சித்தனர். நாட்டின் அமைதி சீர்குலைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கமும் அரசியல்வாதிகளும் அபிவிருத்திக் கொள்கை வகுத்தலில் நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டிய சமூக நலன்புரிச் சேவைகளையும், 1990 களுக்கு பின்னர் தேசிய பாதுகாப்பு சேவைகளையும் (பாதுகாப்பு செலவு அதிகரிப்பு) தரப்பட்ட ஒரு எடுகோளாக கொண்டே செயற்பட வேண்டியிருந்தது. அத்தகைய சேவைகளுள் மற்றெல்லாவற்றையும் விட உணவு மானியம் பிரதான இடம் வகித்தது. முக்கிய சமூக சேவைத் திட்டங்களையோ உணவு மானியத்தையோ குறைவு நிலைக்குட்படுத்த வேண்டும் என ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி சிபாரிசு செய்யுமாயின் ஏனைய கட்சிகள் அதனையே தமது முக்கிய அரசியற் கோசமாக்கி மக்களின் ஆதரவை தம்பால் திருப்பிவிடக்கூடிய ஒரு சாதனமாக அதனைக் கருதலாயின. ஆகவே தேர்தல் கால பிரச்சாரத்திலும் கட்சிகளின் கொள்கைத் திட்டங்களிலும் உணவு மானியத்தை பிரதானமாகக் கொண்ட சமூக நலன்புரிச் சேவைகள் மற்றும் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பும் நடுநாயகமான ஒரு இடத்தை எடுத்துக் கொண்டன. பல மடங்காக அவை ஒரு விரயம், பொருளாதார வளர்ச்சி மீதான சுமை என்று தெரிந்த நிலையிலும் அவை மீளப் பெறுவதிலன்றி அவற்றை மென்மேலும் வழங்குவதற்கே அரசியற் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தன.

மக்களின் ஆதரவைப் பாதிக்கக்கூடிய உணர்வுள்ள ஒரு பிரச்சனையாக அது மாறிவிட்டிருந்ததால் அதற்கெதிரான ஒரு கருத்து தெரிவிக்கும் எந்த ஓர் அரசியற் கட்சியோ அல்லது குழுவோ இலங்கை அரசியலில் அதிக தூரம் முன்னேறுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆகவே அதனை தரப்பட்டதொன்றாகவே அவை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று அதேபோன்று பொருளாதார கொள்கை வகுத்தலிலும் சமூக மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான தொகையை ஒதுக்கீடு செய்த பின்னரே ஏனைய விடயங்கள் பற்றி நாட்டின் நிதி மந்திரிகள் சிந்திக்கக் கூடியதாயிருந்தது. இந்த வரையறையை குறிப்பிட்ட ஒரு நிதி மந்திரி உடைத்தெறிய முற்படுவாராயின் அது அவருடைய கட்சியின் அரசியற் செல்வாக்கைப் பாதிக்க கூடிய நடவடிக்கையாக இருந்ததால், அத்தகைய ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும்போது எதிர்க் கட்சிகளுக்கு முன்னதாக அவருடைய சொந்தக்கட்சி அங்கத்தவரே அவரை பலமாக எதிர்க்க முன்வந்தனர். ஆனால் ஓர் எல்லை நிலையிலாவது அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக உணவு மானியத்தை குறைக்க முடியுமா என்பது பற்றி சிந்திப்பது கடினமான ஒரு காரியமாயிருந்தது.

உதாரணமாக 1962 வரவு செலவுத் திட்டத்தில் அப்போது நிதி மந்திரியாயிருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க *(Felix Dias Bandaranayake)* பங்கீட்டு முறையில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த மானிய அரிசியின் அளவை கொத்தால் குறைக்க வேண்டும் என்ற ஒரு யோசனையை உள்ளடக்க முயன்றார். ஆனால் அவருடைய இந்த சிபாரிசை அவரது சொந்த பாராளுமன்றக் குழுவே ஏற்றுக் கொள்ளாது நிராகரித்து விட்டது. அதனால் அவர் ஈற்றில் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டியும் நேரிட்டது. ஆகவே இது பொருளாதார அபிவிருத்தி கருதிய கொள்கைகளை வகுத்துக் கொள்ளும் திட்டமிடுவோரினதும், நிதி மந்திரிகளினதும் சுதந்திரத்தைப் பெரிதும் கட்டுப்படுத்துவதொன்றாயிருந்தது என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான பலம் பெற்ற மற்றைய அம்சமாக நாம் கருதுவது இனவாதமாகும். இனவாதம், சமூகநலன்புரி சேவைத்திட்டம் என்ற இரண்டுமே குறைந்தது தொடக்க நிலையிலாவது முதலாளி வர்க்க நலன்களை மேம்படுத்துவதற்கு பெரிதும் பயன்பட்டிருந்தன (வி.நித்தியானந்தன் 1989).

## இலங்கை சமூகநலன்புரிச் செலவில் இருந்து பாதுகாப்புச் செலவு நோக்கி மாறுதல்

இலங்கையின் சமூக நலச் செலவீட்டில் 1984இல் இருந்து பாதுகாப்புச் செலவு பிரதான இடத்தை வகிக்கின்றது. இச்செலவீட்டை அரசாங்கம் குறைக்க முடியாமல் இருப்பதற்கு பிரதான காரணம் பெரும்பான்மை மக்களிடையே ஊறிப்போய் உள்ள இனவாத உளப்பாங்கு ஆகும். ஏனைய நலன்புரி செலவினங்களுக்கு அப்பால் இச்செலவினத்தின் அதிகரிப்பு அரசாங்கத்துக்கு பெரும்சுமை ஆகும். இலங்கையின் நலச் செலவீடுகள் இனங்களின் அடிப்படையில் பிரதேச ரீதியாக பேதப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை நோக்குகின்ற போது சிலர் இப்பேதப்படுத்தல்கள் 1983 முன்னர் ஒரு வருமான மீள்பங்கீடு எனவும் 1983 க்கு பின்னர் வடக்கு கிழக்கில் தொடரும் யுத்தம் காரணம் எனவும் நியாயப்படுத்த முயன்றனர். ஆனால் இலங்கையின் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் கீழ் நிலையிலேயே இருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமான மீள்பங்கீட்டில் இருந்து அவர்கள் இன அடிப்படையில் ஓரம் கட்டப்பட்டுள்ளனர். அவர்களின் பிரதேசத்தில் அபிவிருத்திக்கு தடையாக யுத்தம் நடைபெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராய்பவர்கள் சிறுபான்மையினர் சார்பாக முன்வைக்கும் ஒரு குற்றச்சாட்டு யாதெனில் சிறுபான்மையினர் ஆளும் பெரும்பான்மை கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக அரசாங்கத்தில் அங்கம் வகித்து தமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கவில்லை என்பதாகும். அவ்வாறு அவர்கள் செயற்பட்டிருந்தால் அவர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்து இருக்கும் என்பதாகும். ஆனால் இலங்கையின் வரலாற்றில் மலையக தமிழ் கட்சிகள் என்றுமே ஆளும் பெரும்பான்மை கட்சிகளுடன் அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலந்தான் அதிகம். அவ்வாறு இருந்தும் அவர்களின் பொருளாதார அபிவிருத்தி தாழ் மட்டத்திலேயே உள்ளது.

**வரைபடம் 7.9: இலங்கையில் இனங்களின் வருமானப் பங்கு**




*( Source : Kristian Stoke, 1998, pp.89)*

***1949*** ஆம் ஆண்டு இடம்பெற்ற நாவெஸ்மயர் சம்பவம் *(Knavesmire Incident)* என்பது இது தொடர்பான சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. நாவெஸ்மயர் என்பது கேகாலை மாவட்டத்திலிருந்த இறப்பர் தோட்டங்களுள் ஒன்றாகும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிரதேசத்திலிருந்த சிங்கள மக்கள் மத்தியிற் பகிர்ந்தளிக்கப்படும் நோக்கத்துடன் 1946ஆம் ஆண்டு அரசாங்கத்தினாற் பொறுப்பேற்கப்பட்டது. ஆனால் அத்தோட்டத்திலேயே வாழ்ந்திருந்த இந்தியத் தொழிலாளர் நிலம் வழங்கும் திட்டத்திலிருந்து முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். அது மாத்திரமன்றி அவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கும் எதுவித ஒழுங்குகளும் செய்யப்படாததுடன் அவர்களின் பராமரிப்புக்கான மாற்று வாய்ப்புக்கள் எதுவும் கூடச் சிபாரிசு செய்யப்பட்டிருக்க வில்லை. சுருக்கமாகக் கூறின் அவர்கள் முற்றாகவே நட்டாற்றில் விடப்பட்டிருந்தனர் என வி.நித்தியானந்தன் (1989) குறிப்பிடுகிறார்.

காணிப் பங்கீட்டுக் கொள்கையில் தோட்டத் தொழிலாளருக்கு இழைக்கப்பட்ட அநீதியின் உச்சக் கட்டம் என இதனை வர்ணிக்க முடியும். அவர்கள் வாழ்ந்திருந்த நிலத்தைப் பறித்துக்கொண்ட போது பெயரளவிலாவது ஓரளவு நிலத்தை அவர்களுக்கு விட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராயில்லையென்பது இதிலிருந்து நன்கு புலனாகியது. தென்னிந்தியத் தொழிலாளரை உள்நாட்டிலிருந்த ஏனைய தொழிலாள வர்க்க சகபாடிகளிடமிருந்து கூரிய முறையில் பிரித்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சியாகவும், அரசாங்கம் தனது வர்க்க நலன் பேணும் முயற்சியில் தோட்டத் தொழிலாளரை எவ்வகையிலும் அரவணைக்க விரும்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்தும் ஒரு நிகழ்ச்சியாகவும் நாவெஸ்மயர் சம்பவம் அமைந்திருந்தது என்கிறார்.

எனினும் முதலாளி வர்க்கத்தினர் அவர்களது வர்க்க நலன் பொறுத்து வெளிப்படுத்திய அளவு கடந்த கண்காணிப்பு ஈற்றில் அவர்களது தோல்வியிலேயே முடிவுற்றதெனலாம். முதல் விளைவுத் துறையுடன் மாத்திரம் தம்மை மட்டுப்படுத்திக்கொண்ட அவர்களது பொருளாதாரக் கொள்கை மேற்கத்திய நாடுகளைப் போல அவர்களை உச்ச நலன் அனுபவிக்கும் ஒரு நிலைக்கு எடுத்துச் செல்ல மறுத்துவிட்டது. அதாவது முதல் விளைவுத்துறையுடன் மாத்திரம் உயர்வர்க்கத்தினர் தமது அலுவல்களைக் கட்டுப்படுத்திக் கொண்டமை ஒரு சிறந்த முடிவு அல்ல என்பது நிரூபிக்கப்பட்டது. மறுபுறம், அரசியல் மட்டத்தில் வர்க்கரீதியாக அவர்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்பை எல்லாப் புறங்களில் இருந்தும் தடுத்துவிட்டதும் அது ஆட்சியாளர் சற்றும் எதிர்பாராத வேறொரு மட்டத்தில் இருந்து உருவெடுத்து அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்கிவிடக் கூடியளவிற்கு விஸ்வரூபமெடுத்தது. இதுவே முதலாளி வர்க்கத்தினர் ஏற்கனவே தொடங்கி வைத்திருந்த இனவாதச் செய்முறையின் இரண்டாவது கட்ட ஆரம்பம் எனலாம். இந்நிலையில் இனவாதக் கொள்கையானது நாட்டிற்கு புறம்பான இந்தியரில் இருந்து நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய சிறுபான்மையினரை நோக்கி திருப்பி விடப்படலாயிற்று அதன் அடிப்படையில் இனவாதச் சக்திகள் வர்க்க நலன்களுடன் ஒன்றறக் கலப்பதற்கும், பல சந்தர்ப்பங்களில் , வர்க்க நலன்களை விட அவை (வலதுசாரியாயினும், இடது சாரியாயினும் சரி) இனவாத நலன்கள் மேலோங்குவதற்கும் வாய்ப்பேற்பட்டது.

*1950-1978* காலப்பகுதியில் அரசியலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல சம்பவங்கள் (குடியேற்றத் திட்டங்கள், தனிச் சிங்கள சட்டம், சிறி, எழுத்துப் போராட்டம், இனக்கலவரங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை ஆறு மாதத்திற்கு மேலாக சிறையில் அடைத்தமை, பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட அரசியல் பாதுகாப்பு''.) அரசியல்வாதிகளால் இனவாதத்தின் ஊடாக ஜனநாயக அரசியலில் தங்கள் அதிகாரத்தை தக்கவைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டமை ஆகும். இவை யாவும் புலப்படுத்தும் உண்மை யாதெனில் ஆட்சியாளர்கள் தங்கள் சுயநல அரசியலுக்காக நாட்டின் நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு அடித்தளமாக இருக்கின்ற தேசிய ஒருமைப்பாட்டை இனவாதத்தை முன்நிறுத்தி சின்னாபின்னமாக்கி, பொருளாதார அபிவிருத்தியை மழுங்கடித்தார்கள் என்பதாகும்.

## 1978-2005

*1948-1977* காலப்பகுதியில், இலங்கையில் மேலைத்தேச பாணியிலான தாராள ஜனநாயகம் ஊடாக சிறுபான்மையின மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி மழுங்கடிக்கப்பட்டது என்பதற்கு அப்பால் பெரும்பான்மை மக்களின் அபிவிருத்தியும் சமூக நலன்புரிச் செலவுகளை முதனிலைப்படுத்தி மழுங்கடிக்கப்பட்டது என்பது முன்னர் எடுத்து விளக்கப்பட்டது. இலங்கையில் ஈழக்கோரிக்கை 1976 இல் வருவதற்கு 20 வருடங்களுக்கு முன்பே சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வாக சமஸ்டி ஆட்சி முறையிலான பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனமைக்கு பிரதான காரணம் ஜனநாயக அரசியலில் பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பாகும். இலங்கை 1978 இல் இருந்து இன்று வரை *NICs* நாடுகளின் பாணியை ஒத்த பகுதியான எதேட்சை அதிகாரம் *( Partial Authoritarian)* உள்ள ஒரு அரசாக இருக்கிறது. அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான எவ்வகை சீர்திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. தேவை ஏற்பட்டால் தனது முப்படைகளின் துணையுடன் ஒரு இராணுவ ஆட்சியை உருவாக்குவதற்குக்கூட அதிகாரம் இருக்கின்றது (முப்படைகளின் தலைவர் ஜனாதிபதி). 1948-1977 வரையான அனுபவத்தில் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து நாட்டின் அமைதியை ஏற்படுத்துவதற்கு தடையாக இருக்கும் சக்திகளின் கரங்களை அடக்குவதற்கு இந்த அதிகார ஆட்சி முறையை நாட்டின் தலைவர்கள் பயன்படுத்துவார்கள் என அபிவிருத்திப் புலமையாளர்கள் எதிர்பார்த்தார்கள். பிரச்சினை என்னவொன்றால் இந்த அதிகாரத்தை என்ன தேவைக்காக நாட்டின் தலைவர்கள் பயன்படுத்தினார்கள் என்பதிலேயே அபிவிருத்தியின் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது. 1978 இல் இலங்கையில் கொண்டு வரப்பட்ட பொருளாதார கொள்கைச் சீர்திருத்தங்களின் பிரதான நோக்கம் இலங்கையை அபிவிருத்தியில் தென் ஆசியாவில் குட்டி சிங்கப்பூராக மாற்றுவது ஆகும். ஆனால் இங்கு எழும் வினா என்னவென்றால் சிங்கப்பூரில் *Lee Kuan Yew* க்கு இருந்த அரசியல் தலைமைத்துவப் பண்பு J.R.ஜயவர்த்தனாவுக்கு இருந்ததா? என்பதாகும்.

1. 1978 இல் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பு ஏற்கெனவே சிறுபான்மையினருக்கு இருந்த அதிகாரமில்லாத பிரதிநிதித்துவத்தையும் இல்லாமல் செய்தது.

2. சிங்கப்பூரில் நுகர்வுச் செலவானது (நலச்சேவைகள்) குறைக்கப்பட்டு மூலதனச் செலவு அதிகரிக்கப்பட்டது. இலங்கையில் அவ்வாறான மாற்றம் இடம்பெறவில்லை. மாறாக அதிகரித்த மூலதனச் செலவில் பெரும் பகுதி ஏற்கனவே இனமுரண்பாடுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இருந்த உலர் வலய குடியேற்றத்திட்டங்களுக்கு (மகாவலி) செலவு செய்யப்பட்டு குடியேற்றங்கள் தொடர்ந்தன. 1983 பின்னர் இது பாதுகாப்பு செலவாக பரிணமித்தது.

3. 1981 இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது.

4. 1983 இல் கறுப்பு யூலை இனக்கலவரம்

இதே விடயங்களை சிங்கப்பூருடன் ஒப்பிட்டு நோக்கினால் இரு தலைவர்களுக்கும் இடையிலான தலைமைத்துவ பண்பின் வேறுபாடுகளை அறிந்துகொள்ளலாம்.

இலங்கையில் J.Rக்கு பின்னர் வந்த ஜனாதிபதிகளும் இனவாதத்தை முன்னெடுப்பதில் நலச் செலவீடுகளை கருவியாக கையாண்டதோடு வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஊடாக பாதுகாப்புச் செலவினத்தையும் கருவியாக கையாண்டு இனம், மொழி,மதம் போன்றவற்றின் மூலம் பெரும்பான்மை மக்களை சூடாக்கி அதில் குளிர்காய்ந்து அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இலங்கையில் NICs நாடுகளின் பாணியை ஒத்த பகுதியான எதேட்சை அதிகார ஆட்சி முறை ஓர் இனத்தை ஒருங்கிணைத்து இன ஒற்றுமையை உருவாக்குவதற்கு பதிலாக அதை அழிக்க முற்பட்டதன் விளைவாக பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் தோல்வியை அடைந்தது எனலாம்.

விரிவடைந்து செல்லும் இராணுவ இயந்திரத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கான பொருளாதார வலுவினை கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த வளர்ச்சியில் இருந்து பெறுவதற்கான தளத்தினை நலச் சேவைகளில் செலவு செய்ததன் காரணமாக இலங்கை ஏற்கனவே இழந்து விட்டது. எனவே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நலச் செலவீடுகளினால் மந்தமடைந்தது என்பது ஒருபுறம் இருக்க இலங்கைப் பொருளாதாரம் தொடர்ந்து இனவாதத்தை இராணுவச் செலவினம் ஊடாக பேணுவதற்கான வலுநிலையைக் கொண்டிருக்கிறதா? என்பது கேள்விக்குறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்புரை

இலங்கைக்கு கிடைத்த சுதந்திரமானது இலங்கையில் எல்லா மக்களையும் ஒன்றிணைக்க கூடியதும் நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை இலக்காக கொண்டதுமான தூரநோக்குள்ள அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்குவதில் தோல்வியடைந்து விட்டது. இவ்அரசியல் தலைமைத்துவமானது ஆரம்பத்தில் நலச் செலவீடுகளையும் பின்னர் இனவாதத்தையும் உபயோகித்து தனது சுயநல அரசியலை முன்னெடுக்கின்றது. இலங்கையின் சமூக நலச் செலவீடுகளைச் சார்ந்த ஜனநாயக அரசியலே முரண்பாடுகள் வளரக் காரணமாகி அவை யுத்தமாக மாற்றமடைந்து இன்றைய பொருளாதார அபிவிருத்தியின் பின்னடைவுக்கு காரணமானது. இலங்கை 1948-1978 காலப்பகுதியில் மேலைத்தேசத்தின் சிந்தனையான தாராள ஜனநாயக ஆட்சிமுறை ஊடாகவோ அல்லது 1978-2005 காலப்பகுதியில NICs, மலேசியா மற்றும் சீனா போன்றவற்றின் சிந்தனையான எதேட்சை அதிகாரம் உள்ள வரையறுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சி முறையிலோ (நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறை) பொருளாதார அபிவிருத்தியை அடையவில்லை. இலங்கையின் பொருளாதாரப் பின்னடைவுக்கு அடிப்படை காரணம் இலங்கையில் 1948இல் இருந்து அதிகாரத்தில் இருந்த முதலாளித்துவ அரசாங்கங்களும் அவற்றின் தலைமைத்துவமும் ஜனநாயக அரசியலில் தங்களின் அதிகாரத்தை தக்கவைப்பதற்கு நாட்டின் சமூக நலச் செலவீடுகளையும் இனவாதத்தையும் கருவிகளாகப் பயன்படுத்தி இனங்களுக்குள்ளும் இனங்களுக்கு இடையேயும் முரண்பாடுகளை உருவாக்கி அமைதியை சீர்குலைத்து நாட்டின் நீண்ட கால அபிவிருத்தியை தங்கள் சுயநல அரசியலுக்காக பலிக்கடா ஆக்கினார்கள், ஆக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இலங்கையின் சுதந்திரம் மற்றும் அதை தொடர்ந்து வந்த தாராள ஜனநாயகம் *(One- man- one-vote)* என்பன இலங்கையின் சமூக நலச் செலவீடுகளை தொடர்ந்து அதிகரிப்பதற்கு இட்டுச்சென்றது. இவை அபிவிருத்தியின் அத்திவாரமாக இருக்கின்ற வளர்ச்சிக்குத் தேவையான உற்பத்தித்திறனுள்ள மூலதனவாக்கத்தை உருவாக்குதைத் தடுத்து நாட்டின் நீண்ட கால வளர்ச்சியை தடுத்தது ஒருபுறம் இருக்க, இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களுக்குள்ளும் இனங்களுக்கு இடையேயும் முரண்பாடுகளை உருவாக்கியது.

இவற்றின் பகிர்வில் இருந்து தமிழ்பேசும் மக்களின் பிரதேசம் முற்றாக ஓரம் கட்டப்பட்டுள்ளது. இப்பங்கீட்டுப் புறக்கணிப்புக்கு எதிராக 1948-1983 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக முறையிலான அனைத்துப் போராட்டங்களும் இராணுவம் மற்றும் குண்டர்களைக் கொண்டு அடக்கப்பட்டன. அவ்வாறான நடவடிக்கைகள் அவர்களை ஆயுத வன்முறைக்கு இட்டுச் சென்று அரசுக்கு பாரிய இராணுவச் செலவினத்தை தாங்கி நிற்கின்றது. இவ்இராணுவச் செலவினமானது இலங்கையின் அபிவிருத்தியை கடந்த காலத்தில் தாமதப்படுத்தியது ஒருபுறம் இருக்க, எதிர்காலத்தில் இச்செலவினத்தை தொடர்ந்து பேணுவதற்கான உற்பத்தி மூலங்களை இழந்து விட்டது. மறுபுறத்தில் பெரும்பான்மை மக்களின் அபிவிருத்தியிலும் அரசாங்கத்தின் இச்சமூக நலச் செலவினங்கள் உற்பத்தித்திறன் அற்றவையாக இருந்த காரணத்தால் அவற்றின்வழி நன்மை அடைந்தவர்கள் தொடர்ந்தும் ஏழ்மை நிலையில் இருக்கத் தள்ளப்பட்டனர். இது அவர்களை விரக்தி நிலைக்கு உள்ளாக்கி 1971, 1987, 1988 மற்றும் 1989 களில் அரசுக்கு எதிரான ஆயுத வன்முறைகளை தொடர்வதற்கு வழிவகுத்தது.

இவ்விரு முரண்பாடுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டிருப்பதுடன் அவற்றுக்கான அடிப்படைக் காரணம் தாராள ஜனநாயக சுதந்திரம் ஆகும். இலங்கை இவ்விரு முரண்பாடுகளையும் தவிர்த்து இருக்குமாக இருந்தால், இது 1960-2005 காலப்பகுதியில் பெற்ற சராசரி 4.56 வீத பொருளாதார வளர்ச்சி ஏறத்தாழ 9 சதவீதத்துக்கு சென்று இருக்கும். இலங்கை தற்போது உள்ள வாழ்க்கைத் தரத்தைவிட ஏறத்தாழ இரண்டு மடங்கு மேலே சென்று இருக்கும்

**சீர்திருத்தத்துக்கான வழிமுறைகள்**

பிரச்சினைக்கான தீர்வுக்கான வழிமுறையாக சர்வகட்சி மகாநாடுகள் 1969 இல் இருந்து நடைபெற்று வந்துள்ளன. எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பேராசிரியர்களாக இருந்தவர்களே அரசியல்துறையில் ஒரு கொள்கை இன்றி பதவிக்காக கட்சி தாவிக்கொண்டு இருப்பதைக் காணலாம். எனவே சாதாரண அரசியல்வாதி எப்படி இருப்பார் என்பது கண்கூடு. இங்கு எவரும் *(UNP மற்றும் SLFP)* ஒரு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து நாட்டின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தயார் இல்லை. ஆனால் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சு பதவிகளை பெறத் தயாராக இருக்கிறார்கள்.

நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கு சிறந்த ஒரு தலைமைத்துவம் வேண்டும். அத்தலைமைத்துவம் பின்வரும் பண்புகளையும் மாற்றங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

1. நாட்டினை குறைந்தது 25 வருடங்களுக்கு தொடர்ச்சியாக ஆட்சி செய்ய வேண்டும்.

2. அனைத்து நலச் சேவைகளையும் நிறுத்தி அவற்றுக்கு செலவு செய்த நிதியினை பொருளாதார உள்கட்டுமானங்களுக்கு செலவு செய்தல்.

3. பதவியை விட்டு வீட்டுக்கு செல்லும்போது இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திய பெயரைத் தவிர வேறு எதனையும் இந்த 25 வருடத்தில் அரசிடம் இருந்து எடுத்து செல்லக்கூடாது.

4. தனது இனம், மதம், மொழி, பிரதேசம், சொந்தம், நண்பர்கள் என பாகுபாடு இன்றி தேசத்தை கட்டியெழுப்பும் ஒற்றுமைக்காக சேவையாற்ற வேண்டும்.

5. அரசியல்வாதிகளின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களை அரசின் முக்கிய பொறுப்பில் இருந்து அகற்றுவதோடு அவர்கள் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வராதபடி தடை செய்ய வேண்டும்.

6. சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு சிங்கப்பூரில் எவ்வாறான கொள்கைகள் பின்பற்றப்பட்டனவோ அவற்றை பின்பற்றி அபிவிருத்தியில் அவர்களை இணைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை விரைவாக நடைமுறைப்படுத்துதல்.

8. சுயாதீனமான பொலிஸ் சேவை, நீதிச் சேவை, பொதுச் சேவை, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுக்களை உருவாக்கி அவற்றை வினைத்திறமையாக தொழிற்படச் செய்தல்.

9. அரசியலில் இருந்து சமயத்தை முற்றாக நீக்குதல்.

10. பிடிவாத தலைமையாக அன்றி யதார்த்தவாத தலைமையாக மாறுதல். (Pragmatism VS Dogmatism)

11. அரசியல் கலைச் தேர்ச்சியில் இருந்து நீங்கி பொருளாதார அபிவிருத்தி கலை தேர்ச்சியில் சித்தியெய்துதல்.

துரதிஸ்டவசமாக இலங்கையில் அவ்வாறான ஒரு தலைமைத்துவம் உருவாகுவதற்கான அரசியல் சூழல் இல்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*REFERENCES*


1. Amirthalingam Kopalapillai (2008) Social development, economic growth, and the liberalization in Sri Lanka, Sri Lankan Economic Review, 8, vol 2, pp.1-20

2. Abeyratne Sirimal [2004], Economic roots of political conflict: The Case of Sri Lanka, Development and change, pp.1295-1314

3. Banda Dayaratne.O.G,(2003), Governance and Economic Growth in Sri Lanka: Some lesions from newly industrializing economies, Economic Review, November/December, pp.14-17

4. Cec'ile Van De Voorde [2005] Sri Lanka terrorism: Assessing and responding to the threat of liberation tiger of Tamil eelam [LTTE], Police practice and research. Vol 6/2, pp.181-99, Routledge. New York, USA, Retrieved on 23 may 2007 at http://www.soc.tcu.edu/Cecile_V_article.pdf

5. Kristian Stokke (1997) Authoritarianism in the age of market liberalism in Sri Lanka, Antipode, 29/4, pp. 437-455

6. Dayaratne.O.G,(2003), Governance and Economic Growth in Sri Lanka: Some lesions from newly industrializing economies, Economic Review, November/December Far Eastern Economic Review, "Focus: Singapore '80" (August 1, 1980).

7. Eliza w. y. Lee and m. Shamsul Haque ( 2006) The New Public Management Reform and Governance in Asian NICs: A Comparison of Hong Kong and Singapore. An International Journal of Policy, Administration, and Institutions Vol. 19, No. 4, (pp. 605–626).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. Griffith; W. H., "Can CARICOM countries replicate the Singapore experience?," Journal of Development Studies, Vol. 24, No. 1 (1987), pp. *60-82*.

9. Gerald M Meier (1999) Capital and development , Asian Economic Journal Vol 13, No 4.pp.353-365

Goldsmith. A [1995]Democracy, property rights and economic growth, Journal of development studies, 32, 2, pp.157-74

10. Huff. W.G. (1995) The Developmental State, Government, and Singapore's Economic Development Since 1960, World Development Vol 23, pp. 1423-38

11. Jon.S.T Quah (2001) Combating Corruption in Singapore, What can be learned? Journal of Contingencies and Crisis Management, Vol. 9, No1

12. Jagdish N. Bhagwati (2002) Democracy and Development: Cruel Dilemma or Symbiotic Relationship? Review of Development Economics, 6(2), 151–162,

13. Lakshman W.D [ed] [1997] Dilemmas of development: Fifty years of economic change in Sri Lanka, Sri Lanka Association of Economists[SLAE], Colombo, Sri Lanka

14. Lee Kuan Yew (2000) Excerpt from 'Effective Leadership, Singapore – Style, as reproduced in the Straits Times, October 19, 2000.

15. Lee Kuan Yew (1997) The Man and His Ideas', Singapore Press Holdings and Times Editions.

Ludovic Comeau.Jr [2003]. Democracy and growth: A relationship revised. Eastern economic journal, 29, pp.1-19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Lee Kuan Yew (2011) From third World to first, Singapore and Asian Economic boom, A imprint of Harper Collins Publisher, A New York

17. Lee Kuan Yew, "Lessons that Africa can draw from Singapore's experience," Extracts from a speech to the African Leadership Forum, *Straits Times Weekly* (November 13, 1993).

18 Lim, L., "Singapore's success: The myth of the free market economy," Asian Survey, Vol. 23, No. 6 (1983). pp.752-764.

Lin Zhaomu[2000]The relations among reform, development and stability in China, (Wang Mengkui edi) China's economic transformations over 20 years, foreign language press, Beijing

19. Michael D.Barr (2000) Lee Kuan Yew's Fabian Phase, Australian Journal of Politics and History, Vol. 46, pp.110-25

20. Michael D.Barr (2000) Trade Union in an Elitist Society: the Singapore Story, Australian Journal of Politics and History, Vol 46, pp.480-96

21. Mya Maung [1996]. The Burmese approach to development: Economic growth without democratization, Journal of Asian economics, 7, 1, 1996, pp. 97-129.

Michael P. Todaro and Stephen C. Smith [2006]. Economic development, Pearson Addison Wesley.

22. Peter Wilson (2000) The Dilemma of a More Advanced Developing Country: Conflicting Views on the Development Strategy of Singapore, The Developing Economies, XXXVIII-1 pp.105–34

23. Rajesh Venugopal (2011) Military Fiscalism and the Politics of Market Reform at a Time Civil War, Economic and Political Weekly (EPW) vol 49, issue 49.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. Rachel (2005) "Reflections on democracy and development in Southeast Asia: Why do the Philippines and Singapore differ?," Culture Mandala: The Bulletin of the Centre for East-West Cultural and Economic Studies: Vol. 6: Iss. 2, Available at: http://epublications.bond.edu.au/cm/vol6/iss2/1

25. Selvarathinam Santhiraseagaram (2009) Political backings, success of big push and take off in capital accumulation in Asia. Sri Lanka Economic Journal, Vol 10/2,pp.51-77, December, 2009. Sri Lanka Economic Association, Colombo

Selvarathinam Santhirasegaram (2007)Impact of Democratic and Economic Freedom on Economic Growth in Developing Countries, Journal of Applied Sciences, Volume 7(11), pp.1484-1489, 2007.

26. Shlapntokh. D.( 2002) Post-Mao China: an alternative to 'The end of history'? Communist and Post-Communist Studies 35 , 237–268

27. Shalendra D. Sharma (2007) Democracy, Good Governance, and Economic Development, Taiwan Journal of Democracy, Volume 3, No.1, pp. 29-62

28. Theodora Lam and Brenda S.A. Yeoh(2004) Negotiating 'home' and 'national identity': Chinese-Malaysian transmigrants in Singapore, Asia Pacific Viewpoint, Vol. 45, No. 2,

29. Tambiah S J (1991) Ethnic Fratricide and the Dismantling of Democracy, The University of Chicago Press, Chicago.

30. The Straits Times, September, 1995

31. Vasoo. S.and Lee.J (2001) Singapore: Social Development, Housing and the Central Provident Fund, International Journal of Social Welfare, Vol.10, pp.276-283



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. World Bank (2008) online database.

33. அமிர்தலிங்கம்.கோ(2008) இலங்கைப் பொருளாதாரம், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு, இலங்கை.

34. இராகவன்.பா (முகில்) (2006) நாடு கட்டிய நாயகன், சிங்கப்பூர் தடுமாறி, உருமாறி, உருவாகி நின்ற கதை, Badri Seshadri, Chennai, India.

35. நித்தியானந்தன்.வி (1989) இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி, 1948-1956, கலைப்பீடம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

36. சந்திரசேகரம்.செ (1995) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியில் முதலாளித்துவத்தின் தோற்றம், வளர்ச்சி, நிலைபேறு, சமூக ஒளி, 04, பொருளியல்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

37. சத்தியசீலன்.ச (1994) இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி செ.சந்திரசேகரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 1996இல் பொருளியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி 1999இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து அங்கு பொருளியல் முதுமாணிப் பட்டம் பெற்றவர். 2002இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து 2004இல் மக்கள் சீனக் குடியரசிற்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்று, அங்கு புகழ்பெற்ற குவாசோங் விஞ்ஞான தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (HUST) "இலங்கையில் பொருளாதார வளர்ச்சிக்கும் பணவீக்கத்திற்குமான சமூக அரசியல் காரணிகள்" என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து 2008இல் கலாநிதிப்பட்டம் பெற்றவர். அவரது இந்த ஆய்வுக்கட்டுரை ஜேர்மனியில் உள்ள புகழ்பெற்ற LAMBERT கல்வி வெளியீட்டு சமூகத்தினால் நூல் வடிவம் பெற்றுள்ளது. இவருடைய அரசியற் பொருளியல் துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் பல உலகின் புகழ்பெற்ற ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. அத்துடன் பல்வேறு ஐரோப்பிய ஆசிய நாடுகளின் சர்வதேச ஆய்வரங்குகளிலும் மற்றும் இலங்கையில் தேசிய பிராந்திய ஆய்வரங்குகளிலும் கலந்துகொண்டு பல ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். இதுவரை "பொருளாதார அபிவிருத்தி: சீனா-இந்தியா ஓர் ஒப்பீட்டு ஆய்வு" உள்ளிட்ட ஆறுக்கும் மேலான நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைத்துவப் பார்வையில் வெளியிட்டுள்ளார். இவ்வாறான வெளியீடுகள் மூலம் வளர்ந்துவரும் துடிப்புள்ள ஆய்வாளர் என்ற முத்திரையைப் பெற்றுள்ளார்.

பேராசிரியர்.ச.சத்தியசீலன்,
பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சேமமடு பதிப்பகம்

விலை.500.00

ISBN 978- 955- 685- 022- 2

9 789556 850222

CBCN: 2013-05-01-123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org